ஸ்ரீ:

# ஸ்ரீ மணவாள மாமுனிகள்

## ஆறாவது நூற்றாண்டு நிறைவு
## திருவவதார மஹோத்ஸவம், 1970



# நினைவு மலர்

திருவல்லிக்கேணி ஸ்ரீ மணவாள மாமுனிகள்
கைங்கர்ய ஸபையாரால் வெளியிடப்பட்டது

ஸாதாரண, ஐப்பசித் திருமூலம்.

T11467
R003I07

ஸ்ரீ:

ஸ்ரீ ருக்மிணீஸமேத ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமிநே நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

# ஸ்ரீ மணவாள மாமுனிகள்

## ஆறாவது நூற்றாண்டு நிறைவு திருவவதார மஹோத்ஸவம்

ஸாதாரண ஸம்வத்ஸரம், ஐப்பசித் திருமூலம் (*3-11-1970*)

# நினைவு மலர்



## *Sri Manavalamamunigal Sixth Birth Centenary*

# COMMEMORATION VOLUME

***Released by The Hon'ble Chief Justice Sri K. VEERASAMI*** **on 1-11-1970**
***at Sri Parthasarathi Swami Temple, Triplicane.***

★

SRI MANAVALAMAMUNIGAL KAINKARYA SABHA
TRIPLICANE : : MADRAS-5.

Printed at Rathnam Press, 11 Badrian Street, Madras-1.

# ஸ்ரீவானமாமலை ஜீயர் ஸ்வாமி மங்களாசாஸனம்

---



ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யோபய வேதாந்த ப்ரதிஷ்டபநா சார்யராய் ஸ்ரீமத் ரம்யஜாமாத்ரு யதிவர க்ருபாலப்த ஸ்ரீவரமங்கா ஸமேத ஸ்ரீதேவநாயகாந்தரங்க கைங்கர்யைக துரந்தராய், ஸ்ரீபகவத்ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரகாசார்ய ஸார்வ பௌமராய் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவாநமாமலை ராமாநுஜ ஜீயர்

ஸகல ஸத்குணஸம்பந்நர்களாயும் ஸ்ரீபகவத் பாகவதாசார்யகைங்கர்ய நித்ய நிரதர்களாயும் நம்முடைய மடம் அரங்கநகரப்பன் ஸந்நிதிக்கு அத்யந்தம் பரமாப்தர்களாயுமிருக்கிற நம்முடைய திருவல்லிக்கேணி ஸ்ரீமணவாள மாமுனிகள் கைங்கர்ய ஸபையாருக்கு ஸ்வரூபாநுரூபம் க்ரியமாணம் மங்களாசாஸனம். இவ்விடம் வானமாமலையில் நம்முடைய மடம் அரங்கநகரப்பன் ஸன்னிதி நித்யததீயாராதநோபயவேதாந்த காலக்ஷேபாதிகள் அவிச்சின்னமாய் நடந்து வருகிறது. அவ்விடம் உங்களுடைய சுபயோகக்ஷேமாதிசயங்களுக்கு அடிக்கடி எழுதியனுப்பிக் கொண்டிருக்கவேணும்.

இப்பவும் ஸ்ரீமணவாளமாமுனிகளின் ஆறுவது நூற்றுண்டு திருவவதார மஹோத்ஸவத்தை அவ்விடம் திருவல்லிக்கேணியில் மிகுந்த சிறப்புடன் கொண்டாடுவதைத் தெரிந்து ஸந்தோஷிக்கிறோம். இந்த ஸபையானது மேன்மேலும் அபிவிருத்தி அடைந்து, கடல்சூழ்ந்த மண்ணுலகை வாழ்வித்துக் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமணவாளமாமுனிகளின் கைங்கர்யங்களை மிக சிறப்புடன் செய்துகொண்டு, நம் ஸம்பிரதாயம் நன்றாக ஓங்கி வளரும்படிக்கு க்ருபை செய்தருளவேணும் என்று ஸ்ரீ கீதாசாரியன் ஸன்னிதியில் ப்ரார்த்தித்து எல்லோருக்கும் மங்களாசாஸனம் செய்கிறோம். அனேக மங்களாசாஸனம்.

*1146-ம் ஸாலு புரட்டாசி மீ 26உ*
*12—10—1970.*

ஸ்ரீராமாநுஜன்.

# பொருளடக்கம்

பொதுத் தனியன்கள், குருபரம்பரைத் தனியன்கள்

யதீந்த்ரப்ரவணப்ரபாவம் (ஸங்க்ரஹம்)

மணவாளமாமுனிகள் வைபவம் (வரலாற்றுச் சுருக்கம்)

மணவாளமாமுனிகளின் ஆசார்யபரம்பரை

ஸ்ரீசைலேச மந்த்ர ப்ரபாவம்—

1. பிள்ளைலோகம் ஜீயர் வியாக்யானத்தைத் தழுவிய உரை;

2. ஸ்ரீசைலேசாஷ்டகம் 3. ஸ்ரீசைல வைபவம் 4. ஒரு ரஸமான வியாக்யானம்

ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம் (அபகதமதமானை: ச்லோக விளக்கம்)

ஸ்ரீசைலேசரும் ஸ்ரீசைலேச தயாபாத்ரரும்

மணவாளமாமுனிகள் திருமஞ்சன கட்டியம் முதலியன

மணவாளமாமுனிகள் விஷயமான தமிழ், ஸம்ஸ்க்ருத ஸ்தோத்ரங்கள்—

பாதாதிகேசமாலை; மணவாளமாமுனிகள் கண்ணிநுண்சிறுத்தாம்பு;

சம்பிரதாய சந்திரிகை; ஊசற்றிருநாமம்;

வரவரமுனி ஸுப்ரபாதம்; வரவரமுனி ப்ரபத்தி; பூர்வதிநசர்யை;

உத்தரதிநசர்யை; வரவரமுனி அஷ்டகம்; வரவரமுனி சதகம்

அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில் திருமூலம்

ஏருரும் எதிராசன் எனஉதித்தான் வாழியே

மணவாளமாமுனிவன் திருநாவீறு

மாமுனிவனுகந்த மங்கையர்கோன்

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த ஸ்ரீஸூக்திகள்—

எதிராஜவிம்சதி; தேவராஜமங்களம்;

உபதேசரத்தினமாலை யநுபவம் (வ்யாஸம்), உபதேசரத்தினமாலை;

இதற்குச்சரியாக ஆசார்ய பௌத்ரரின் ஸம்ஸ்க்ருத ச்லோகங்கள்;

ஆர்த்திப்ரபந்தம் (அவதாரிகையுடன்);

சாத்துமுறை; மணவாளமாமுனிகள் அருளியுள்ள மங்கள ச்லோகங்கள்

**English Articles : Manavalamamunigal (Life);**

**Bhakthi and Saranagathi; Emberumanar Darsanam;**

**Anecdotes from Yatheendrapravana Prabhavam.**

திருவல்லிக்கேணி



ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி ஸன்னிதியில்
ஸேவை ஸாதிக்கும்
**மணவாளமாமுனிகள்**

**This page-space has been donated by a well - wisher**

# ஸ்ரீ திருக்குறுங்குடி ஜீயர் ஸ்வாமி மங்களாசாஸனம்



ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யோபய வேதாந்த ப்ரதிஷ்டாபநாசார்யராய் ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரணுசார்யராய், ஸ்ரீ பகவத் ராமாநுஜ நியமித சதுஸ்ஸப்ததி ஸிம்ஹாஸநாதிபதியாய் ஸ்ரீ குரங்கநாயிகாஸமேத ஸ்ரீ ஸுந்தரபரிபூர்ண நித்ய கைங்கர்ய துரந்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பேரருளாள ராமாநுஜ ஜீயர்

மங்களாசாஸநம்

திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி ஸன்னிதியில் ஸ்ரீ மணவாளமாமுனிகளின் மஹோத்ஸவப் பத்திரிகை காண மட்டிலா மகிழ்ச்சி அடைந்தோம். ஸ்ரீ மணவாள மாமுனிகளின் வைபவத்தை அரவரசப்பெருஞ்சோதி அனந்தனுலும் சொல்லவொண்ணுது. அயர்வறுமமரர்களதிபதியான அத்திகிரி அருளாளன் அடிபணிந்துய்ந்த இராமாநுஜன் பக்கல்வேதாந்தார்த்தம் கேட்டு ஸதாசார்ய ஸமாச்ரயணம் செய்துகொண்டு, சிஷ்யனுயிருக்குமிருப்பை நாட்டாரறியும்படி ஸச்சிஷ்யனுய்த் திகழ்ந்தான் உம்பர் வானவராதியஞ்சோதியான பேரருளாளனுன தென்குறுங்குடி நம்பி. நம்பெருமாளாலே தெற்கு வீடு என்று ப்ரஸித்தமிறே இத்திருக்குறுங்குடி. வேதம் தமிழ்செய்ய இக்குறுங்குடிநம்பியே குருகூர் நம்பியாகத்திருவவதரித்ததும் ப்ரஸித்தம். மன்னியசீர் மாறன் கலை உணவாகப்பெற்ற ஸ்ரீமணவாள மாமுனிகள் வண்குருகூரிலே திருவவதரித்து தென்னரங்கத்தை இருப்பாகப் பெற்று தென்னரங்கன் சீரருளுக்கு இலக்கானுர். தென்னுடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கத்தை இத்திவ்வியதேசத்தில் "வடகோயில்" என்றழைப்பது ப்ரஸித்தம். இப்பெருமை

வாய்ந்த தென்னரங்கச் செல்வனை அழகிய மணவாளன் யதீந்த்ரப்ரவணரான மாமுனிகள் பக்கலில் ஈடுகேட்டு ஸச்சிஷ்ய லக்ஷணத்தைப் பூர்ணமாக்கிக் கொண்டான். ஆக அழகிய நம்பியும் அழகிய மணவாளனும், ஸ்தாசார்யஸம்பந்தம் பெற்று ஸச்சிஷ்ய லக்ஷணத்தை நாட்டாரறிய நின்றபடி ப்ரஸித்தம். இவ்வளவு அழகாக ஸதாசார்ய ஸச்சிஷ்ய ஸம்பந்தம் நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய பரம்பரையில் பின்னிக் கிடக்கிறது ஸம்ப்ரதாயத்துக்குப் பெருமை யளிக்கக்கூடிய விஷயம்.

ஆசார்ய பரம்பரையில் முன்னிட்ட பின்னிட்ட ஆசார்யர்களுக்கெல்லாம் நடுநாயக மாய் விளங்கும் நம் ஸ்வாமி எம்பெருமானுர் தம் அபராவதாரமாய், சரமாசார்யனுய், ப்ரதமாசார்யனுக்கும் ஆசார்யனுய், க்ருபாமாத்ரப்ரஸன்னுசார்யராய் எழுந்தருளியிருக்கும் பெருமை ஸ்ரீமணவாளமாமுனிகள் ஒருவருக்கே உரித்தானது.

ஞானம் அநுஷ்டானம் இவை நன்ருகவேயுடைய ஸதாசார்யராய், இவ்விருள்தருமா ஞாலத்தை தெருள்தருமா ஞாலமாகத் திருத்திப்பணிகொண்டவர் நம் மணவாளமாமுனிகள். "முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்ருேம், முழுது நமகககவை பொழுது போக்காகப் பெற்ருேம்" என்ற ஸ்ரீ ஸூக்திப்படியே, ஆழ்வார்களின் அருளிச்செயல்களையும் பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகளையும் நாடறிய நன்குறைத்து, முன்னோர் மொழிந்தமுறை தப்பாமல், "மணவாளமாமுனியே! இன்னமொரு நூற்ருண்டிரும்" என்று பல்லாண்டு பாடி, மங்களாசாஸனம் செய்வதே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு உரிய தொண்டாகும்.

*ஆழ்வார் திருவடிகளே சரணம்!*
*எம்பெருமானுர் திருவடிகளே சரணம்!!*
*ஜீயர் திருவடிகளே சரணம்!!!*

திரு ஜீயர் மடம்,
திருக்குறுங்குடி
1146-ம் ஸூ, ஐப்பசிமீ 13உ.

ஸ்ரீ ராமாநுஜன்.

ஸ்ரீ:



ஸ்ரீ ருக்மிணீஸமேத ஸ்ரீ பார்த்தஸாரதிஸ்வாமிநே நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்

# பொதுத் தனியன்கள்

நம்பெருமாள் அருளிச்செய்த மணவாளமாமுனிகள் தனியன்

𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇𑌶𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌧𑍀𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑍍 ।
𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑌣𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌰𑌮𑍍𑌯𑌜𑌾𑌮𑌾𑌤𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍 ॥

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதி குணர்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம்முநிம்.

கூரத்தாழ்வான் அருளிச்செய்த குருபரம்பரைத்தனியன்

𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂 𑌨𑌾𑌥𑌯𑌾𑌮𑍁𑌨𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌮𑍍 ।
𑌅𑌸𑍍𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌮𑍍 ॥

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்

கூரத்தாழ்வான் அருளிச்செய்த எம்பெருமானர் தனியன்

𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑌪𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌯𑍁𑌗𑍍𑌮𑌰𑍁𑌕𑍍𑌮
𑌵𑍍𑌯𑌾𑌮𑍋𑌹𑌤𑌸𑍍𑌤𑌦𑌿𑌤𑌰𑌾𑌣𑌿 𑌤𑍃𑌣𑌾𑌯 𑌮𑍇𑌨𑍇 ।
𑌅𑌸𑍍𑌮𑌦𑍍𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌸𑍍𑌯 𑌦𑌯𑍈𑌕𑌸𑌿𑌨𑍍𑌧𑍋𑌃
𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑍍𑌯 𑌚𑌰𑌣𑍌 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

யோநித்ய மச்யுதபதாம் புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணயமேநே
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைக ஸிந்தோ
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த நம்வாழ்வார் தனியன்.

𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾 𑌯𑍁𑌵𑌤𑌯𑌸𑍍𑌤𑌨𑌯𑌾 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌃
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌦𑍇𑌵 𑌨𑌿𑌯𑌮𑍇𑌨 𑌮𑌦𑌨𑍍𑌵𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 ।
𑌆𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌃 𑌕𑍁𑌲𑌪𑌤𑍇𑌰𑍍𑌵𑌕𑍁𑌲𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌂
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌤𑌦𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑌲𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑌿 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌾 ॥

மாதாபிதா யுவதயஸ்த நயாவிபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநும்
ஆத்யஸ்யநః குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா

ஸ்ரீ பராசரபட்டர் அருளிச்செய்த ஆழ்வார்கள் தனியன்

𑌭𑍂𑌤𑌂 𑌸𑌰𑌶𑍍𑌚 𑌮𑌹𑌦𑌾𑌹𑍍𑌵𑌯 𑌭𑌟𑍍𑌟𑌨𑌾𑌥
𑌶𑍍𑌰𑍀 𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌾𑌰 𑌕𑍁𑌲𑌶𑍇𑌖𑌰 𑌯𑍋𑌗𑌿𑌵𑌾𑌹𑌾𑌨𑍍 ।
𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌰𑍇𑌣𑍁 𑌪𑌰𑌕𑌾𑌲 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰 𑌮𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌮𑍁𑌨𑌿𑌂 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 ॥

பூதம்ஸரச்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகி வாஹாந் ।
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ர மிச்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம் ॥

# குருபரம்பரைத் தனியன்கள்

## வாக்யகுருபரம்பரை

(கூரத்தாழ்வான் அருளிச்செய்தது)

अस्मद्गुरुभ्यो नमः । अस्मत्परमगुरुभ्यो नमः । अस्मत्सर्वगुरुभ्यो नमः ।
श्रीमते रामानुजाय नमः । श्री पराङ्कुशदासाय नमः । श्रीमद्यामुनमुनये नमः ।
श्रीराममिश्राय नमः । श्री पुण्डरीकाक्षाय नमः । श्रीमन्नाथमुनये नमः ।
श्रीमते शठकोपाय नमः । श्रीमते विष्वक्सेनाय नमः । श्रियै नमः । श्रीधराय नमः ।

அஸ்மத்குருப்யோ நம: ; அஸ்மத்பரம குருப்யோ நம: ; அஸ்மத்ஸர்வ குருப்யோ நம: ;
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ; ஸ்ரீபராங்குச தாஸாய நம: ; ஸ்ரீமத்யாமுநமுநயே நம: ;
ஸ்ரீராமமிச்ராயநம: ; ஸ்ரீபுண்டரீகாக்ஷாய நம: ; ஸ்ரீமந்நாதமுநயே நம: ;
ஸ்ரீமதேசடகோபாய நம: ; ஸ்ரீமதே விக்ஷ்வக்ஸேநாய நம: ; ஸ்ரீயைநம: ; ஸ்ரீதராய நம: ;

## ச்லோககுருபரம்பரை

(முதலியாண்டான் அருளிச்செய்தது)

अस्मद्देशिकमस्मदीयपरमाचार्यानशेषान् गुरून्
श्रीमल्लक्ष्मणयोगिपुङ्गव महापूर्णं मुनिं यामुनम् ।
रामं पद्मविलोचनं मुनिवरं नाथं शठद्वेषिणम्
सेनेशं श्रियमिन्दिरासहचरं नारायणं संश्रये ॥

அஸ்மத்தேசிக மஸ்மதீய பரமாசார்யா நசேஷாந் குரூந்
ஸ்ரீமல்லக்ஷ்மண யோகி புங்கவமஹா பூர்ணௌ முநிம் யாமுநம் ।
ராமம் பத்மவிலோசநம் முநிவரம் நாதம் சடத்வேஷிணம்
ஸேநேசம் ச்ரியமிந்திரா ஸஹசரம் நாராயணம் ஸம்ச்ரயே ॥

அசார்யனிடம் உபதேசமாய்ப்பெறும் மந்த்ரங்கள்

### திருமந்த்ரம்

**ओं नमो नारायणाय ।** ஓம் நமோ நாராயணுய.

### த்வயம்

श्रीमन्नारायणचरणौ शरणं प्रपद्ये । श्रीमते नारायणाय नमः ॥

ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே; ஸ்ரீமதே நாராயணுய நம:

### ஸ்ரீகீதா சரமச்லோகம்

सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज । अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि माशुचः ॥

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச: ॥

### ஸ்ரீவராஹ சரமச்லோகம்

स्थिते मनसि सुस्वस्थे शरीरे सति यो नरः । धातुसाम्ये स्थिते स्मर्ता विश्वरूपञ्चमामजम् ॥
ततस्तं म्रियमाणन्तु काष्ठपाषाण सन्निभम् । अहं स्मरामि मद्भक्तं नयामि परमाङ्गतिम् ॥

ஸ்திதேமனஸி ஸுஸ்வஸ்தே சரீரோஸதியோ நர: ।
தாதுஸாம்யேஸ்தியேஸ்திதே ஸ்மர்த்தா விச்வரூபஞ்சமாமஜம் ॥
ததஸ்தம் ம்ரியமாணந்து காஷ்டபாஷாண ஸந்நிபம் ।
அஹம் ஸ்ம்ரரீமி மத்பக்தம் நயாமி பரமாங்கதிம் ॥

### ஸ்ரீராம சரமச்லோகம்

सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते । अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद्व्रतं मम ॥

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதிச யாசதே ।
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வரதம் மம ॥

வாக்யகுரு பரம்பரையிலும் சலோக குருபரம்பரையிலும் காட்டியுள்ள ஆரோஹண க்ரமத்தில் குருபரம்பரைத தனியன்கள் மேலே இடம் பெறுகின்றன. முதலில் அவரவர் களுக்கு நேர் ஆசார்யனுடைய தனியனேயும், மேலே பரம்பரையாக மணவாள மாமுனிகளள வாக அநுஸந்திப்பது.

### மணவாளமாமுனிகள்

அவதாாம் - ஸாதாரண வருஷம், ஐப்பசி மாஸம், மூல நக்ஷத்ரம், அவதரித்த இடம் ஆழ்வார் திருநகரி. வாழ்ந்திருந்தது 73 வருஷம்.

(நம்பெருமாள் அருளிச்செய்தது.)

श्रीशैलेशदयापात्रं धीभक्त्यादि गुणार्णवम् । यतीन्द्रप्रवणं वन्दे रम्यजामातरं मुनिम् ॥

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணர்ணவம் ।
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ॥

### திருவாய்மொழிப்பிள்ளை

விபவ - வைகாசி - விசாகம் - பாண்டிய தேசத்தில் குந்தி நகரம் - 105 வருஷம்

(மணவாளமாமுனிகள் அருளிச்செய்தது.)

नमः श्रीशैलनाथाय कुन्तीनगर जन्मने । प्रसादलब्ध परमप्राप्यकैङ्कर्यशालिने ॥

நமः ஸ்ரீசைல நாதாய குந்தீநகர ஜந்மநே । ப்ரஸாத லப்தபரமப்ராப்யகைங்கர்யசாலிநே ॥

### பிள்ளைலோகாசார்யர்

குரோதன - ஐப்பசி - திருவோணம் - ஸ்ரீரங்கம் - 95 வருஷம்

लोकाचार्याय गुरवे कृष्णपादस्य सूनवे । संसारभोगिसन्दष्ट जीवजीवातवे नमः ॥

லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே ।
ஸம்ஸாரபோகி ஸந்தஷ்ட ஜீவ ஜீவாதவே நம: ॥

### வடக்குத்திருவீதிப்பிள்ளை

ஸர்வஜித் - ஆனி - ஸ்வாதி - ஸ்ரீரங்கம் - 97 வருஷம்

श्रीकृष्णपाद पादाब्जे नमामि शिरसा सदा । यत्प्रसादप्रभावेन सर्वसिद्धिरभून्मम ॥

ஸ்ரீக்ருஷ்ணபாதபாதாப்ஜே நமாமி சிரஸா ஸதா ।
யத்ப்ரஸாதப்ரபாவேந ஸர்வஸித்திரபூந்மம ॥

### பெரியவாச்சான்பிள்ளை

ஸர்வஜித் - ஆவணி - ரோஹிணி – சேங்கனூர் - 95 வருஷம்

श्रमत्कृष्णसमाह्वाय नमो यामुनसूनवे । यत्कटाक्ष्यैकलक्ष्याणां सुलभः श्रीधरस्सदा ॥

ஸ்ரீமத்க்ருஷ்ண ஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே ।
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலப: ஸ்ரீதரஸ்ஸதா ॥

### நம்பிள்ளை

(திருக்கலிகன்றி தாஸர் - நம்பூர் வரதாசாரியர்)

ப்ரபவ - கார்த்திகை - க்ருத்திகை - நம்பூர் - 105 வருஷம்

वेदवेदान्तवेद्यामृत वारि राशेः वेदार्थसारामृत पूरमग्र्यम् ।
आदाय वर्षन्तमहं प्रपद्ये कारुण्यपूर्णं कलिवैरिदासम् ॥

வேதவேதாந்த வேத்யாம்ருத வாரிராசே: வேதார்த்தஸாராம்ருத பூரமக்ர்யம்,
ஆதாய வர்ஷந்தமஹம் ப்ரபத்யே காருண்யபூர்ணம் கலிவைரிதாஸம் ॥

### நஞ்ஜீயர்

விஜய - பங்குனி - உத்திரம் - மேல் நாட்டில் கங்கோரை - 100 வருஷம்

नमो वेदान्तवेद्याय जगन्मङ्गलहेतवे । यस्य वागामृतासार पूरितं भुवनत्रयम् ॥

நமோவேதாந்த வேத்யாய ஜகன்மங்கள ஹேதவே। யஸ்யவாகம்ருதஸார பூரிதம் புவநத்ரயம்॥

### பட்டர்

சுபக்ருத் - வைகாசி - அநுஷம் - ஸ்ரீரங்கம் - 28 வருஷம்

श्री पराशरभट्टार्यः श्रीरङ्गेश पुरोहितः । श्रीवत्साङ्कसुतः श्रीमान् श्रीयसे मेऽस्तुभूयसे ॥

ஸ்ரீபராசரபட்டார்ய: ஸ்ரீரங்கேச புரோஹித: ।
ஸ்ரீவத்ஸாங்கஸுத: ஸ்ரீமான் ச்ரேயஸேமேஸ்து பூயஸே ॥

### எம்பார்

க்ரோதன - தை - புனர்வஸு - மழலமங்கலம் - 105 வருஷம்

(பட்டர் அருளிச்செய்தது)

रामानुजपदच्छाया गोविन्दाह्वानपायिनी । तदायत्तस्वरूपा सा जीयान्मद्विश्रमस्थली ॥

ராமாநுஜ பதச்சாயா கோவிந்தாஹ்வா அநபாயிநீ ।
ததாயத்தத்ஸ்வரூபாஸா ஜீயாந்மத்விச்ரமஸ்தலீ ॥

### முதலியாண்டான்

ப்ரபவ - சித்திரை - புனர்வஸு - பச்சைப்பெருமரள் கோவில் 105 வருஷம்

पादुकेयतिराजस्य कथयन्तियदाख्यया । तस्यदाशरथेः पादौ शिरसा धारयाम्यहम् ॥

பாதுகேயதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா ।
தஸ்யதாசரதே: பாதௌ சிரஸா தாரயாம் யஹம் ॥

### கூரத்தாழ்வான்

ப்ரமோதூத - தை - ஹஸ்தம் - கூரம் - 105 வருஷம்

(பட்டர் அருளிச்செய்தகு)

श्रीवत्सचिह्नमिश्रेभ्यो नम उक्तिमधीमहे । यदुक्तयस्त्रयीकण्ठेयान्ति मङ्गलसूत्रताम् ॥

ஸ்ரீவத்ஸசிஹ் நமிச்ரேப்யோ நமஉக்திமதீமஹே ।
யதுக்தயஸ் த்ரயீகண்டே யாந்தி மங்களஸூத்ரதாம் ॥

### எம்பெருமானார்

பிங்கள - சித்திரை - திருவாதிரை - ஸ்ரீபெரும்பூதூர் - 120 வருஷம்

(கூரத்தாழ்வான் அருளிச்செய்தது)

योनित्यमच्युतपादाम्बुजयुग्मरुक्मव्यामोहतस्तदितराणि तृणायमेने ।
अस्मद्गुरोर्भगवतोऽस्य दयैकसिन्धोः रामानुजस्य चरणौ शरणं प्रपद्ये ॥

யோ நித்யமச்யுதபதாம் புஜயுக்மருக்மவ்யாமோ ஹதஸ் ததிதராணி த்ருணயமேநே ।
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ: ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே ॥

### பெரியநம்பிகள்

ஹேவிளம்பி - மார்கழி - கேட்டை - ஸ்ரீரங்கம் - 105 வருஷம்

कमलापतिकल्याणगुणामृतनिषेवया । पूर्णकामायसततं पूर्णाय महते नमः ।

கமலாபதி கல்யாணகுணாம்ருத நிஷேவயா। பூர்ணகாமாய ஸததம் பூர்ணாய மஹதே நம:॥

## ஆளவந்தார்

தாது - ஆடி - உத்திராடம் - வீரநாராயணபுரம் - 105 வருஷம்

(எம்பெருமானார் அருளிச்செய்தது)

यत्पदाम्बोरुहध्यान विध्यस्ताशेषकल्मषः । वस्तुतामुपयातोऽहं यामुनेयं नमामि तम् ॥

யத்பதாம்போருஹத்யானவித்வஸ்தாசேஷகல்மஷ: ।
வஸ்துதாமுபயாதோஹம் யாமுநேயம் நமாமி தம் ॥

## மணக்கால் நம்பிகள்

விரோதிக்ருத் - மாசி மகம் - மணக்கால் - 105 வருஷம்

अयत्नतो यामुनमात्मदासं अलर्कपत्रार्पणनिष्क्रयेण ।
यः क्रीतवानास्थितयौवराज्यं नमामि तं राम अमेयसत्वम् ॥

அயத்நதோ யாமுநமாத்மதாஸம் அலர்க்கபத்ரார்பண நிஷ்க்ரயேண।
ய:க்ரீதவாநாஸ்திதயௌவராஜ்யம் நமாமி தம் ராமமேயஸத்வம்॥

## உய்யக்கொண்டார்

பராபவ - சித்திரை - கிருத்திகை - திருவெள்ளரை - 105 வருஷம்

नमः पङ्कजनेत्राय नाथश्रीपादपङ्कजे । न्यस्तसर्वभरायाऽस्मत्कुलनाथाय धीमते ॥

நம: பங்கஜநேத்ராய நாதஸ்ரீபாதபங்கஜே। ந்யஸ்த ஸர்வபராயாஸ்மத் குலநாதாய தீமதே॥

## நாதமுனிகள்

சோபக்ருத் - ஆனி - அநுஷம் - வீரநாராயணபுரம் - 330 வருஷம்

(ஆளவந்தாரருளிச்செய்தது)

नमोऽचिन्त्याद्भुताक्लिष्ट ज्ञानवैराग्य राशये । नाथाय मुनयेऽगाध भगवद्भक्तिसिन्धवे ॥

நமோசிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞாநவைராக்ய ராசயே।
நாதாய முநயே அகாத பகவத்பக்தி ஸிந்தவே॥

## நம்மாழ்வார்

ப்ரமாதி - வைகாசி - விசாகம் - திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி) 32 வருஷம்

(ஆளவந்தார் அருளிச்செய்தது)

माता पिता युवतयस्तनया विभूतिः सर्वं यदेव नियमेन मदन्वयानाम् ।
आद्यस्य नः कुलपतेर्वकुलाभिरामं श्रीमत्तदङ्घ्रियुगलं प्रणमामि मूर्ध्ना ॥

மாதாபிதா யுவதயஸ்தநயா விபூதி: ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்।
ஆத்யஸ்யந: குலபதே: வகுளாபிராமம் ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா॥

## ஸேனை முதலியார்

(பட்டர் அருளிச்செய்தது)

श्रीरङ्गचन्द्रमसमिन्दिरया विहर्तुं विन्यस्य विश्वचिदचिन्नयनाधिकारम् ।
यो निर्वहत्यनिशमङ्गुलिमुद्रयैव सेनान्यमन्यविमुखास्तमशिश्रियाम ॥

ஸ்ரீரங்கசந்தமஸமிந்திரயா விஹர்த்தும் விந்யஸ்ய விச்வசிதசிந்நயநாதிகாரம்।
யோ நிர்வஹத்யநிசமங்குலி முத்ரயைவ ஸேநாந்யமந்ய விமுகாஸ் தமசிச்ரியாம:॥

## ஸ்ரீரங்கநாய்ச்சியார்

(பட்டர் அருளிச்செய்தது)

नमः श्रीरङ्गनायक्यै यद्भ्रूविभ्रमभेदतः । ईशेशितव्यवैषम्यनिम्नोन्नतमितं जगत् ॥

நம: ஸ்ரீரங்கநாயகயை யத்ப்ரூவிப்ரமபேதத:। ஈசேசிதவ்யவைஷம்ய நிம்நோந்நதமிதம் ஜகத்॥

## பெரியபெருமாள் (ஸ்ரீரங்கநாதன்)

(பட்டர் அருளிச்செய்தது)

श्रीस्तनाभरणं तेजः श्रीरङ्गेशयमाश्रये । चिन्तामणिमिवोद्वान्तं उत्सङ्गेऽनन्तभोगिनः ॥

ஸ்ரீ ஸ்தநாபரணம் தேஜ: ஸ்ரீரங்கேசயமாச்ரயே ।
சிந்தாமணி மிவோத்வாந்த முத்ஸங்கே அநந்தபோகிந:॥

# Sri Manavalamamunigal Kainkarya Sabha,

## TRIPLICANE, MADRAS

(Registered No. 122 of 1969)

**MANAGING COMMITTEE**

*President;*

RAO BAHADUR
T. A. SRINIVASA RAGHAVACHARIAR, I.S.O.

*Vice-President:*

DR. V. V. RAMANUJAM, M.A., Ph.D.

*Secretary and Treasurer:*

SRI A. P. SRINIVASACHARIAR

*Asst. Secretary:*

SRI E. RAMASWAMY IYENGAR.

*Members:*

SRI A. A. PARTHASARATHI IYENGAR.
SRI K. T. THIRUMALACHARIAR.
SRI C. PARTHASARATHI IYENGAR

**INTRODUCTION—THE PRESIDENT WRITES:**

The origin of the Sabha is clouded in some mystery for want of early records. As far as my recollection goes, some sixty years back, Sri Vaithamanidhi Mudumbai Srinivasa Appangar, a scion of the family which had settled in Triplicane for some generations was in the forefront in getting ubayakars, donations etc., and conducting the festival of Sri Manavalamamunigal in the Sri Parthasarathi Swami Temple on a decent scale. At some period in his life, he organised this Sabha with himself as President and Srimans P. B. Ramanujachariar, E. Rajagopalachariar, and his cousin's son V. M. Gopalakrishnamachariar as members to assist him. On the death of Sri Appangar, Sri A. A. Kuppuswami Iyengar succeeded him and when the latter died in 1929, the mantle fell on me. There have been a succession of able and efficient secretaries like the three gentlemen mentioned above and later on Sri T. A. Varadachariar, Sri E. R. Srirangachariar and the present secretary Sri A. P. Srinivasachariar,

who spared no pains to collect donations and arrange for the festivals in an orderly and decent manner. They were all pious men with zeal to serve Mamunigal and some of the other trustees of the Sabha also helped to the best of their ability. Owing to their efforts and the growing efforts of discerning devotees of Sri Manavalamamunigal, inspired by the many lectures delivered by learned men in this city, the Sabha has grown from strength to strength. In spite of the ever-growing rise in the prices of all articles required for prasadams and other forms of worship, rise in wages and the increasing demands of the trustees of the temple on the Sabha, it has been able to collect subscriptions and donations sufficient to meet the expenses. In recent years two gentlemen offered donations by way of endowment viz., Prof. L. Vekataratnam Nayudu (Rs. 1000/-) and Sri C. M. Thiruvenkatachariar (Rs. 1300/-) which have been gratefully accepted. Sri Lakshmi Ammal Trust and Sri Eachanguzhi Alamelu Ammal Trust have also contributed towards the expences.

The finances of the Sabha have always been sound. By careful and profitable investments and by limiting expenses as far as possible to incomes other than interest on capital, the capital of the Sabha has steadily increased. From Rs. 409/- on 31-8-39, it rose to Rs. 5038/- in 1949, to Rs. 6167/- in 1959 and to Rs. 12842/- in 1969. The Post Office do not recognise unregistered Sabhas and investment in National Plan Certificates had to be made in the names of individuals. Though invested in joint names and payable to Either or Survivor, there would be difficulty in encashing them if both of them die. Fortunately they have been encashed. For this and other reasons, and looking to the large amount to which the capital had grown, the Trustees of the Sabha considered it safe to register the Sabha under the Societies Registration Act and it was registered in 1969 as No. 122 of 1969.

Under Rule 3 of the Rules framed in this connection, all persons who contribute during a year not less than Rs. 6/- by way of donation or ubhayam and persons who have donated a large sum by way of endowment are treated as members of the Sabha. The trustees of the unregistered Sabha constituted themselves into the new Managing Committee consisting of a President, Vice-President, Secretary and Treasurer, Assistant Secretary and three members.

The First General Body Meeting of the Sabha as a registered body was held on 20th September 1970, in the year Sadarana completing the 10th 60-year cycle and the 601st year since Sri Manavalamunigal was born as the aparavatharam of Sri Ramanuja. In view of this special and exceedingly auspicious occasion, the Managing Committee and the General Body have resolved to celebrate it on as

grand a scale as possible. As part — an important part of the celebration — the Sabha has undertaken to publish a commemoration volume containing photographs of Sri Manavalamamuni's moorthi in various temples, articles by learned persons on his prabhavam and work, his original works and works by his disciples in appreciation of Mamunigal. The Sabha owes a deep debt of gratitude to its Vice-President Dr. V. V. Ramanujam who conceived the idea and carried it into execution.

The Sabha is very thankful to gentlemen who helped us with the various photographs and also the various firms and individuals who have taken advertisement space in the volume and thus lightened the financial burden.

T. A. SRINIVASA RAGHAVAN,
*President,*
Sri Manavalamamunigal Kainkarya Sabha, Triplicane,
MADRAS.

# அடியேன் செய்யும் விண்ணப்பம்....

பேயாழ்வார், திருமழிசைப்பிரான், கலியன் இம்மூன்று ஆழ்வார்களால் மங்களா சாஸனம் பண்ணப்பட்ட திவ்யதேசமாக தொண்டை நன்னாட்டில் மிகச் சிறந்து விளங்குவதும், நமது தர்சன ப்ரவர்த்தகரான எம்பெருமானாரின் அவதாரத்துக்கு இங்கு பண்ணப்பட்ட புத்ரகாமேஷ்டியாகத்தினடியாக கீதாசார்யனே ஸ்வாமியாக வந்து அவதரிக்கத் திருவுள்ளம் பற்றியதன்மூலம் காரணபூதமாயமைந்த ப்ருந்தராண்ய க்ஷேத்ரமாம் திருவல்லிக்கேணியில் ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி ஸன்னிதியில் கோயில் கொண்டுள்ள மணவாள மாமுனிகளுக்கு ப்ரதிவருஷமும் உத்ஸவம் நடத்திவைப்பதற்கென்று ஏற்பட்டது இந்த கைங்கர்யஸபை, ஸுமார் ஒரு நூற்றாண்டு காலமாக இந்த ஸபை உத்ஸவ கைங்கர்யத்தை நிர்வஹித்து வருவதாகப் பெரியோர் சொல்லக்கேட்டதுண்டு. ஆசார்ய சிகாமணியான ஸ்ரீ மணவாளமாமுனிகளுக்குப் பத்தாவது சஷ்ட்யப்தபூர்த்தியும் ஆறுவது நூற்றாண்டு நிறைவுமான இந்த ஸாதாரண வருஷத்தில் ஏதோ பாக்யவசாத் இந்த கைங்கர்ய ஸபையில் பணியாற்றும் பேற்றைப் பெற்றுள்ளேன். தம் விபவகாலத்தில் ஸ்வாமி இந்த திவ்ய தேசத்துக்கு எழுந்தருளி கீதாசாரியனை மங்களாசாஸனம் பண்ணியதாக யதீந்த்ரப்ரவண ப்ரபாவத்தில் காண்கிறோம். பல மஹான்கள் வாழ்ந்து ஸ்வாமிக்குச் சிறப்பான பல கைங்கர்யங்கள் பண்ணியுள்ளார்களிங்கு. அவதார ஸ்தலத்திலும்கூட இந்த விபவம் ஸ்வாமிக்குண்டோ என்று அடியேன் ஆச்சர்யப்படுவதுண்டு. பெரிய பெருமாள் திருமுன்பே நித்யமும் கோஷ்டியில் இவருக்குப் பெருமாள் தீர்த்தம் கண்டருளப்பண்ணியே அடியார்க்கு விநியோகிக்கும்படி ஸந்நிதி அமைப்பும், அதன் விசாலமும் அழகும், கூடவே பிள்ளைலோகா

சாரியர் எழுந்தருளியிருக்கும் பாங்கும் அற்புதமான ஸன்னிவேசங்கள். பத்து தினங்கள் விமரிசையாகக் கண்டருளும் ஸம்வத்ஸர உத்ஸவத்தில் தினமும் அலங்காரமாகத் திருமஞ்சனம் கண்டருள்வது, பிறகு அடைவே திருமண்காப்பு ஸேவை, திருப்பாவை, முதலாயிர—திருமொழிகோஷ்டி, சாற்றுமுறை இவை நடப்பதும், பின்னர் ஸ்தோத்ரபாட அநுஸந்தானத்துடன் ஸன்னிதிகளுக்கு எழுந்தருளி மங்களாசாஸனம் பண்ணிச் சிறப்புக்கள் பெறுவதும், திருவீதிப்புறப்பாட்டிற்குப் பிறகு திருவாய்மொழி கோஷ்டி, சாற்றுமுறை ஆகி ஏகாந்த ஸேவையாக ஸன்னிதிக்கு எழுந்தருளுமழகும் எல்லாமே ஸேவிக்கத் தெவிட்டாதவை. ஏகாதசி, அமாவாஸை, தீபாவளி, அன்னகூட உத்ஸவம் முதலிய தினங்களில் பார்த்த ஸாரதி ஸ்வாமி எழுந்தருளி உத்ஸவத்தை சோபிக்கச் செய்தருளுவதும், ஹஸ்தம், ஸ்வாதி நக்ஷத்ர தினங்களில் தேவப்பெருமாளும் அழகியசிங்கரும் எழுந்தருளி உத்ஸவத்தைச் சிறப்பித்தருளுவதும் வெள்ளிக்கிழமை, உத்திர நக்ஷத்ரம் இத்தினங்களில் தாயாரெழுந்தருளி ஸ்வாமியுடன் திருமடல் கேட்டருள்வதும் அடியார்களுக்கு ஸேவிக்க விலக்ஷணமான அநுபவங்கள். இவை எல்லாவற்றிற்கும் சிகரமாகத் திருமூலத்தன்று காலையில் பெருமாளும் நாய்ச்சிமார்களும் பெரிய ஸன்னிதியினின்றும் திருக்கைத்தலத்திலேயே எழுந்தருள்வது தம் திருமொழியில் தளர்நடைப்பருவத்தை அநுபவிக்கும் பெரியாழ்வார் பாடல்களையே நினைப்பூட்டும். "முன்னலோர் வெள்ளிப்பனிமலைக்குட்டன் மொடு மொடு விரைந்தோட, பின்னைத் தொடர்ந்தோர் கருமலைக்குட்டன் பெயர்ந்தடி இடுவதுபோல்—ஒரு காலில் சங்கு ஒரு காலில் சக்கரம் உள்ளபடி பொறித்தமைந்த இருகாலும்கொண்டு, அங்கங்கு எழுதினாற்போல் இலச்சினைபட நடந்து, பெருகாநின்ற இன்பவெள்ளத்தின்மேல் பெய்து பெய்து, கருங்கார்க் கடல்வண்ண"ணை கரியான், இங்கு தன்னருளுக்காகக் காத்து நிற்கும் அந்த வெள்ளிப் பனிமலைக்குட்டனின் அபராவதாரமான பெரிய ஜீயரை அநுக்ரஹிப்பது வேறெங்கும் எந்த ஆசார்யாருக்கும் கிடைக்காத சிறப்பு.

வரவரமுனி பக்தர்களான அடியார்கள் ஸஹகரிக்கும் சந்தா, நன்கொடைகள், மற்றும் உபயகாரர்கள் ஸஹகாரம் இவற்றைக்கொண்டு இந்த உத்ஸவம் விமரிசையாக நடந்துவருகிறது. இந்த கைங்கர்ய ஸபையின் நிர்வாஹஸ்தர்களில் அடியேன் அறிந்து வெகு நாளாக ஸ்ரீ உ. வே. ஆஸூரி ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஸ்வாமியும் ஸ்ரீ உ. வே. அகரம் (A. P.) ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியும் முறையே ப்ரெஸிடெண்டாகவும் ஸெக்ரெடரியாகவும் பணியாற்றிவருகின்றனர். கடந்த சில வருஷங்களாக நிர்வாஹஸ்தர்களில் ஒருவனாக பணியாற்ற அடியேனும் நியமனம் பெற்று ஈடுபட்டுவருகிறேன். மிகவும் சிறப்பு வாய்ந்த இந்த வருஷத்து உத்ஸவத்தை மிகவிபவமாகக் கொண்டாடி ஸத்தைபெறவேண்டுமென்ற பாரிப்பு ஸ்வாமி திருவடி ஸம்பந்திகள் யாவருக்கும் உண்டு. "குரும் ப்ரகாசயேத்" என்ற ப்ரமாணவசனப்படி ஆசார்ய வைபவத்தைப் பலபடியாலும் விளங்கச்செய்வது நம் மொவ்வொருவருக்கும் முக்கியமான கடமையாகும். திருமழிசைப்பிரான் அருளிச் செய்துள்ள க்ரமத்தில் எழுதியும், வாசித்தும், கேட்டும், வணங்கிவழிபட்டும், பூசித்தும் பூஜ்யர்களின் பெருமையை விளங்கச்செய்யலாம். எழுதுவது, நம்முடன் நில்லாமல் எல்லாருக்குமாகும்படி அச்சிட்டு வெகுவாகப் பரப்புவதையும் உட்கொண்டதாகும் தற்காலத்தில். இதுவே இந்த மலர் வெளியீட்டின் முக்கியமான குறிக்கோள். மணவாளமாமுனிகளின் திருவடி ஸம்பந்தியாகப் பிறக்கும் மஹாபாக்யத்தைப் பெற்றிருந்தும் ஸ்வாமியின பெருமையைப்பற்றி ஒன்றுமே தெரியாமலோ அல்லது பெயரளவில் மட்டுமே அறிந்துகொண்டோ இருப்பவர் பலருளர் என்பது மிகவும் வருந்தத்தக்க நிலையாகும். நம் ஸ்வாமியின் பெருமை

களைப் பலபடியும் பேசி அநுபவிப்பதே இம்மலரின் நோக்கம். வணங்கிப் பூசிப்பதற்கு உற்றவையாகப் பல ஸ்துதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. மஹான்கள் அருளிச்செய்துள்ள ஸ்தோத்ரங்களை அநுஸந்தித்தால் பசு தோற்கன்றுக்குப் பால் சுரப்பதுபோல ஆசார்யாபிமானம் நமக்கும் கிட்டும். முக்கியமான பல படங்களும் (போடோக்கள்) சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த வெளியீட்டின் பதிப்புப்பொறுப்பை அடியேனிடம் தந்து கைங்கர்யம் வாய்ப்பினைத் தந்த ஸபையாருக்கு அடியேன் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இதற்கான தகுதி அடியேனிடம் ஒன்றுமில்லை. பணிபுரியவேண்டு மென்ற ஆர்வம் காரணமாக இந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். எல்லாவித குறைபாடுகளுக்கும் அடியேனே பொறுப்பாளி. குறைகளை அன்புகூர்ந்து க்ஷமிக்கும்படி பெரியோர்களை வேண்டி நிற்கிறேன்.

இந்த கைங்கர்யம் பலருடைய உதவியைக்கொண்டே நிறைவேற்றப்படுகிறது. ஸ்ரீ உ. வே. தி. ஸ்ரீ. ராஜகோபாலய்யங்கார் ஸ்வாமி (ஹிந்து உயர்நிலைப் பள்ளியின் முன்னாள் தலைமையாசிரியர்) பலவிதங்களிலும் உதவிபுரிந்துள்ளார். அன்னாருக்கு அடியேன் மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். விளம்பரங்கள் அளிப்பதன் மூலம் பொருளுதவி புரிந்த பெருமக்களுக்கு அடியேனுடையவும் ஸபையாருடையவும் உளம்கனிந்த நன்றி. இந்தவுதவியில்லாமல் இந்த வெளியீடு ஸாத்தியமாகாது. இந்த விளம்பரங்களை வாங்கிக்கொடுத்து புருஷகாரம் பண்ணிய அன்பர்களுக்கும் அடியோங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். படங்களையும் ப்ளாக்குகளையும் தந்துதவிய மஹநீயர்களுக்கும் அடியோங்களுடைய நன்றி உறித்தாகும். இந்த மலரை நேர்த்தியான முறையில் அச்சிட்டுத்தந்துதவிய அன்பர் சென்னை ரத்னம் அச்சகத்தின் உரிமையாளர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ முதலியாருக்கு அடியேன் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

கட்டுரைகள் மூலம் இம்மலரினைச் சிறப்பிக்கும் பெரியோர்களுக்கு அடியேன் தலையல்லால் கைம்மாறிலேனாகவுள்ளேன். அடியேனுடைய கட்டுரைகள் சிலவற்றைச் சேர்க்கவும் பதிப்பாசிரியர் என்ற வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டுள்ளேன். எந்தவித குற்றம் குறைபாடுகள் இருந்தாலும் க்ஷமித்தருளி, இருக்கக்கூடிய நல்ல அம்சங்களையே ஆதரித்து மகிழும்படி மாமுனிவனடியார்களை ப்ரார்த்திக்கின்றேன்.

**V. V. ராமாநுஜன்.**

திருவல்லிக்கேணி



ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி

பார்த்தன்தன் தேர்முன் நின்ருனைத் திருவல்லிக்கேணிக்கண்டேனே!

(19-ம்பக்கம் காண்க)



## திருவல்லிக்கேணிக் கண்டேனே!

←

**வேதவல்லித்தாயாருடன்**
**ரங்கநாதர்**

வேதத்தை வேதத்தின்
சுவைப்பயனை...
என்னையாளுடையப்பனை...



→

**அழகியசிங்கர்**
தெள்ளிய சிங்கமாகிய தேவை...

கீழே இடப்பக்கம்:
**கஜேந்த்ர வரதராஜர்**
ஆனையின் துயரந்தீரப்புள்ளூர்ந்து
சென்று நின்றாழி தொட்டானை...

கீழே வலப்பக்கம்:
**சக்ர்வர்த்தித் திருமகன்**
“...இலக்குமனோடு மைதிலியும்...”
...இராவணாந்தகனை யெம்மானை...







ஸ்ரீரங்கநாச்சியார்



நம்பெருமாள் (ஸ்ரீரங்கநாதன்)
ஸ்ரீசைலேச தனியன் அருளியவர்




திருவாய்மொழியீடு சாற்றுமுறை : ஸ்ரீசைலேச தனியன் அவதாரம்
(22-ம் பக்கம் காண்க)



**ஸ்ரீரங்கம் மணவாளமாமுனிகள் ஸந்நிதி**
(பல்லவராயன் மடம்; 11-ம் பக்கம் காண்க)
மேலே அஷ்டதிக்கஜ ஆசார்யர்கள் ஸேவை காணலாம்



**மேற்படி ஸந்நிதியுள் கோவிலாழ்வார்**
மேலே அரங்கநகரப்பன் (ஸ்வாமியின் திருவாராதன எம்பெருமான்)
கீழே மணவாளமாமுனிகள்





ஸ்ரீரங்கம் ஸன்னிதியில் ஸ்தம்பமூலத்தில் ஸ்வாமி (பூர்வதின-18) சித்ரரூபியாய் ஸேவை ஸாதிப்பது; திருமுன்பே பொன்னடியாம் செங்கமலம் என்னும் பாதுகைகள் ( உ. ர. மாலை-74 ). வலப்பக்கத்துப்படம் - கோவிலாழ்வாரில் ஸேவைஸாதிக்கும் ஸ்வாமியின் அர்ச்சாமூர்த்தி

## திருமலையாழ்வார் திருமண்டபம்










இடமிருந்து வலம்: (1) பொதுத்தோற்றம்; கட்டமிட்டுக்காட்டப்பட்ட இடத்தில் ஸ்வாமி அமர்ந்திருந்து காலக்ஷேபம் ஸாதிப்பது (2) 1-ல் கட்டமிடப்பட்டதின் பெரிதாக்கம் - X குறியிட்ட இடத்தில் ரஹஸ்யம் விளைந்த மண்ணினுல் ஸ்வாமியின் ஆஸனம் (12-ம் பக்கம் காண்க) (3) ஸ்வாமி காலக்ஷேபம் ஸாதிப்பதைச் சித்தரிப்பது; (4) சுவரில் உள்ள இந்த பிலத்தின் வழியாக ஸ்வாமி சேஷாக்ருதியாய் ஸ்வசரீரத்தை விட்டு எழுந்தருளி மறைந்ததாக ஐதிஹ்யம்.



தெய்வ வடமலையப்பன் (ஸ்ரீநிவாஸன்)

ஸ்ரீ சைலேச தனியனுக்கு ப்ரவர்த்தகர் (23-ம் பக்கம் காண்க)



திருப்பதி : கோவிந்தராஜப் பெருமாள், மணவாள மாமுனிகள்



**பெருந்தேவித்தாயாருடன் பேரருளாளன் (காஞ்சீபுரம்)**

ஈடு முப்பத்தாருயிரப்படியை திருவாய்மொழிப்பிள்ளைக்கு ஸாதிக்கும்படி நாலூர்ப் பிள்ளைக்கும் நாலூராச்சான் பிள்ளைக்கும் திருவடியூன்றி திவ்யாஜ்ஞை பிரப்பித்தவர் (37-ம் பக்கம் காண்க)



**பிள்ளைலோகாசார்யர் (ஸ்ரீபெரும்பூதூர்) மணவாளமாமுனிகள்**

அஷ்டாதாசரஹஸ்யம்-மூலம் ஸாதித்த மஹாசார்யர் (2-ம் பக்கம் காண்க).

ரஹஸ்யங்களுக்குத் தெள்ளிய உரை ஸாதித்த விசதவாக்சிகாமணி (16-ம் பக்கம் காண்க).

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத்வரவரமுநயே நம:

பரமகாருணிகரான

பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த

# யதீந்த்ரப்ரவண ப்ரபாவம்

(ஸங்க்ரஹம்)

**முன்னுரை:** ஸ்ரீமத் பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த இந்த க்ரந்தம் மணவாள மாமுனிகள் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் வசன நூல்களில் சிறநததாயுள்ளது. நம் பெரியோர்களால் ஆதரிக்கப்பட்ட நூலும் இதுவே. இந்த நூலில் பிள்ளைலோகாசார்யர், திருவாய்மொழிப் பிள்ளை, மணவாள மாமுனிகள் இவர்களுடைய வைபவங்கள் அருளிச் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் மாமுனிகள் வைபவம் மிக விஸ்தாரமாக உரைக்கப் பட்டுள்ளது. இந்த ஸங்க்ரஹத்தில் மாமுனிகள் வைபவம் இந்த நூலை யருளிச்செய்த ஜீயர் ஸ்வாமியுடைய வாக்யங்களைக் கொண்டு சுருக்கப்பட்டுள்ளது. மாமுனிகளுடைய வாழ்க்கையில் முக்யமான ஸம்பவங்களும், வரலாற்றுக்கு உபயுக்தமான விஷயங்களும் இந்தச் சுருக்கத்தில் இடம் பெறுகின்றன.

## மணவாளமாமுனிகள் அவதாரத்துக்குமுன் ஸ்ரீரங்கத்தில் நிகழ்ச்சிகள்

ஸர்வசேதனரும் உஜ்ஜீவிக்கும்படி [1] சரமப்ரமாண ப்ரமேய ப்ரமாத்ரு வைபவங்களை ப்ரகாசிப்பித்துக்கொண்டு பிள்ளைலோகாசார்யர் பெருமாளுக்கு ப்ராணபூதராய் எழுந்தருளி யிருக்கும் காலத்தில், ஸ்ரீரங்கம் [2] துருஷ்காக்ராந்தமாய்க் குடியிருக்கப்போகாமல், [3] பெருமாள் நாய்ச்சிமாருடனே புறப்பட்டுப் பெரிய பெருமாளுக்குத் திருமுன்பே கல்காப்புச் சாத்தி முன்னே ஒரு விக்ரஹத்தை எழுந்தருளப்பண்ணிவைத்துத் தம் அந்தரங்க பரிகரத்துடனே [4] வலசையாக வெழுந்தருள; பிள்ளையும், வாளும் வில்லும் கொண்டு பெருமாளைப் பின் தொடர்ந்து அடிமை செய்த இளைய பெருமாளைப்போல் அத்தலைக்கு மங்களாசாஸன பரராய்த் தாமும் [5] முதலிகளும் ஸேவித்துக்கொண்டு சேர எழுந்தருள, பயங்கரமாய்ச் [6] சிலைக்கை வேடர் திரிகிற கடுங்கானமான கள்ளர் பற்றிலே எழுந்தருளுகிற வளவிலே சில [7] தஸ்யுக்களுக்கு [8] ஸர்வஸ்வதானம் பண்ணியருள, அச்செய்தியைக் கேட்டு முன்னே எழுந்

1. இதற்குமேல் ஒன்றுமில்லை என்னும்படி தேர்ந்த அர்த்தங்கள், ஆசார்ய வைபவம் பற்றியவை; 2. துலுக்கர்களால் ஆக்ரமிக்கப்பெற்றதாய், 3. உத்ஸவரான நம்பெருமாள், 4. வேறிடம் செல்லுவதாக, 5. சிஷ்யர்களில் தலைவர்கள், 6. கையில் ஆயுதம் பிடித்த வேடர்கள், 7. கள்வர், 8. எல்லா உடமைகளையும் பறிகொடுத்தல்.

தருளின பிள்ளை மீண்டும் எழுந்தருள, அவ்விடத்திலே அவர்களுக்குத் தாமும் ஸர்வஸ்வ தானம் பண்ணியருளி அப்பாலே எழுந்தருள, **ஜ்யோதிஷ்குடி** என்கிற க்ராமத்திலே பெருமாளுடனே எழுந்தருளி அங்கே திருமேனி [1]நோவுசாத்தி மிகவும் தளர்ந்து கண்வளர்ந்தருள, திருவடிக்கு அந்தரங்கமான முதலிகள், "எங்களுக்குத் தஞ்சமேது?" என்று விண்ணப்பம் செய்ய, அப்போது [2]திருமலையாழ்வாரிடத்தில் திருவுள்ளம் ப்ரஸன்னமாய்க் குடிபுகுந்து, லௌகிக வைதிகங்களிலே அதிநிபுணராய் மதுரை ராஜ்யாதிபத்யம் பண்ணுகிறவர் அத்தை விட்டு தர்சனப்ரவர்த்தகராம்படி ஆசீர்வதித்தருளி, அவரை [3]அநுவர்த்தித்து ஸகல அர்த்தங்களையும் நன்றாக ப்ரஸாதிக்கும்படி முதலிகளுக்கு நியமித்தருளித் தம்மாசார்யரான [4]பிள்ளை திருவடிகளை த்யாநித்துக்கொண்டு ஜ்யேஷ்டசுத்த த்வாதசியிலே திருநாட்டுக்கெழுந்தருளினார்.

பின்பு பெருமாளும் சிலம்பாறு பாயும் **தென்திருமாலிருஞ் சோலையிலே** சில காலம் எழுந்தருளியிருந்து பின்பு ஸ்ரீ குலசேகரப்பெருமாள் ஆண்டருளிய தேசத்தை விரும்பி எழுந்தருளி அங்கே சில நாள் இனி தமர்ந்திருந்து அநந்தரம் **கோழிக்கோடேற** எழுந்தருள, **மற்ற திவ்யதேசத் தெம்பெருமான்களும் நம்மாழ்வாரும் அங்கே** வலசையாக எழுந்தருள அங்கு நின்றும் புறப்பட்டு ஆழ்வாருடனே **தேனைக்கிடம்பைக்கு** எழுந்தருளி, அங்கு சில நாள் எழுந்தருளியிருந்து, ஆழ்வாரை நிறுத்திப் புங்கனூர் வழியாகத் திருநாராயணபுரத்தேற ப்ரதக்ஷிணமாக எழுந்தருளித் திலதமுலகுக்காய் நின்ற [5]**திருமலையை** அடைந்து [6]"மந்திபாய் வடவேங்கடமாமலை, வானவர்கள் சந்திசெய்ய நின்றான் அரங்கத்தரவினணையான்" என்கிறபடியே [7]ஐக்யமான ஆகாரத்தாலே அங்கே அநேக காலம் திவ்யோத்ஸவாதி வைபவங்களுடனே வாழ்ந்துகொண்டிருந்தார்.

**இனி ஆழ்வார் வ்ருத்தாந்தம்:** கோழிக்கோட்டினின்றும் பெருமாள் புறப்பட்டெழுந்தருளுகிறபோது கூடப் புறப்பட்டருளாமல், ஸ்த்தானத்தார், ஸ்த்தலத்தார் [8]பரஸ்பர வைஷம்யத்தாலே தடங்கல் பண்ண, அந்த ஸமயத்திலே மேற்கு கள்ளர்பற்றாய், கிழக்கும் கள்ளர்பற்றாய் வடக்கும் துருஷ்கபயமாயிருந்தபடியினாலே அத்திசைகளில் இருக்கப் போகாமல் ஆழ்வாரை வலசையாகத் தென்மேற்கு மூலையிலே வெகுதூரம் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு செல்ல, அங்கே கள்ளர் பயம் மிக, [9]கத்யந்தரமில்லாமையாலே [10]அத்யுன்னதமான முந்திரிப்புமலையிலே ஏறி அத்யகாதமான ஒரு சரிவு கண்டு ஆழ்வாரை ஒரு திருப்[11]பெட்டகத்திலே எழுந்தருளப்பண்ணிச் சங்கிலி கட்டி அந்த அரங்கிலே பாங்காக எழுந்தருளப்பண்ணிவிட்டுத் தங்கள் தங்கள் இடம் போய்ச் சேர்ந்தார்கள்.

அவர்களிலே **தோழப்பர்** என்பார் ஒருவர், ஆழ்வார் திருவடிகளிலே [12]அத்யந்த ப்ரவணராய் அபிமானியாயிருக்கையாலே, தாம் மதுரையிலே சென்று திருமலையாழ்வாருக்கு அறிவித்து இச்செய்தியை எல்லாம் தெரியச் செய்துகொள்ள, திருமலையாழ்வாரும் மலையாள ராஜாவுக்குத் தம்முடைய ஸ்ரீமுகமும் கொடுத்து [13]ஸ்வபடர்களையும் கூட்டி த்ரவ்யமும் ஸாதித்து அனுப்பியருள, அவர்களும் அப்படியே திருவாங்கோட்டூரிலே செல்லக்

---

1. *உடல்நோய்வாய்ப்பட்டு,* 2. *தம்மிடம் முன்பு சிஷ்யராய் ஆச்ரயித்திருந்தவர்; பிள்ளை க்ருபைக்கு பாத்ரமானவர்,* 3. *அண்டி—அவர் வழியேபோய்,* 4. *ஆசார்யரான நம்பிள்ளை,* 5. *திருவேங்கடமாமலை,* 6. *அமலனுதிபிரான்—3,* 7. *இருவரும் ஒருவரே என்பது பற்றி,* 8. *ஒருவருக்கொருவர் விரோதத்தாலே,* 9. *வேறுவழி இல்லாமல்,* 10. *மிக உயரமான,* 11. *பெட்டி,* 12. *அளவற்ற அன்பு பூண்டவராய்,* 13. *தனக்குக்கட்டுப்பட்ட ஏவலாளர்.*

கலகம் தெளிந்தபடியினுலே ஹ்ருஷ்டராய் ராஜாவைக் கண்டு சொல்ல, (ராஜாவும்) ஆழ்வாரைத் **திருக்கணும்பியிலே** எழுந்தருளப்பண்ணிவைக்கும்படி மநுஷ்ய ஸாமக்ரியையும் அர்த்த ஸாமக்ரியையும் பூர்ணமாகக் கொடுத்தனுப்ப, அவர்களும் முந்திரிப்பு என்கிற ஊரிலே சென்று சங்கிலிகளும் பலகைகளுஞ் சேர்த்துக்கொண்டு மலேயில் ஏறி, சரிவிலே (துணிந்து) இழிவாரார் என்று சிந்திக்க, தோழப்பர் நாமே இழிகிறோம் என்று துணிய, அனைவரும் **ஆழ்வார் தோழப்பரைச்** சரிவிலே விட்டு [1] ஸாவதானமாய்ப் பார்த்திருக்க, அவரும் திருப்பெட்டகத்தைத் தேடித் திருக்காப்பு நீக்கி ஆழ்வாரைக் கண்டுகொண்டு ஸேவித்து க்ருதார்த்தராய், திருக்காப்புச் சேர்த்துப் பலகையிலே ஏறியருளப்பண்ணி சங்கிலியைக் குலுக்க, அவர்களும் மேலே ஏந்திக்கொண்டு திருப்பெட்டகத்தை இறக்கித் தோழப்பர் வரும்படி பலகையை விடத் தோழப்பரும் ஏறி சங்கிலியைக் குலுக்க, அவர்களும் சங்கிலியை ஏந்த, நடுவே தட்டுப்பட்டுத் தோழப்பர் விழுந்து விட்டார்.

கள்ளர் பற்றிலுள்ளார் இச் செய்தியைக் கேட்டமாத்திரத்திலே தெய்வயோகத்தாலே ஆநுகூல்யம் பிறந்து ஆழ்வார் திருவடிகளிலே [2] ப்ரவணராய் அனேகமாக ஸத்கரித்து முன்பு பறித்ததையும் ஸமர்ப்பித்து ஆழ்வாரைத் திருக்கணும்பியிலே எழுந்தருளும்படி [3] மார்க்கசோதனம் பண்ணி மங்களவாத்யத்துடனே எழுந்தருளப்பண்ணினுர்கள்.

அநந்தரம் மதுரையிலே ராஜாவாய் இருந்த திருமலேயாழ்வார், பிள்ளேலோகாசார்யராலே நியமிக்கப்பட்ட முதலிகளால் திருத்தப்பட்டு, பரமவிரக்தராய், ஆழ்வார் திருவடிகளிலே மிகவும் ப்ரவணராய், திருக்கணும்பியினின்றும் எப்பொழுது மிருக்கு மிருப்பான ஆழ்வார் திருநகரியிலே ஆழ்வாரைக் குடிபுகச் செய்து, அவர் திருவடிகளிலே [4] அசேஷ சேஷவ்ருத்திகளிலும் அந்வயித்து அதுவே [5] யாத்ரையாய்ப் போரா நின்றுர்.

**இனி கோயில் வ்ருத்தாந்தம்:** அக்காலத்திலே அங்கிருந்த மஹாத்மாக்கள் நாள்தோறும் பூர்வம்போல் ஸ்ரீரங்கைச்வர்யம் [6] நித்யமாய் நிரவதிகமாய் நிர்விக்நமாய்ச் செல்ல வேணுமென்று, திருப்பல்லாண்டும், [7] ஏழையேதலனும், [8] ஆழியெழச்சங்கும் அநுஸந்தித்துப் பெருமாளே ப்ரபத்தி பண்ணிப் போருகையாலே அந்த மங்களாசாஸனம் பலித்து, செஞ்சியில் **கோபணுர்யன்** என்பானெரு வைஷ்ணவப்ரபு திருப்பதிக்குச் சென்று திருவேங்கடத்தெம் பெருமானைத் திருவடிதொழுது அங்கே நம்பெருமாளே ஸேவித்து, திருப்பதியினின்றும் பெருமாளேத் தன்னுடைய நகரமான செஞ்சியேற எழுந்தருளப்பண்ணுவித்துக் கொண்டு வந்து சிங்கராயபுரத்திலே எழுந்தருளப்பண்ணி பக்திபுரஸ்ஸரமாக ஆராதித்துக்கொண்டிருக்க, திருமணத்தூண் நம்பியான சிங்கப்பிரானும் காட்டிக்கொடுக்க [9] பகவத் விட்டுக்களான துருஷ்கரை அடக்க ஸமயம் பார்த்து [10] நிரவதிக பல ஸஹிதராய்ச் செஞ்சியார் சென்று [11] நிச்சேஷமாக நிரஸித்து ஸ்வநகரத்தினின்றும் திருவரங்கம் திருப்பதியேற நம்பெருமாளேப் பிராட்டிமாருடனே யதாஸ்தானத்தில் பெரிய பெருமாளுடனே சேர்த்து ப்ரதிஷ்டிப்பித்து அனைத்தழகும் கண்டருளப்பண்ணினுனிறே.

---

1. *கருத்துடன்,* 2. *அன்பு பூண்டவராய்,* 3. *வழிதிருத்தி, செப்பனிட்டு,* 4. *எல்லாவித கைங்கர்யங்களிலும் பங்குகொண்டு,* 5. *வாழ்க்கையாக வாழ்ந்தனர்,* 6. *எப்போழுதுமாய், மிகவும் வ்ருத்தி யாகிக்கொண்டு, இடையூறில்லாமல்,* 7. *"ஏழை யேதலன்" என்று தொடங்கும் பெரிய திருமொழிப் பதிகம்—சரணுகதிபரமானது,* 8. *"ஆழியெழ" என்று தொடங்கும் திருவாய்மொழிப் பதிகம் — வெற்றிதரவல்லது,* 9. *பக்வத்விரோதிகள்,* 10. *பெருஞ்சேனையுடன்,* 11. *மீதியில்லாமல் அழித்து.*

இப்படி மீண்டும் கோயிலேற எழுந்தருளி, பஹுப்ரியமான சகாப்தம் 1200 சென்ற வர்த்தமான பரீதாபி நாம ஸம்வத்ஸரம் வைகாசி மாஸம் 17ம் தேதியிலே அழகிய மணவாளர் தம் நாய்ச்சிமாருடனேகூட **சேரபாண்டியன்** என்கிற திவ்யஸிம்மாஸனத்திலே சேர்த்தியுடனே ஏறியருளி இனிதுடன் வீற்றிருந்து "செங்கோலுடைய திருவரங்கச் செல்வனர்" என்னுமது தோன்றத் திருவாராதனம் கண்டருளி வாழ்ந்தருளாநின்றுர்.

## அழகிய மணவாளப்பெருமாள் நாயனர் அவதாரம்

இனி பிள்ளைலோகாசார்யர் சிஷ்யராய்க் கொல்லிகாவலதாஸரான கோட்டூர் அழகிய மணவாளப்பெருமாள் பிள்ளையும் லோகாசார்யன் ப்ரஸாதித்தருளின அர்த்த விசேஷங்களை அநுஸந்தித்துக்கொண்டு **சிக்கில் கிடாரம்** என்கிற கிராமத்திலே எழுந்தருளியிருந்தார். பின்பு **திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாதரண்ணர்** அங்கே அவர் குமாரத்தியான **ஸ்ரீரங்கநாய்ச்சியாரைத்** திருமணம் புணர்ந்து அவர் திருமாளிகையிலே எழுந்தருளியிருந்து [1] ஞாதவ்யங்களையெல்லாம் அவர் ஸந்நிதியிலேயே கேட்டருளி, அவரைப் பிள்ளைலோகாசார்யராகவே ப்ரதிபத்தி பண்ணிக்கொண்டு அவருக்கு [2] அநந்யார்ஹராய் அநுவர்த்தித்துப்போந்தார்.

ப்ரபத்தி மார்க்கமானது [3] ஸங்குசிதமாக நடந்து செல்லுகிற விக்காலத்திலே ச்ரியஃபதியாய், பரமகாருணிகனுய், திருவரங்கத்தரவணையிலே "உறங்குவான்போல் யோகு செய்த" என்கிறபடியே ஜகத்ரக்ஷணசிந்தாயுக்தனுய்க் கண்வளர்ந்தருளுகிற பெரிய பெருமாள், [4] மீண்டும் தர்சனம் இப்படி ஓராண்வழியாய் வருகிறபடியைக் கண்டு, எம்பெருமானுரைப்போலே லோகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி ஒரு விஷயத்தை உண்டாக்குவோம் என்று யோசித்து, திருவநந்தாழ்வானை ஜகத்தைத் திருத்தும்படி [5] நியோகித்தருள, அவரும் அப்படியே

*யந்மூலமாச்வயுஜமாஸ்யவதார – மூலம்*
*காந்தோபயந்த்ருயமிந: கருணைகஸிந்தோ:।*
*ஆஸீதஸத்ஸுகணிதஸ்ய மமாபி ஸத்தா–*
*மூலம் ததேவ ஜகதப்யுதயைக – மூலம்॥*

என்கிறபடியே தம்முடைய திருவவதாரத்துக்கு இடம் பார்த்து **ஆழ்வார் திருநகரியிலே** அண்ணர் தேவிகள் கர்ப்பத்தையடைந்து நவமாஸம் சென்றவாறே, கலியுகம் பிறந்து 4371 வருஷத்திற்குப் பின்பு **ஸாதாரண** வருஷம் **ஐப்பசி** மாஸத்தில் சுக்லபக்ஷத்தில் சதுர்த்தியும் வியாழக்கிழமையும் கூடின **திருமூலத்திலே** உபயவிபூதியும் கொந்தளிக்கும் குடியையுடையரான **திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாதரண்ணரையருக்குக்** குமாரராகத் திருவவதரித் தருளினர்.

## பிள்ளைப்பிராயம்

இப்படி ஸமஸ்தாத்ம - ஸமுஜ்ஜீவந - ஜந்மாவாக அவதரித்தருளின தம்முடைய குமாரருக்கு அண்ணரும் ஜாதகர்மம் செய்தருளி பணவாளரவணைப் பற்பலகாலமும் பள்ளி

1. அறியவேண்டியவைகளையெல்லாம், 2. அவரையேயண்டி; அவரையன்றி வேறொருவரையும் அணுகாமல், 3. குறைந்து, ஒடுங்கி; 4. பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறும் என்று வரம்பறுத்த எம்பெருமானுருக்கு பின் மீண்டும் ஓராண்வழியாய் வந்தநிலையை அடைந்தது நம் தரிசனம், 5. ஆணையிட.

கொள் மணவாளரான அழகிய மணவாளப்பெருமாளுடைய திருநாமம் சாத்தி, விசேஷ ப்ரதிபத்தியுடனே [1] மாதுலக்ருஹமான சிக்கில் கிடாரத்திலே வர்த்திப்பித்துக் கொண்டு போந்தார்.

பின்னர் தமப்பனுரான அண்ணர் சௌளோபநயனங்களையும் சாஸ்த்ரப்ரகாரத்தாலே செய்வித்து வேத சாஸ்த்ரங்களையும் அதிகரிப்பித்துக்கொடுக்க, பாலசந்த்ரனுனவன் நாள்தோறும் கலைகளாலே [2] வர்த்தித்துக்கொண்டு பூர்ணனுய் விளங்குமாப்போலே இவரும் ஸகலகலா பூர்த்தியால் வந்த பரிபூர்ண ஞானத்தாலே [3] நிரவதிசய வைபவத்தையுடையராய் எழுந்தருளியிருக்க; தம்முடைய திருக்குமாரராக வளர்ந்தருகிற பரமபோகிகீந்த்ரரான அழகிய மணவாளப்பெருமாள் நாயனுருக்குத் திருக்கலியாணமும் செய்வித்துப் பின்பு அருளிச்செயல்களையும் ரஹஸ்யங்களையும் தாமே ஓதுவித்தருளினுர். அவரும் அந்த வுபகாரத்திலீடுபட்டு

வாழிதிரு நாவீ றுடையபிரான் தாதனருள்
வாழி யவன்மாமை வாக்கின்பம்—வாழியவன்
வீரன் மணவாளன் விரைமலர்த் தாள்சூடி
பாரமதைத் தீர்த்தளித்த பண்பு.

என்று அநுஸந்தித்தருளினுர்.

### ஆழ்வார் திருநகரி சேர்ந்து பிள்ளை திருவடிகளில் ஆச்ரயிக்கை

அநந்தரம், ஆழ்வார் திருநகரியிலே தர்சனப்ரவர்த்தகராய் எழுந்தருளியிருக்கிற திருமலையாழ்வாரும், இனி தர்சனப்ரவர்த்தகராவாரார்? என்று விசாரித்துக்கொண்டு, திருவாய்மொழி ஸம்பந்தத்தையே [4] நிரூபகமாக உடையராய் ஆழ்வார் திருவடிகளில் கைங்கர்யமே அநவரதம் செய்துகொண்டு போரா நிற்கிற திருவாய்மொழிப் பிள்ளை திவ்ய கடாக்ஷத்திற்கு விஷயமாம்படி நாயனுரும் ஸ்வமாதுலக்ருஹமான சிக்கில் கிடாரத்திலிருந்து தமக்கு ஜன்மபூமியான திருநகரியேற எழுந்தருளி, மெய்ஞ்ஞானத் துறையான பிள்ளை திருவடிகளிலே ஆச்ரயித்து [5] த்ராவிட வேத ததங்க உபாங்ககங்களான ஸமஸ்த திவ்யப்ரபந்த தாத்பர்யங்களையும் அவருபதேச முகத்தாலே [6] லபித்து, பிள்ளை தாமே உகந்து உடையவர் திருவடிகளைக் காட்டிக் கொடுத்தருள, இவரும் பரமபுருஷார்த்தத்தை ஸுலபமாக லபித்து [7] அத்யந்த ஹ்ருஷ்டராய் எழுந்தருளியிருக்க; பிள்ளையும் எம்பெருமானுர் திருவடிகளிலே [8] அதிப்ராவண்யத்தையுடையராய், உடையவருக்குத் தனிக் கோயில் தொடக்கமான அனைத்தழகும் கண்டருளப்பண்ணி, கோயிலை வளைய **ராமாநுஜ சதுர்வேதி மங்கலம்** என்கிற திருவீதியையும் உண்டாக்கி அங்கே ராமாநுசனைத் தொழும் பெரியோரையும் ப்ரதிஷ்டிப்பித்து, தாமும் ஸுகப்ரதிஷ்டிதராய் எழுந்தருளியிருந்தார்.

### யதிராஜவிம்சதி அருளிச்செய்தது

அநந்தரம் நாயனுரும், தமக்கு [9] ப்ராப்யமாகக் காட்டியருளின உடையவர் திருவடி களிலே [10] **யதீந்த்ரப்ரவணர்** என்னும்படி அத்யந்தம் ப்ராவண்யத்தையுடையராய் தம்

---

1. தாய்மாமனுடைய வீடு, 2. வளர்ந்து, 3. மிகவும் வியக்கத்தக்க பெருமை யுடையவராய், 4. அடையாளம், பெயர், 5. தமிழ்மறைகளான நம்மாழ்வார் ப்ரபந்தங்கள், அதற்கங்களான திருமங்கையாழ்வார் மற்றும் இதர ஆழ்வார்களின் பாசுரங்கள் 6. பெற்று, 7. மிகவும் மகிழ்ந்து, 8. மிகவும் அன்புபூண்டவராய். 9. அடையத்தகுந்ததாக, 10. யதீந்த்ரரான எம்பெருமானுர் திறத்தில் மிகவும் அன்புபூண்டவர்.

முடைய [1]ப்ரேமாநு குணமாக யதிராஜவிம்சதியை அவர் விஷயத்திலே அருளிச்செய்ய அவ்வுபகாரத்துக்கு

வல்லார்கள் வாழ்த்தும் குருகேசர் தம்மை மனத்துவைத்துச்
சொல்லார வாழ்த்தும் மணவாள நாயனுர் தொண்டர்குழாம்
எல்லாம் தழைக்க எதிராச விம்சதி யீன்றளித்தோன்
புல்லார விந்தத் திருத்தா ளிரண்டையும் போற்றுநெஞ்சே.

என்று பின்புள்ளாரும் அநுசந்தித்து ஈடுபடும்படியாயிற்று.

(இப்படி) இவரும் பிள்ளை திருவுள்ளத்தை உகப்பித்துக்கொண்டு [2] அங்குத்தைக்கு விதேயராயிருக்கிற காலத்திலே நாயனருக்குக் குமாரர் திருவவதரிக்க (ஆசார்யநிய மனதினல்) 'எம்மையன் இராமாநுசன்' என்று திருநாமம் சாத்தியருளித் தாமும் ராமாநுசன் திருநாமம் நம்ப வல்லராய்ப் போராநிற்க;

ஒருநாள் ஒரு திருவாதிரை நக்ஷத்ரத்திலே பிள்ளையும் முதலிகளும் அமுது செய்தருளாநிற்க,

இன்றே வெதிராச ரிவ்வுலகில் தோன்றியநாள்
இன்றே கலியிருள் நீங்கும்நாள்

என்று பிள்ளை ஈடுபட்டருளி மேலே அருளிச்செய்யமாட்டாமல் இருக்க, அவ்வளவிலே நாயனுரும்,

—இன்றேதான்
வேதியர்கள் வாழ விரைமகிழோன் தான்வாழ
வாதியர்கள் வாழ்வடங்கும் நாள்.

என்று தலைக்கட்டியருள இதைக் கேட்ட பிள்ளை மிகவும் [3]ப்ரீதராய் அமுதுசெய்யா நிற்க மத்யே தளிகைப்ரஸாதம் ப்ரஸாதித்து மிகவும் க்ருபைபண்ணியருளினர்.

## ஸ்வாமியின் ஆசார்ய நிஷ்டை

இப்படி சிஷ்யாசார்யக்ரமம் நடந்து செல்லுகிற காலத்திலே ஸ்ரீபராங்குச தாஸரான பெரியநம்பியை ஆச்ரயித்த ஏற்றம் எம்பெருமானருக்கு உண்டானுப்போலே சடகோப தாஸரான பிள்ளையை ஆச்ரயித்த ஏற்றம் இவருக்கு முண்டாயிற்றென்று எல்லாரும் இவரை உடையவருடைய அவதார விசேஷம் என்று ஆதரித்துப் போந்தார்கள். இப்படி அவதாரவிசேஷமான இவர்

வடமா மலைமுதல் மாலனந் தன்புரி எல்லைமல்கி
திடமாக வாழும் திருவுடை மன்னரில் தேசுடையோன்
திடமான ஞான விரக்தி பரமிவை சேரநின்ற
சடகோப தாதர் குருகூர்வாழ் பிள்ளையைச் சேருநெஞ்சே.

என்றும்,

செந்தமிழ் வேதத் திருமலையாழ் வார்வாழி
குந்திநகர்க் கண்ணல் கொடைவாழி—உந்தியசீர்
வாழியவன் அமுதவாய் மொழிகேட் டப்பொருளில்
தாழுமற் றன்பர் திருத்தாள்.

என்றும், இத்தனியன்களை பிள்ளை விஷயத்திலே தாமும் அநுஸந்தித்தருளினர்.

---

1. ப்ரேமை-பற்று, பக்தி, 2. அவருக்குக் கீழ்ப்படிந்தவராய், 3. மகிழ்ந்தவராய்.

## ஆசார்ய நியமனப்படி சபதம் பூண்டது

இப்படி மஹாப்ரபாவத்தையுடையரான பிள்ளை கைங்கர்ய ஸ்ரீயோடே நெடுங்காலம் வாழ்ந்தருளி, பின்பு [1]நித்ய விபூதியிலே நித்ய கைங்கர்ய நிரதராய் வாழ்கையில் நினைவாய் (சரீரவிமோசனத்தை) தம் [2]தேசிகரிடத்திலே அபேக்ஷித்துக்கொண்டேயிருக்க, அவ்வளவிலே திருமேனியிலே நோவுசாத்தி மிகவும் தளர்ந்து, பெரிய [3]க்லேசத்துடன் [4]முசித்து எழுந்தருளியிருக்க, "இது என்?" என்று நாயனர் தொடக்கமான முதலிகள் கேட்டருள, "காலம் கலிகாலமாகையாலே ஆழ்வார்கள் திவ்யஸூக்திகளான அருளிச் செயலிலே ருசிவிச்வாஸங்களை யுடையராய் இத்தை வளர்த்துப் போருவார் ஆரென்று மிகவும் க்லேசமாயிராநின்றது" என்ன, பின்பு நாயனரும் திருவடிகளிலே ஸேவித்து, "அடியேன் அப்படியே செய்கிறேன்" என்ன, கேவலம் வார்த்தை பேராதென்ன, நாயனரும் திருவடிகளைத் தொட்டு [5]சபத பூர்வகமாக, அப்படியே செய்கிறேன் என்று அருளிச் செய்ய, பின்பு திருவுள்ளம் தேறி நாயனரை யழைத்தருளி, "**ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களில் பல்காலும் கண்வையாமல் ஸ்ரீ பாஷ்யத்தை ஒருக்கால் கேட்டு நமக்கும் எம்பெரு மானுக்கும் ப்ரியமாகத் திருவாய்மொழி முதலான அருளிச் செயலிலே [6]அநவரதம் பரிசீலனை பண்ணிக்கொண்டு பூர்வர்களைப்போலே பெருமாளுக்கு மங்களாசாஸன பரராய்க்கொண்டு கோயிலிலே நித்ய வாஸமாக எழுந்தருளி இரும்**" என்று நியமித் தருளி, பின்னும் மற்றுமுண்டானவர்களை நாயனர் திருக்கைகளிலே காட்டிக்கொடுத்தருளி வைகாச பஹுள அஷ்டமியில் திருநாட்டுக்கெழுந்தருளினர்.

அநந்தரம் நாயனர் திருநகரியிலே தர்சனத்தை வளர்த்துக்கொண்டுபோகிற நல்லடிக் காலத்திலே, அழகியவரதர், சேனைமுதலியார் தொடக்கமானவர்கள் இவர் வைபவத்தைக் கேட்டுத் திருவடிகளிலே ஆச்ரயித்தார்கள். அவர்களில் அழகியவரதர் அப்போதே ஸந்ய ஸித்து ராமாநுஜஜீயர் என்னும் திருநாமத்தையுடையராய் நாயனருக்கு "நிழலுமடிதாறு மானேம்" என்னும்படி [7]பாதரேகாஸமராய் வாழ்ந்து போந்தார்.

## ஸ்ரீரங்கம் சேருகை

அநந்தரம் நாயனரும் ஆசார்ய நியமனப்படி ஸ்ரீரங்கத்தில் நித்யவாஸத்தில் ருசியுடையவராய் நம்மாழ்வாரநுமதி பெற்று முதலிகளும் தாமுமாய் ஸ்ரீவில்லிபுத்தூ ரெழுந்தருளி, வடபெருங்கோயிலுடையான், பெரியாழ்வார், ஆண்டாள் இவர்களைத் தொழுது, பின்னர் அங்கிருந்து அழகர் கோயிலை அடைந்து திருமாலிருஞ்சோலை நின்றான் கனைகழல்களைக் கண்டு வணங்கித் தொழுது, அரங்கனென்னம்மானுக்கே காதல் செய்யும் தொண்டராய்க் கோயிலேறச் சென்று,

கங்கையிற் புனிதமாய காவிரியிலே நீராடி கேசவாதி த்வாதச நாமங்களையும் சாத்தி யருளி திருவரங்கப் பெருநகரைத் தண்டன் ஸமர்ப்பித்து, தம்மை எதிர்கொள்ளவந்த அணியரங்கன் திருமுற்றத்தடியார்களையும் தண்டன் ஸமர்ப்பித்து, அவர்களுடனே கூட உள்ளே புக்கு, திருச்சோலைகளையும், திருவீதிகளையும் மதில்களையும் கோபுரங்களையும் கண்டு களித்துக்கொண்டு எழுந்தருளி தமக்கு ஆசார்யதுல்யரான கோயிலண்ணன் திருமாளி

1. *பரமபதத்திற் சென்று எப்போதும் பகவானுக்குக் கைங்கர்யம் செய்துகொண்டு வாழ விரும்பி,* 2. *ஆசார்யனிடத்தில்,* 3. *மனக்கஷ்டத்துடன்,* 4. *மெலிந்து,* 5. *சபதம் செய்து.* 6. *எப்பொழுதும்,* 7. *திருவடிகளில் ரேகைபோல் எப்பொழுதும் பிரியாமல்; இந்த ராமாநுஜ ஜீயரே வானமாமலை மடத்தின் முதல் பீடாதிபதி; இவரே பொன்னடிக்கால் ஜீயர் என்னப்படுமவர்.*

கைக்கு எழுந்தருளி, அவருடன் கோயிலதிபதியான திருமாலைதந்த பெருமாள் பட்டருடைய அநுமதி பெற்று அவரனுப்பிய ஸ்ரீவைஷ்ணவர்களுடன் சென்று முதலில் பொன்னரங்க மென்னில் மயலே பெருகுமிராமாநுசன் மன்னுமாமலர்த்தாளைக் கிட்டி ஸேவித்தருளி,

*இவ்வுலகந் தன்னில் எதிராசர் கொண்டருளும்*
*எவ்வுருவும் யான்சென்று(இ)றைஞ்சினக்கால்—அவ்வுருவம்*
*எல்லாம் இனிதேலும் எழிலரங்கத் திருப்புப்போல்*
*நில்லாதென் நெஞ்சு நிறைந்து.*

என்று அநுபவித்தருளி, பின்பு நம்மாழ்வாரை ஸேவித்தருளி, ஸ்ரீரங்கநாய்ச்சியாரையும் திருவடிதொழுது, உள்ளே புக்கு, ஸ்ரீ பலிபீடத்தருகே தண்டன் ஸமர்ப்பித்து, உள்ளில் திருச்சுற்றையும் பிரதக்ஷிணமாக வெழுந்தருளி, ப்ரணவாகார விமானத்தையும் ஸேனை முதலியாரையும் ஸேவித்தருளி அழகியமணவாளன் திருமண்டபத்தில் எழுந்தருளி "ஆழி வண்ண! நின்னடியிணை யடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே!" என்று தண்டன் ஸமர்ப்பித்துப் பெரிய திருவடியைத் திருவடி தொழுது த்வாரபாலகர்களநுமதி யுடனே உள்ளே புகுந்து திருமணத்தூணருகே சென்று மாயோனை வாயார் வாழ்த்தி, அமல னுதிபிரானில்படியே பாதாதிகேசாந்தமாக வநுபவித்தருளி, "படுத்தபைந்நாகணைப்பள்ளி கொண்டானுக்குப் பல்லாண்டு கூறுதுமே" என்கிறபடியே திருப்பல்லாண்டை யநுஸந்தித்து மங்களாசாஸனம் பண்ணியருளி, ஸிம்ஹாஸனத்திலே நாய்ச்சிமாருடனே சேரவெழுந் தருளியிருக்கிற நம்பெருமாளை ஸேவித்து, "திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்களும் வைத்து அஞ்சலென்ற கையும் கவித்த முடியும் முகமும் முறுவலும் ஆஸநபமத்திலே அழுத்திய திருவடிகளுமாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம்" என்று அநுஸந்தித்தருளி [1] அதனன் நிதியைக் கண்டாப்போலே பூர்வர்கள் தனமாயிருக்கிற ஸ்ரீநிதியான பெருமாளைக் கண்டு கொண்டு சிவந்த திருமுகமண்டலத்தையும் கஸ்தூரித்திருநாமத்தையும் வைத்தகண் வாங்காதே அநுபவித்துக்கொண்டுநிற்க, தந்தையும் தாயுமானவர் இவரைக் குளிரக் கடாக்ஷித்தருளி எம்பெருமானாரை விஷயீகரித்தாற்போலே இவரையும் விஷயீகரித்தருளத் தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப்பெற்று, [2] அத்யந்தம் ப்ரீதராய் [3] பூர்வர்கள் எழுந்தருளி யிருந்த திருமாளிகைகளைச் சென்று ஸேவித்து, பிள்ளைலோகாசார்யர் திருமாளிகை நோக்கி எழுந்தருளி,

*வாழி யுலகாசிரியன் வாழிஅவன் மன்னுகுலம்*
*வாழி முடும்பையெனும் மாநகரம்—வாழி*
*மனம்சூழ்ந்த பேரின்ப மல்கு மிகநல்லார்*
*இனஞ்சூழ்ந் திருக்கு மிருப்பு.*

என்றும்,

*மணவாளன் மாறன் மனமுரைத்தான் வாழி*
*மணவாளன் மன்னு குலம்வாழி—மணவாளன்*
*வாழி முடும்பைநகர் வாழி வடவீதிதான்*
*வாழிஅவன் உரைசெய்த நூல்.*

என்று அநுஸந்தித்து தண்டன் ஸமர்ப்பித்து 'ரஹஸ்யம் விளைந்த மண்ணன்றோ' என்று மிகவும் ஆதரித்தருளி, (இப்படி) கோயிலிலே எழுந்தருளியிருந்தார். அக்காலத்தில்

1. தனமில்லாதவன், 2. மிகவும் மகிழ்ந்து, 3. பூர்வாசாரியர்கள்—முன்பு வாழ்ந்த பெரியோர்.

அங்குண்டான ரஹஸ்ய ப்ரபந்தங்களை எல்லாம் திருக்கண்சாத்தி ஜீர்ணோத்தாரணம் பண்ணியருளி அவற்றை ப்ரகாசிப்பித்துக் கொண்டிருக்க, திருவேங்கட மென்று ப்ரஸித்தமான

### திருமலை சென்று அப்பனை ஸேவித்தது

வடமாமலை முதலான வடதிசையிலுண்டான திருப்பதிகளைத் திருவடி தொழுகையிலே மிகவுந் திருவுள்ளத்தையுடையராய், பெருமாள் ஸன்னிதியிலே சென்று ஸேவித்து விடைகொண்டு, அப்போதே புறப்பட்டருளி, முப்போதும் வானவரேத்தும் முனிவர்கள் வெள்ளறையிலே சென்றுபுக்கு, பங்கயச்செல்வியார் புருஷகாரமாகச் செந்தாமரைக் கண்ணனை ஸேவித்து, "பூங்கோவலூர் தொழுதும்போது நெஞ்சே" என்று திருக்கோவலூர் சென்று முதலாழ்வார் களையும் ஆயனையும் மங்களாசாஸனம் பண்ணியருளி, திருவேங்கடம் போவான் வழிகொண்டு எழுந்தருளுகையில் நீள்சோலை வண்பூங்கடிகையில் தக்கானையும், கடிகைத்தடங்குன்றில் அக்காரக்கனியையும் மங்களாசாஸனம் பண்ணிப் புறப்பட்டருளினார்.

**இனித் திருமலையில் வ்ர்த்தாந்தம் :** திருப்புரட்டாசி முதல் திருநாள் ராத்ரி பெரிய கேள்வி ஜீயர் ஸ்வப்நம்:— ஆழ்வார்தீர்த்தத்திற்கருகில் திருமலையாழ்வார்[1] மேல் கோடி தொடங்கி கிழக்கு முடிமட்டும் ஸ்த்தூலமாய் அதிதீர்க்கமாய்[2] இருக்கிற திருமேனி யுடையராய் மேற்கே திருமுடியும் கிழக்கே திருவடிகளுமாய்த் தென்திசை நோக்கிக்கொண்டு ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் கண்வளர்ந்தருளுகிறதாகவும் ஒரு ஜீயர் திருவடி பார்ச்வத்திலே நிற்கிறதாகவும் கண்டு, அங்குப் போவார் வருவாரை "இவரார்?" என்று கேட்டதற்கு "இவர் முப்பத்தாறாயிரப் பெருக்கரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், அவர் பொன்னடிக் கால் ஜீயர்" என்று சொல்ல, கண்விழித்துப் பிறகு பெருமாள் புறப்பாட்டின்போது இந்த ஸ்வப்நத்தை அங்கு ஸ்வாமிகளுக்கறிவிக்க ; அங்கு தேசாந்தரத்திலிருந்து வந்த பெரியோர் சிலர் கோயில் நாயனாரும் அவர் ப்ரியசிஷ்யரான வானமாலை ஜீயரும் திருநாளுக்கெழுந் தருளுவதாகத் தெரிவிக்க, "இந்த விசை திருநாளுக்கு மஹாதிசய முண்டாயிற்று" என்று அனைவரும் போர வுகந்து எதிர்பார்த்துக்கொண்டு எழுந்தருளியிருந்தனர்.

நாயனாரும் பயணகதியிலே யெழுந்தருளித் திருமலையாழ்வாரைக் கண்டருளி வைத்த கண் வாங்காதே அநுபவித்துக்கொண்டு சென்று ஸ்வர்ணமுகியில்நீராடி கோவிந்தராஜனைத் திருவடி தொழுது பின்பு திருமலையடிவாரத்திலே அழகியசிங்கரைத் தொழுது, ஏறியருளி பரிஷைத்திருவேங்கடமுடையானைத்தொழுது, கர்ப்பூரக்காலிலே தீர்த்தஸ்வீகாரம் செய் தருளி, காட்டழகிய சிங்கரைத் தொழுது மாம்பழவெம்பெருமானாரைத் தண்டன் ஸமர்ப்பித்து விச்ரமித்துப் புறப்பட்டருள ; இச்செய்தி கேட்டுப் பெரிய கேள்வி ஜீயர் பெருமாள் பரிகரத் துடனே வந்து எதிர்கொள்ள, அவர்களுடன் மொண்ணைத்திருக்கோபுரத்தருகே திவ்ய விமானத்தையும் திருநாராயண கிரியையும் கண்டுகளித்துத் தண்டன் ஸமர்ப்பித்து உள்ளே புக்கு அவாவறச்சூழ்ந்தான் திருவாசலிலே தண்டன் ஸமர்ப்பித்து ப்ரதக்ஷிணமாக எழுந் தருளி, ஸ்வாமி புஷ்கரிணியில் நீராடி, வேங்கடவராஹத்தை திருவடி தொழுது, பின்பு உள்ளே யெழுந்தருளி அழகியமணவாளன் திருமண்டபத்தையும் ஸ்ரீ பலிபீடத்தையும், செண்பகத் திருவாசலையும் அத்தாணிப்புளியையும் தண்டன் ஸமர்ப்பித்துச் செண்பகச்சுற்று ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளிச் சாலை வாசலாலே யுள்ளேபுக்கு, தேவப்பெருமாளெழுந்தருளி யிருந்த பொன்விஞ்சு பெருமாள் கோவிலையும், அழகப்பிரானாரையும், திவ்யவிமானத்தையும், திருமடைப்பள்ளி நாய்ச்சியாரையும், தசாவதாரங்களையும், யாக மண்டபத்தில் மலைகுனிய

1. திருவேங்கடமலை, 2. மிகவும் பருத்த தாயும் நீண்டதாயும் உள்ள திருமேனி.

நின்ற பெருமாளையும், ஸேனைமுதலியாரையும் அடைவே ஸேவித்துக்கொண்டுவந்து எம்பெருமானாரைத் தண்டன் ஸமர்ப்பித்து, அழகியசிங்கரையும், பெரியதிருவடி நாயனாரையும் தொழுது, உண்டியிலே திருமுன் காணிக்கையும் ஸமர்ப்பித்து, த்வாரபாலகரநுமதி கொண்டு உள்ளே புக்கு, சக்ரவர்த்தித் திருமகனாரையும் தொழுது, குலசேகரன் படியருகே சென்று எழில்கொள் சோதியான திருவேங்கடத்தெந்தையை அநுபவித்து நிற்க, அப்பனும் தீர்த்தப்ரஸாதமும் திருமாலையும் சடகோபனும் ப்ராஸாதிகப்பெற்று க்ருதார்த்தராய் ;

அங்கு நின்றும் புறப்பட்டு உலகேத்துமாழியான் அத்தியூரேற எழுந்தருளிப் பேரருளான மங்களாசாஸனம் பண்ணி, திருவெஃகா முதலான திருப்பதிகளையும் திருவடி தொழுது ;

## ஸ்ரீபெரும்பூதூரில் எம்பெருமானாரைத் தொழுது பெருமாள் கோவிலில் ஸ்ரீ பாஷ்யம் ஸேவித்தது

அநந்தரம் ஸ்ரீபெரும்பூதூரேற வெழுந்தருளி ஊரருகே நின்று,

*இதுவோ பெரும்பூதூர்? இங்கே பிறந்தோர்*
*எதிராசர் எம்மிடரைத் தீர்த்தார்?—இதுவோதான்*
*தேங்கும் பொருநல் திருநகரிக் கொப்பான*
*ஓங்கு புகழுடைய வூர்?*

என்று ஊரை யநுபவித்து, ஊரிலே ப்ரவேசித்தருளி,

*எந்தை எதிராசர் எம்மை எடுத்தளிக்க*
*வந்தபெரும் பூதூரில் வந்தோமோ—சிந்தை*
*மருளோ? தெருளோ? மகிழ்(மாலை) மார்பன்*
*அருளோ? இப்பேற்றுக் கடி.*

என்று [1] ப்ராப்ய கௌரவத்தை அநுஸந்தித்து வித்தராய் ; உள்ளே புக்கு, "[2] ஆண்டுகள் நாள் திங்களாய்...இராமாநுசனைப் பொருந்தினமே" என்று ஸேவித்து ஸ்ரீபாஷ்யத்துக்கு அநுமதி கொண்டு, அநந்தரம் கோயிலிலே எழுந்தருளியிருக்க, ராத்ரி ஸ்வப்னத்திலே எம்பெருமானார் எழுந்தருளி ஸ்ரீபாஷ்ய ஸ்ரீகோசத்தை ஸாதித்து, "நாமே உமக்குப் பெருமாள் கோவிலிலே ஸ்ரீபாஷ்யம் ஸாதிக்கிறோம் ; கிடாம்பி நாயனார் பாடேறச் செல்லும் ; நமக்கும் திருவாய்மொழிப்பிள்ளைக்கும் ப்ரியமாக வாசித்துப் பின்பு அருளிச் செயல் வ்யாக்யானங்களையே பஹுமுகமாக ப்ரவர்த்திப்பியும்" என்று அருளிச் செய்கையாலே [3] ராமாநுஜயதிபணித ஸ்ரீபாஷ்யார்த்த ச்ரவணத்திலே ச்ரத்தையுடையராய் மீண்டும் பெருமாள் கோயிலேற எழுந்தருளி, அங்கே கிடாம்பியாச்சான் திருவம்சரான கிடாம்பி நாயனாரை ஸேவித்து அங்கே ஸ்ரீபாஷ்யம் [4] ச்ரவித்தருளாநிற்க ; கிடாம்பி நாயனாரும் இவருடைய [5] வாசக தாடியையும், [6] க்ரஹணதாரண வாக்வ்யவஹார சாதுர்யத்தையும், தர்க்கசப்த மீமாம்ஸைகளிலே பூர்ண ஞானத்தையும், இவரிடத்தில் ஸகல சாஸ்த்ரங்களும் [6] ஒருமிடறு செய்திருப்பதையும், இவர் பலகாலும் ஈடு முப்பத்தாறாயிரப் படியை உருச்சொல்லிக்கொண்டு போருகிறத்தையும் கண்டு, [7] அதித்வரையுடனே

1. அடைந்த இடத்தின் பெருமையை எண்ணி அதிசயித்து. 2. இராமாநுச நூற்றந்தாதி–31, 3. இராமாநுஜமுநி அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யத்தைக் கேட்டறிவதிலே, 4. கேட்டுக் கொண்டிருக்க 5. பேச்சுத்திறமை, 6. கேட்டதைப் புரிந்துகொள்ளுதல், மனத்தில் பதிய வைத்தல், எடுத்துரைத்தல் முதலியவற்றில் வல்லமை ஒன்று சேர்ந்து, 7. மிகவும் வேகமாக.

ஸ்ரீபாஷ்யம் நடத்திக்கொண்டு போர ; ஒரு நாள் ஏகாந்தத்திலே, "முப்பத்தாறுயிரப்பெருக்கர் என்று உமக்குத் திருநாமம் சாத்தினது வெறுமனன்று; இந்த புத்திஸாமர்த்யம் எங்கும் கண்டதன்று ; தேவரீர் அவதார விசேஷமென்று நிச்சயமாக அறிந்தேன். எனக்கு அதை ஒளிக்காமல் உள்ளபடி காட்டவேண்டும்" என்று அருளிச்செய்ய, (நாயனும்) "ஆசார்யரா யிருக்கிற தேவரீருக்கு ஒளிக்க ஒண்ணுது ; பெரிய பெருமாளுடைய ரஹஸ்ய நியோகத்தை ஒருவருமறிய வேண்டா" என்று விண்ணப்பம் செய்துகொண்டு [1] அஹிபதி நிஜா காரத்தைக் காட்டக் கண்டருளி பீதியுக்தராய் இத்தை [2] உபஸம்ஹரிக்க வேணுமென்று அபேக்ஷிக்க உபஸம்ஹரித்து எப்போதும் போலே நாயனரெழுந்தருளியிருக்கக் கண்டு விசேஷ ப்ரதிபத்தியுடனே [3] அத்யாதரம் பண்ணிக் கொண்டு உகப்புடனே ஸ்ரீபாஷ்யம் நிறைவேற்றி, 'செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்' என்கிறபடியே உபய வேதாந்தா சார்யராய் அங்கே சில நாளெழுந்தருளியிருந்து ;

அநந்தரம், திருவரங்கப் பெருநகருள் ப்ரவேசித்துப் பெருமாளை ஸேவித்தருள, பெருமாளும் போர உகந்தருளி, அங்கே எழுந்தருளியிருக்கும்படி நியமித்தருள அதன்படியே இருவரும் எழுந்தருளியிருந்தார்.

## உத்தமாச்ரமஸ்வீகாரம்

அக்காலத்திலே பெரிய பெருமாளுடைய ஸேவைக்கு விருத்தமான [4] ஆசௌச விசேஷத்தைத் தெற்கிலிருந்து சிலர் வந்து விண்ணப்பம் செய்யக் கேட்டருளி (பெருமாள் ஸேவையை இழந்திருப்பது [5] அத்யந்தம் துஸ்ஸஹமாய்) அப்போதே தமக்கு [6] ஸப்ரஹ்மசாரியான சடகோபஜீயர் ஸந்நிதியிலே [7] ஸர்வஸங்க பரித்யாக பூர்வகமாக ஸந்யஸித்தருளி, த்ரிதண்ட காஷாயங்களை அவர் திருக்கைகளாலே ஸாதிக்க தரித்தருளி [8] துரீயா ச்ரமத்தையடைந்து, அதற்கநுகுணமாக சடகோபஜீயர் என்று [9] பிள்ளை திருநாமத்தையுடையராய் பற்றிலார் பற்ற நின்ற [10] பெருமாள் திருமுன்பே எழுந்தருளி ஸேவித்து மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டிருக்க, பெருமாளும் இவரை ஆதரித்தருளி, "நம்முடைய திருநாமமான முந்தின [11] நாமத்தையே முடிய நடத்தவேணும் உமக்குப் பல்லவராயன் மடத்தை ப்ரஸாதிக்கிறோம் ; [12] யாவச்சரீரபாதம் எம்பெருமானரைப் போலே இங்கே இரும்" என்று நியமித்தருளி, (முன்பு ஆட்கொண்ட வில்லிஜீயர் மட மாயிருந்தது பின்பு பல்லவராயன் அதிவிலக்ஷணமாக ஸ்ரீராமாநுஜகூடம் நடத்தினதாயு மிருந்த மடத்தையும், ஜீயர் திருவாராதனமான [13] என்னைத் தீமனம் கெடுத்தாரையும் ப்ரஸாதித்து) "நம்முடைய அழகிய மணவாள ஜீயரை மடத்திலே விட்டு வாருங்கோள்" என்று உத்தமநம்பி முதலான அனைத்துப் பரிகரத்தையும் இவர் பின்னே அநுப்பியருளினர். பின்பு மடமெங்கும் செப்பமிடுவித்து [14] திருமலையாழ்வாரையும் உண்டாக்கி, ரஹஸ்யம்

---

1. ஆதிசேஷனை தம் உண்மை ஸ்வரூபத்தை, 2. குறுக்கிக்கொள்ள ; மறைத்துக் கொள்ள, 3. மிகவும் அன்பு பண்ணி, 4. உறவினருடைய குடும்பங்களில் பிறப்பு, இறப்பு இவைகளால் ஏற்படும் தீட்டு, 5. மிகவும் பொறுக்க ஒண்ணுததாய், 6. தம்முடன் வித்யைகள் கற்ற, 7. எல்லாவிதமான பற்றுக்களையும் துறத்தல், 8. ஸந்யாஸ ஆச்ரமம், துறவு, 9. சடகோபதாஸர் என்று திருவாய்மொழிப்பிள்ளையின் பெயர், 10. அழகியமணவாளனை ரங்கநாதன், 11. அழகியமணவாளன், 12. சரீரஸம்பந்தமுள்ள அளவும்—உயிருள்ள வளமும், 13. திருவாரதன எம்பெருமான் பெயர், 14. தம் ஆசார்யர் பெயரையுடைய காலக்ஷேப கூடத்தை அமைத்து.

விளைந்த மண்ணாலே தாம் எழுந்தருளியிருக்கிற இடத்திற்கு மண்காப்பு சாத்துவித்து அவ்விடத்தை குருகுல வாஸமாக எண்ணி அங்கே இனிதமர்ந்தருளியிருந்து, பிள்ளை, நம்மாழ்வார் திருநாமத்தாலே விளங்கியருளினாப்போலே தாமும் நம்பெருமாள் திரு நாமத்தாலே மிகவும் விளங்கியருளினார்.

இப்படித் திசைவிளக்காய் நிற்கிற திருவரங்கத்திலே திக்குற்ற கீர்த்தி இராமா நுசனைப் போலிருக்கக்கண்டும், தேசிகஸ்ரீயாலும் மிகவும் விளங்கா நிற்கிறதை தேசாந்தரஸ்தரெல்லாரும் கேட்டுவந்து [1] அஸங்க்யாதராய் ஆச்ரயிக்க, அவர்களையும் க்ர்பை பண்ணியருளி திருமாலடியார்கள் என்று நிருபகமாம்படி அத்தலைக்கு ஆளாக்கியருள அவர்களும் [2] "அபகதமதமானை:" இத்தியாதிப்படி வரவரமுனிப்ருத்யரென்று அங்குத் தைக்கு அந்தரங்கராய்த் திருவடிகளிலே நித்யஸேவை பண்ணிக்கொண்டு அவர் ப்ரஸாதித்தருளுகிற பகவத்விஷயங்களையும் கேட்டுக்கொண்டு ஆசார்யாபிமானத்திலே ஒதுங்கி அநுகூலராயிருக்க;

## கந்தாடையண்ணன் ஜீயரிடம் ஆச்ரயித்தது

அந்த நாளிலே பரமஸாத்விகராய் திருமஞ்சனம் அப்பா என்றழைக்கபடுமவராய் பெருமாள் ஸந்நிதியில் [3] அநந்யப்ரயோஜநராய் கைங்கர்யம் பண்ணிப்போருகிற ஒருவர் தினமும் திருக்காவேரியில் ஜீயர் நீராடியருளுகிற ஸ்தானத்துக்குக் கீழே, அந்த ப்ரவாஹ தீர்த்தத்தில் தப்பாமல் நீராடிக்கொண்டு போர, அவருக்கு ஜ்ஞாநோதயமாய் ஜீயர் திருவடி களிலே [4] நிரவதிக ப்ராவண்யமுண்டாய் ஆச்ரயித்து க்ருதார்த்தரானார். ஒருநாள் ஜீயர் நீராட எழுந்தருளுகிறபோது மிகவும் மழை பெய்ததினால் ஒரு வைஷ்ணவருடைய க்ர்ஹத்தின் வாசல் திண்ணையில் எழுந்தருள, அந்த க்ருஹயஜமானையும் ஜீயருடைய திருவடி நிலைகளை ஈரத்துடனே சிரஸ்ஸில் தரித்துப் பிறகு தலைப்பாலே ஒத்தி மீண்டும் ஜீயர் திருமுன்பே எழுந்தருளப்பண்ணி ஸேவித்திருக்க, ஜீயரும் இவரை விசாரித்தருள, அந்த அம்மை, "நான் திருமஞ்சனம் அப்பாவுடைய பெண் ஆச்சி, இந்த க்ருஹம் அவருடைய மணவாளப் பிள்ளையான கந்தாடை அய்யங்கார் க்ருஹம்" என்று விண்ணப்பம் செய்ய, ஜீயரும் மகிழ்ந்து, மழை விட்டவாறே திருக்காவேரிக் கெழுந்தருளினார். திருவடிநிலைகளின் தீர்த்தஸம்பந்தத்தினால் ஜீயரிடம் ப்ராவண்யம் ஏற்பட்டு ஆச்சியும் ஜீயரிடம் ஆச்ரயிக்க வேணுமென்று தம் தகப்பனாரிடம் மிகவும் வேண்டிக்கொள்ள, அவர் புருஷகாரமாய் ஆச்ரயித்து, தம் குமாரர்களுக்கும், அஹமுடையாருக்கும் இதுவிஷயம் தெரியாதபடி தம் பிறந்தகத்திலேயே சில காலம் வாழ்ந்திருந்தார்.

பின்பொருநாள் கந்தாடையண்ணன் திருத்தகப்பனார் தேவராஜ தோழப்பருடைய [5] தீர்த்தம் வர சிற்றண்ணா தேவியாரான ஆச்சியாரைத் தளிகை பண்ண அழைக்க, இவரும் அப்படியே பண்ணி, பெருமாளமுது செய்தருளி, முந்தின ஸ்ரீவைஷ்ணவர்களும் அமுது செய்தருளி, இஷ்ட பங்க்தியும் அண்ணன் தொடக்கமானாரும் அமுது செய்தருளினர். அன்றிரவு அண்ணன் கண்ட ஸ்வப்ந ப்ரகாரம்: ஒரு ஸ்ரீவைஷ்ணவர் மெத்தையினின்றும் ஏணிவழியாலே இறங்கி வந்து பெரிய கசையாலே தம்மை யடிக்க, கசையும் துணிக்கை துணிக்கையாக அறுந்துபோக, அந்த ஸ்ரீவைஷ்ணவர் அண்ணனைப் பிடித்து மெத்தைக்கு

1. எண்ணற்றவராய், 2. ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம் என்ற தனி வ்யாஸம் காண்க. 3. கைங்கர்யம் தவிற வேறு பலன் ஒன்றையும் விரும்பாமல், 4. மட்டற்ற அன்பு, 5. விண்ணுலகம் எய்தின நாள்.

இழுத்துக்கொண்டுபோக அங்கே எழுந்தருளியிருந்த ஜீயர் அண்ணனைக் கோபத்துடன் அடிக்க, அவர் கையில் கசையும் துணிக்கையானவாறே அந்த ஸ்ரீவைஷ்ணவர் ஜீயரை அண்ணன் விஷயத்தில் திருவுள்ளமிரங்கி க்ருபை பண்ணும்படி ஸவிநயமாக ப்ரார்த்திக்க, ஜீயரும் இரங்கியருளி அண்ணணைத் தம் திருக்கைகளாலே திருமேனியெங்கும் தடவியருளி, "நீயும் உத்தமநம்பியும் போர அபசாரப்பட்டீர்களே, நாம் பாஷ்யகாரர், இவர் முதலி யாண்டான்; நாமே திருவனந்தாழ்வான்; நாமே வரவரமுனி; ஜீயர் திருவடிகளிளே ஆச்ரயித்து உஜ்ஜீவியுங்கோள்! என்று விட, அண்ணனும் கண்விழித்து இது ஒரு ஸ்வப்நம் இருந்தபடியென்" என்று இதையே மீண்டும் மீண்டும் சிந்தித்துக்கொண்டிருந்து திருத்தம்பிமார்களுக்கும் அருளிச்செய்தார்.

அநந்தரம் தம்பிமாரும் தாமுமாக ஆச்சியார்பாடே சென்று அவருக்கு ஸ்வப்நவ்ருத் தாந்தை யருளிச்செய்ய, அவரும் தாமும் தம் திருத்தமப்பனும் ஆச்ரயித்தபடியையும் ஜீயருடைய ப்ராபவத்தையும் இவர்களுக்கு எடுத்துச்சொல்லக் கேட்டு ஹ்ருஷ்டராயினர்.

அண்ணனும் தாம் கண்ட ஸ்வப்நத்தைத் தம் ஸம்பந்திகளான கந்தாடை ஐயங்கார் களுக்கறிவிக்க, அவர்களும் இந்தப்ரகாரமே ஸ்வப்நம் கண்டிருக்கையாலே எல்லாருமாக ஜீயரிடத்தில் ஆச்ரயிக்க, இவர்களில் ஆச்சியார் குமாரரான அப்பாச்சியாரண்ணவையும், அவர் தம்பியான தாசரதி அப்பையையும் தமக்கு முதலியாண்டான் திருவம்சத்திலேற்பட்ட ஸம்பந்தமம் தம் ப்ராணஸுஹ்ருத்தான வானமாமலை ராமாநுஜஜீயருக்கு மேற்படவேண்டு மென்று அவரிடம் ஆச்ரயிப்பித்தார்.

## மீண்டும் திருநகரி எழுந்தருளல்

பின்பு ஜீயர் தமக்குப் பிறந்தகமான திருநகரியிலே எழுந்தருளி ஆழ்வாரைத் திருவடி தொழவேணுமென்று திருவுள்ளமாய் நம்பெருமாளிடம் விடைகொண்டு, பிள்ளை திருவவதார ஸ்த்தலமான குந்தீநகரத்திலே [1] த்ரிராத்ரமெழுந்தருளியிருந்து,

சித்தம் திருமால்மேல் வைத்தருளும் சீர்மன்னர்
நத்த மிதுகாணு நாந்தொழில்—முத்தராய்
போனுரே யாகிலும் பூங்கமலத் தாள்கடனைத்
தாமார வைத்தார் தலம்

என்று அநுஸந்தித்துப் புறபட்டருளி, வழியிலுண்டான திருப்பதிகளை யெல்லாம் திருவடி தொழுது, திருநகரி சென்று கிட்டித் திருச்சங்கணித்துறையிலே நீராடி,

புக்ககத்தி னின்றும் பிறந்தகத்தில் போந்ததுபோல்
தக்கபுகழ்த் தென்னரங்கம் தன்னின்றும்—மிக்கபுகழ்
மாறன் திருநகரி வந்தோம் அரங்கன்தன்
பேறன்றோ? நெஞ்சே! இப் பேறு.

என்றநுஸந்தித்துக்கொண்டு எழுந்தருள, திருக்குருகூரிலுண்டான ஸத்துக்களெல்லாரும் குழாங்குழாமாக வந்து திருவடிகளிலே ஸேவிக்க, அவர்களையும் க்ருபை பண்ணியருளி, அவர்களுடனே கூட வெழுந்தருளி, ப்ரதமம் எம்பெருமானாரை ஸேவித்தருளி, பிள்ளை திருமாளிகையேற எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளி, ஆழ்வாரையும், அவருகந்த

1. மூன்று இரவுகள்.

விஷயமான பொலிந்துநின்ற பிரானையும் மங்களாசாஸனம் பண்ணி (மடம் சேர்ந்து) அங்கே எழுந்தருளியிருந்தார்.

(அக்காலத்திலே) ஆசார்ய ஹ்ருதயத்திற்குப் பொருள் அருளிச்செய்யும்போது "ஜ்ஞானசதுர்த்திகளின் மேலேயிறே ஆநந்த ஷஷ்டிக்குதயம்" என்கிற வாக்யத்திற்கு அர்த்தம் ஸ்வரஸமாக வாகாமையாலே, திருநாராயண புரத்தாயி பக்கலிலே இவ்வர்த்தம் கேட்கவேணும் என்னும் பேராசையோடே ஆழ்வாருக்கு விண்ணப்பம் செய்து அவரநுமதி கொண்டு திருநாராயணபுரத்துக்குப் புறபட்டெழுந்தருளா நிற்க, ஆயியும் ஜீயருடைய ப்ரபாவம் கேட்டு இவரை ஸேவிப்பதற்காகத் திருநகரிக்கு ஆஸந்நராக [1] மார்க்கமத்யே வந்து ஸங்கதராக அவரைக் கண்டு, "எண்ணின பலம் எதிரே வரப்பெற்றதே" என்று பெரிய ப்ரீதியோடே தீர்க்கப்ரணமம் பண்ணி நிற்க, இருவரும் அந்யோந்யம் வந்தனபரராய் குசலப்ரச்னம் பண்ணி, அநந்தரம் திருக்குருகூரேற எழுந்தருளி ஆயிபக்கலிலே ஆசார்ய ஹ்ருதய ரஹஸ்யார்த்தங்களை எல்லாம் கேட்டருளி, அவர் விஷயமாக ஒரு தனியனருளிச் செய்தருள,

ஆயி தமக்கு அதில் அந்வயமற்றபடி தோற்ற,

*பூதூரில் வந்துதித்த புண்ணியனோ பூங்கமழும்*
*தாதாரு மகிழ்மார்பன் தானிவனோ—தூதூர*
*வந்த நெடுமாலோ மணவாள மாமுனிவன்*
*எந்தைஇவர் மூவரிலும் யார்?*

என்றருளிச்செய்து ஜீயரை அவதார விசேஷமென்று ஆதரித்துக்கொண்டு (அங்கே சில காலமெழுந்தருளியிருந்து மீண்டும் திருநாராயணபுரத்துக் கெழுந்தருளினர்.)

## அவதார ரஹஸ்ய ப்ரகடனம்

இப்படி ஞான [2] ஸம்ருத்தியுடனே **பெரிய ஜீயர்** திருநகரியிலே வாழ்ந்தருளுங் காலத்திலே இத்தைக் கண்டு ஸஹிக்கமாட்டாத சில [3] அஸூயாளுக்கள் ஆஸுரப்ரக்ருதி களாய் மஹாபாபிகளாய்க்கொண்டு கூரை மேய்ச்சலாயிருக்கிற மடத்திலே ஜீயரெழுந்தருளி யிருக்க அர்த்தராத்ரியிலே [4] அக்நிப்ரக்ஷேபணம் பண்ண, அத்தசையிலே ஜீயர் தம்முடைய ப்ரபாவத்தாலே அவ்வழல் தட்டாதபடி [5] **சேஷாக்ருதியாய்க்கொண்டு**, மடம் வேகிறபடியைக் கண்டு [6] விஷண்ணராய் சோகார்த்தராய் இருக்கிற முதலிகள் திரளிலே வந்து புகுந்து நிற்க, இந்த அத்புதத்தை முதலிகளெல்லாரும் கண்டு மிகவும் ஸந்துஷ்டராயிருந்தார்கள்.

அநந்தரம் அத்தேசாதிபதி மூலம் ஆழ்வாருக்குத் திருமண்டபங்கள் முதலான அனேக கைங்கர்யங்களையும் பண்ணி, திருக்குறுங்குடி நம்பிக்கும் அனைத்தழகும் கண்டருளப்பண்ணி,

*பிறந்தகத்தில் சீராட்டுப் பெற்றாலும் தன்னைச்*
*சிறந்துகக்கும் சீர்க்கணவன் தன்னை—மறந்திருக்கப்*
*போமோர் மணவாளர் பொன்னடியை விட்டிருக்க*
*லாமோ கல்வியறிந் தால்.*

என்றநுஸந்தித்துக் கோயிலேறப் புறப்பட்டெழுந்தருளினர்.

---

1. நடுவழியில், 2. நிறைவு; நிறைந்த அறிவு, 3. அஸூயையுடையவர் 4. நெருப்பையிட, 5. ஆதிசேஷ ரூபமாய், 6. மிகவும் துக்கமடைந்து.

ஜீயர் கோயிலிலே வாழ்ந்தருளுகையிலே ஒரு நாள், பெருமாளை மங்களாசாஸனம் பண்ண எழுந்தருளின அளவிலே ஏகாந்தஸேவையாய்த் திருத்திரை பரிமாறி திருவாராதனம் கொண்டருளா நிற்க, இவரும் உள்ளே சென்று திருவடிதொழுது நிற்க, அவ்வளவிலே திருவாலவட்டம் ஸேவித்துக்கொண்டிருந்த உத்தம நம்பியும் வெள்ளிப்பனிமலைக் குட்டரான ஜீயருடைய [1] "க்ஷீரஸங்காத கௌரம்" என்று பாலின் நீர்மைபோலிருக்கிற விக்ரஹ வைலக்ஷண்யத்தைக் கண்டு பாபவாஸனையாலே [2] அந்யதா சங்கைபண்ணி, ஜீயரை "நெடும்போதிருக்கவேண்டா" என்ன; இவரும் அபிப்ராயமறிந்து "மஹாப்ரஸாதம்" என்று புறப்பட்டு மடமேற எழுந்தருளினர். அவ்வளவிலே திருவால வட்டம் ஸேவித்துக் கொண்டிருந்த உத்தம நம்பியும் தூங்கிப் பலகணிக்கதவிலே சாய்ந்திருக்க, பெரியபெருமாள் இவர் கனவில் வந்து அணிவிளங்குமுயர் வெள்ளையணையான திருவனந்தாழ்வானைத் தொட்டுக் காட்டி, "இவர் கிடீர், ஜீயராக வந்தவதரித்தருளினர், அவருடைய நிறம் வெளுப்பு, விச்வஸித்திரும்" என்றருளிச்செய்ய, அவரும் அத்யந்தம் பீதராய் அப்போதே வந்து ஜீயர் திருவடிகளை ஸேவித்து இச்செய்தியை விண்ணப்பம் செய்து க்ஷாபணம் பண்ணிக்கொண்டு திருவடிகளுக்கு அந்தரங்கராய்ப்போந்தார்.

அநந்தரம் ஸாத்விகைகளில் சடகோபக்கொற்றி (என்று) திருவடிகளுக்கு அந்தரங் கையாயிருப்பாளொரு அம்மையார் ஒரு நாள் திருவோலக்கம் கலைந்தவநந்தரம் மத்யாஹ் நத்திலே திருமலையாழ்வாரிலே ஜீயரை ஏகாந்தமாக ஸேவித்துக்கொண்டிருக்க, அப்போது அனேக பணுமண்டலங்களையுடைய திருவநந்தாழ்வானாக ஸேவை ஸாதிக்கக் கண்டு திடுக் குற்றிருக்க, ஜீயர் அத்தைக் கண்டு சிரித்தருளி, "நடந்தபடி என்?" என்று கேட்டருள, அவள் அப்போது தான் ஸேவித்தபடியை விண்ணப்பம் செய்ய, "ஆகில் இதை ஒருவர்க்கும் சொல்லா தேகொள்" என்று அருளிச்செய்தார். இப்படி ஜீயர் அவதார விசேஷமென்று எல்லாருக்கும் ப்ரஸித்தம்.

## எறும்பி அப்பா ஜீயரை ஆச்ரயித்தது

இப்படி இருக்கிற காலத்திலே ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் கோயிலிலிருந்து திருமலைக்கு எழுந்தருளுகிறவர், திருக்கடிகைக்கு அருகிலுள்ள எறும்பி என்னும் க்ராமத்தின் வழியே செல்ல, அவரை அங்கு மஹாவித்வானாய் ஞானநுஷ்டானபூர்ணராய், தேவராஜர் என்ற பெயரையுடையவராய், அப்பா என்று அழைக்கப்படுமவர் ஸத்கரித்தருளி, கோவில் வ்ருத்தாந்தங்களை யெல்லாம் விசாரித்தருள, கோயில் ஸ்ரீவைஷ்ணவரும், கந்தாடை அண்ணன் முதலான கந்தாடை ஐயங்கார்களும், மற்றும் பலரும் ஜீயரிடம் ஆச்ரயித் ததையும் ஜீயருடைய வைபவாதிசயங்களையும் விண்ணப்பம் செய்தார். அப்பாவும் அந்த ஸ்ரீ வைஷ்ணவரைத் திருமலையினின்றும் திரும்புப்போது எறும்பிக்கு மீண்டும் எழுந்தருளச் சொல்லி, அவருடன் தாமும் கோயிலேறச் சென்று தமது ஆப்தபந்துவான கந்தாடை யண்ணன் திருமாளிகைக்கு எழுந்தருளியிருந்து அவருடனே ஜீயர் காலக்ஷேப கோஷ்டிக் கெழுந்தருளி, ஜீயர் "உயர்வறவுயர்நல" ப்ரவேசத்தை உபந்யஸிக்கக் கேட்டு மிகவும் ப்ரீதரா யிருந்தும் ஆச்ரயணருசியில்லாமல் ஊரே திரும்பினர். மறுநாள் தம் திருவாராதனமான சக்ரவர்த்தித் திருமகனைத் திருவடி விளக்குவதாக கோவிலாழ்வாரைத் திருக்காப்பு நீக்கப் புக, எவ்வளவு முயன்றும் கோவிலாழ்வாரைத் திறக்க இயலவில்லை. அப்பாவும் மிகவும் துக்கிதராய் அமுது செய்யாமலே கண்வளர்ந்தருள, அவ்வளவில் திருவாராதனமான சக்ரவர்த்தித்

1. பாலின் வெண்மை, 2. வேறு விதமாக ஸந்தேஹம்கொண்டு.

திருமகன் அப்பாவின் ஸ்வப்நத்திலே, ''நீர் சேஷாவதாரமான ஜீயர் திருவடிகளிலே அபசாரப் பட்டுவந்தீர் ; ஜீயர் திருவடியிலாச்ரயித்து, அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டு வந்தாலன்றி உம்மையால் நாம் திருவாராதனம் கொள்ளக்கடவோமல்லோம்'' என்று நியமித்தருள, அப்பாவும் அப்போதே கோயிலேறச் சென்று ஜீயரை ஆச்ரயித்து, அவர்க்கந்தரங்கராய் வாழ்ந்தார். இந்த வ்ருத்தாந்தங்களைக் கொண்டு,

சேஷ:ஸ்ரீமாநஜநிஸ புநஸ் ஸௌம்யஜாமாத்ருயோகீ
போகீ பூத்வா ததநுபகவாந் ராகவஸ்யாநுஜந்மா ।
பூத்வா பூயோ வரவரமுநி: பூயஸாபாஸமாநோ
ரக்ஷத்யஸ்மாந் ரகுகுலபதே ராச்ரிதோ பத்ரபீடம் ||
பூத்வா பூயோ வரவரமுநி: போகிநாம் ஸார்வபௌம:
ஸ்ரீமத்ரங்கே வஸதி விஜயீ விச்வஸம்ரக்ஷணார்த்தம் ।
தத்வம்கந்தும் வ்ரஜசரணமித் யாதிசத் கைவோயம்
ஸ்வப்நேஸோயம் வரவரகுரு: ஸம்ச்ரயோ மாத்ருசாநாம் ||

என்ற நுஸந்திக்கும்படியாயிற்று.

### ரஹஸ்ய வ்யாக்யானங்கள் அருளிச்செய்தல்

ஜகத்ரக்ஷணார்த்தமாக அவதரித்தவராகையாலே ஜீயர், ஜகத்தை எல்லாம் உஜ்ஜீவிப்பிக்கும்படி ஸகல [1] ஜீவாதுவாக பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த ரஹஸ்யங்களுக்கெல்லாம் வ்யாக்யானம் அருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி ப்ரதமம் **தத்வ ரஹஸ்யத்துக்கு** வ்யாக்யானம் செய்தருளி அநந்தரம் ஆழ்பொருள்களையுமுடைத்தான **ஸ்ரீவசந பூஷணத்திற்கு மெச்சும் வியாக்கியை** என்று விலக்ஷண பரிக்ரஹமாம்படி வ்யாக்யானம் செய்தருளி, தாமும்,

*சீர்வசந பூடணமாம் தெய்வக் குளிகைபெற்றோம்*
*பார்தன்னைப் பொன்னுலகாப் பார்க்கவலேன்—தேரில்நமக்*
*கொப்பா ரினியார்? உலகா சிரியனருள்*
*தப்பாம லோதியபின் தான்*

என்று இதனுடைய வைபவத்தை அநுஸந்தித்து ப்ரீதராயருளினர்.

### மேலும் க்ரந்தங்கள் அருளிச்செய்தல்

அநந்தரம் ஸ்ரீவசந பூஷணத்திற்கு அடியாய் சரமபர்வ நிஷ்டாக்ரமங்களை ப்ரதிபாதிக்கிற இராமாநுச நூற்றந்தாதிக்கும், ஞானஸார ப்ரமேய ஸாரங்களுக்கும் வ்யாக்யானம் செய்தருளி, திருவாய்மொழி தொடக்கமான அருளிச்செயல்களெல்லாவற்றையும் ப்ரவர்த்திப்பித்து, தர்சனத்துக்குப் பண்டில்லாத அதிசயங்களையுமுண்டாக்கிக் கொண்டு எழுந்தருளியிருக்கிற காலத்திலே ''திருவாய்மொழி விஷயமாக திருப்பவளத்தாலே ஏதேனுமொரு ப்ரபந்தம் செய்தருளவேணும்'' என்று முதலிகளெல்லாரும் பேக்ஷிக்க, **திருவாய்மொழி நூற்றந்தாதி** யருளிச்செய்து, தத்வத்ரயத்திற்கும் ஈட்டிற்கும் ப்ரமாணத் திரட்டு ஸங்க்ரஹித்தருளி, ஆசார்யர்களுடைய உபதேச பரம்பராப்ராப்தமாய் வந்த தர்சநதாத்பர்யங்களை எல்லாம் **உபதேசரத்நமாலை** என்கிற ப்ரபந்தமுகேந ப்ரதிபாதித்து, **உடையவர் நித்யத்தை** ஸங்க்ரஹமாகவும் பண்ணியருளி, இப்படி ஞானவர்த்தகராய்

1. *உயிரளிப்பது*

எழுந்தருளியிருக்கிற காலத்திலே இரண்டு வைஷ்ணவர்கள், அஹங்காரத்தாலே அந்யோந்யம் விவாதம் பண்ணிச்கொண்டு போர, அப்போது [1] நிஹீந ஜந்துக்களுக்கு விவாத முண்டாக, ஜீயர் அத்தைக் கண்டு, "**நீங்களும் இவர்களைப் போலே வசநபூஷணுதி காரிகளோ அஹங்காரம் நடையாடி விவாதம் பண்ணுகைக்கு**" என்ன அவர்கள் இத்தைக் கேட்டு [2] லஜ்ஜாபுரஸ்ஸரமாக அதில் நின்றும் நிவர்த்தராஞர்கள்.

## ஒரு வைஷ்ணப்ரபுவுக்கு உபதேசம்

இவருடைய உக்த்யநுஷ்டாநங்களை யெல்லாம் உத்திர திக்கிலே வைஷ்ணவப்ரபு வாயிருக்கிறவர் கேட்டு தம்முடைய உஜ்ஜீவனத்திற்குடலாக ஸகல சாஸ்த்ர தாத்பர் யங்களையும் ஸங்க்ரஹ ரூபேண [3] அநுஷ்டேயமாய் இருப்பதொருபடி அடியேனுக்கருளிச் செய்து வரக்காட்டியருளவேணும் என்று குறித்து வரக்காட்ட, அப்படியே

[4] "கேவலம் பகவத்தாஸ்ய ரஸம் புருஷார்த்தமன்று; கேவலம் பகவதுபலக்ஷண வாஞ்சநாதிகார மாத்ரமும் போராது; கேவலம் பகவத் ஸமாராதந நிஷ்டா மாத்ரமும் போராது; கேவலம் ஆசார்ய பரதந்த்ராதிகார மாத்ரமும் போராது; கேவலம் பாகவதாநுவர்த்தந மாத்ரமும் போராது;

"பின்னை எங்ஙனே என்னில்:

[5] யதோசித கைங்கர்யப்ரவர்த்தகனுய் [6] ஸ்வகீயமான க்ருஹத்திலே ஸ்ரீவைஷ்ண வர்கள் [7] நிச்சங்கமாக ப்ரவேசித்துப் [8] பாங்காக வர்த்திக்கவே தன்னை அத்தலைக்காகவே செய்து தலைக்கட்டும் "அடியார்க் கென்னை யாட்படுத்த" என்னும் நிலையுண்டாக வேணுமிறே.

"இப்படி இவ்வர்த்தம் அநுஸந்தித்து அநுஷ்டியாஞகில் தனக்கு ப்ரபத்தி ஸௌபாக்ய ஐச்வர்யங்கள் கைகூடாது; சரமார்த்த விசேஷம் கைபுகுந்ததாகில் விவிதங் களாய் விசித்ரங்களாயிருந்துள்ள பகவத் ரஹஸ்ய விசேஷங்களெல்லாம் அறியவேணு மென்கிற நிர்ப்பந்தமில்லை; [9] இவ்விசேஷா நுஷ்டான மின்றிக்கே செல்லுகிற ஞாநுநுஷ்டான ப்ரதிபாதநமும் பகவத்ரஹஸ்ய விசேஷங்களும் வேச்யை சொல்லுகிற பதிவ்ரதாதர்மம் போலே வ்யர்த்தமாகிவிடும்".

(இப்படி) திருமந்த்ரார்த்தமான சரமார்த்த நிஷ்டையை ஸ்வதிவ்யஸூக்தி விசேஷத் தாலே தர்சிப்பித்து எழுதிப்போக விட்டருள அவருமப்படியே ததீயாராதநத்திலே நிஷ்ட்டராய் ஜீயரெழுந்தருளியிருக்கிற திக்கை நோக்கி நாடோறும் ஸேவித்துக் கொண்டு தம்முடைய வர்ணுநுகுணமான கைங்கர்யத்தையும் மடத்திற்கு நடத்திக் கொண்டு போந்தார்.

## ப்ரதிவாதபயங்கரம் அண்ணு ஆச்ரயித்தல்

இப்படி வாழ்ந்தருளுகையிலே ஹஸ்திகிரிநாதரண்ணு என்கிற திருநாமத்தை யுடையராய், தர்சன விரோதிகளை ஜயித்து, ப்ரதிவாதிபயங்கரர் என்ற விருது பெற்ற

---

1. தாழ்ந்த ஜந்துக்கள் (நாய்கள்), 2. மிகவும் வெட்கி, 3. அநுஷ்டிக்கக் கூடியதாய், 4. ஸ்ரீவைஷ்ணவலக்ஷணங்கள்; பகவானுக்கு அடியனுய் இருத்தலில் ருசியுடையனுய், ஆசார்யன், மற்றும் திருமாலடியார் இவர்களுக்கும் அடியனுய் அவர்களிட்ட வழக்காய் இருத்தல் 5. முடிந்த வளவு கைங்கர்யங்கள் பண்ணுமவனுய் 5 தன்னுடைய 6. ஒருவித ஸந்தேஹமோ பயமோ இல்லாமல், 7. ஸுகமாக வாழும்படி; இதுவே 'சரமார்த்த விசேஷம்' 8. இதில்லாமல் ஞாநம், அநுஷ்டானம், பகவத் விஷயம் முதலியவற்றைப்பற்றிப் பேசுதல்.

ப்ரதிவாதிபயங்கரம் அண்ணு மஹாவித்வானுய் அத்விதீயராயிருக்கிறவர் திருமலேயில் அப்பனுக்குத் திருமஞ்சனகைங்கர்யம் பண்ணிக் கொண்டு போரா நிற்க, ஒருநாள் கோயிலிலிருந்து அப்பனே ஸேவிக்க வந்த ஸ்ரீவைஷ்ணவர் ஒருவரை ஸத்கரித்து அவரையும் அழைத்துக்கொண்டு ஆகாசகங்கையினின்றும் தீர்த்தம் எழுந்தருளப்பண்ணுவதாய்ச் சென்று வழி நெடுகிலும் அழகிய மணவாளமாமுனிகளின் அப்ரதிம வைபவங்களேக் கேட்டுக் கொண்டிருந்து அதையே நினேத்து எழுந்தருள, தீர்த்தத்துக்கு ஏலாதி ஸம்பாரங்கள் சேர்க்கு முன்னமே ஒரு ஏகாங்கி திருவாராதனத்துக்குத் தாமதமாயிற்று என்று குடத்தை அப்படியே உள்ளே கொண்டு சேர்க்க, திருவாராதனமும் கொண்டருளாநிற்க, அண்ணுவும், " அபசாரம் வந்ததே " என்று ஏலாதிகளே அர்ச்சகரிடம் கொண்டு புக, அவரும் " இத்தனே நாளேக்காட்டிலும் தீர்த்தம் பரிமளத்ரவ்யங்கள் விஞ்சி அதிக வாஸனேயாயுள்ளதே " என்ன, அண்ணு பாவஜ்ஞராகையால், அப்பனுக்கு உகப்பு விஞ்சி இருப்பது ஜீயருடைய வைபவச்ரவணத்தினுலே என்று கொண்டு மணவாள மாமுனிகளே ஸேவிக்கக் குதூஹலங் கொண்டார். பின்னர் ஸகுடும்பராய் கோயிலுக் கெழுந்தருளிக் கந்தாடையண்ணன், வானமாமலே ஜீயர் இவர்கள் புருஷகாரமாக ஜீயரை ஆச்ரயித்து அவரால் குளிர கடாக்ஷிக்கப்பெற்றுத் திருவடிக் கந்தரங்கராய் வாழ்ந்தருளினுர்.

## மீண்டும் திவ்யதேசங்களே மங்களாசாஸனம் செய்தல்

அநந்தரம் ஜீயர் மீளவும் திருமலே முதலான திவ்ய தேசங்களேத் திருவடிதொழ வேணுமென்று திருவுள்ளமாய் அண்ணு முதலான அநேக ஸ்ரீவைஷ்ணவர்களுடனே புறப்பட்டருளி ப்ரதமம் பெருமாள் கோவிலிலே எழுந்தருளி அடைவே ஸேவித்தருளி வையமாளிகையிலே பேரருளாரைத் திருவடி தொழுது அங்கே எழுந்தருளியிருக்க, திருவைகாசத் திருநாள் தொடங்கி நடக்க, ஸேவித்தருளி எழுந்தருளியிருக்க, அங்குள்ளார், " ஒருவரைக் கற்பித்தருளி அடியோங்களேத் திருத்திப் பணிகொள்ளும்படி நியமித்தருளவேணும் " என்ன, ஜீயரும் போரவுகந்தருளி அப்பாய்ச்சியாரண்ணுவை அழைத்து, " நீர் முதலியாண்டான் திருவம்சத்திலே அவதீர்ணராய் இருக்கையாலே, ஆண்டான், தோழப்பர் முதலானுர்க்கு உகப்பாக நம்முடைய [1]வாக்யானு விதாயியாய் இவர்களுக்கெல்லாம் [2]ஹிதப்ரவத்தகராய்ப் பேரருளாளருக்கு மங்களாசாஸனபரராய் நித்யவாஸம் பண்ணும் " என்று ஆசீர்வதித்தருளினுர்.

அநந்தரம் புட்குழியெம் போறேற்றையும், கடிகைத் தடங்குன்றிலே தக்கானேயும் அக்காரக்கனியையும் மங்களாசாஸனம் செய்தருளி, திருப்பதியிலே எழுந்தருளி கோவிந்தராஜனே மங்களாசாஸனம் பண்ணி, பின்னே திலத முலக்குக்காய் நின்ற திருவேங்கடத்தைச் சென்று வணங்கித் திருவேங்கட முடையானே அனுபவித்தருளி ப்ரீதராய்,

*ஸௌம்யோபயந்த்ர் முநிநா மம தர்சிதௌ தே*
*ஸ்ரீவெங்கடேச–சரணௌ சரணம் ப்ரபத்யே*

என்னும்படி எல்லாருக்கும் புகலாக அடிக்கீழ் அமர்ந்து புகுந்து அடியீர் வாழ்மின் என்று திருவடியைக் காட்டியருள, அவனும் " மலே மேல் தான் நின்று என்மனத்துளிருந்தான் " என்கிறபடியே இவர் திருவுள்ளத்தைக் கணிசித்துக் கொண்டு

*ஸ்ரீமத்ஸுந்தர–ஜாமாத்ரு–முநிமாநஸவாஸிநே*
*ஸர்வலோக–நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம்*

---

1. சொல்லேக் கருத்தில் கொண்டு, 2. நன்மையைப் பேணிக் கொண்டு,

என்னும்படி இவர் திருவுள்ளத்தைத் தனக்கு [1] ஆவாஸஸ்த்தானமாய் விரும்ப, இவரும், [2] "வந்தாய் என் மனம் புகுந்தாய்........இனி யானுன்னை யென்றும் விடேனே" என்கிற திருவுள்ளத்தை கொண்டு, அங்குள்ள வைபவங்களை யெல்லாம் ஸேவித்துப் புறப்பட்ட வளவிலே, அங்குள்ளார், "இங்குத்தைக்குப் பரிவராயிருப்பாரொருவரைக் கற்பித்தருள வேணும்" என்ன, எம்பெருமானார்ஜீயரைக் கற்பித்தருளினார்.

அநந்தரம் அங்குநின்றும் இறங்கிப் புறப்பட்டருளி, திருவெவ்வுள், திருவல்லிக் கேணி முதலான திருப்பதிகளெங்கும் திருவடிதொழுது, மண்ணில் பெரிய மதுராந்தகத் தேற எழுந்தருளி,

மருமலர் கமழும் சோலை மதுரைமா நகர்வந் தெய்தி
அருள்மொழி பெரிய நம்பி அன்றேஎதி ராச ராசற்கு
அரும்பொருள் வழங்கு மெங்கள் ஏரிக்காத் தருள்வார் கோயில்
திருமகி ழடியில் செல்லீர் தீவினை தீரு மாறே

என்று அங்கேற எழுந்தருளி,

இதுவோ கிளியர் றிவூரோ திருமதுரை
இதுவோ திருமகிழும் கோபுரமு—மிதுவோ
பெரியநம்பி தாமுகந்து பின்னு மெதிராசர்க்குத்
துயமளித்த தூயப் பதி

என்று அங்கே தண்டன் ஸமர்ப்பித்து எழுந்தருளியிருந்து;

## திருமங்கையாழ்வாரை அடிபணிந்தது

பின்பு திருவாலி திருநகரியேற எழுந்தருளித் திருமங்கையாழ்வாரைத் திருவடிதொழுது,

உறை கழித்த வேலை யொத்த விழி மடந்தை மாதர்மேல்
உறைய வைத்த மனமொ ழித்தவ் வுலக ளந்த நம்பிமேல்
குறையை வைத்து மடலெ டுத்த குறையளாளி திருமணங்
கொல்லை தன்னில் வழிப றித்த குற்ற மற்ற செங்கையான்
மறையுள் வைத்த மந்தி ரத்தை மாலு ரைக்க வவன்முன்னே
மடியொ துக்கி மனமொடுக்கி வாய்பு தைத்தவ் வொன்னலார்
கறை குளித்த வேல ணைத்து நின்ற விந்த நிலைமையென்
கண்ணை விட்ட கன்றி டாது கலிய ஞணை யாணையே

அணைத்தவேலும், தொழுதகையும், அழுந்தியதிருநாமமும்
ஓமென்ற வாயும், உயர்ந்த மூக்கும், குளிர்ந்தமுகமும்,
பரந்தவிழியும், இருண்டகுழலும், சுருண்டவளையமும்,
வடித்தகாதும், மலர்ந்தகாதுகாப்பும், தாழ்ந்தசெவியும்,
செறிந்தகழுத்தும், அகன்றமார்பும், திரண்டதோளும்,
நெளித்தமுதுகும், குவிந்தஇடையும், அல்லிக்கயிறும்,
அழுந்தியசீராவும், தூக்கியகருங்கோவையும், தொங்கலுந்தனிமாலையும்,
சாத்தியதிருத்தண்டையும், சதிரானவிரக் கழலும், குந்தியிட்டகணைக்காலும்
குளிரவைத்ததிருவடிமலரும், மருவலர்தமுடல் துணி யவாள் வீசும்
பரகாலன் மங்கை மன்னரான வடிவே.

என்றும்,

1. அமருமிடமாய், 4. பெரியதிருமொழி 1—10—9.

ஐயனருள்மாரி செய்யவடியிணைகள் வாழியே
அந்துகிலும் சீராவு மணையுமரை வாழியே
மையிலகு வேலணைத்த வண்மைமிக வாழியே
மாறுமல் அஞ்சலிசெய் மலர்க்கரங்கள் வழியே
செய்யகலனு டனலங்கல் சேர்மார்பும் வாழியே
திண்புயமும் பணிலமர்ந்த திருக்கழுத்தும் வாழியே
மையல்செய்யு முகமுறுவல் மலர்க்கண்கள் வாழியே
மன்னுமுடித் தொப்பாரம் வலயமுடன் வாழியே.

என்றும் ஈடுபட்டு,

வேலணைத்த மார்வும் விளங்குதிரு வெட்டெழுத்தை
மாலுரைக்கத் தாழ்த்த செவியும்—காலணைத்த
தண்டையும் வீரக்கழலுந் தார்க்கலியன் வாண்முகமும்
கண்டு களிக்குமென் கண்

என்று அநுபவித்து, திருமணங்கொல்லையேற வெழுந்தருளி

இதுவோ திருவரசு! இதுவோ திருமணங்கொல்லை!
இதுவோ எழிலாலி என்னுமூர்!—இதுவோதான்
வெட்டுங்கலியன் வேல்வெட்டி நெடுமாலே!
எட்டெழுத்தும் பறித்த விடம்!

என்று அவ்விடத்தையும் ஸேவித்துப் புறப்பட்டருளி,

**திருக்கண்ணபுரத்திலே** சௌரிராஜனையும் ஸேவித்தருளி, திருமங்கையாழ்வாரையும் அங்கே யேறியருளப்பண்ணி, **நறையூர்** நம்பியையும் நாய்ச்சியாரையும் ஸேவித்தருளி, **திருக்குடந்தையிலே** சேர்ந்து ஆராவமுதாழ்வாருடைய ஏரார் கோலத்திருவுருவையும் திருவடிதொழுது, **தென் திருப்பேரையில்** சென்று திருப்பேர் நகரானையும் திருவடி தொழுது, மற்றுமுண்டான திருப்பதிகளையும் மங்களாசாஸநம் பண்ணியருளி, தென்னரங் கத்தே சென்று, பெருமாளை ஸேவித்து, மடமே எழுந்தருளி;

## அப்பாய்ச்சியாரண்ணாவை அநுக்ரஹித்தது

அப்பாய்ச்சியாரண்ணாவை அழைத்தருளி, முன் நியமனப்படிக்குப் பெருமாள்கோயிலுக்கு நியமித்தருள, அவரும் இந்த ஸேவையையும் கோஷ்டியையும் விட்டு விடைகொள்ள வல்லேனோ என்று [1] வ்யாகுலப்பட, ஜீயர் ஸந்நிதியிலே எழுந்தருளித் தாம், அடிதொடங்கி இராமாநுசன் என்று திருநாமம் சாத்தி பஹுநாளாண்டதாய் ஜீர்ணமாயிருக்கிற தீர்த்தச் செம்பு ஸ்வாமியுடைய ப்ரஸாதமென்று வானமாமலை ஜீயர் திருமண் கூடையிலே வைத்து, ஸேவித்துக்கொண்டிருக்கிறதைக் கொண்டுவரச் சொல்லி, "நம்மைப்போலிருக்கிற இரண்டு விக்ரஹங்களை இத்தையிட்டு உண்டாக்கி உம்முடைய ஆசார்யருக்கு ஒரு விக்ரஹமும் உமக்கு ஒரு விக்ரஹமுமாகக் கொள்ளும் என்று ஸாதித்தருளி, கோயிலாழ்வாரிலே எழுந்தருளியிருக்கிற (ஆட்கொண்ட வில்லி ஜீயர் திருவாராதனமான) தீமனங் கெடுத்தார் உமக்கு திருவாராதநம் என்று உகந்து ஸாதித்தருளி, பெருமாள் கோயிலிலே நித்யவாஸம் பண்ணிக்கொண்டு [2] ஸுகோத்தரராயிரும் என்று விடை ஸாதித்தருளினர்.

---

1. வருத்தப்பட, 2. மேன்மேலும் ஸுகமாக வாழ.

## ஆசார்யாபிஷேகம் ஸாதித்தது

ஒருநாள், ப்ரதிவாதிபயங்கரம் அமண்ணவை அழைத்தருளி, கந்தாடையண்ணன் முதலானுக்கு ஸ்ரீ பாஷ்யம் ஸாதித்தருளும்படிக்கு நியமித்து அவருக்கு **ஸ்ரீ பாஷ்யாசார்யர்** என்று திருநாமம் ப்ரஸாதித்தருளி **பாஷ்யஸிம் ஹாஸநத்திலே** அபிஷேகம் செய்தருளினர்.

ஒரு நாள் கந்தாடை யண்ணனை அழைத்து, பெரிய கந்தாடை யப்பன் முதலானுக்கு **பகவத் விஷயம்** ப்ரஸாதிக்கும்படி நியமித்தருளி **பகவத்ஸம்பந்தாசார்யர்** என்று திருநாமம் ஸாதித்தருளி **ஆசார்யஸிம்ஹாஸநத்திலே** அபிஷேகம் செய்தருளினர்.

**சுத்தஸத்வமண்ணனு**டைய வ்யாக்யான சாதுர்யத்தைக் கண்டு போர வுகந்தருளி, அவருக்குத் **திருவாய்மொழியாசார்யர்** என்று திருநாமம் சாத்தி **பகவத்விஷய ஸிம்ஹா ஸநத்திலே** அபிஷேகம் செய்தருளினர்.

கந்தாடை நாயனை பகவத் விஷயத்திற்கு ஸம்ஸ்க்ருததத்தில் அரும்பத விளக்கம் பண்ணச்சொல்லி நியமித்தருளினர்.

## ஜீயர் வைபவங்கள்

முன்பு ஜீயர் ஸந்நிதியினின்றும் எழுந்தளின எறும்பி அப்பா, தத்விச்லேஷம் ஸஹிக்கமாட்டாமல் ஜீயருடைய திநசர்யா ப்ரகாரங்களை அநுஸந்தித்துக்கொண்டு [1] அநுபவ பரீவாஹருபமாக **திநசர்யை** என்கிற ப்ரபந்தத்தைச் செய்தருளி ஜீயர் ஸந்நிதிக்குக் கொடுத்துவரக் காட்ட ஜீயரும் அத்தைக் கண்டு மிகவும் உகந்தருளி அப்பாவுக்கு எழுந் தருளும்படித் திருமுகம் போகவிட அவரும் கடுகவந்து வரவர முநியோகிவர்யருடைய ஸ்ரீ பாதபத்மங்களை ஸேவித்து,

பொன்னிதனிற் குளிர்நகரந் தனிற்புகுதப் பெற்றேம்
பொருவரும்சீர் நம்பெருமாள் பதம்புகழப் பெற்றேம்
மன்னியசீர் மணவாள மாமுனிவன் என்னையன்
வாழ்ந்திருக்கும் மடந்தன்னில் வந்திருக்கப் பெற்றேம்
சென்னிதனில் அவனடியார் பதம்சூடப் பெற்றேம்
திருமலையாழ் வாரில்என்றும் சிறந்திருக்கப் பெற்றேம்
பின்னையவர்க் கந்தரங்கப் பேரருளும் பெற்றேம்
பெருந்திவத்தி லின்பமிங்கே பெருகவும்பெற் றேமே

என்றும்,

மண்ணுடு வாழவந் தோன்மண வாள மா முனி வன்வண்மைக்
கண்ணரருளுக் கிலக்காக வாழவுங் கண்டவன்றன்
திண்ணர ரடிகளில் குற்றேவல் செய்து திரியவுநாம்
எண்ணு திருக்க நடுவே நமக்குவந் தெய்தியதே

என்றும் தாம் பெற்ற பேற்றினுடைய கௌரவத்தை நாடோறும் அநுஸந்தித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

பின்பு,

வாதுசெய வென்றுசில வாதியர்கள் வந்துமிக மனமுறிய நிற்பரொருபால்
வாழியென வேபெரிய சாபமற வென்றுசிலர் வந்தனைகள் செய்வரொருபால்

1. கண்டநுபவித்த பெருவெள்ளமாகிற.

போதுமினி வாதமுன பாதமரு ளென்றுபுகழ் புகழ்ந்துசிலர் நிற்பரொருபால்
பொங்குவரு மெங்கள்வினை மங்கவரு ளென்றுசிலர் போற்றிசெய்து நிற்பரொருபால்
ஈதிவை கிடக்கமறை நூல்தமிழ் தெரிந்துசிலர் இன்பமுற வாழ்வரொருபால்
ஏதமற வாதுலர்கள் பேதையவர் மயக்கமற விறைஞ்சியய னிற்பரொருபால்
மாதகவி ஞுலக மேழையும ளிக்கவென வந்தவெதி ராசனடிசேர்
மாமுனிவர் தீபமரு ளாளமண வாளமுனி மன்னுமடம் வாழும்வளமே.

என்று இப்படி பாகவத ஸம்ருத்தியுடனே வாழுகிற நாளிலே, பரீதாபி வருஷத்தில் திருப்ப வித்ரத் திருநாளிலே ஸ்ரீரங்கநாயகரான பெருமாள் தம்முடைய பரம க்ருபையாலே ஜீயருடைய மஹிமையைப் பெரியோர்களுக்கெல்லாம் ப்ரகாசிப்பிப்பதாக ஜீயருக்கு சிஷ்யராகுகையைத் தாமே திருவுள்ளத்தே ருசித்தருளினர்.

### ஈடு ஸாதிக்க பெரிய பெருமாள் நியமனம் பெற்று ஸாதித்தது

பெருமாள் திருப்பவித்ரோத்ஸவவ்யாஜமாகப் புறப்பட்டருளி திருப்பவித்ர மண்டபத்திலே ஏறியருளிப் [1]பேரோலக்கமாய் எழுந்தருளியிருந்து அணியரங்கன் திருமுற்றத்தடியார், ஆசார்ய புருஷர்கள், ஜீயர்கள், ஸ்ரீவைஷ்ணவர்கள், அனைத்துக் கொத்துக்கும் அருள்பாடு ஸாதித்தருளி, ஜீயரும் முதலிகளுடனே பெருமாளை மங்களாசாஸனம் பண்ணிக் கொண்டெழுந்தருளியிருக்க, ஜீயரைத் தனித்து அருள்பாடிட்டருளி, "நாளை முதலாக நம்முடைய பெரிய திருமண்டபத்திலே பெரியவண் குருகூர் நம்பியான ஆழ்வாருடைய திருவாய்மொழிப் பொருளை ஈடுமுப்பத்தாருயிரத்தோடே நடத்தும்" என்ன, இப்படி அருளுவதே என்று ஜீயர் மிகவும் [2] ஹ்ருஷ்டராகப் பிற்றை நாள் தொடங்கிப் பெருமாள் நாய்ச்சிமாருடன் திவ்யஸிம்ஹஸனத்தில் ஏறியருளி பேரோலக்கமாக எழுந்தருளியிருந்து, ஈடு தொடக்கமான ஐந்து வ்யாக்யாநத்துடனே இவர் நடத்தியருளும்படியை திருச்செவி சாத்தியருளி, இப்படியே ஒரு ஸம்வத்ஸரம் நடந்து பின்பு சாத்தும்போது ஜீயரை மிகவும் [3] உபலாளித்தருளி திவ்யப்ரபந்த தத்வ்யாக்யான வைபவங்களையும் ஜீயருடைய வைபவங்களையும் ப்ரகாசம் செய்தருள வேணுமென்றும், தாம் அநுஷ்டித்துக் காட்டவேணுமென்றும் திருவுள்ளமாய், ஜீயருக்கு ஆசார்ய ஸம்பாவனையாக (பலவற்றையும்) அமர்த்தி நிற்க;

### பெரிய பெருமாள் ஜீயருக்கு தனியன் ஸாதித்தது

அழகிய மணவாள பட்டரான அர்ச்சக குமாராய் ஐந்தாம் வயதாய் ரங்கநாயகமென்ற திருநாமத்தையுடையரான சிறு பிள்ளை, ஸம்பாவனைத் தட்டுகளுக்கும் பெருமாளுக்கும் நடுவே வந்து கைகூப்பிக் கொண்டு நின்று பயப்படாமல்

*ஸ்ரீசைலேச-தயாபாத்ரம் தீபக்த்யாதி-குணார்ணவம்।*
*யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்॥*

என்று சொல்லி ஓடிப் போக, பெரியோர்களெல்லாம் இந்த ச்லோகத்தைப் பட்டோலைக் கொண்டு மஞ்சட்காப்பு சாத்தித் திருவடிகளிலே ஸமர்ப்பித்து, பின்பு (அர்ச்சக குமாரனை) ரங்கநாயகத்தை உபலாளித் தழைத்து, "முன்பு சொன்னதை இன்னும் சொல்லுமென,' "நானொன்று மறியேன்" என்று அவர் ஓடிவிட;

---

1. பெரிய கோஷ்டியாய் 2. மகிழ்ச்சியுடையவராய் 3. பாராட்டியருளி

## மற்ற திவ்யதேசங்களுக்குப் பெரியபெருமாள் நியமனம்

பெருமாள் உகந்தருளி, திருமலை பெருமாள் கோயில் தொடக்கமான திருப்பதிகளுக்கெல்லாம் ஸ்ரீஸேனை முதலியார் ஸ்ரீமுகமாக "அநுஸந்தான காலங்கள் தோறும் ஜீயர் விஷயமாகப் பெருமாளருளிச்செய்த தனியன்—ஸ்ரீசைலேச தயாபாத்ரம்...முநிம் என்று அநுஸந்தித்துத் தொடங்கவும், ப்ரபந்தம் சாற்றி, வாழி திருவாய்மொழிப் பிள்ளை என்று தொடங்கி, செய்ய தாமரைத் தாளிணை வாழியே முதலான வாழி திருநாமம் ஓதி, அடியார்கள் வாழ....மணவாள மாமுநியே இன்னமொரு நூற்றாண்டிரும் என்று அநுஸந்தித்துத் தலைக்கட்டவும்" என்று அனுப்பிவிட்டருளி ஜீயருக்கு ஸம்பாவனையும் செய்தருளி வரிசையுடன் அனுப்பியருளினார். இத்தனியன் தனக்குத் தென்னனுயர் பொருப்பிலழகரும, தெய்வ வடமலையப்பனும், திருநாராயணப்பெருமாளும், ஸ்ரீபத்ரீநாராயணப்பெருமாளும் ப்ரவர்த்தகராயிருப்பர்கள். இப்படி நடந்தவைகளை,

நல்லதோர் பரீதாபி வருடந் தன்னில்
நலமான வாவணியின் முப்பத் தொன்றில்
சொல்லரிய சோதியுடன் விளங்கு வெள்ளித்
தொல் கிழமை வளர்பக்க நாலா நாளில்
செல்வமிகு பெரியதிரு மண்ட பத்தில்
செழுந்திருவாய் மொழிப்பொருளைச் செப்பு மென்று
வல்லியுறை மணவாள ரரங்கர் நங்கண்
மணவாள மாமுநிக்கு வழங்கி னாரே

என்றும்,

ஆனந்த வருடத்தில் கீழ்மை யாண்டில்
அழகான ஆனிதனின் மூல நாளில்
பாநுவா ரங்கொண்ட பகலில் செய்ய
பௌரணையி னுளிட்டுப் பொருந்தி வைத்தே
ஆனந்த மயமான மண்ட பத்தில்
அழகாக மணவாள ரீடு சாற்ற
வானவரும் நீரிட்ட வழக்கே என்ன
மணவாள மாமுனிகள் களித்திட் டாரே

என்றும், இளையாழ்வார் பிள்ளை அருளிச்செய்தார்.

### வானமாமலை ஜீயருக்கு அநுக்ரஹம்

அவ்வளவிலே வானமலை ஜீயரை வானமாமலை ஸ்ரீகார்யார்த்தமாக அனுப்பியருள வேணுமென்று சேனைமுதலியார் ஸ்ரீமுகம் வர, சிரஸா வஹித்து உட்பட்டு ஜீயர் நியமித்தருளி அவரையும் கூட்டிக்கொண்டு பெருமாள் திருமுன்பே சென்று இச்செய்தியை விண்ணப்பம் செய்து, தாமும் நித்யாநுஸந்தானமாக நாலாயிர மநுஸந்திக்கிறது அற்றைக்குத் திருமொழி சாற்றுமுறையாய் "அணியார் பொழில் சூழ் அரங்கநகரப்பா" என்று அநுஸந்திக்கப் பெருமாளும் ஸம்மதித்து, தம்முடைய ஸந்நிதியிலே பூபாலராயனில் தட்டிலே எழுந்தருளியிருக்கிற அரங்கநகரப்பனுகிய லக்ஷ்மீநாராயணனை நாம் வானமாமலை ஜீயருக்கும் உமக்குமாக வருகிறோம் என்று வானமாமலை ஜீயர் கையிலே எழுந்தருளப் பண்ணிக் கொடுக்க, பெரியஜீயரும் ஜீயரை வாழ்த்தி அரங்கநகரப்பனை ப்ரஸாதித்து வானமாமலைக்கு அனுப்பியருளினார்.

### மீண்டும் திருநகரி யெழுந்தருளல்

அநந்தரம் ஜீயரும் தமக்கு ஸர்வவித உத்தாரக பந்துபூதரான நம்மாழ்வாரை ஸேவித்து நெடுநாளாயிற்று ஆகையால் [1] தத்விஷயப்ரேமம் அதிசயித்து, பெருமாளுக்கு விண்ணப்பம் செய்து புறப்பட்டுக் கூடல் என்கிற மதுரையிலே சென்று திருப்பல்லாண்டவ தரித்த ஸ்தலமென்று உகந்தருளி மல்லாண்ட திண்டோள் மணிவண்ணரையும் திருவடி தொழுது எழுந்தருளியிருக்குமளவிலே அத்தேசத்துக்கதிபதியான மஹாபலிவாணநாத ராயன் வந்து திருவடியிலே ஆச்ரயிக்த அவனேயும் விசேஷகடாக்ஷம்பண்ணி, அநந்தரம் திருப்புல்லாணி வழியாக எழுந்தருளியிருக்குமளவில் முதலிகளும் தாமுமாய் [2] அத்வச்ராந்த ராய் நிழல் தேடிவாரா நிற்க, அங்கே ஸ்த்தாவர விசேஷமாய் இருப்பதொரு [3] திந்த்ருணீ வ்ருக்ஷம் [4] நீரந்த்ரச் சாயாயுக்தமாய் நிற்கக் கண்டு அங்கே எழுந்தருளி அப்புளிநிழலிலே [5] விச்ரமித்து ச்ரமம் தீர்த்துக்கொண்டு அங்கே எழுந்தருளியிருக்க, முதலிகளும் இப்படி மஹோபகாரம் பண்ணின விதற்கு ஒரு க்ருபை பண்ணி அருளவேணும் என்னு ஜீயரை ப்ரார்த்திக்க, அவரும் ஸ்வக்ருபாதிசயத்தாலே அந்தப் புளியை ஸ்பர்சித்து, "நாம் பெற்ற பேற்றை நீயும் பெறக்கடவாய்" என்று அநுக்ரஹித்து எழுந்தருளினர். பின்பு [6] அசிரேண அம்மரம் உலர்ந்திருக்கக் கண்டு முதலிகள் "ஸ்த்தாவராண்யபிமுச்யந்தே" என்கிற அர்த்தம் இவரிடத்தில் அந்வர்த்தஸித்தமிறே என்று உகந்தருளினர்கள்.

அநந்தரம் திருப்புல்லாணிப் பெருமாளைத் திருவடிதொழுது திருநகரியேற எழுந் தருளி அடைவே ஆழ்வாரையும் பொலிந்துநின்றபிரானையும் ஸேவித்து அங்குச் சில காலம் எழுந்தருளியிருக்க[4] (திருவரங்கத்தில் உத்ஸவங்களை நினைத்து அவை ஸேவிக்கப் பெருமைக்கு வருந்தி அநுஸந்தித்தவை:)

*எந்தைஎதிராசர் சிறப்பை எழிலரங்கர்*
*சிந்தை மகிழ்ந் தமுதுசெய்ய—அந்தநிலை*
*என்னுள்ளம் சென்றுநின்று மேவிக் கினிசெல்வ*
*மின்றிப் பெற்றிலோம் செவிக்கியாம்*

என்று மார்கழி மாதத்தில் எம்பெருமானர் திருப்பாவைச் சிறப்பை ஸேவிக்கப் பெற்றிலோம் என்றும்,

*சீரா ரரங்கர்தம் தேவிய ரோடு சிறப்புடனே*
*ஏராரு மாறன் கலியன் எதிராச ருமிவர்க்கும்*
*பார்ரோர் மகிழ்ந்தேந்தும் தட்டுக்க டன்னுடன் போற்றுமந்தப்*
*போரார வார்த்தை இன்றுகண் டின்புறப் பெற்றிலமே*

என்று ஸங்க்ரமண உத்ஸவத்தைப் பற்றியும்,

*தேவியரும் தாமும் திருத்தேரின் மேல்அரங்கர்*
*மேவிவர விக்கிரமன் வீதிதனில்—சேவைசெய்யும்*
*அந்தச் சுவர்க்கத்தை அனுபவிக்கப் பெற்றிலமே*
*இந்தத் திருநாளிலே யாம்*

என்று தைத்திருநாள் பற்றியும் அநுஸந்தித்து நொந்து, ஆழ்வார் திருமுன்பே சென்று,

---

1. அவரிடத்தன்பு அளவிளப் பெருகி, 2. வழி நடந்ததால் களைப்புடையவராய், 3. புளியமரம், 4. பசுமையும் இலைகளும் வாய்ந்து இருப்பதை, 5. இளைப்பாறி, 6. விரைவில்,

திருக்குருகைப் பெருமாள்தன் திருத்தாள்கள் வாழியே
திருவான திருமுகத்துச் செவ்விஎன்றும் வாழியே
இருக்குமொழி என்னெஞ்சில் தேக்கினான் வாழியே
எந்தைஎதி ராசர்க் கிறைவனார் வாழியே
கருக்குழியில் புகாவண்ணம் காத்தருள்வோன் வாழியே
காசினியில் ஆரியனைக் காட்டினான் வாழியே
வருத்தமற வந்தென்னை வாழ்வித்தான் வாழியே
மதுரகவி தம்பிரான் வாழிவாழி வாழியே

என்று மங்களாசாஸனம்பண்ணி ஸேவித்து அவரநுமதி கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூரேறச் சென்று, வடபெருங்கோயிலுடையானையும், பெரியாழ்வாரையும், ஆழ்வார் திருமகளாராண்டாளையும் அடிபணிந்து, திருமாலிருஞ்சோலை சென்று சுந்தரத்தோளுடையனை பரமஸ்வாமியையும் ஸேவித்து அழகர் திருக்குறுங்குடிக்குக் குடிவாங்கிப் புறப்பட்டெழுந்தருளுகையாலே அவ்விடம் அழகழிந்திருக்கிற கோயிலைக் கண்டு, 'நங்கள் குன்றம் கைவிடான்' என்ற பொய்யில் பாடலை [1] அங்வர்த்தஸித்தமாக்கியருளவேணும் என்று ப்ரார்த்தித்துக்கொண்டு திருவரங்கன் திருப்பதியைக்கிட்டி ஸ்ரீரங்கஸ்ரீ வாழும்படி மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு வாழந்தருளுகிற காலத்திலே;

இவர் அழகருக்குப் பண்ணியருளின மங்களாசாஸனம் பலித்து மீண்டும் அழகர் குடிபுகுந்தருளி ஜீயருக்குத் திருமுகம் எழுதி, "நாம் உம்முடைய நினைவின்படியே வந்து நங்கள்குன்றம் கைக்கொண்டு புகுந்தோம்; நம் வீட்டில் கார்யமாராய்ந்து நன்றாக நடத்தியருளும்படி ஒருவரைவரவிட வேணும்" என்று வரக்காட்டியருள, ஜீயரும் எதிராஜஜீயர் என்று திருநாமமுடையராய் மங்களாசாஸனபரராய் இருக்குமவரை அனுப்பியருள அவரும் ஆசார்யப்ரீத்யர்த்தமாக அனைத்தழகும் கண்டருளப்பண்ணினார்.

ஜீயரை ஆச்ரயித்த மஹாபலிவாண நாதரும் திருமலைத் தோழப்பரைக் கொண்டு திருமாலிருஞ்சோலை மாலுக்கு ஸர்வவித கைங்கர்யங்களும்செய்து போந்தார். இவர்களாலே அழகர் கைங்கர்யம் [2] ஸம்ருத்தமாயிற்று. (பின்பு) துளவருடைய வம்சத்திலே பிறந்தானொரு பிள்ளை திருவடிகளிலே ஆச்ரயிக்க அவரைக்கொண்டு பெருமாள் கோவில் தொடக்கமான திருப்பதிகளில் ஸ்ரீகார்யமெல்லாம் அருளப்பெற்றது. இப்படி இருக்கிற நாளிலே, பெரியாழ்வார் திருமொழிக்கு பெரியவாச்சான் பிள்ளை செய்தருளின வ்யாக்யானம் காணாமையாலே திருநகரியில் எழுந்தருளியிருந்த திருப்பாணாழ்வார் தாஸர் நாயனாரைக் கூட்டிக்கொண்டு நாலு பத்தளவாக நன்றாக வ்யாக்யானம் செய்தருளி மற்ற நாற்பது பாட்டுக்களுக்கும் சேஷித்திருந்த பூர்வர்கள் வ்யாக்யானத்தை அழைப்பித்து அத்தோடு சேர்த்தருளினார்.

### ஆசார்ய ஹ்ருதயத்துக்கு வ்யாக்யானம் அருளியது

அநந்தரம் ஆசார்ய ஹ்ருதயத்திற்கு வ்யாக்யானம் செய்தருளத் திருவுள்ளமாய் திருமேனியில் [3] தௌர்ப்பல்யத்தையும் பாராமல் திருவணையிலே சாய்ந்தருளியபடியே திருக்கழுத்து நோவத் திருவெழுத்துச் சாத்தியருளும்படியைக் கந்தாடையண்ணன் கண்டு, 'தேவரீர் இப்படி ஏதுக்காக ப்ரயாஸப்படுகிறீர்?' என்ன, ஜீயரும் 'உம்முடைய புத்ர பௌத்ராதிகளுக்காக பாடு படுகிறேன்' என்றருளிச்செய்தார்.

1. பொருளின்படி மெய்யாகவேணும், 2. நிறைவுற்றதாயிற்று, 3. பலமின்மை,

பின்பு, ஜீயர் திருவடிகளை ஆச்ரயித்து அதிகத பரமார்த்தராய் அநவரதஸேவை பண்ணிப்போரும்

பாராரு மங்கை திருவேங் கடமுனி பட்டர்பிரான்
ஆராமஞ் சூழ்கோயில் கந்தாடை அண்ணன் எறும்பியப்பா
ஏராரு மப்பிள்ளை அப்பிள்ளார் பரவாதி அண்ணனெனும்
பேரார்ந்த திக்கயஞ் சூழவர யோகியைச் சிந்தியுமே

என்று சொல்லப்பட்ட அஷ்டதிக்கஜங்களும், திருப்பாணாழ்வார்தாஸர், ஏட்டூர் சிங்கரா சார்யர், வரந் தரும் பெருமாள்பிள்ளை, மேனட்டுத்தோழப்பர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனர், ஜீயர் நாயனர், அண்ணராய சக்ரவர்த்திகள் தொடக்கமானர்கள் எல்லோரும் ஸத்வோத்தரராய் ஸதாசார நிரதராய் தத்வதர்சிகளாய் ஜகதுஜ்ஜீவனைக பரராயிருப்பர்கள்.

## ஸ்வநிஷ்ட்டா விசேஷம்

இப்படி இவர்களாலே [1]ஸேவ்ய மாநராயிருக்கிற வரவர முனிவர்யரான பெரிய ஜீயர் ஜகத்திலுள்ளான சேதனரெல்லாரையும் திருத்தி வாழ்வித்தருளி க்ருதார்த்தராய்

தென்னரங்கர் சீரருளுக் கிலக்காகப் பெற்ருேம்
திருவரங்கந் திருப்பதியே இருப்பாகப் பெற்ருேம்
மன்னியசீர் மாறன்கலை உணவாகப் பெற்ருேம்
மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்ருேம்
முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்ருேம்
முழுதுநமக் கிவை பொழுது போக்காகப் பெற்ருேம்
பின்னையொன்று தனி(ல்)நெஞ்சு பேராமற் பெற்ருேம்
பிறர்மினுக்கம் பொருமையிலாப் பெருமையும் பெற்ருேமே

என்று இப்படி ஸ்வநிஷ்டா விசேஷத்தை மதித்துக்கொண்டு [2] அகாரணக்ருபாவிசேஷ கடாக்ஷபாதேந புளி முதலான வ்ருக்ஷாதிகளும் உஜ்ஜீவித்து ஈடேறும்படி எழுந் தருளியிருந்தார்.

## தம் ஆர்த்தியை வெளியிடுதல்

இப்படித்தம்முடைய திருவவதார கார்யம் தலைக்கட்டினவாறே, மேலை வைகுந்தத்தில் சென்று அசேஷ சேஷ வ்ருத்திகளிலும் அந்வயித்து அடிமை செய்யவேணுமென்கிற [3] அபிநிவேசத்தை யுடையராய் விண்ணுலகு செல்ல இசைந்திருக்கும் அளவில் திருமேனி யிலே நோவுசாத்தி [4] ஸஞ்சாரக்ஷமரன்றிக்கே மிகவும் தளர்த்திருக்க,

திருநாளுக்காகத் திருவீதியி லரங்கர்
வருநாளு மாற நெந்தைக் கின்று—பெருமாடன்
அந்த வடிவழகை யோர்நாளுங் காணேனே
இந்த வுடம்போ டினி

என்னும் பேராசையோடே பெருமாள் சேவையை அபேக்ஷித்திருக்க, பெருமாளும் உடுத்து முடித்து அலங்கரித்துக் கொண்டு திருவீதியிலே புறப்பட்டவர் இவர் மடத்து வாசலிலே

1. வணங்கப்படுமவராய், 2. காரணமில்லாமல் (பிறர்நினையாதபோதும் அவர்களிடம்) க்ருபையாலே கடைநோக்கி, 3. விருப்பம், 4. நடப்பதற்கும் இயலாமல்,

நெடும்போது நின்று வாடிக்கிடந்த பயிரைத்தளிர்ப்பிக்கும் மேகம் போலே ஸேவை ஸாதித்தருளினர்.

பின்பு சிலநாள் கழிந்தவாறே ஜீயருக்கு ப்ராப்யபூமியிலே ப்ராவண்யமும் [1] த்யாஜ்ய பூமியிலே [2] ஜிஹாஸையும் அத்யந்தம் அதிசயித்து வர, அதற்குமேலே தமக்கு ப்ராப்யரான உடையவர் திருவடிகளிலே ப்ராவண்யம் அதிசயித்து அதடியாக பரமபக்தி தலையெடுத்து ஸ்வாபேக்ஷிதங்களை அவர் திருமுன்பே விண்ணப்பம் செய்வாராய், "வாழியெதிராசன்" என்று தொடங்கி, "இந்தவரங்கத்து" என்று தலைக்கட்டாக அருளிச்செய்ய அவை "ஆர்த்தி" என்று அறுபது பாட்டாய் ஒரு ப்ரபந்தமாய்த் தலைக்கட்டிற்று. அந்த அபிநிவேசம் அவ்வளவிலே நில்லாதே பரவி,

எம்பெரு மானார்தம் பிரானென் னுமவரை
நம்பெருமாள் தாமுகந்து நாடோறும்—தம்பரமா
ஏறிட்டுக் கொண்டளிப்ப ரென்றுமவர் தம்மை
வேறிட்டுத் தாங்கை விடார்

என்று தேறுவதும்,

பொல்லானிவ னென்று போதிடென்று நங்குரவ
ரெல்லாரு மென்னை யிகழ்ந்தனரோ?—நல்லார்கள்
வாழ்வான வைகுந்த வான்சபையில் வண்கூரத்
தாழ்வான் இருந்திலனோ வங்கு?

என்று கலங்குவதுமாய்,

ஆரியர்காள்! ஆழ்வீர்காள்! ஆங்குள்ள முத்தர்காள்!
சூரியர்காள்! தேவியர்காள்! சொல்லீரோ—நாரணற்கு
எங்களடி யானிவனும் ஈடேற வேணுமென்று
உங்கள் அடியாரு முள

என்று கடகர் பலரையும் அர்த்திப்பதும்,

தென்னரங்கன் தேவீ! சீரங்க நாயகியே!
மன்னுயிர்கட் கெல்லாம் மாதாவே!—என்னையினி
இவ்வுலகந் தன்னி லிருந்து நலங்காமல்
அவ்வுலகில் வாங்கி அருள்

என்றும்,

சீரங்க நாயகியே! தென்னரங்கன் தேவீ!
நாரங் கட்கெல்லாம் நல்தாயே!—மாருதிக்கு
வந்தவிடாய் தன்னைஒரு வாசகத்தால் போக்கினநீ
என்றன் இடர்தீராத தேன்?

என்று மறுக்கவொண்ணாத மாத்ருத்வ ஸம்பந்தத்தைச் சொல்லி மடிபிடிப்பதும்,

இந்த உடம்போ டினிஇருக்கப் போகாதுஉன்
செங்கமலத் தாள்தன்னைத் தந்தருள்நீ—அந்தோ
மையார் கருங்கண்ணி மணவாளா! தென்னரங்கா!
வையா திருப்பாயே இங்கு

1. விடவேண்டிய பூமி 2. விடுவதற்கு விருப்பம்

என்று அவர்முன்பே தம் ஆர்த்தியைச் சொல்லுவதும்,

இந்த உடம்போ டிருவினையால் இவ்வளவும்
உன்றன் அடிசேரா துழல்கின்றேன்—அந்தோ
அரங்கா இரங்காய் எதிராசர்க் காக
இரங்காய் பிரானே இனி

என்று மீளவும் மரங்களும் இரங்கும்படி அவர்க்கந்தரங்கரை முன்னிட்டுக்கொண்டு அவரிரக்கத்தை யிரப்பதுமாய், இப்படி ஒரு தேசவிசேஷத்திலே சென்றுலொழியத் தரியாத தசையை அடைந்து எழுந்தருளியிருக்க,

## அவதார ஸமாப்தி

பின்பு தனித்தனியே முதலிகள் எல்லார்க்கும் வேண்டிய ஹிதங்களை எல்லாம் ப்ரஸாதித்தருளி, நாலாயிரமும் தொடங்கி நடத்த நியமித்தருளி திருச்செவி சாத்தி, உத்தம நம்பி முதலான அனைத்துப் பரிகரத்தையும் அழைத்து ஸ்வாபராதங்களைப் பொறுத்தருள வேணுமென்று க்ஷாமணம் பண்ணிக்கொண்டு பெரியபெருமாள் காரியத்தைக் குறைவற நடத்துங்கோள் என்று அருளிச்செய்து போகவிட்டு, ஸ்ரீவைஷ்ணவர்களை அமுது செய்வித்து தீர்த்தம் கொண்டு ஸ்வீகரித்து க்ஷாமணம் பண்ணிக்கொண்டு "பிள்ளை திருவடிகளே சரணம்" என்று உச்சரித்துத் திருவணையிலே அவசராய்ச் சாய்ந்தருள, ஸ்ரீபாதத்து முதலிகள் வணங்கிக்கொண்டு ப்ரஹ்மவல்லி, ப்ருகுவல்லி, சூழ்விசும்பணிமுகில், அர்ச்சிராதி, நூற்றந்தாதி (இவைகளை) அநுஸந்திப்பாராய்ப் பெரிய ஆரவாரத்துடனே செல்லுகிற வளவிலே "அங்கயல் பாய்வயல் தென்னரங்கன்" என்கிற பாட்டை அநுஸந்திக்கக் கேட்டுத் தாமும் க்ருதாஞ்சலி புடராய் "எம்பெருமானுர் திருவடிகளே சரணம்" என்று அநுஸந்தித்து தக்கதசித்தராய் திருக்கண்களைச் செம்பளித்துக் கொண்டிருக்க, "எந்தை திருவரங்கன் ஓர் கருடன்மேல் வந்து முகங்காட்டி வழிநடத்த" என்கிறபடியே ஸ்ரீய: பதியான பெரியபெருமாள் பெரியதிருவடி மேற்கொண்டு வழிநடத்த ஸுஷும்நை யாகிற வாசலிலே புறப்பட்டு சிர:கபாலம் வெடித்து ப்ரஹ்மரந்த்ரத்தாலே ஜீயர் திருநாட்டுக் கெழுந்தருளினுர். அநந்தரம் பெரியபெருமாளும், இளைய பெருமாளவதாரமான ஜீயரை வழி விட்டு வந்து முசித்து மூடிக்கிடந்தார். ஸ்ரீபாதத்து முதலிகளும் பெருமிடறு செய்து கையெடுத்துக் கூப்பிக்கொண்டு விழுந்து துடித்துப் பிறகு தேறிநின்று

*கும்பம் பாஸ்வதி யாதிதத்ஸுததிநே பக்ஷே வௌர்க்ஷேதரே*
*த்வாதச்யாம் ச்ரவணர்க்ஷபாஜி ருதிரோத்கார் யாக்யஸம்வத்ஸரே*
*தீபத்யாதிகுணர்ணவோ யதிவராதீநாகிலாத்ம ஸ்த்திதி:*
*ஸ்ரீவைகுண்ட மகுண்டவைபவமகாத் காந்தோபயந்தா முநி:॥*

என்று அருளுச்செய்தார்கள்.

அநந்தரம் ஜீயருக்கு சரம கைங்கர்யம் ஜீயர் நாயனுரைக் கொண்டு க்ரமேண எல்லாம் செய்வித்துப் பெருமாள் உடுத்துக் களைந்த பீதகவாடையும் சூடிக்களைந்த துழாய் மலர்களும் வரக்காட்டியவற்றைச் சாத்தி விமல சரம விக்ராநுபவம் பண்ணியிருந்து திருவடிகளை நெஞ்சிலும் கண்ணிலும் ஒற்றிக்கொண்டு திவ்யாலங்க்ருதமான புஷ்பக விமானத்திலே ஜீயரை ஏறியருளப் பண்ணிவைத்து எல்லாரும் ஸ்ரீபாதம் தாங்கிக்கொண்டு ஸகல வாத்யங்களும் கடல்போல் முழங்க ஸர்வாலங்க்ருதைரலங்க்ருதமான எட்டுத் திருவீதியிலும், நூற்றந்தாதி முதலான இயலநுஸந்தானத்துடன், ஸுமங்கலிகள் தீபமேந்த,

தர்சனத்தில் மணவாள மாமுனிகள் திருநாட்டுக்கெழுந்தருளினர் என்று ஒற்றைச் சின்னம் பரிமாற, எழுந்தருளவித்துக்கொண்டு போய் "மகிழாதி கேசவன் தன்னடிக் கீழாக" என்கிறபடியே ஆதிகேசவப்பெருமாள் திருவடிக்கீழாக அவன் திருவடி பிரியா வண்ணம் தவராசன் படுகையிலே வடபொன்னித் தென்பாலிலே எழுந்தருளப்பண்ண ஒருப்பட, பூமிதேவியும் இவரை மடியிலே வைத்துக் கொண்டு மகிழ, ஆளவந்தார் எம்பெரு மானுரைப் போலே யதிஸம்ஸ்கார விதியடங்கச் செய்து தரித்து வாழும்படி திருப்பள்ளிப் படுத்தார்கள்.

அநந்தரம் முதலிகளெல்லாம் அவப்ருதம் கொண்டாடி மீண்டும் மடத்திலே எழுந்தருளி வெறித்தான மடத்தைக் கண்டு ஆசார்ய விச்லேஷாஸஹிஷ்ணுக்களாய் மிகவும் க்லேசித்துத் தங்களிலே தேறிநின்று,

*புண்ணுரா க்கைதன்னுள் புக்குழலும் தீவினையேன்*
*தண்ணுரு முன்கமலத் தாள் அணைவ தென்றுகொலோ*
*பண்ணுரு நால்வேதம் பயின்றுய்யும் பண்டிதனே*
*மண்ணுள வந்த மணவாளமா முனியே*

என்று இத்யாதியான ஆர்த்தியை அவர் விஷயத்தில் விண்ணப்பம் செய்து செய்ய வேண்டும் க்ருத்யங்களையெல்லாம் செய்து ஜீயர் வைபவத்துக்கநு குணமாக திருவத்ய யனமும் நடத்தியருளி தீர்த்தப்ரஸாதங்களும் ஸ்வீகரித்து பின்பு தம்தாமுக்கு நியமித்தருளின கைங்கர்யங்களைச் செய்து கொண்டு போந்தார்கள். ஆசார்யாபிமான நிஷ்டராய் யதீந்த்ரப்ரவணரான ஜீயர் திருவடிகளே தஞ்சம் என்றிருங்கோள் என்று தந்தாம் சிஷ்யர் களுக்கு அருளிச்செய்து தந்நிஷ்டராய் தத்ஸேவோத்ஸுகராய் வாழ்ந்து கொண்டிருந் தார்கள்.

பெரிய ஜீயர் திருவடிகளே சரணம்

---

குறிப்பு: *மணவாளமாமுனிகளின் வைபவமான யதீந்த்ரப்ரவணப்ரபாவம் என்ற திவ்யக்ரந்தத்தை அருளிச்செய்த பிள்ளைலோகம் (பிள்ளைலோகார்ய) ஜீயர், மாமுனிகள் திருவடி களுக்கந்தரங்கரான கோவிந்தப்பதாதர் என்பவருடைய திருவம்சத்தி லுதித்தவர். இந்த கோவிந்தப்பரே துரீயாசரமம் பெற்று பரவஸ்து பட்டர் பிரான் ஜீயர் என்று அஷ்டதிக்கஜா சார்யர்களில் ஒருவராய் விளங்கியவர். கோவிந்தப்பருடைய குமாரர் அழகிய மணவாளர். அழகிய மணவாளருடைய பௌத்ரர் வரதாசாரியார் என்பவர். இவர் உத்தமாச்ரம் ஸ்வீகரித்து பிள்ளை லோகம் ஜீயரென ப்ரஸித்தி பெற்றுர். இவருடைய திருநக்ஷத்ரம் சித்திரையில் திருவோணம். கடல் கொண்டு விட்ட கடல்மல்லைத் தலசயனத்துறைவார் ஸன்னிதியைப் புதிதாகக் கட்டுவித்து அதில் பெருமாளையும் திருப்ரதிஷ்டை கண்டருளப்பண்ணி அந்த ஸன்னிதியில் தீர்த்தம் முதலிய சிறப்புகளைப் பெற்று வாழ்ந்திருந்தவர். மணவாளமாமுனிகள் அருளிச்செய்த யதிராஜ விம்சதி, உபதேசரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்தி ப்ரபந்தம் இவைகளுக்கும், இராமாநுச நூற்றந்தாதிக்கும், மற்றும் நாலாயிரத்தனியன்களுக்கும் வியாக்யானம் ஸாதித்துள்ளார். இவருடைய வாழ்க்கை விவரங்கள் அதிகமாகக் கிடைக்கவில்லை. இந்தக் குறிப்புகளைத் தந்துதவிய ஸ்ரீ உ. வே. பிள்ளைலோகம் ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமிக்கு அடியேனுடைய நன்றி உரித் தாகும்.*

—*பதிப்பாசிரியர்.*

# ஸ்ரீ மணவாள மாமுனிகள் வைபவம்

(வரலாற்றுச் சுருக்கம்)

(டாக்டர் வி. வி. ராமானுஜம்)

ஸௌம்யஜாமாத்ரு யோகி என்றும் வரவரமுனி என்றும் அழைக்கப்படும் அழகிய மணவாள மாமுனிகள் "லக்ஷ்மீநாதஸமாரம்பாம்" என்று தொடங்கி வந்துள்ள நம் பூர்வாசார்ய பரம்பரையில் கடைசி ஆசார்யர் ஆவர். லக்ஷ்மீநாதனுன ஸ்ரீரங்கநாதன் இந்த மஹாசார்யருடைய சிஷ்யனுயிருந்து உபதேசம் பெற்றமையால் ஆரம்பமும் முடிவும் சேர்ந்து ஒரு ஆசார்யஹாரமாக ஆகிவிட்டது நம்குருபரம்பரை. இதற்கு நடுநாயக்கல் எம்பெருமானுர் ஆவர். எம்பெருமானுக்கு எல்லாவிதமான அடிமைகளும் தாமே செய்ய வேண்டும் என்று பாரிக்கும் நித்யகைங்கர்ய பூதர்களில் தலேவனுன திருவனந்தாழ்வான் ராமாநுஜமுனியாக அவதரித்தபோது ஸம்ஸ்க்ருத [1]வேதவேதாந்த பாஹ்யகுருத்ருஷ்டிகளே நிரஸித்து விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தை நிலேநாட்டுவதே முக்கியமான பணியாயிற்று. அனேத்துலகும் வாழப் பிறந்த [2]எதிராசமாமுனிவரே மீண்டும் மணவாளமாமுனிவராக [3]த்ராவிடவேத பாஹ்யகுத்ருஷ்டிகளேத் திருத்திப்பணி கொள்வதற்காக அவதரித்தார். இந்த மஹாபுருஷர் கி.பி. 1370ம் ஆண்டுக்குச் சரியான ஸாதாரண வருஷத்தில் ஐப்பசித் திருமூலத்தில், ஆழ்வார் திருநகரியில் **திகழக்கிடந்தான் திருநாவீறுடைய பிரான் தாஸரண்ணர்** என்னும் அந்தணப் பெரியாருக்குக் குமாரராகப் பிறந்தார். இவர் தாயார் பெயர் **ஸ்ரீரங்கநாச்சியார்** என்பது. இந்நிலவுலகை வாழ்விக்க இவர் வாழ்ந்திருந்த காலம் 73 ஆண்டுகள் ஆகும்.

பெரியாழ்வாருடைய மணப்பிள்ளேயாய் வந்த அழகனுன **அழகியமணவாளன்** என்ற அரங்கனுடைய பெயரையே அண்ணர் தம்மகனுக்குச் சூட்டினுர். அடைவே சௌளம், உபநயனம் முதலிய நற்சடங்குகளேச் செய்வித்து, ஸம்ஸ்க்ருதம், தமிழ் என்னும் இரு மொழிகளிலும் நல்ல அறிவு ஏற்படும்படி கல்வி கற்பித்து, வேதங்கள், திவ்யப்ரபந்தங்கள் இதர சாஸ்த்ரங்கள் இவைகளேத் தாமே கற்பித்தார் அண்ணர். அழகியமணவாளப் பெருமாள் தம் பிள்ளேப்பிராயத்தைக் கழித்தது தம் தாய்மாமன் ஊரான சிக்கில்கிடாரத்திலே. காலத்தில் இருவருக்குத் திருமணமும் செய்வித்தார் அண்ணர்.

அக்காலத்தில் ஆழ்வார் திருநகரியில் **ஸ்ரீசைலேசர்** என்ற பெரும்புகழ் பெற்ற ஆசிரியர் ஒருவர் வாழ்ந்திருந்தார். இவரைத் **திருமலேயாழ்வார்** என்றும், **திருவாய் மொழிப்பிள்ளே** என்றும் அழைப்பதுண்டு. நம்மாழ்வாரருளிச் செய்த திருவாய்மொழியில் ஆழ்ந்த அறிவு இவருக்கு உண்டு. தம்முடைய சிறு பிராயத்தில் பிள்ளேலோகாசார்யரிடம் அடிபணிந்து உபதேசம் பெற்றுப் பின்பு அவருடைய முக்யசிஷ்யர்கள் மூலமாக வைஷ்ணவ

---

1. வேதபாஹ்யர்—வேதங்களே ப்ரமாணங்களாக ஒப்புக்கொள்ளாமல் அவைகளுக்குப் புறம்பானவர்; குத்ருஷ்டி-அவைகளேப்ரமாணங்களாக ஒப்புக்கொண்டு தவறுன பொருள்களேச் சொல்பவர், 2. எதிராஜர், எம்பெருமானுர், உடையவர் என்ற பெயர்கள் எல்லாம் ராமாநுஜரைக் குறிப்பன 3. குலபதியான சடகோப முனிவரும் (நம்மாழ்வாரும்) மற்ற ஆழ்வார்களும் அருளியுள்ள திவ்யப்ரபந்தங்கள் முதலியன.

ஸித்தாந்தப் பேருண்மைகளை நன்ருக அறிந்து ஒப்புயர்வற்ற ஆசார்யராய் விளங்கினுர். அழகியமணவாளப் பெருமாளுக்கும் இந்த ஆசார்யருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. சிஷ்யனுடைய நிரம்பிய அறிவாலும் நற்குணங்களாலும் மகிழ்வுற்ற ஆசார்யர் தாம் அறிந்தவற்றையெல்லாம் இவருக்கு உணர்த்தி, அவரிடம், "வாரீர் அழகியமணவாளப் பெருமாளே! நீர் எல்லா சாஸ்திரங்களிலும் மிகவல்லவராக இருக்கிறீர். எம்பெருமானுரைப் போல் ஸ்ரீரங்கத்தில் நெடுநாள் வாழ்ந்திருந்து இந்த வைஷ்ணவ தர்சனத்தைத் தழைக்கச் செய்யவேண்டும். குறிப்பாக, நம் பூர்வாசார்யர்கள் போல் திருவாய்மொழியையும் இதற்கு நம் ஆசரார்யசிகாமணிகள் காட்டிக்கொடுத்துள்ள அர்த்தங்களையும், மற்றைய திவ்யப்ரந்தங் களையும் அவைகளில் உறைந்துள்ள பொருள்களையும் உலகில் நன்ருகப் பரவச்செய்தல் வேண்டும். உமக்கு ஸ்மஸ்க்ருத சாஸ்த்ரங்களில் சிறந்த ஆற்றல் இருப்பினும் அவைகளில் அதிகமாகக் கை வையாமல் நம்முடைய ஆழ்வார்கள் பக்திவெள்ளத்தில் தோய்ந்து அதன்மூலமாக வந்துள்ள ஈரச்சொற்களான திவ்யப்ரபந்தங்களையே அதிகமாகக் கையாண்டு உலகத்தை வாழ்விப்பீராக" என்று ஆஜ்ஞை விடுவித்துத் தம் திருவடிகள் மீது ஆணையாக சிஷ்யருடைய ஒப்புதலையும் வாங்கிக்கொண்டார்.

ஆழ்வார் திருநகரியில் மாறனடி பணிந்துய்ந்தவரான ராமாநுஜருக்குத் தனிக் கோயில் அமைத்து, அதைச் சுற்றி "ராமாநுஜ சதுர்வேதி மங்கலம்" என்ற அகரஹாரத் தில் ராமாநுசனைத்தொழும் பெரியோரையும் குடிபுகுத்தி எல்லாவற்றையும் அழகிய மணவாளப்பெருமாள் நாயனுருடைய அதீனமாக்கி வைத்தார், திருவாய்மொழிப்பிள்ளை. இப்படித் தமக்குப் புகலாகக் காட்டித்தரப்பட்ட எதிராசர் திருவடிகளில் பேரன்பு பூண்ட நாயனுர், அவர்க்கே எல்லா அடிமைகளையும் செய்துகொண்டு, அவர் திறத்து 'எதிராஜ விசம்தி' எனற ஸம்ஸ்க்ருத துதி நூலை விண்ணப்பம் செய்து தம் ஆசார்யர் தம்மை [1] "**யதீந்த்ரப்ரவணர்**" என்று கொண்டாடும்படி இனிது வாழ்ந்திருந்தார்.

பின்னர், தம் ஆசார்யனுடைய ஆணைப்படியே நாயனுரும் திருவரங்கம் சேர்ந்தார். திருவாய்மொழிப்பிள்ளை காலத்தில் ஸ்ரீரங்கம் துலுக்கர்களால் தாக்கப்பட்டு அடியார்களும் பல இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டு, நம்பெருமாளும் வேற்றிடதத்துக்கு எழுந்தருளும்படியாக இருந்தது. அழகியமணவாளர் திருவரங்கம் எழுந்தருளினபோது இன்னல்கள் தீர்ந்து நம்பெருமாளும் பழையபடி கோயிலில் குடிபுகுந்திருந்தனன். ஆனுல் நெடுகிய காலம் பெருமாளும் முக்கியமான ஆசார்யர்களும் இல்லாததால் விளைந்த குழப்பங்களை நீக்கித் தென்னரங்கர் செல்வத்தைத் திருத்தி வழிபாடுகளையும் சீர்திருத்தி ஸ்ரீரங்கைச்வர்யத்தைப் பழையபடி சீருறச் செய்வாரார் என்று அடியார்கள் ஏங்கிக் கொண்டிருந்த காலத்தில் இவர் சென்று சேர்ந்து "ராமாநுஜார்ய திவ்யாஞ்ஞா வர்த்த தாம்—அபிவர்த்ததாம்" என்ற மஹாமந்திரத்தை முழக்கி அரங்கனுக்கு முன்போல அனைத்தழகும் கண்டருளப்பண்ணினுர். இப்படி ஸ்ரீரங்கநாதனுக்கு நித்யகைங்கர்யங்களைக் குறைவறச் செய்து கொண்டு, தர்சனத்தை நல்ல முறையில் பரப்புவதிலும் ஈடுபட்டிருந்தார். நம்பிள்ளை என்னும் மஹாசார்யர் அருளிச்செய்த திருவாய்மொழிப் பொருள்களைக் கொண்டு வடக்குத்திருவிதிப்பிள்ளை தொகுத்த ஈடுமுப்பத்தாருயிரப்படி என்னும் வியாக்யானத்தை ஆழ்ந்து ஆராய்ந்து அறிந்து கொண்டு அவற்றை எடுத்துரைப்பதிலும் மிகவும் தேர்ந்த

---

1. *யதீந்தரர் என்பது எதிராசரை, உடையவரிடம் மட்டற்ற அன்பு பூண்டவர் என்றவாறு.*

வராய் "முப்பத்தாராயிரப்பெருக்கர்" என்று பெருமாளாலாயே கொண்டாடப் படுவாராயினர்.

இப்படி இருக்கையில் தமிழ்நாட்டில் வடபாகங்களிலுள்ள திவ்வியதேசத் தெம் பெருமான்களையும் பெரும்பூதூரில் வந்துதித்த புண்ணியனான எதிராசனையும் திருவடிதொழ விரும்பி, அரங்கனது அனுமதிகொண்டு, ஸ்ரீபெரும்பூதூர், காஞ்சிபுரம், திருவேங்கடம், சோழ சிம்மபுரம் முதலான தலங்களுக்குச் சென்று தொழுதுப் பிறகு கச்சிப் பதியிலே ஓராண்டு காலம் நித்யவாஸமாய் எழுந்தருளியிருந்தார். இங்கு தேவப் பெருமாள் விஷயமாக "**தேவராஜமங்களம்**" என்னும் ஸம்ஸ்க்ருத ஸ்தோத்ரத்தை அருளிச்செய்தார். எம்பெரு மானுடைய ப்ரியசிஷ்யரான கிடாம்பி ஆச்சான் என்பவரின் வழித்தோன்றலான கிடாம்பி நாயனார் என்பவர்பாடே ராமாநுஜர் அருளிச்செய்த வேதாந்தக்ரந்தமான ஸ்ரீபாஷ்யம் கற்று, தாம் கற்றதை யதோக்தகாரி (சொன்னவண்ணம் செய்த பெருமாள்) ஸன்னதியில் ப்ரவசனமும் செய்தார். இந்த ஓராண்டு கழிந்ததும் மீண்டும் திருவரங்கமே சென்று சேரலாயிற்று.

இந்த நாளிலே ஸ்வாமிக்கு ஸம்ஸாரத்தில் விரக்தி பிறந்து ஸந்யாஸாச்ரமம் கைக்கொள்ள விருப்பமுண்டாகி சடகோபஜீயர் என்பவரிடம் உத்தமாச்ரமம் பெற்று, ஸ்ரீரங்கநாதனால் **அழகிய மணவாள மாமுனிகள்** என்ற சிறப்புப் பெயர் சூட்டப்பெற்று, பல்லவராயன் மடத்தையும் பரிசாகப் பெற்றார். இந்த மடத்தில்தான் மணவாளமாமுனிகள் அர்ச்சாரூபியாய் இன்றைக்கும் அடியார்களுக்கு ஸேவை ஸாதிக்கிறார். இந்த மடத்தின் பின்புறத்தில் ஒரு காலக்ஷேபகூடம் அமைத்து அதற்கு "**ஸ்ரீசைலேச மஹாமண்டபம்**" என்று தம்மாசார்யரான திருமலையாழ்வார் பெயரைச் சூட்டி, அதில் [1] பிள்ளைலோகாசார்யர் திருமாளிகையிலிருந்து மண்ணைக் கொணர்ந்து, அந்த "ரஹஸ்யம் விளைந்த மண்"ணினால் தமக்கு ஆஸனம் அமைத்துக்கொண்டு, அதிகமாகப்பெருகிவரும் தம் சிஷ்யர் குழாங்களுக்கு ஆழ்வார்களுடைய அருளிச்செயல் மூலம் ஆத்மஜ்ஞானத்தைப் புகட்டிக்கொண்டிருந்தார்.

அக்காலத்தில் ஸ்ரீரங்கத்திலும் மற்றைய இடங்களிலும் எம்பெருமானார் ஏற்படுத்திய 74 ஸிம்மாஸனாதிபதிகளுடைய ஸந்ததியார்கள் ஆசார்யர்களாக விளங்கிவந்தனர். இவர் களுள் பெரும்பாலர்களையும் ஒன்றுகூட்டி மாமுனிகளிடம் சிஷ்யர்களாய்ச் சேர்க்க விரும்பிய அரங்கன் ஸ்வப்னம் மூலமாகவும் இன்னும் பலபடிகளாலும், "எம்பெருமானாரே மணவாள மாமுனிகளாக வந்து தோன்றியுள்ளவர்" என்ற உண்மையை உணர்த்தி அவர்களுக்கு ஸ்வாமியிடம் பெருமதிப்பும் பேரன்பும் உண்டாகும்படி செய்து இவருக்கு சிஷ்யர்களாக் கினன். ராமாநுஜருடைய மருமகனான கந்தாடை முதலியாண்டான் வழித்தோன்றல்களான பல பெரியோர்கள் மாமுனிகளது திருவடியிற்பணிந்தனர். பிள்ளைலோகாசார்யருடைய குலமான முடும்பைக் குலத்திலுதித்து ப்ரதிவாதிபயங்கரர் என்ற பெருமையும் பெற்ற ஹஸ்திகிரிநாதரண்ணா என்பவரும், எறும்பி அப்பா என்ற மஹாவித்வானும் மாமுனிகளின் சிஷ்யர்களாயினர். இவர்களுள் மிக முன்னே ஸ்வாமியிடம் அடிபணிந்தவர் வானமாமலை ராமநுஜ ஜீயர். இவர் ஸ்வாமியுடைய நிழலும் அடிதாறுமாக இருந்து குற்றேவல் புரிந்தவர். இவரையே "பொன்னடிக்கால் ஜீயர்" என்பது. தம்முடைய சிஷ்யர்களில் மிகப்பெருமை படைத்த எண்மரைத் தேர்ந்து, "**அஷ்டதிக்கஜங்கள்**" என்று வைஷ்ணவ ஸித்தாந் தத்தைப் போற்றிக் காக்கக்கூடிய ஆசார்யஸிம்மாஸனாதிபதிகளாக நியமித்தார். இவர்கள்

---

1. *அஷ்டாதச ரஹஸ்யம் என்னப்படும் 18 ரஹஸ்ய நூல்களையருளிச்செய்த மஹாசார்யர்.*

முறையே-வானமாமலை ராமாநுஜஜீயர், பரவஸ்து பட்டர் பிரான்ஜீயர், திருவேங்கடராமாநுஜ ஜீயர், கோயில் கந்தாடை அண்ணன், எறும்பி அப்பா, ப்ரதிவாதிபயங்கரம் அண்ணு, அப்பிள்ளை, அப்புபிள்ளார் என்பவர்களாம்.

ஈடுமுப்பத்தாருயிரப்படியைக் கொண்டு மாமுனிகள் பகவத் விஷயகாலக்ஷேபத்தைப் பல பல முறைகள் நடத்தினர். இவருடைய மதுரமான வாக்கைக் கேட்க விரும்பிய திருவரங்கச்செல்வன், ஓராண்டு காலம் இவரைத் தன் திருமுன்பே உபன்யாசம் பண்ணும்படி நியமித்துத் தான் கண்டருளும் திருவிழாக்களை யெல்லாம் அப்போது நிறுத்திவைத்து, ஆர்வத்துடன், முன்பு சக்ரவர்த்தித் திருமகனுகத் தன்சரிதையை குசலவர்கள் பாடத் தானும் ஓலக்கத்தில் கலந்திருந்து கேட்டதுபோல், நாச்சிமார்களுடன் திவ்விய ஸிம்மாஸனத்தில் வீற்றிருந்து, "வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும்" தேனும் பாலும் கன்னலும் அமுதுமான வ்யாக்யானங்களுடன் மாமுனிகள் விளக்கக் கேட்டு மகிழ்ந்தனன். திருவாய்மொழி விளக்கம் முடிந்து சாற்றுமுறை கொண்டாடுமன்று அங்கு ஒரு அதிசயம் விளைந்தது. அடியார் குழாங்கள் கூடிய அப்பேரவையில் ஐந்து வயதுள்ள ஒரு சிறுவன் தோன்றி, கணீரென்ற குறலுடன்

*ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதி குணர்ணவம்।*
*யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்॥*

என்ற ச்லோகத்தைச் சொல்லி மறைந்தனன். இந்த ச்லோகம் திருவரங்கனே தான் மாமுனிகளுக்குச் சிஷ்யனுயிருந்தமையை நாட்டார் அறிக்கைக்காகவும் சிஷ்யனுன தன் நன்றிப் பெருக்கைக் காட்டுவதற்காகவும், மாமுனிகள் விஷயமாக அருளிச் செய்தனன் என்பது பெரியோர்கள் துணிபு. அங்கிருந்தோர் அனைவரும் இந்த ச்லோகத்தைத் தங்களை வாழ வைக்க வந்த மஹாமந்த்ரமாக மதித்துப் பட்டோலை கொண்டு திருவிழா நடத்தி மகிழ்ந்தனர். வேதத்துக்கு 'ஓம்' என்பது போல தமிழ்வேதத்துக்கு இது மந்த்ரமாகும். இத்தனியன் பகவாராதன காலங்களிலும் காலக்ஷேபகாலங்களிலும் கோவில்களிலும் அடியார்களுடைய இல்லங்களிலும் அடிக்கடி ஓதப்படுகிறது. இப்படி ஓதவேண்டு மென்பது ரங்கநாதனுடையதும், திருவேங்கட முடையானதும், திருமாலிருஞ்சோலை யழகருடையதுமான திவ்வியாஜ்ஞை.

மாமுனிகள் பலமுறை எம்பெருமான் கோயில்கொண்டுள்ள பல திவ்ய தேசங்களையும் சென்று தொழுது, ஆங்காங்கு நடைபெறும் வழிபாடுகளையும் ஒழுங்குபடுத்தினர். "ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம்" என்கிறபடி ராமாநுஜருடைய திவ்ய ஆஜ்ஞையாக அவரால் ஒருங்குபடுத்தப்பட்ட வழிபாட்டு முறைகளையும் திருவிழாக்களையும் செவ்வனே நடக்கும்படி திட்டமிட்டு நடத்தி வைத்தார். இதனுலேயே எல்லாக் கோயில்களிலும் அடியா ரில்லங்களிலும்

*பொய்யிலாத மணவாளமாமுநி புந்திவாழி புகழ்வாழி வாழியே!*

*அடியார்கள்வாழ அரங்கநகர் வாழ*
*சடகோபன் தண்டமிழ்நூல் வாழ—கடல்சூழ்ந்த*
*மன்னுலகம் வாழ மணவாள மாமுனியே!*
*இன்னமொரு நூற்ருண் டிரும்.*

என்று வேண்டுவது. இக்கடல் சூழ்ந்த மண்ணுலகம் உள்ளவளவும் மாமுனிகள் பெருமையும், அருளும், ஸேவையும் இந்நிலவுலகில் விளங்கும் என்பது திண்ணம்.

மணவாளமாமுனிகள் நமக்குச் சேமவைப்பாகப் பலநூல்களை அருளிச்செய்துள்ளார். பெரியாழ்வார் திருமொழிக்குப் பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செசய்த வியாக்யானத்தில் முதல் 40 பதிகங்களுக்கானது கிடைக்காமல் போய்விட்ட படியால் அவைகளுக்கு மட்டும் வியாக்யானமிட்டருளினர். திருவரங்கத்தமுதனார் அருளிய ராமாநுஜ நூற்றந்தாதிக்கு பூருவர்கள் உரையிடாதபடியால் அதற்கு உரையருளிச்செய்துள்ளார். பிள்ளை லோகாசாரியர் அருளிச்யெய்த "அஷ்டாதசரஹஸ்யம்" என்னும் 18 ரஹஸ்ய நூல்களில் முக்கிய மானவைகளாகிய முமுக்ஷுப்படி (திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம் இவற்றை விளக்குவது), தத்வத்ரயம் (ஜீவாத்மா, அசித்தான ப்ரக்ருதி, இவைகளை யாளும் ஈச்வரன் இப்படியான தத்வங்களை விளக்குவது), ஸ்ரீவசன்பூஷணம் (ஸ்ரீவைஷ்ணவர்கள் அவச்யம் அறியவேண்டிய பலவுண்மைகள்) இவைகளுக்கு வ்யாக்யானம் அருளிச்செய்தார். தமது கடைசி காலத்தில், உடல் மிகவும் தளர்ந்து நோய்வாய்ப்பட்டிருந்த நிலையிலும், படுக்கையி லிருந்துகொண்டே கழுத்தும் கையும் நோவ ஏடும் ஆணியும் பிடித்துத் தாமே அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் பணித்த ஆசார்யஹ்ருதயம் என்ற ரஹஸ்ய நூலுக்கு, பின்பு வருபவரெல்லாம் வாழுகைக்காக பரம கருணையுடன் வ்யாக்யானமிட்டருளினர். இந்த வ்யாக்யானங்கள் மதுரமாகவும், கம்பீரமாகவும், மிகவிரிவில்லாமலும், மிகச் சுருங்கிய தாயில்லாமலும், ஐயந்திரிபில்லாமலும், எளிய தெள்ளிய நடையில் அமைந்துள்ளன. இவற்றுள் பல்வாயிரக்கணக்கான மேற்கோள்களை வடமொழியிலும் தமிழிலுமுள்ள அனேக நூல்களிலிருந்து எடுத்து, ஒவ்வொன்றுக்கும் ஆகரம் காட்டிச் சிறுவிளக்கமும் தந்துள்ளார் மாமுனிகள். இம்மாதிரி வேறு எந்த ஆசாரியருடைய நூல்களிலும் காணக் கிடைக்காது. இதுபற்றியே "பொய்யிலாத மணவாளமாமுனி" என்று ஸ்வாமியைக் கொண்டாடுவது. ஸகல சாஸ்த்ரமு மறிந்தவர் என்ற பெருமை இந்த ஆசார்யர் ஒருவருக்கே தகும் என்னும்படி அமைந்துள்ளன இந்த வ்யாக்யானங்கள். மணவாள மாமுனிகளுக்கு ஏற்பட்டுள்ள "**விசதவாக் சிகாமணி**" என்ற சிறப்பு சாலப் பொருந்தியதே. தமது வ்யாக்யானங்கள் மூலமாகவும் மற்றபடியாலும் ஸ்ரீவைஷ்ணவத்துக்கு பெருமதிளா யிருந்துள்ள திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்கட்கு இவருடைய மஹத்தான ஸேவையை முன்னோர் பாராட்டி அருளியுள்ள பாசுரம்:

*சேற்றுக் கமல வயல்சூ ழரங்கர்தம் சீர்தழைப்பப்*
*போற்றித் தொழுநல் லந்தணர் வாழவிப் பூதலத்தே*
*மாற்றற்ற செம்பொன் மணவாள மாமுனி வந்திலனேல்*
*ஆற்றில் கரைத்த புளியல்ல வோதமி ழாரணமே?*

வியாக்யான நூல்கள் தவிர தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் தாமாக அருளிச்செய்த நூல்களும் பல வுள. இவற்றுள் முன்பே கூறப்பட்ட தேவராஜமங்களமும் எதிராஜவிம்சதியும் ஸம்ஸ்க்ருத ஸ்துதிகள். நமது ஆழ்வார்கள், ஆசார்யர்கள் விஷயமாக நாம் அறியவேண்ட பலவுண்மைகளை **உபதேசரத்தினமாலை** என்னும் திவ்வியப்ரபந்தததில் மாமுனிகள் அருளியுள்ளார். திருவாய்மொழியின் ஸாரமான அர்த்தங்களைப் பதிகத்துக்கு ஒரு பாசுரமாக அமைத்துத் **திருவாய்மொழி நூற்றந்தாதி** என்னுமொரு பாமாலையும், எதிராஜரின்னருளால் மோக்ஷஸாம்ராஜ்யத்தைப் பெறவேண்டும் என்ற தம் ஆர்த்தி யெல்லாம் ஒரு வடிவெடுத்ததென்னலாம்படியாக "ஆர்த்திப்ரபந்தம்" அருளிச் செய்துள்ளார். கல்நெஞ்சையும் நீர்ப்பண்டமா யுருக்கவல்லது ஆர்த்திப்ரபந்தம்.

அடியார்கள் எம்பெருமானைப் பூசனை செய்வதற்கான முறையை வகுக்கும் "நித்யக்ரந்தம்" ஒன்றும் அருளியுள்ளார் நமக்கு.

மணவாளமாமுனிகள் ஸத்வமே உருவெடுத்தவர். படாடோபம் முதலியவற்றை அற வெறுத்தவர். "பிறர் மினுக்கம் பொறாமையில்லாப் பெருமையும் பெற்றோம்" என்று தாமே பேசிக் கொண்டபடி யாரிடத்தும் பொறாமை அஸூயை இவை சிறிதுமில்லாதவர். எம்பெருமானிடத்தும், அதற்கும் மேலே எம்பெருமானாரிடத்தும் மட்டற்ற அன்பு பூண்டவர். அனைத்துலகும் வாழப் பிறந்த மணவாளமுனிவா! என்று நாம் நிச்சலும் கொண்டாட வேண்டும் இவரை. இப்படிப்பட்ட மஹாசார்யரிடமும் அஸூயை கொண்டு ஸ்வாமியின் மடத்தையே கொளுத்தி ஸ்வாமியையும் நெருப்புக்கிரையாகக முயன்ற மஹாபாபிகளு மிருந்தனர் அக்காலத்திலே. மேலும், ஸ்வாமியின் மட்டற்ற பெருமையை ஸஹிக்காமல் இகழ்ந்து பேசியவர்களும் இருந்தனராக வேண்டும். "கற்றோர்கள் தாமுகப்பர் மற்றோர்கள் மாச்சரியத்தால் இகழில் வந்தது என்? நெஞ்சே! இகழ்கை ஆச்சரியமோதான் அவர்க்கு?" என்று உபதேசரத்தின மாலையில் முதன்முன்னமே தம்நெஞ்சைக் குறித்து ஸ்வாமி அருளிச் செய்கிறார். பூர்வாசார்யர்கள் அருளிச்செய்துள்ள பொருள்களுக்கு முரணாகத் தான் தோன்றியாகப் பொருளுரைப்பதை இவர் அற வெறுத்தார். இப்படித் தான்தோன்றியாகப் பொருள்சொல்லி இதுபெரியோர் பணித்தது என்று வஞ்சிப்பவர் மூர்க்கர் என்று வெறுக்கிறார் மாமுனிகள்.

தம்மைப்போல் விக்ரஹம் ஏறியருளப்பண்ணிப் பெருமளவில் விழாக்கள் கொண்டாடு வதை இவர் விரும்பாதவராயினும் சிஷ்யர்கள் மிக அன்புடன் வேண்டிக்கொண்டதால் தாம் ஆண்டு வந்ததான செப்புச் செம்பைக் கொண்டு சிறிய அளவில் விக்ரஹங்கள் வார்த்து வழிபட அநுமதிதந்தார். இவர் பிறந்தகமான ஆழ்வார் திருநகரியிலும் புக்ககமான ஸ்ரீரங்கத்திலும் மிகச் சிறிய அளவிலுள்ள அர்ச்சா ரூபங்களே போற்றப்பட்டு வருகின்றன.

எம்பெருமானாருடைய மறு அவதாரமான இவ்வாசிரியர் அவரைவிட மேம்பட்ட பெருமை வாய்ந்தவர் என்றால் மிகையாகாது. எதிராசரின்னருளால் தமக்கு ஏற்பட்டுள்ள பெருமைகளைத் தாமே பேசிக்கொண்டார் ஆர்த்திப்ரபந்தத்தில் ஒரு பாசுரத்தில். இதன் வாயிலாக ஸ்வாமியின் ஆத்மகுண பூர்த்தியை நன்றாக அறியலாகும். (பின்னால் அச்சிடப் பட்டிருக்கும் ஆர்த்திப்ரபந்தத்தில் 55வது பாசுரம் காண்க). "மதுரகவிசொற்படியே நிலையாகப் பெற்றோம்" என்பது இவருக்குத் தலையான பெருமை. "தேவுமற்றறியேன்" என்று நம்மாழ்வார் திருவடிகளில் மதுரகவி அன்பு பூண்டிருந்தது போல இவரும், "இந்த வுயிர்க்கெல்லாவுறவும் நீயென்றே எதிராசா! நில்லாததுண்டோ என்னெஞ்சு" (ஆர்த்தி-58) என்ற நிலையிலிருந்ததால் நம்பெருமாளும் தான் இவர் விஷயமாகப் பணித்த ச்லோகத்தில் "யதீந்த்ரப்ரவணம் வந்தே" என்று இவருடைய எதிராஜப்ரேமையையே இவருக்கு அடையாளமாக வைத்து அறியலாம்படி பேசினான். நம்மாழ்வாரை "ருஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ணத்ருஷ்ணாதத்வம்" என்று பட்டர் கொண்டாடியது போல் இவரை எதிராஜத்ருஷ்ணாதத்வமான முனிவர் என்று கொண்டாடவமையும்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

# மணவாளமாமுனிகளின் ஆசார்யபரம்பரை

## திருவாய்மொழி ஈட்டுத்தனியன்

மணவாளமாமுனிகள் அருளிச்செய்தது.

திருவருள்மால் சேனைமுதலி சடகோபன் நாதமுநி
சீருய்யக்கொண்டார் மணக்கால் நம்பி சென்றுமாளவந்தார்
குருமாலாதரர் குருகைப்பிரார்க்கன்பரா மெதிராசர்
கோவிந்தர் கூரேசர் பட்டர் வேதாந்திமுநி
இருகண்ணர்க்கன்புடையநம்பிள்ளை இவரீடளித்தற்
கேய்ந்தமாதவர் பற்பநாப ரிவரருளாளர்
திருவடியூன்றியதேவப்பெருமாள் கைக்கொண்டருளும்
திருமலையாழ்வார் பதங்கள் முன்பென்னுட்சோந்தனவே.

மணவாளமாமுனிகள் அநுஸந்தித்த திருமுடியடைவை இந்தப் பாசுரத்தின் வாயிலாக அறியலாம். இது திருவாய்மொழியுபதேச பரம்பரை ஆசார்யர்களை வணங்குவதாக அமைந்துள்ளது. முன்னம் பொதுத்தனியன்களுடன் அநுஸந்திக்கப்பட்டவை பொதுவான உபதேசபரம்பரை. நம்தர்சனத்துக்கு ப்ரதமாசார்யனுன பெரியபெருமாளிலிருந்து மாமுனிகளின் நிஜகுருவான திருமலையாழ்வார் (திருவாய்மொழிப்பிள்ளை) வரை அடைவை இந்தப்பாசுரத்தில் காணலாம்.

"லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்'' என்கிறபடியே ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் ஸ்ரீரங்கநாதனுன நிலையில் இந்தத் தரிசனத்துக்கு ப்ரவர்த்தகன். பெரியபெருமாள், பெரியபிராட்டியார், சேனைமுதலியார், நம்மாழ்வார் (சடகோபன்) என்றுள்ளது நம் குருபரம்பரை. ஆழ்வாரை யோகத்தால் ஸாக்ஷாத்கரித்து நாதமுனிகள் அவரிடமிருந்து திருவாய்மொழியையும் இதரப்ரபந்தங்களையும் உபதேசமாகப் பெற்றுர். ஸாக்ஷாத் ஒராண்வழி உபதேச பரம்பரையில் முதல் பூர்வாசார்யர் நாதமுனிகள். இவரது திருப்பேரனுரே ஆளவந்தார் என்று ப்ரஸித்தரான யாமுனுசார்யர். நாதமுனிகளுடைய திருவடிஸம்பந்தம் உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி இவர்கள்மூலம் ஆளவந்தாருக்குக் கிடைத்தது. ஆளவந்தாருக்கு ப்ரதான சிஷ்யர்கள் ஐவர். இவர்கள்மூலமாகவே எம்பெருமானுருக்கு ஆளவந்தார் அவருக்கென்று வைத்துப்போன ஞானச்செல்வம் கிடைத்தது. இவர்களில் குருமாலாதரர் என்னப்படும் திருமாலையாண்டான் உடையவருக்குத் திருவாய்மொழியின் அர்த்தங்களை உபதேசித்தவர். குருகூர்ச்சடகோபனுனமாற னடிபணிந்துய்ந்த இராமாநுசனை குருகைப்பிரார்க்கன் பராமெதிராசர்என்றருளிச்செய்கிருர். எதிராசர் திவ்யஜ்ஞையினுல் ஆருயிரப்படி வியாக்யானமருளிச் செய்தவரும் எதிராசர் புத்ராபிமானம் பண்ணினவருமான திருக்குருகைப்பிரான் பிள்ளானையிட்டு குருகைப்பிரார்க்கன்பர் என்றருளிச்செய்ததாகவும் ஆகும். எதிராசரிட்டவழக்காய் இருக்கும் திருவாய்மொழியின் அர்த்த விசேஷங்கள். தமிழ்மஃறகளாயிரமும் ஈன்றமுதல்தாய் சடகோபன்—மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன் என்றருளிச் செய்தார் ஸ்ரீபராசரபட்டரும். எம்பெருமானுருக்கு அடுத்த தர்சனப்ரவர்த்தகாசார்யர்

பட்டர். பட்டருக்கும் எதிராசருக்குமிடையே கோவிந்தர் என்று வ்யவஹரிக்கப்டும் எம்பாரும், கூரேசர் என்றழைக்கப்படும் கூரத்தாழ்வானும் ஆசார்யபரம்பரையில் இடம் பெறுவார்கள். பட்டருடைய ப்ரியசிஷ்யர் வேதாந்திமுநி என்னும் நஞ்சீயர். இவர் ஒன்பதிநாயிரப்படி வ்யாக்யானமருளியவர். நஞ்சீயருக்கடுத்த ஆசார்யர் நம்பிள்ளை. இவர்தான் ஈடு முப்பத்தாறாயிரப்படியின் ப்ரவக்தா. இந்தவ்யாக்யானத்தைத் தொகுத்தெழுதியருளினது வடக்குத்திருவீதிப்பிள்ளை. நம்பிள்ளையின் அந்தரங்கசிஷ்யர்கள் இரண்டு க்ருஷ்ணர்கள்—முறையே பெரிய வாச்சான்பிள்ளையும் (இருபத்திநாலாயிரப்ப்டி வியாக்யான மருளியவர்) வடக்குத்திருவீதிப்பிள்ளையும். இதனுல் இருகண்ணர்க்கன்புடைய நம்பிள்ளையாகிறுர். தெள்ளியதா நம்பிள்ளை செப்பு நெறிதன்னை வள்ளல் வடக்குத்திருவீதிப்பிள்ளை இந்த நாடறிந்து வாழுகைக்காக எழுதேரார் தமிழ்வேதத்து ஈடுதன்னை நம்பிள்ளை சிறியாழ்வான் அப்பிள்ளை என்ற ஈயுண்ணி மாதவப்பெருமாளுக்குச் சிறப்பாகக்கொடுத்தார். இந்த வியாக்யானத்துக்கு மாதவரே ஒராண்வழி ப்ரவர்த்தகர். மாதவரிடமிருந்து அவர் குமாரர் பத்மநாபருக்கும், அவரிடமிருந்து அவருக்கு ப்ரியசிஷ்யரான கோலவராஹப்பெருமாள் என்னும் நாலூர்ப் பிள்ளைக்கும், அவரிடமிருந்து அவர் குமாரர் நாலூராச்சான் பிள்ளைக்கும் இந்தஈடு ஒராண் வழியாகக் கிடைத்தது. அருளாளார்திருவடி யூன்றிய தேவபபெருமாள் என்பது நாலூராச் சான்பிள்ளையையே. இவரே மணவாளமாமுனிகளின் ஆசார்யரான திருவாய்மொழிப்பிள்ளை (திருமலையாழ்வார்) யைக் கைக்கொண்டருளி அவருடன் திருநாராயணபுரத்தாய் என்னும் ஜநங்யாசார்யருக்கும் ஈடுமுப்பத்தாறுயிரப்படியை ஸாதித்தவர். ஆய் மணவாளமாமுனி களுக்கு ஆசார்யஹ்ருதயத்தின் விசேஷார்த்தங்களை ஸாதித்தவர். மாமுனிகளுக்கு ஸ்ரீபாஷ்யம் ஸாதித்தது உடையவருடைய ப்ரியசிஷ்யரான கிடாம்பி ஆச்சான் வம்சத்தவரான கிடாம்பி நாயனுர். திருவருள்மால் — சேனைமுதலியார் — சடகோபன் — நாதமுனிகள் — உய்யக் கொண்டார் — மணக்கால்நம்பி— ஆளவந்தார்— திருமாலையாண்டான்— எம்பெருமானுர்— ஆழ்வான், எம்பார்—பட்டர் — நஞ்சீயர்—நம்பிள்ளை — பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, சிறியாழ்வான் அப்பிள்ளை — திருமலையாழ்வார் — மணவாளமாமுனிகள் என்று அடைவாக அமைந்துள்ளது திருவாய்மொழியைக் காத்த குணவாளர் பரம்பரை. ஒராண்வழி உபதேசத்தை எதிராசர்தம் இன்னருளால் அபிநிவேசமுடையார் எல்லோருக்கு மாக்கியதுபோல், பரமகாருணிகரும் முப்பத்தாருயிரப்பெருக்கருமான மணவாளமாமுனிகள் அருளால் பல சிஷ்யர்களுக்கும் கிடைத்தன ஈட்டின் விசேஷார்த்தங்கள்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:

# ஸ்ரீசைலேசமந்த்ர ப்ரபாவம்

நம்பெருமாள் அருளிச்செய்தது.

श्रीशैलेशदयापात्रं धीभक्त्यादि गुणार्णवम् ।
यतीन्द्रप्रवणं वन्दे रम्यजामातरंमुनिम् ॥

*ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்।*
*யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம்முநிம்॥*

மணவாளமாமுனிகள் விஷயமாக இந்தத் தனியனை ஸ்ரீரங்கநாதன் தான் மாமுனிகளுக்குச் சிஷ்யனாயிருந்து அருளிச்செய்தது ப்ரஸித்தம். இது நமக்கு மந்த்ரரத்னத்துக்கொப்பான மஹாமந்த்ரம். இந்த மந்த்ரத்தின் பெருமைகளைப் பலவிதமாகக் கீழ்க்காணும் பக்கங்களில் அநுபவிக்கலாம். முதலில் பிள்ளைலோகம் ஜீயர் இந்த மந்த்ரம்பற்றி அருளிச்செய்துள்ளவைகளைத் தழுவியுள்ள உரையும், அடுத்து எறும்பி அப்பா இந்த மந்த்ர விஷயமாக அருளிச்செய்துள்ள ஸம்ஸ்க்ருத அஷ்டகமும், அதையடுத்து பரவாதிகேசரியார் அருளிய ஸ்ரீசைலவைபவம் என்னும் தமிழ்ப் பாமாலையும், கடைசியில் ஸ்ரீமதுபயவே. காஞ்சீ, பரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அளிக்கும் ரஸமான விளக்கமும் இங்கு இடம் பெருகின்றன. பின்னர் வரும் ஸ்ரீமதுபயவே. காரப்பககாடு. வெங்கடாசார்யஸ்வாமி அளிக்கும் வ்யாஸத்திலும் காண்க.

## *1. பிள்ளைலோகம் ஜீயரருளிச் செய்துள்ள வியாக்யானத்தைத் தழுவிய உரை*

"வாழி திருவாய்மொழிப்பிள்ளை மாதகவால் வாழும் மணவாள மாமுனிவன்" என்று பேசும்படி பெரிய ஜீயர், திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளை ஆச்ரயித்துத் திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்த தாத்பர்யங்களையும் அவரடிபணிந்து பெற்று, தாம்பெற்ற அர்த்தங்களை எல்லாரும் கேட்டு உஜ்ஜீவிக்கும்படியாக நடத்தவேணும் என்று அதற்கநுகுணமாக ஈடுபட்டிருக்க, இவரை நம்பெருமாள் அர்ச்சகர் மூலமாய் அழைத்தருளி, "திருவாய்மொழியின் அர்த்தத்தை நாமும் நம்மடியார்களும் கேட்டு வாழும்படி பெரிய திருமண்டபத்திலே நடத்தும்" என்று தம் திருவடிகளை ஊன்றுவித்து அருள்பாடிட்டு நியமித்தருள, இவரும் அப்படியே நடத்த, "உயர்வறவுயர்நலம்" தொடங்கி "அவாவறச்சூழ்" என்கிற சாற்றுப்பாட்டளவாக இவர் உபன்யாஸம் நடத்துவதைக்கேட்டருளி, மிகவும் உகந்து, முப்பத்தாறாயிரப் பெருக்கர் என்று இவருக்குத் திருநாமம் சாத்தியருளி "ஸ்ரீசைலேசதயாபாத்ரம்" என்ற தனியனும் அநுஸந்தித்தருளினர். இப்படிப் பெரிய பெருமாள் நிர்ஹேதுகமாகத் தம்மை விஷயீகரித்து நியமித்தருளியதற்கு ஜீயர் அருளிச்செய்த திருநாமம் (பாசுரம்):

*நாமார்? பெரியதிருமண்டபமார்? நம்பெருமாள்*
*தாமாக நம்மைத்தனித்தழைத்து—நீ மாறன்*
*செந்தமிழ் வேதத்தின் செழும்பொருளை நாளுமிங்கே*
*வந்துரையென்றேவுவதே வாய்ந்து.*

இப்படி நம்பெருமாள் அருளிச்செய்த பெரிஜீயரது தனியனுக்கு அர்த்தம்—"திருவாய்மொழிப்பிள்ளையனுடைய க்ருபைக்கு விஷயபூதராய், ஞானபக்தி வைராக்ய மஹோததியாய் ஸ்ரீபாஷ்யகாரர் விஷயத்திலே ப்ராவண்யத்தையுடையராய்க் கொண்டிருக்கிற கோயில் அழகிய மணவாளச் சீயரை ஸேவிக்கிறேன் என்றபடி.

**ஸ்ரீசைலேசதயாபாத்ரம் :** நம்மாழ்வாருளாலே அவர் திருவடிகளில் கைங்கர்யத்தைப் பெற்று வாழுபவராய், ஆழ்வார் திருவடிகளான எதிராசர் திருவடிகளை எப்போதும் மறவாமல் இறைஞ்சி ஏத்தும் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளுக்கு ஏற்றகலமாயிருப்பவர் மணவாளமாமுனிகள். [1] ஸ்ரீசைலபூர்ணர் (பெரிய திருமலைநம்பி) க்ருபையாலும் ஸ்ரீசைல தேசிகர் (திருவாய்மொழிப்பிள்ளை) தயையாலும் இராமாயணமென்னும் பக்தி வெள்ளமும் தீர்த்தங்களாயிரமான திருவாய்மொழியும் யதீந்த்ரப்ரவணரான இவரிடம் குடிகொண்டுள்ளன.

**தீபக்த்யாதி குணார்ணவம் :** ஞானம், பக்தி, வைரக்யம் முதலான குணங்களுக்குக் கடலாயிருப்பவர் மணவாள முனிகள். முன் நிலைகளான இளையபெருமாள் (லக்ஷ்மணர்) இளையாழ்வார் (உடையவர்) இரண்டிலும் ஞானபக்த்யாதிகள் பூர்ணமாய் உண்டு. பெரிய ஜீயருடைய அந்தப்ரேமாதிகள் பெரிய பெருமாள் விஷயத்துக்குச்சேர இரட்டித்திருக்கும்.

**யதீந்த்ரப்ரவணம் :** இனி நம்பெருமாளிடத்தில் ப்ராவண்யம் அதன் எல்லை நிலமான எம்பெருமானாரளவும் செல்வதைச் சொல்வது "யதீந்த்ரப்ரவணம்". அவர் (எம்பெருமானார்) பராங்குச பக்தர். இவர் (மாமுனிகள்) யதீந்த்ரப்ரவணர். இவரை அனைவரும் கால் கட்டுகிறது இவர் யதீந்த்ரப்ரவண ராகையாலேயே.

**வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ;** அழகிய மணவாளமாமுநி என்று திருநாமத்தை யநுஸந்தித்து அவர் கால்களில் விழுகிறார்.

இப்படிகளால் ஏற்றங்களையுடைய இவர் ஸ்துதி ரூபமான இவர் தனியன், "யத்வேதா தௌஸ்வர: ப்ரோக்தா வேதாந்தேச ப்ரதிஷ்டித:" என்று வேதத்துக்கு ஓம் என்னுமா போலே, ஸகலதிவ்யப்ரபந்தங்கள், அவைகளின் வ்யாக்யான விசேஷங்கள், இவைகளின் ஸாரமான ரஹஸ்யங்கள், இவை எல்லாவற்றினுடைய முதலிலும் முடிவிலும் அகில திவ்யதேச விலக்ஷண அதிகாரிகளாலும் அநுஸந்திக்கப்படுமாய் இருக்கும்.

ப்ரணவத்திலே அகாரம் பகவத்வாசகமாயும் மகாரம் சேதன வாசகமாயும் உகாரம் இருவருடைய உறவை ப்ரகாசிப்பிப்பதாகவும் இருக்கும். "அவ்வானவர்க்கு மவ்வானவ ரெல்லாம் உவ்வானவரடிமை என்றுரைத்தார்" என்பர் பெரியோர். இந்த ச்லோகத்திலே பதங்கள் தோறும் இவ்வர்த்தம் காணலாம்.

**ஸ்ரீசைலேசதயாபாத்ரம் :** ஸ்ரீசைலேச என்று அகாரவாச்யனான ஸர்வேச்வரனைச் சொல்லி, தயாபாத்ரம் என்று வேறுயாவர்க்கு மில்லாமல் அவனுக்கே உள்ளவனான சேதனன் அவன் க்ருபைக்கு பாத்ரம் என்பதைச் சொல்கிறது. மேலும், ஆசார்யனை அவன்தானாகவே சொல்லுவது விசேஷாதிஷ்டானத்தாலே. "ஆசார்யஸ்ஸ ஹரிஸ்ஸாக்ஷாத்" என்று ப்ரமாணம்.

**தீபக்த்யாதி குணார்ணவம் :** என்கிற இப்பதத்தாலும் "தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கு முணர்வு" என்றும், "ஆதியஞ் சோதிக்கே அராத காதல்" என்றும் "உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள்" என்றும் சொல்லுகிறபடியே ஞான பக்தி வைராக்கியங்களைச் சொல்லுகையாலே, அகாரத்தில் சொன்ன பகவச்சேஷத்வத்தை பக்தியால் சொல்லுகிறது. ஸ்வரூபமும் "உன்னிணைத் தாமரைகட்கு அன்புருகி நிற்கு"

---

1. *ஸ்ரீசைலபூர்ணர் க்ருபையால் பக்திவெள்ளத்தைப் பெற்றது முன்பு ராமாநுசனை; தீர்த்தங்களாயிரத்தை ஸ்ரீசைலேசர் தயையால் பெற்றது பின்பு மாமுனிகளாக.*

மதே. எம்பெருமானைப்பற்றியே ஜ்ஞானமாதலால், சேஷத்வம் பற்றிய ஞானமே ஞானம். தேவதாந்தரத்யாகப்ரதானமாயிருப்பது வைராக்யம்.

**யதீந்த்ரப்ரவணம்:** யதீந்த்ரராகையாவது—பகவத் பரதந்த்ர ரான தம் நிலையை நினைத்து துரும்பும் நறுக்காமல் வெறுமனே இருப்பவர்களைத் திருத்தித் திருமகள் கேள்வனுக் காக்கி அடிமை செய்விக்கை. இது பற்றி எம்பெருமானாரிடம் ப்ரவணராகிறார். பகவத நந்யார்ஹசேஷத்வம் அவனடியார் வரையிலும் செல்லவேணும். மேலும், யதீந்தரசப்தம் அஸாதாரணமாக ராமாநுசனைச் சொல்லுவது. ராமசப்தத்தாலே அகாரார்த்தமும், அநுஜசப்தத்தாலே கைங்கர்யபரனான ஆத்மஸ்வரூபத்தைச் சொல்லிற்று. "ராமாநுஜம் யதி பதிம் ப்ரணமாமி மூர்த்நா" என்றபடி ப்ராவண்யநிலை.

**வந்தேரம்யஜாமாதரம் முநிம்:** இத்தாலும் உகாரார்த்தமே சொல்லுகிறது. ரம்யஜாமாத்ரு சப்தத்தாலே அகாரவாச்யனான பகவானைச்சொல்லி முநிசப்தத்தாலே பகவத் நந்யார்ஹசேஷத்வ ஜ்ஞானமுடைய பரமசேதனனைச் சொல்லுகிறது. ரம்யஜாமாத்ரு மநநம் கரோதீதி ரம்யஜாமாத்ருமுநி: ஆக இவை எல்லாவற்றாலும் ப்ரணவார்த்தமாக யோஜிக்கத்தட்டில்லை.

**இனியதீர்ந்த்ரருக்கும் யதிந்த்ரப்ரவணருக்கும் உவமை:** ஸ்ரீரங்கத்திற்கு வடக்காயிருக்கிற திருவேங்கட நாட்டில் ஏரார் பெரும்பூதூரில் எம்பெருமானார் வடமொழி யையும் தென்மொழியையும் வெளியிட அவதரித்தருளினார். இவர் பிறப்பால் "நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது; தென்குருகைவள்ளல் வாட்டமிலா வண்தமிழ்மறை வாழ்ந்தது." "அரங்கநகரும், மேவுதிருநகரியும் வாழவந்த மணவாளமாமுனி" என்கிற படியே தென்னாட்டுத்திலதமான தென்குருகூரிலே பெரியசீயர் தென்மொழியை வெளியிடவே அவதரித்தருளினார். இவருக்கு இரண்டு மொழிகளுக்கும் ப்ரவர்த்தகத்வம் உண்டே யாகிலும் ஊற்றத்தைப்பற்ற ஒன்றிலே சொல்லுகிறது. சீயரும் ஜன்பூமியை விட்டுவந்து காவிரி நடுவுபாட்டிலே கருமணியைக்கண்டு, வைஷ்ணவஸ்ரீயோட வாழ்ந்து கொண்டிருந்து ஸ்ரீரங்கஸ்ரீயையும் ச்ருதிஸாகரத்தையும் த்ராவிடவேதஸாகரத்தையும் பெருகப்பண்ணி, பெருமாளைநோக்கிக் கொண்டுபோந்தார். அவர் "எல்லாவுயிர்கட்கும் நாதன் அரங்கன்" என்னும்பொருள் சுரந்தார். இவர் "பல்லுயிர்க்கும் விண்ணின்தலை நின்று வீடளிப்பான் அனைத்துலகும் வாழப்பிறந்த எதிராசமாமுனிவன்" என்னும் அர்த்தத்தை அருள்சுரந்தார். சீயர் அவதரித்து வெளியிடாதபோது உடையவர்வைபவம் ப்ரகாசமில்லாமலிருந்தது. அதைப்ரகாசிப்பித்ததீபம் இவர். நரநாராயண அவதாரம்போலேதான் இவர்கள் அவதாரமும். அங்கு ஒருவனே ஆசார்யனும் சிஷ்யனுமாயிருந்தாப்போலேயே இங்கும். அவர் நாராயண வைபவப்ரகாசகர். இவர் ராமாநுஜவைபவப்ரகாசகர். 'நாராயண,' 'ராமாநுஜ' என்று இரண்டும் சதுரக்ஷரிகள். இவர் சதுரரில்தலை வராகையாலே [1] சரமசதுரக்ஷரியில் நிலை நின்றார். "ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்று அவரைச் சார்த்தியிருப்பார் தவம்" (நான் முகன் திருவ. 18) "நம்புவார்பதி வைகுந்தம் காண்மினே" (கண்ணிநுண்சிறு-6) ஆழ்வாருக்கு மதுரகவிகளிலும் சரமமான திருவடிகள் ராமாநுசனானாற்போலே, ராமாநுச னுக்குச் சரமமானசரணங்கள் யதீந்த்ரப்ரவணர். இத்தனியனும் ஸகலவேதஸாரமான ப்ரபத்திபோலே நித்யாநுஸந்தேயமாகக்கடவது.

---

1. *ஆசாரியனொழிய தேவுமற்றறியேன் என்றிருக்கும் நிலையை சரமபர்வம் என்பர். நம்மாழ்வாருடைய திருவடி நிலைகளுக்கு 'ராமாநுசன்' என்று திருநாமம். மதுரகவிகள் ஆழ்வாரிடம் அத்யந்தப்ராவண்யம் பூண்டிருந்தாலும் 'ராமாநுசன்' என்றே ஆழ்வார் பாதுகைகள் வ்யவஹரிக்கப்படும். அப்படியே ராமாநுசனுக்கு ஆழ்வான், ஆண்டான் போன்ற பல ப்ரிய சிஷ்யர்கள் இருந்தாலும் யதீந்தரப்ரவணர் என்ற ப்ரஸித்தி மணவாளமாமுனிகளுக்கே உண்டு. இது இவருக்குத் தனிச்சிறப்பு.*



மேல்கோட்டை திருநாராயணன்

எம்பெருமானாரால் திருப்ரதிஷ்டை கண்டருளி ஒரு நாயகமாய்... திருநாரணன் தாள் சிந்தித்துய்மின் (திருவாய்மொழி 4-1-1) பாசுரத்தை ஸமர்ப்பிக்கப்பெற்று, திவ்யதேச எம்பெருமானாக அபிமாநிக்கப் பெற்றவர்.




பத்ரீநாராயணன்

திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தையும் ஸ்ரீசைலேசமஹாமந்த்ரத்தையும் வெளியிட்டவர் (சம்பிரதாய சந்திரிகை—4-ம் பாசுரம் காண்க).



தென்னனுயர் பொருப்பில் அழகர்

ஸ்ரீசைலேச தனியனுக்கு ப்ரவர்த்தகர் (23-ம் பக்கம் காண்க).



**மன்னார்குடி ராஜகோபாலன்**

உன்னித்து... வண் துவராபதி மன்னனை ஏத்துமின்... என்ற (திருவாய்மொழி 4-6-10) பாசுரத்தை இவர்விஷயமாக ஸங்கல்பித்து, மணவாளமாமுனிகள் இந்த ஸன்னிதியை திவ்யதேசமாக அபிமானித்தருளினர்



ஆழ்வார் திருநகரி

**குருகூர்ச்சடகோபன் (மாறன்)** ; வலப்பக்கத்தில் **மாறனடி பணிந்துய்ந்த இராமாநுசன்.** நம்மாழ்வார் நாதமுனிகளுக்குக் காட்டித்தந்த பவிஷ்யதாசார்ய விக்ரஹம் இந்தத் திருமேனியே என்பர். இந்தத் திருகோலத்தைத் தனிக்கோயில் நிர்மாணித்துத் திருப்ரதிஷ்டை கண்டருளப்பண்ணி, மணவாளமாமுனிகளுக்கு ப்ராப்யமாகக் காட்டியருளினர் திருவாய்மொழிப்பிள்ளை. எதிராஜ விம்சதியை ஸ்வாமி விண்ணப்பித்தது இங்குதான் (5-பக்கம் காண்க).



செல்வச்சடகோபர் இராமாநுசன்

பூமகள்கோன் பூங்கழற்குப்பாதுகமாம் தேமலர்த்தாட்குப் பாதுகமாம் (ஆர்த்தி—10) ஆழ்வாரும், உடையவரும். (ஸ்ரீபெரும்பூதூர்)



திருமங்கையாழ்வார்

(திருவாலி திருநகரி) இவர் வடிவழகில் மணவாளமாமுனிகள் ஈடுபாட்டை 19-ம் பக்கத்தில் காண்க.



எம்பெருமானுர்

ஈராறு திருநாமமணிந்த எழில் வாழி! (ஆர்த்தி-30)



மணவாளமாமுனிகள்

அவதார ஸ்தலமூர்த்தி—ஆழ்வார் திருநகரி



மணவாளமாமுனிகள்

காஞ்சீ தேவப்பெருமாள் ஸன்னிதியில் திருக்கோலம்



**காஞ்சீ, யதோக்தகாரி**

சொன்னவண்ணம் செய்தப் பெருமாள்



**மணவாளமாமுனிகள்**

ஸ்ரீபாஷியம் ஸாதிக்கும் திருக்கோலம்—
யதோக்தகாரி ஸன்னிதியில் ஸேவை ஸாதிக்கிறபடி

श्रीदेवराजगुरुभिरनुगृहीतं

## ॥ श्रीशैलेशाष्टकम् ॥

2. எறும்பி அப்பா அருளிச்செய்த

# ஸ்ரீ சைலேசாஷ்டகம்

### தனியன்

सौम्यजामातृयोगीन्द्र चरणाम्बुजषट्पदम् । देवराजगुरुं वन्दे दिव्यज्ञानप्रद शुभम् ॥

ஸௌம்யஜாமாத்ரு யோகீந்த்ர சரணம்புஜஷட்பதம் ।
தேவராஜகுரும் வந்தே திவ்யஜ்ஞாநப்ரதம் சுபம் ।

---

शेष: श्रीमानजनि हि पुरा सौम्यजामातृयोगी भोगी भूतस्तदनु भगवान् राघवस्यानुजन्मा ।
भूत्वा भूयो वरवरमुनिर्भूयसा भासमान: रक्षत्वस्मान् रघुकुलपतेराश्रितो भद्रपीठम् ॥

சேஷ:ஸ்ரீமாநஜநி ஹி புரா ஸௌம்யஜாமாத்ரு யோகீ
போகீ பூதஸ்ததநு பகவான் ராகவஸ்யாநுஜந்மா ।
பூத்வாபூயோ வரவரமுநி: பூயஸா பாஸமாந:
ரக்ஷத்வஸ்மாந் ரகுகுலபதே: ஆஸ்திதோ பத்ரபீடம் ॥ (1)

श्रोतुं द्राविडवेदभूरिविवृतिं सौम्योपयन्तृमुने: उत्कण्ठाऽस्ति ममैनमानयत तं तार्क्ष्याश्रयं मण्डपम् ।
आविश्यार्चकमूचिवानिति मुदा निश्शेषलोकान्वित: रङ्गी वत्सरमेकमेवश्रृणोत् व्यक्तं यथोक्तक्रमात् ॥

ச்ரோதும் த்ராவிடவேதபூரி விவ்ருதிம் ஸௌம்யோபயந்த்ருமுநே:
உத்கண்டாஸ்தி மமைநமாநயத தம் தார்க்ஷ்யாச்ரயம் மண்டபம் ।
ஆவிச்யார்சகமூசிவாநிதி முதா நிச்சேஷலோகாந்வித:
ரங்கீ வத்ஸரமேகமேவ ச்ருணோத் வ்யக்தம் யதோக்தக்ரமாத் ॥ (2)

श्रीभूम्यां रङ्गनाथे शठजिदुपनिषद्व्याक्रियां श्रोतुकामे शेषस्सन्तोषयिष्यन् वरवरमुनितां प्राप्य यो वर्ततेऽग्रे ।
काषायश्रीतुलस्यम्बुजमणिसुशिखायज्ञसूत्रत्रिदण्डै: भान्तं शुभ्रोर्ध्वपुण्ड्रं स्मर हृदय सदा कोशमुद्राङ्कहस्तम् ॥

ஸ்ரீ பூம்யாம் ரங்கநாதே சடஜிதுபநிஷத்வ்யாக்ரியாம் ச்ரோதுகாமே ।
சேஷஸ்ஸந்தோஷ யிஷ்யன் வரவரமுநிதாம் ப்ராப்ய யோவர்த்ததேக்ரே ।
காஷாயஸ்ரீதுலஸ்யம்புஜமணி ஸுசிகாயஞ்ஞஸூத்ர த்ரிதண்டை:
பாந்தம் சுப்ரோர்த்வபுண்ட்ரம் ஸ்மர ஹ்ருதயஸதா கோசமுத்ராங்கஹஸ்தம் ॥ (3)

कृपया परया स रङ्गराट् महिमानं महतां प्रकाशयन् ।
लुलुभे स्वयमेव चेतसा वरयोगिप्रवरस्य शिष्यताम् ॥

க்ருபயா பரயா ஸ ரங்கராட் மஹிமானம் மஹதாம் ப்ரகாசயந் ।
லுலுபே ஸ்வயமேவ சேதஸா வரயோகிப்ரவரஸ்ய சிஷ்யதாம் ॥ (4)

समाप्तौ ग्रन्थस्य प्रथितविविधोपायनचये परं सज्जीभूते वरवरमुनेरङ्घ्रिसविधे ।
हठाद्बालः कश्चित् कुत इति निरस्तोऽप्युपगतः जगौ रङ्गेशाख्यः परिणतचतुर्हायन इदम् ॥

ஸமாப்தெள க்ரந்தஸ்ய ப்ரதிதவிவிதோபாயநசயே
பரம் ஸஜ்ஜீபூதே வரவரமுநேரங்க்ரிஸவிதே ।
ஹடாத்பால: கச்சித் குத இதி நிரஸ்தோப்யுபகத:
ஜகௌ ரங்கேசாக்ய: பரிணதசதுர்ஹாயந இதம் ॥ (5)

श्रीमान् रङ्गेश्वरो यद्वकुलधरवचोभाष्यसारार्थजातं श्रुत्वा सौम्योपयन्तामुनिवरचरणे च्छात्रभावं प्रपन्नः ।
श्रीशैलेशेतिपद्यं खगपतिनिलये मण्डपे तत्समाप्तौ उक्त्वाऽध्येतव्यमेतन्निखिलनिजगृहेष्वादिशत्तत्तदादौ ॥

ஸ்ரீமான் ரங்கேச்வரோ யத்வகுளதர வசோ பாஷ்ய ஸாரார்த்தஜாதம்
ச்ருத்வா ஸௌம்யோபயந்தா முனிவரசரணே ச்சாத்ரபாவம் ப்ரபன்ன: ।
ஸ்ரீசைலேசேதி பத்யம் ககபதிநிலயே மண்டபே தத்ஸமாப்தெள
உக்த்வாத்யேதவ்யமேதந்நிகில நிஜக்ருஹேஷ்வாதிசத்தத்த தாதெள ॥ (6)

वेदादौ पूर्वमुक्त्वा हरिरितिसुजनो वक्तिपश्चाद्यथोमित्येवं वक्तव्यमेतद्वकुलधरवचोऽनुश्रवारम्भकाले ।
श्रीशैलेशेतिपद्यं प्रथममथसतां संप्रदायैकनिष्ठैः लक्ष्मीनाथेतिपद्यं स्वयमितिभगवादिशद्रङ्गनाथः ॥

வேதாதெள பூர்வமுக்தா ஹரிரிதி ஸுஜநோவக்தி பச்சாத்யதோமித்யேவம்
வக்தவயமேதத்வகுல தரவசோநுச்ரவாரம்பகாலே ।
ஸ்ரீசைலேசேதி பத்யம் ப்ரதமமத ஸதாம் ஸம்ப்ரதாயைகநிஷ்டை:
லக்ஷ்மீநாதேதி பத்யம் ஸ்வயமிதி பகவாநாதிசத்ரங்கநாத: ॥ (7)

यद्वद्वक्तुं न युक्तं प्रणवहरिपदाभ्यन्तरेऽन्यत्पदं तत् कृष्णेत्येतत्कदाचिन्मुनिशतवचनैर्वैदिकैर्ब्रह्मनिष्ठैः ।
तद्वद्रङ्गेशभक्तैः शमदमनियतैः साधुभिस्तत्त्वविद्भिः वक्तुं युक्तं न मध्येसपदिनियतयोरेतयोः पद्यमन्यत् ॥

யத்வத்வக்தும் நயுக்தம் ப்ரணவஹரிபதாப்யந்த ரேந்யத் பதம் தத்
க்ருஷ்ணேத்யேத்த் கதாசிந் முநிசதவசநைர்வைதிகைர் ப்ரஹ்மநிஷடை: ।
தத்வதரங்கேசபக்தை: தமதமநியதை: ஸாதுபிஸ்தத்வவித்பி: வக்தும்
யுக்தம் நமத்யேஸபதி நியதயோரேதயோ: பத்யமந்யத் ॥ (8)

शठरिपुरेक एव कमलापतिदिव्यकविः मधुरकविर्यथाच शठजिन्मुनिमुख्यकविः ।
यतिकुलपुङ्गवस्य भुवि रङ्गसुधाकविराट् वरवरयोगिनो वरदराजकविश्च तथा ॥

சடரிபுரேக ஏவ கமலபதிதிவ்யகவி: மதுரகவிர்யதா ச சடஜின்முனி முக்யகவி: ।
யத்குலபுங்கவஸ்ய புவி ரங்கஸுதாகவிராட் வரவாயோகிநோ வரதராஜகவிச்சததா ॥ (9)

3. பரவாதிகேசரியார் அருளிய

# ஸ்ரீ சைல வைபவம்

கூறுகேன் உலகீரே குங்குமத்தோளரங்கேசர்
மாறன் மறைப்பொருள் கேட்க மணவாளமாமுனியை
[1] ஏறுமணை தனிலிருத்தி [2] இருநிலத்தில் தாமிருந்து
வீறுடனே செவிசாத்தி [3] விரையடி [4] பூசனையாற்றி. (1)

[5] அறுஇரண்டு புரஞ்சூழ அரங்கமுதல் [6] நூற்றெட்டும்
கூறியசீர் [7] சயிலத்தைக் கொண்டாடி உரைக்கவெறு
ஊறியதேன் பெருக்கென்ன [8] உன்னிஅதை உகந்துரைத்தான்
[9] சேறுவளர் கமலை [10] மைந்தன் சிந்தைமகிழ்ந்து [11] ஒருப்பட்டே. (2)

பட்டர்பிரான் முதலாய பதின்மர்கலை [12] பழிச்சலிலும்
சிட்டர்களாய்த் தினந்தோறும் திருமணிடு வேளையிலும்
இட்டமுற உணும்பொழுதத்து [13] ஒணகரநீர் ஏற்கையினும்
அட்டதிக்கும் விளங்குரைத்தார் [14] ஆரியர்களனைவருமே. (3)

ஆரியர்கள் கொண்டாடி ஆசரித்த தனியனைத்தான்
பேரியலும் தொண்டர்குழாம் பெரும்பேருக் கொண்டனரால்
சீரியராய் வாழவெண்ணில் செகதலத்தீர் கற்றுணர்மின்
[15] தாரியலும் அரங்கர்க்கும் தமிழ்மறைக்கும் மணமாமே. (4)

மணவாளமாமுனியை [16] வழுத்துறவோர் பயன்பெறுவர்
குணமாகக் கொண்மின் இதைக கொடும்பிறவிப் பிணிஅகல்வீர்
[17] பணவாளராவிவராம் பகைத்தாரே யுய்தலிலர்
மணமுடைய மந்திரமா மதிக்கொள்ளீர் தனியனையே. (5)

தனியனென்று பேர் சாற்றித் தண்ணரங்கர் முன்னர்
இனிய திருப்பவளத்தாலே—[18] முனிவரனா
மாறன்மறை [19] முப்பத்தாறாயிரத்தின் [20] மாண்பொருளைக்
கூற உபதேசித்தார் கொண்டு. (6)

தேசமெங்கும் இது திருப்பதிகள் தோறுரைக்க
நேசமுற அரங்கர் நேமித்தார்—ஏசுமவர்
பாதகராய் எரிவாய் பாழ்நகரில் [21] துய்ப்பர் இன்னல்
[22] வேதனா உள்ளமட்டும் [23] எய்த்து. (7)

---

1. உயர்ந்த ஆஸனம் 2. பூமியில் 3. திருவடிகளை 4. தொழுது 5. இரண்டு காவேரிகள் 6. திருவரங்கம் முதலான 108 திருப்பதிகள் 7. ஸ்ரீசைலேச...என்னும் தனியன் 8. எண்ணி 9. பங்கயச் செல்வி 10. அன்பன் (கமலைமைந்தன்—லக்ஷ்மீகாந்தன்; ச்ரிய:பதி) 11. ஒப்புக்கொண்டு, ஸம்மதித்து 12. ஆழ்வார்கள் பதின்மரும் பாடியுள்ள புகழ்மாலைகள் 13. பரிஷேசனத்தில் ஆசமனம் 14. ஆசாரியர்கள் 15, தார்—பூமாலை 16. துதிப்பவர்கள் 17. பணவாள் அரா—பணமணிகளுடைய ஆதிசேஷன்; மணவாளராவிவராம் என்றும் பாடம் காண்கிறது 18. மாமுனிவர்—சடகோபமாமுனிகள் 19. ஈடுமுப்பத்தாறாயிரம் 20. உயர்ந்த அர்த்தங்கள் 21. இன்னல் படுவர் 22. பிரம்மா 23. வருந்தி.

எய்யத் துணிய [1] இராவணியைக் கொன்றவன் காண்
செய்ய நெறிவிளங்கும் சேஷனவன்—வையம்
தனை வளர்க்குமாறு வரயோகி தானாய்
[2] வினையறுத்து [3] வீடருளும் [4] வேந்து. (8)

வேந்தராய் மண்ணுண்டு [5] விண்ணேறலாம் எளிதாய்த்
தோய்ந்த உறவாயிருக்கில் தொல்லுலகீர்—ஓர்ந்துய்ய
[6] ஏதிகொடு காலனிழந்து அமர்மேவான் [7] விண்ணோர்
நாதனும் வந்தே வணங்கு நன்கு. (9)

வணங்கினார் சீர்பெற்றார் வரன்முறையால் [8] வீடணர்போல்
இணங்கினார் ஒரொருவர் இருநிலத்தில் சிறப்புற்றார்
[9] பிணங்கினார் பேய்ப்பிறவிப் [10] பேதையர் கடமைக்கண்டே
[11] உணங்கினார் [12] தாமதராய் உட்சிசனந்தார் தென்றவரே. (10)

[13] தென்கலையாம் தமிழ்வேதச் சீர்சைலத் தனியனெனும்
நன்கலையை உள்கசிந்து நவிற்று பெருந்தகைமாந்தர்
[14] மின்கலையும் புரிநூலும் [15] மேனேக்கு புண்டரமும்
தென்கலையும் வடகலையும் திகழ்நாவர் ஆகுவரே. (11)

ஆகுகலென் இனி எனக்கோர் ஆராவமுதாய் என்
சோகமற உளத்தடத்து துலங்கு வரவரயோகி
[16] சேகறு செம்மலர்த்தாளும் சீர் சைலத்தினியனும் இன்று
[17] ஓகையுறப் பெற்றனெனால் ஒலிகடல் தாரணியீரே. (12)

தாரணியோர் வாழவெண்ணித் தானே திருவநந்தன்
பேரணியும் குருகைநகர் [18] பிறங்கநனிப் பேரருளால்
சீரணியும் மணவாளமாமுனியாய்ச் [19] செனித்தனால்
தாரணியும் அரங்கருக்குத் தமிழ்மறைத் தேசிகனெனவே. (13)

தமிழ்மறை ஓதுவரேல் தனியனது மற்றில்லை
[20] திமிரமற மெய்ஞ்ஞானச் செழுஞ்சுடர்சேர் மனமுடையீர்
அமிழாமல் சமுசாரத்து ஆழ்கடலைக் கடத்தி ஒரு
நிமிடத்தில் நித்தியராய் நிறுத்தும் பேரின்பத்தே. (14)

பத்துத்திசைகளினும் பணமணிகள்சுட ரெறிப்ப
முத்திதரும் அரங்கருக்கு மூவணையாய் சூழ்ந்திலங்கும்
எதத்திசையும் பணிந்தேத்தும் எம் பெரியமுனியாகும்
[21] அத்தனெழில் வரயோகி ஆயிரவாய் அரவரசே. (15)

அரவேறு மேவி[22]யறிதுயில் கொள்ளும் அரங்கருரை
வரயோகி சீர் சைலத்தின் பெரும்புகழ் வைபவத்தை
விரகால் இசைமறையோர் திலகன் தமிழ்வீறுடைய
பரவாதிகேசரி பாப்பதினைந்து பணித்தனனே. (16)

---

1. ராவணன் பிள்ளையான இந்த்ரஜித்தைக் கொன்ற லக்ஷ்மணன் 2. பாபங்களைப் போக்கி 3. மோக்ஷம் தரும் 4. முனிவர்பெருமான் 5. விண்-பரமபதம் 6. ஆயுதம் 7. விண்ணோர் நாதன்-பரமபதநாதன் 8. விபீஷணன் 9. மாறுபடுபவர் 10. அறிவிலிகள் 11. காய்கின்றவர் 12. மந்தர் 13. அழகியகலை 14. மின்-ப்ரகாசம் 15. ஊர்த்வபுண்ட்ரம்-திருமண்காப்பு 16. துயரற 17. மகிழ்ச்சி 18. விளங்க 19. அவதரித்தனன் 20. மயர்வற-இருள்போக 21. ஆசார்யனான அழகியமணவாள மாமுனிகள் 22. யோகநித்திரையில் ஆழ்ந்த திருவரங்கன் அருளிச்செய்த.

## 4. ஸ்ரீமதுபயவே. காஞ்சீபுரம் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யஸ்வாமி அளிக்கும் மிகஸமான வியாக்யானம்

இந்தச்லோகம் ஸ்ரீரங்கநாதனுலருளிச் செய்யப்பட்டது. இது தெய்வவாக்கே என்பதை நன்கு நிரூபிக்கிறோம். அரங்கத்தம்மானே பண்டு இராமனுகவும் க்ருஷ்ணனுகவும் திருவவதாரம் செய்தவன். அப்படி திருவவதரித்திருந்த காலங்களில் சில வ்யக்திகளிடத்தில் ஆச்ரயித்து அவ்விடங்களில் திருவுள்ளத்திற்கு த்ருப்தியில்லாமலே முடிந்திருக்கிறது. அந்த குறைதீர இப்போது மணவாளமாமுனிகளை ஆச்ரயித்து "ஸதாசார்யலக்ஷண பூர்த்தியுள்ள இவரை ஆச்ரயிக்கப்பெற்றோமே!" என்று மகிழ்ச்சி கொண்டமை இந்தச்லோகத்தில் ஒவ்வொருவிசேஷணத்திலும் ஸ்புடமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

1. **ஸ்ரீசைலேச தயாபாத்ரம்:** ராமாவதாரத்தில் சைலேசதயாபாத்ரமானவொரு வ்யக்தியை வணங்கிக்கெட்டேன்; இப்போது **ஸ்ரீசைலேசதயாபாத்ரமான** வ்யக்தி விசேஷத்தை வணங்கி வாழ்கிறேன் என்கிறது. ராமாவதாரத்தில் வணங்கப்பட்ட சைலேச தயாபாத்ரமான வ்யக்தி ஸுக்ரீவன். சைலமாவது ரிச்யமூகபர்வதம். அதற்கு ஈசர்—மதங்க முனிவர். அவருடைய தயைக்கு பாத்ரம் ஸுக்ரீவன். மிகவும் பலவானுன **துந்துபி**யென்னுமரக்கன் வாலியைப்போருக்கழைக்க, இருவருக்கும் ப்ரபலமானபோர் நடந்து வாலியினுல் துந்துபி கொல்லப்பட்டுவிழ, வாலி அவனுடலை ஒரு யோசனைதூரம் விழும்படி வீசியெறிய, அவன் வாயிலிருந்து ரத்தத்துளிகள் காற்றினுல் தள்ளுண்டு மதங்கமுனிவரின் ஆச்ரமத்தில் போய்விழ, அதைக்கண்ட முனிவர் சீற்றங்கொண்டு "பரிசுத்தமான எனது ஆச்ரமத்தை இவ்விதம் அபரிசுத்தமாக்கினவன் யாவனே அவனும் அவனன்பர்களும் இவ்வாச்ரம பரிஸரங்களில் வந்தால் உடனே மரணமடையக்கடவர்கள்" என்று சபமிட, உடனே அவ்வனத்திலுள்ள வாலியைச்சேர்ந்த வானரர்களெல்லாரும் ஓடிச்சென்றனர். வாலிஸம்பதத்தை விட்ட ஸுக்ரீவன் மட்டும் தனது அன்பர்களுடன் சைலேசதயாபாத்ரனுக அவ்வாச்ரமத்தில் வாழ்ந்து வந்தனன். **ஸுக்ரீவம்சரணம்கத:** என்றும், **ஸுக்ரீவம்நாதம்** இச்சதி என்றும் அவனை வணங்கியிருந்த ராமன் பிறகு அவனுடன் மனஸ்தாபப்பட நேர்ந்துவிட்டது. மாரிகாலம் முடிந்தபின்பும் ஸுக்ரீவன் சேனைகளுடன் வந்து ராமனுடைய கார்யத்தை கவனியாமலிருக்க, பெருமாள் இளையோனை நோக்கி, "லக்ஷ்மண! நீ ஸுக்ரீவனிடம் சென்று நான் சொன்னதாகசொல்லு. செய்ந்நன்றிமறந்த பாபிஷ்டன் புருஷர்களிற் கடையானவன்; வாலி சென்றவழி ஸுக்ரீவனுக்கும் திறந்திருக்கிறது. அவனை உற்றுருற வினரோடும் யமபுரமனுப்பச் சித்தமாயிருக்கிறேன்." இப்படி மனஸ்தாபப்பட நேர்ந்துவிட்டதனுல் முன்பு சைலேசதயாபாத்ரபூதனுன வொருவனை வணங்கின குறைதீர இப்போது ஸ்ரீசைலேசதயாபாத்ரபூதரை வணங்கி வாழ்கிறேனென்றதாயிற்று. திருமலையாழ்வாரென்கிற திருவாய்மொழிப்பிள்ளையின் இன்னருளுக்கு இலக்கான மாமுனிகளை வணங்குகிறேன் என்கை.

2. **தீபக்த்யாதி குணர்ணவம்:** ராமாவதாரகாலத்தில் லவணர்ணவமான ஸமுத்ரத்தின் காலிலும் குனிந்தமை ப்ரஸித்தம். "ஸமுத்ரம்ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி" என்ற விபீஷணழ்வானுடைய வாக்கின்படி லவணர்ணவத்தை நோக்கிச் சரணுகதி பண்ணியிருந்து அங்கும் மநஸ்தாபமே மிகுந்தது. அக்கடலரசன் முகங்காட்டிற்றிலனுக, மிகவும் சீறிச்சிவந்து, "சாபமாநய ஸௌமித்ரே! சராம்ச்ச ஆசீவிஷோப

மான் ஸாகரம்சோசயிஷ்யாமி'' ''லக்ஷ்மணா! வில்லையும் கொடிய அம்புகளையும் கொண்டுவா; இதோ கடலை வெறுந்தரையாக்கி விடுகிறேன்'' என்று கூறி சரணாகதி பண்ணினவிடத்தில் நிக்ரஹத்திலேயன்றோ நின்றது. அப்படியான குறைதீர அந்த லவணார்ணவத்தைவிட்டு தீபக்த்யாதி குணார்ணவத்தை அடிபணிந்து வாழப்பார்க்கிறபடி. ஞானபக்திவைராக்யங்களுக்குக் கடலான மாமுனிகளை வணங்குகிறேனென்றபடி.

3. **யதீந்த்ரப்ரவணம்:** ''மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்திசெய்ய நின்றான் அரங்கத்தரவினணையான்'' ஸ்ரீரங்கநாதனாகிய பெருமாள் திருவேங்கடமுடையானாகவும் நிற்கிறநிலையிலே ''அப்பனுக்குச் சங்காழி அளித்தருளும் பெருமாள்'' என்று போற்றப்படும் ஸ்ரீராமானுஜரிடம் திருவாழி, திருச்சங்கு பெற்றதனால் அந்த யதீந்த்ரரிடத்தில் சிஷ்யவ்ருத்தி கொண்டிருந்தது ப்ரஸித்தம். அங்கு மநஸ்தாபம் ஒன்றும் நேரவில்லையாயினும் ''தன்னையுற்றாட்செய்யும் தன்மையினோர்'' (ராமானுசநூற்-97) என்கிற பாட்டைத் திருச்செவிசாத்தின பின்பு ''யதீந்த்ரரிடத்தில் சிஷ்யவ்ருத்தி செய்வதற்காட்டிலும் யதீந்த்ரப்ரவணனார் திறத்திலே சிஷ்யவ்ருத்தி செய்வதுதான் சிறந்ததென்று தோன்றிவிட்டது. ராமானுசன் தன்னையுற்று ஆட்செய்வதிற்காட்டிலும் தன்னையுற்று ஆட்செய்யும் தன்மையினோரையுற்று ஆட்செய்வாரே சிறந்தவர் என்பது இந்தப்பாட்டில் காட்டப்பட்டதன்றோ? அதனால் யதீந்த்ரப்ரவணரையிறைஞ்சுகிறேனென்கிற தாயிற்று மாமுனிவனுக்கு யதீந்த்ரப்ரவணரென்கிற திருநாமம் சிறப்பாகக் கிடைத்ததொன்று.

4. **வந்தே ரம்யஜாமாதரம் முநிம்:** இராமனும் க்ருஷ்ணனும் அவதரித்த ஸமயங்களில் இரண்டு முனிவர்களிடத்திலே சிஷ்யவ்ருத்தி செய்திருந்தானெம் பெருமான்- அதாவது விச்வாமித்ர முனிவரிடத்திலும் சாந்தீபினி முனிவரிடத்திலும். அவ்விருவரிடத்திலும் வெறுப்பேயாயிற்று. மிதிலையில் ஜனகருடைய யாகசாலையில் கௌதமபுத்ரரான சதாநந்தர் (பாலகாண்டம் 51-ம் ஸர்க்கம் முதலாக) விச்வாமித்ரருடைய பழைய வரலாற்றையெல்லாம் சொல்ல, மேனகையுடன் கூடியது, வசிஷ்டபகவானிடம் பெரும் சண்டையிட்டது முதலான ரஜோகுண தமோகுண கார்யங்களைக் கேட்டபோது ''இப்படிப்பட்ட ஒருவரையா ஆசார்யனாகக் கொண்டோம்'' என்று வெறுத்திருக்க நேர்ந்தது. க்ருஷ்ணாவதாரத்தில் ஸாந்தீபினி முனிவரிடத்தில் ஸகலகலைகளையும் பயின்று முடிவில் குருதக்ஷிணை ஸமர்ப்பிக்கநின்றவளவிலே ''மாதவத்தோன் புத்திரன்போய் மறிகடல்வாய் மாண்டானை ஓதுவித்த தக்கணையா உருவுருவே கொடுத்தான்'' என்கிறபடியே என்றோ ப்ரபாஸதீர்த்தத்தில் மாண்டுபோன மகனை மீட்டுத்தரவேண்டும் ஏன்று வேண்டி அப்படியே பெற்றான். கண்ணபிரான் ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணன் என்று அறிந்துவைத்தும் அவனிடம் மோக்ஷத்தை வேண்டாமல் க்ஷுத்ரபுருஷார்த்தத்தையே வேண்டினமையால் அவன் பக்கலிலும் வெறுப்பாயிருந்தது. இப்படி வெறுப்புக்கு இலக்கான இரண்டு முனிகளையும் விட்டு ஸமஸ்தகல்யாணகுணக்கடலாய் வைராக்யநிதியான ரம்யஜாமாத்ருமுனியை வணங்கி வாழ்கின்றேனென்கிற தாயிற்று.

இவ்வளவு அர்த்தவிசேஷங்களைக்கொண்ட இந்தச்லோகம் எம்பெருமான்தானே சொல்லியிருக்கவேண்டும். இவையெல்லாம் அவன் நெஞ்சுதன்னில் உறையும் விஷயங்களாகையால் பிறரொருவர்க்கு ஏறிட்டுக்கொள்ளவும் முடியாது. ஆகவே இந்தத்தனியன் தெய்வவாக்கே என்பது திண்ணமாயிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

# ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணம்

ஸ்ரீவைஷ்ணவ அடியார்களுக்கு, அதிலும் குறிப்பாக மணவாளமாமுனிகளின் திருவடிஸம்பந்தமுடையவர்களுக்கு அடிக்கடி அநுஸந்தித்து, மனத்தில் ஊன்ற வைத்துக்கொண்டு தம் நடத்தையிலும் கொண்டுவரவேண்டிய நிஷ்டை எறும்பி அப்பாவால் உத்தரதினசர்யையில் ஒருச்லோகத்தால் (10-வதுச்லோ.) ப்ரார்த்திக்கப்பட்டுள்ளது. இந்தச்லோகத்தை வைஷ்ணவர்கள் எல்லோரும் கண்டபாடம் செய்துகொண்டு அடிக்கடி சிந்தித்து, "இதில் சொல்லிய விசேஷணங்களைத் தம்தம்மிடம் உண்மையாகவுள்ளனவாகச் செய்துகொள்ளவேணும்" என்ற குறிக்கோளுடன் செயல்படவேண்டியது அவச்யம். அப்போதுதான் மணவாளமாமுனிகளுடைய ஸம்பந்தம் நிறம்பெறும்.

*அபகதமதமாநை: அந்திமோபாயநிஷ்டை:*
*அதிகத பரமார்த்தை: அர்த்தகாமாநபேக்ஷை:।*
*நிகிலஜநஸுஹ்ருத்பி: நிர்ஜிதக்ரோதலோபை:*
*வரவரமுநிப்ருத்யை ரஸ்துமே நித்யயோக:॥*

மணவாளமாமுனிவனுடைய அடியார்களுக்கு ஆறு குணவிசேஷங்கள் இங்கு கூறப்படுகின்றன. இந்த குணங்களையுடையவர்களான மாமுனிவனடியார்களுடனேயே அடியேன் எப்போதும் போதுபோக்குமவனாக தேவரீர் க்ருபை பண்ணியருளவேணும் என்று ப்ரார்த்திக்கிறார் இங்கு. இங்கு சொல்லப்பட்ட விசேஷணங்களாவன:

1. விஷயஸுகங்களை அநுபவிப்பதால் வரும்களிப்பும் தங்களைப்பற்றிப் பெருமையாய் எண்ணிக்கொள்வதால் வரும் கர்வமும் சிறிதும் இல்லாதவர்கள்.

2. "ஆசார்யாபிமானமே உத்தாரகம்" என்று சரமோபாயமாக நிஷ்கர்ஷிக்கப்பட்ட அந்திமோபாய நிஷ்டையில் ஊன்றியவர்கள். ஆர்த்திப்ரபந்தம் பாசுரங்கள் 55-மதுரகவிசொற்படியே நிலையாகப் பெற்றோம்; 56-உன்தன் அபிமானமே உத்தாரகமென்று சிந்தை தெளிந்திழுக்கச்செய்த நீ - எதிராசா!; 57 - இந்தவுயிர்க் கெல்லா வுறவும் நீயென்றே எதிராசா!; இவைகளில் காட்டப்பட்ட மணவாளமாமுனிகளின் நிஷ்டை. இது எதிராசனடியார்கள் திறத்திலும் செல்லவேண்டும். "என்றும் எவ்விடத்தும் என்புற்ற நோயுடல்தோறும் பிறந்து இறந்து எண்ணிரிய துன்புற்றுவீயினும், உன் தொண்டர்கட்கே அன்புற்றிருக்கும்படி என்னையாக்கி அங்காட்படுத்தே - இராமாநுச!" என்று வேண்டினார் திருவரங்கத்தமுதனார். "நின் திருவெட்டெழுத்தும் கற்றபின் உற்றதும் உன் அடியார்க்கடிமை" என்று திருமாலடியார்கள் யாவர்க்கும், எப்படியும் கார்யம் கொள்ளலாம்படி நம்மை அமைத்துக்கொள்ளவேண்டும். "சொல்நேர்பட்ட தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்" என்றுத் தம்மைச் சொல்லிகொண்டார் ஆழ்வார்.

3. பரமார்த்தங்கள் கைபுகுந்தவர்கள். சாஸ்த்திரங்களில் ஸாரமாயும் ஸாரதமமாயும் உள்ள அரத்தங்கள் இவை. சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள செய்யவேண்டுவன, விலக்கவேண்டுவன முதலியன ஸாமான்ய அர்த்தங்கள். "உந்தன்னோடு உற்றோமே ஆவோம்; உனக்கே நாமாட்செய்வோம்" என்று, வகுத்த ஸ்வாமியென்று பகவானை அறிந்து

அவனுக்கே ஆட்பட்டு குற்றவேல் செய்வது ஸாரமறிந்தவர் கார்யம். "எந்தைபிரான் தனக்கு அடியாரடியார்தம்மடியாரடியார் தமக்கடியாரடியார்தம் அடியாரடியோங்களே!" என்றும், "பொன்னுழிக்கை என்னம்மான் நீக்கமில்லா அடியார்தம் அடியார் அடியார் அடியார் எம்கோக்கள்" (எம்கோக்கள் - என்னை ஆளக்கூடிய ஸ்வாமிகள்) என்றும் ஆழ்வார் சொற்படி அறிந்து நடப்பது ஸாரதமமான அறிவின் கார்யம்.

4. அர்த்தம் (பொருள்) காமம் (விஷயஸுகங்கள்) இவைகளில் சிறிதும் விருப்பமில்லாதவர்கள்.

5. நிகிலஜநஸுஹ்ருத்துக்கள். "ஸர்வேஜநா: ஸுகிநோ பவந்து"--நாடடங்க எல்லோரும் நன்றாக வாழ்ந்து போரவேணும் என்று ஹ்ருதய பூர்வமாய் எண்ணுபவர்கள். இவர்களுக்கு யார்ஒருவரிடத்திலும் வெறுப்பு என்பதே கிடையாது. எதையும் ஸர்வேச்வரனுடையவிபூதி என்று நோக்குமவர்கள்.

6. க்ரோதலோபங்களை ஜெயித்தவர்கள் - கோபமே சிறிதும் வராதபடி வென்றவர்கள் ; கீழ்த்தரமானது என்னக்கூடிய எண்ணமோ நடத்தையோ சிறிதுமில்லாதவர்கள்.

இப்படி இருப்பவர்களே வரவரமுநிப்ருத்யர்கள் - மணவாளமாமுனிகளுடைய திருவடிஸம்பந்திகள். இவர்களுடைய ஸஹவாஸமே அடியேனுக்கு எப்பொழுதுமாக இருக்க வேணும் என்ற ப்ரார்த்தனையே இங்கு.

ஜீயர்திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

# ஸ்ரீசைலேசரும் ஸ்ரீசைலேசதயாபாத்ரரும்

ஸ்ரீமதுபயவே. காரப்பங்காடு வேங்கடாசாரியர்ஸ்வாமி

திருவாய்மொழிப்பிள்ளை என்ற சிறப்புப்பெயர் பெற்ற கோயில் திருமலையாழ்வார் பால்யத்தில் பிள்ளைலோகாசார்யர் திருவடிகளில் ஆச்ரயித்தவர். நேரே லோகாசார்யனிடம் ஸகலார்த்தங்களையும் அதிகரிக்கப்பெறாமல் மதுரையில் ராஜாவாக போகபோக்யங்களை அநுபவித்துக்கொண்டு வாழ்ந்திருந்தார். பிள்ளைலோகாசார்யர் தம்முடைய அந்திமதசையிலே இவரை ஸ்மரித்து தர்சனப்ரவர்த்தகராம்படி ஆசீர்வதித்து கூரகுலோத்தமதாஸ நாயன் முதலிட்ட முதலிகளை இவரை யநுவர்த்தித்து ஸகலார்த்தங்களையும் ப்ரஸாதித்துத் தர்சனப்ரவர்த்தகராம்படித் திருத்தும்படி நியமித்தார். அப்படியே நாயனும் இவரையநுவர்த்தித்து, மணக்கால்நம்பி ஆளவந்தாரைத் திருத்திப்பணிகொண்டது போல் பரமரஹஸ்யார்த்தங்களையும் இவருக்குபதேசிக்க, இவரும், ஞானபக்தி வைராக்கியநிதியாய் ராஜ்யத்தைத் துறந்து, நாயன் திருவடிகளையநுவர்த்தித்து அவரிடம் பரமார்த்தங்களைக் கேட்டுக்கொண்டு வாழ்ந்திருந்தார்.

பின்னர் பெருமாள்கோயிலேறச் சென்று, தேவப்பெருமாள் அங்கு நியமித்தபடியே நாலூராச்சான் பிள்ளையிடம் ஈடுமுப்பத்தாறுயிரப்படி கேட்பதாகத் தொடங்கி, அவர் திருவடிகளைப் பழுக்க ஸேவித்து ஸகலார்த்தங்களையும் கேட்டுணர்ந்தார். இப்படி திருவாய்மொழியில் உண்டான அபிநிவேசமடியாக ஆழ்வாரைத் திருவடி தொழவேணும் என்ற அபிநிவேசம் கனக்க, அப்போது ஆழ்வார் திருவிதாங்கூர் ராஜ்யத்தில் திருக்கணம்பி

என்னும் படை வீட்டிலே எழுந்தருளியிருந்தபடியால் அங்குச்சென்று, ஸேவித்து க்ருதார்த்த ரானூர். மீண்டும் ஆழ்வாரைத் திருநகரியிலேயே எழுந்தருளப்பண்ணுவித்து குருகூர்ச் சட கோபன் என்னும்படி குடிபுகுத்த விருப்பம் கொண்டு, ஊரையும் கோவிலையும் ஜீர்ணோத்தார ணம் பண்ணி, ஆழ்வாரைத் திருநகரியில் ப்ரதிஷ்டை பண்ணுவித்து அவர் திருவடிகளிலே ஸகலவித கைங்கர்யங்களையும் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

பிறகு, லோகாசார்யன் முன்னர் நியமித்திருந்தபடி விளாஞ்சோலைப்பிள்ளையிடம் சேமவைப்பாயிருந்த அர்த்தங்களைக் கேட்டறிவதற்காகத் திருவநந்தபுரம் சென்று, பிள்ளையை ஸேவித்திருக்க, அவரும் ஸ்ரீவசனபூஷணம் முதலாகத் தாம் லோகாசார்யனிடம் பெற்ற எல்லா ரஹஸ்யார்த்தங்களையும் இவருக்கு உகந்து உபதேசித்தருளினார். விளாஞ்சோலைப் பிள்ளை குலந்தாங்கு சாதிகளில் பிறந்தவரல்லர். திருவநந்தபுரத்தில் ஒரு சோலையில் நித்ய வாஸமாக எழுந்தருளியிருந்த இவர் ஒருநாள் கோவிலில் புகுந்து பெருமாள் திருவடிகளுக் கருகில் நிற்பதை அர்ச்சகர்களான நம்பிமார் கண்டு, உடனே ஸன்னிதியைத் திருக்காப் பிட்டுக்கொண்டு கோவிலுக்கு வெளியே வந்து நிற்க, அப்போது பிள்ளையின் சிஷ்யர்கள் "விளாஞ்சோலைப்பிள்ளை லோகாசார்யன் திருவடி சார்ந்தார்" என்று நூற்றந்தாதி இயலுடன் பெருமாளுடைய திருமாலை பரிவட்டங்களுக்காக வந்து நிற்கக்கண்டு, தாம்கண்ட பிள்ளையின் ஆச்சர்யமான ப்ரபாவத்தை வெளிப்படுத்தினர். திருமலையாழ்வாரும் பிள்ளை திருநாடலங் கரித்ததை யறிந்து சிஷ்யபுத்ரர்கள் செய்யும் க்ருத்யங்களெல்லாம் ஸ்ரீவசனபூஷணத்தில் காட்டப்பட்ட சரமபர்வநிஷ்டை அநுஷ்டானமாகும்படிப் பண்ணியருளினர்.

திருவாய்மொழிப்பிள்ளை ஆழ்வார் திருநகரியில் நித்யவாஸமாக தர்சனப்ரவர்த்தநம் பண்ணிக் கொண்டு ஆழ்வார் கைங்கர்யங்களையும் ஆராய்ந்து கொண்டு, தமக்குப்பின் இந்த தர்சனத்துக்கு ப்ரவரவர்த்தகராக ஆவாரார் என்று விசாரிததுக் கொண்டு எழுந்தருளி யிருந்தநாளிலே, அழகியமணவாளப் பெருமாள்நாயனார் வந்து, திருவடிகளிலாச்ரயிக்க, அவரை ஆமுதல்வனிவன் என்று தர்சனப்ரவர்த்தகராம்படி ஆசீர்வதித்துத் தம்மிடமுள்ள ஸகலார்த்தங்களையும் அவருக்கு ப்ரஸாதித்தருளினர். அப்போது பிள்ளைக்கு ஆழ்வாரிட மிருந்த ப்ராவண்யம் அவரடி பணிந்துய்ந்த எம்பெருமானாரளவும் நெடுகிச் செல்ல, திருநகரியில் உடையவருக்குத் தனிக்கோயில் நிர்மாணம் பண்ணி, அதைச் சுற்றிலும் ராமாநுஜசதுர்வேதிமங்கலம் என்னும் வீதியையமைத்து, அதில் ராமாநுஜனைத் தொழும் பெரியோரையும் குடிபுகுத்தி, அனைத்தையும் நாயனாரதீனமாக்கியருளினர். நாயனாரும் ஆசார்யன் தமக்கு ப்ராப்யமாகக் காட்டிக் கொடுத்த உடையவர் திருவடிகளிலே மிகவும் ப்ராவண்யமுடையராய் தம்ப்ரேமைக்கநுகுணமாக எதிராஜவிம்சதி என்னும் ஸ்தோத்ரத்தை யும் விண்ணப்பம் செய்து "ராமாநுஜார்ய கருணைவது மத்கதிஸ்தே" (யதிராஜ விம்சதி-14) என்கிறபடி, உடையவர் விஷயததில் "மதுரகவி சொற்படியே நிலையாகப்பெற்றோம்" (ஆர்த்தி-55) என்கிற நிலையில் உடையவர் க்ருபையே உத்தாரகம்என்ற திடமான அத்யவ ஸாயத்துடன், ஆசார்யரான ஸ்ரீசைலேசரும் தம்மை **யதீந்த்ரப்ரவணர்** என்று கொண் டாடும்படி வாழ்ந்திருந்தார்.

ஆழ்வாரிடத்திலும் அவர் திருவாய்மலர்ந்தருளிய திருவாய்மொழியிடத்திலும் உள்ள ப்ராவண்யமே ஆசார்யரான **ஸ்ரீசைலேசருக்கு** நிருபகமானாற்போல் யதீந்த்ரரான எம்பெருமானாரிடத்தில் ப்ராவண்யமே **ஸ்ரீசைலேசதயாபாத்ரரான** இவருக்கும் நிருபக மாயிற்று. "உந்தனபிமானமே உத்தாரகமென்று சிந்தை தெளிந்திருக்கச் செய்த நீ அந்தோ!

எதிராசா ! சதிராக நின்திருத்தாள் தா '' (ஆர்த்தி-56) என்று யதிராசனிடம் விண்ணப்பம் செய்வதன் மூலம், நமக்கும் எம்பெருமானுர் திருவடிஸம்பந்தமடியாகத்தான் நற்கதி உண்டாகவேண்டும் என்பதைக்காட்டி, இந்த விலக்ஷண ஸம்பந்தத்தை உண்டாக்கிக் கொடுத்து, அத்திருவடிகளே ப்ராப்யம் என்றும் காட்டிக்கொடுத்தது ஆசார்யன் பண்ணின மஹோபகாரம் என்பதை, ''மாசில் திருமலையாழ்வார் என்னை நேசத்தால் நின்பால் சேர்த்தார்'' (ஆர்த்தி-12) என்று உபகாரஸ்ம்ருதி வசனமாய் அருளிச்செய்தார். இதன் விளைவு, '' அவர்க்காய் எதிராசர் எம்மைக் கடுகப் பரமபதம் தன்னில் ஏற்றுவர்; என்னபயம் நமக்கே ?'' (ஆர்த்தி-21) என்ற துணிவு. இந்த அர்த்தத்தைப் பலபடியாலும் திடப்படுத்தி நமக்கு உபதேசமாய்ப் பேசுகின்ருர் மாமுனிகள். மேல் பாசுரத்தில் அருளிச்செய்யும்படி : '' எதிராசர் தம் அபிமானமென்னும் போதத்தை ஏறிப் பவமாம் புணரிதனைக்கடந்து பாதக் கரையைக் குறுகுவனே.'' (ஆர்த்தி-22). எதிராசாபிமான மென்னும் கப்பலில் ஏறி ஸம்ஸாரஸாகர மென்னும் பெருங்கடலைக் கடந்து, ச்ரியঃபதியான ஸர்வேச்வரனுடைய திருவடிகளான கரையை அடைவேன் என்று.

'' பொலிக ! பொலிக !'' என்னும் திருவாய்மொழியில் ஆழ்வார் ஸூசிப்பித்தபடியே '' அனைத்துலகும் வாழப்பிறந்தவன் எதிராசமாமுனிவன் '' (ஆர்த்தி-41). இந்தப் பெருமை எம்பெருமானுக்கும் கிடையாது. '' அதிகாரமுண்டேல் அரங்கர் இரங்காரோ ? அதிகார மில்லாதார்க்கன்றே எதிராசா ! நீயிரங்க வேண்டுவது (ஆர்த்தி-41) என்று காட்டியுள்ளபடி ஞானநுஷ்டான பூர்த்தி என்கிற அதிகாரமுள்ளவர்களுக்கே பரமபுருஷன் க்ருபை கிட்டும். நம்போல் அதிகாரலேசமும் இல்லாதவருக்கு எம்பெருமானுர் க்ருபையே தஞ்சம். ' தேவி ஸூரிகுருணஞ்ச கடகத்வம் நது ஸ்வத:'' என்று ஒரு ப்ரமாணவசனம் உண்டு. பெரிய பிராட்டியார் தவிர மற்றத் தேவியர்க்கும், நித்யஸூரிகளுக்கும், ஆசார்யர்களுக்கும் புருஷகாரத்வம் தம்மிடையே இயல்பாக உள்ள தர்மமில்லை என்று இதற்குப் பொருள். இவர் களிடத்தில் புருஷகாரத்வம் ஸித்திப்பது பெரிய பிராட்டியாரருளாலே. இவர்களெல்லாரும் அவள் பரிகாரங்களன்றே ? '' யச்சீலா ஸ்வாமி நீ தச்சீலோ தாஸ :'' என்னும்படி இருக்கும் எம்பெருமானுர்படி. பிராட்டிபோல் இவரும் நிக்ரஹமென்பதே அறியாதவராய், தம்ஸம்பந்தம் பெற்றவரெல்லாருக்குமே அருள்புறிவர். '' தவாஸ்மீதிசயாசதே ; அபயம் ததாமி '' என்று சக்ரவர்த்தித் திருமகன் ஸாதித்ததால் அவன் '' சரணம் '' என்ற சொல்லை எதிர்பார்த்து ரக்ஷிப்பவனுயினன் ; பிராட்டியோ, ராக்ஷஸிகளுக்கு ''பவேயம் சரணம் ஹி வ:'' என்று தானகவே அபயமளித்து, பின்பு திருவடி இவர்களை ஹிம்ஸிக்க இச்சித்தபோது, தடுத்துக் காப்பாற்றினுள். இதைத் திருவுள்ளத்தில் கொண்ட நம் ஆசார்யர்கள், பெருமாளுக்கு நேரில் குறை சொல்லாமல், ஸீதாபிராட்டியின் ரக்ஷணக்ரமத்தினுல் ராமகோஷ்டி தாழ்ந்து விட்டது என்றனர். பிராட்டியின் படியிலேயே எம்பெருமானுருடைய ரக்ஷணக்ரமம் அமைந்தது. ஸ்வாமி ஒரு பங்குனி உத்திரத் திருநாளிலே திவ்யதம்பதிகளான சேர்த்தியில் கத்யம் விண்ணம்பித்து ப்ரார்த்தித்துப் பெற்ற வரத்தின் பலனுக அவர் ஸம்பந்தம் பெற்றவர் களுக்கெல்லாம் பேறு நிச்சயம் என்று அறிகிருேம். இதுபற்றியே ''அரங்கர் நீ இட்ட வழக்கன்றே ? சொல்லாய் எதிராசா ! என்னுடைய இருவினையை இறைப்பொழுதில் மாற்றி ஏராரும் வைகுந்தத் தேற்றி விடாய் நீயே !'' (ஆர்த்தி-34) என்று வேண்டுகிருர். இப்படி வேண்டிப் பெற தமக்குள்ள உரிமையை, '' அரங்கர் எந்தை எதிராசர்க்கு ஈந்தவரம் சிந்தை செய்யில் நம்மதன்றே நெஞ்சமே! நற்றாதை சொம் புதல்வர் நம்மதன்றே தாயமுறை தான் ?'' (ஆர்த்தி-10). '' நிருபாதிக பிதாவினுடைய ஸொத்து தாயமுறைப்படி பிள்ளையைத்

தானே சேரும்? இந்த ஸொத்தையடைய ஒரு முயற்சியும் வேண்டாமே. அரங்கன் எம் தந்தை எதிராசர்க்குக் கொடுத்தவரத்தை நினைத்தால் அவர் ஸம்பந்தமடியரக நம் பர்யந்தம் அது ஸித்திக்கும் என்பதில் ஸம்சயமில்லாமல் பயமற்றிரு'' என்று தம் நெஞ்சைக் குறித்துச் சொல்லும் வகையில் நமக்கெல்லாம் தெளிவு பிறப்பித்தருளுகிறார்.

உபயவிபூதி ஐச்வர்யத்தையும் பெரியபெருமாளருளாலே பெற்று உடையவராய், அத்தாலே ஸ்ரீவிஷ்ணுலோக மணிமண்டப மார்க்கதாயியாய்த் திகழும் எதிராசர் திருவடி களிலே ப்ரவணரான மணவாளமாமுனிகள் பண்ணும் ப்ராப்யப்ராத்தனை மாமுனிகளின் அபிமானபூதர்களான நமக்கெல்லாருக்குமே ஆகும். மாமுனிகள் தமக்கு இப்படி யதீந்த்ர ப்ராவண்யம் உண்டாகைக்கு அடியாக விண்ணப்பிக்கும் பாசுரம்: "எந்தை திருவாய் மொழிப்பிள்ளை இன்னருளால் உந்தன் உறவை உணர்த்தியபின்—இந்தவுயிர்க் கெல்லா உறவும் நீயென்றே எதிராசா! நில்லாததுண்டோ? என்நெஞ்சு'' (ஆர்த்தி-58) எம்பெரு மானுரே இந்த ஆத்மாவுக்கு ஸர்வவிதபந்து என்று ஸ்வாசார்யரான திருவாய்மொழிப்பிள்ளை பரமக்ருபையுடன் காட்டிக்கொடுத்தபின் அந்த அத்யவஸாயத்தில் தம்மனஸ்ஸு நிலைநிற்ப தாகத் தம் நிஷ்டையை வெளியிட்டருளுகிறார்.

தம்முடைய யதிராஜப்ராவண்யத்தையும், அதற்கடியையும் இதேமுறையில் யதிராஜ விம்சதியிலும் அருளிச்செய்கிறார் நம் ஸ்வாமி. "ஸ்ரீமந் யதீந்த்ர! தவதிவ்யபதாப்ஜ ஸேவாம் ஸ்ரீசைலநாதகருணாபரிணாமதத்தாம் தாமந்வஹம் மமவிவர்த்தய'' (ய.வி.-19) ஆசார்யரான ஸ்ரீசைலநாதருடைய அநுக்ரஹத்தால் பெற்ற தேவரீருடைய திருவடிகளில் கைங்கர்யத்தை தேவரீரே வளர்ச்சிபெறும்படி அருளவேண்டும்—என்றும், "ரங்கராஜ: வச்யஸ்ஸதா பவதிதே யதிராஜ! தஸ்மாத் ஸ்வகீய ஜநபாபவிமோசனே த்வம் சக்த:'' (ய.வி.-17)-ஸ்ரீரங்க நாதன் தேவரீருக்கு எப்போதும் வச்யராயிருப்பதால் தேவரீருடைய திருவடிஸம்பந்திகளுக் கெல்லாம் பாபங்களைப் போக்கியருளக் கூடியசக்தி தேவரீரிடம் உள்ளது. ஆதலால் அடியேனுக்கு இரங்கியருளவேணும்—என்றும் "ஸாசத்வயைவஹி கமலாரமணேர்த்திதா யத்க்ஷேமஸ் ஸ ஏவ ஹி யதீந்தர பவச்ச்ரிதாநாம் (ய.வி.-18) ச்ரிய: பதியான எம்பெரு மானிடத்தில் தேவரீர் ப்ரார்த்தித்துப் பெற்ற அதுவே (அந்த வரமே) அடியோங்களுக் கெல்லாம் க்ஷேமமளிப்பதாக ஆகவேண்டும் என்று விண்ணப்பம் பண்ணி, எம்பெருமானார் க்ருபையே உத்தாரகம் என்னுமர்த்தத்தை உபதேசித்தருளினார். ஸ்ரீவைஷ்ணவனுக்குத் தனித்து ஸர்வேச்வரனிடத்தில் ஒரு சரணாகதி பண்ணவேண்டாம். எம்பெருமானார் திருவடி ஸம்பந்தமே நமக்கு உத்தாரகமாய் அமைந்துள்ளது. இந்த ஸம்பந்தத்தை உண்டாக்கிக் கொடுக்கும் ஸாக்ஷாதாசார்யனிடம் க்ருதஜ்ஞதை நெஞ்சில் ஸதா நடக்கவேணும் என்பவை ஆர்த்திப்ரபந்தத்திலும் யதிராஜவிம்சதியிலும் தேறும் உத்தமமான அர்த்தங்கள்.

ஸ்ரீரங்கநாதன் ஓராண்டுகாலம் மணவாளமாமுனிகள் ஸாதிக்க, ஈடுமுப்பத்தாறு யிரப்படியுடன் திருவாய்மொழியர்த்தம் கேட்டுத் தான் மாமுனிகளுக்குச் சிஷ்யனானபடியை லோகமெல்லாம் அறியும்படி, ஸ்வாமி விஷயமாக "ஸ்ரீசைலேசதயாபாத்ரம்'' என்று ப்ரஸித் தமான தனியனை ஸாதித்தது எல்லாருமறிந்ததே. ஸாக்ஷாத் ஸர்வேச்வரனாலேயே அருளிச் செய்யப்பட்ட இந்த மந்த்ரத்தைவிட உத்க்ருஷ்டமான மந்த்ரமே இல்லை என்றால் மிகை யாகாது. ஸ்ரீசைலேசதயாபாத்ரம் என்றதால் சொல்லப்பட்ட ஆசார்யாபிமானத்தின் பலனை பகவத்ப்ராப்தியாகச் சொல்லாமல் யதீந்த்ரப்ராவண்யமும் தீபக்த்யாதி குணார் ணவத்வமுமாகக் காட்டப்பட்டன இங்கு. ஸ்வாமி மணவாளமாமுனிகள் யதீந்த்ரப்ரவண

ராகவும் ஞானபக்தி வைராக்யங்களாகிற குணங்களுக்குக் கடலாகவும் திகழ்ந்ததற்கடி, “எந்தை திருவாய்மொழிப்பிள்ளை இன்னருளால் வந்த” என்று உணர்த்தப்பட்ட ஸ்ரீசைலேச க்ருபை. ஸம்ஸ்க்ருதத்தில் “தனவாந் ஸுகீ” என்று ஒரு வசனமுண்டு. பணககாரனுக இருப்பவன் அதடியாக ஸுகங்களை அநுபவிக்கிருன். இவனுடைய ஸுகாநுபவம் இவன் தனவானுய் இருப்பதன் கார்யம் என்று இதற்குப்பொருள். நம் ஸ்வாமிக்குள்ள யதீந்தரப்ரா வண்யம், ஆத்மகுணபூர்த்தி ஆகிய பெருமைகள், ஸுகாநுபவமானது ஒருவனுக்கு எப்படி தனமடியாக ஏற்படுமோ, அப்படியே இவருக்கு ஸ்ரீசைலேச தயாபாத்ரரானதாலே உண்டானவை. ஸ்வாசார்யக்ருபையால் நாம் பெறும் யதிராஜாபிமானமே நமக்கு உத்தாரகம் என்ற மாமுனிகள் நிஷ்டையை ஆர்த்திப்ரபந்தத்திலும் யதிராஜவிம்சதியிலும் நமக்குக் காட்டப்படும் பரமார்த்தமாகக்கொண்டு, இந்த நிஷ்டையில் திடமான அத்யவஸாயம் நமக்கு ஏற்படும்படி ‘வந்தே ரம்யஜாமாதரம் முநிம்’ என்று மாமுனிகளைச் சரணம் பற்றுவோம்.

பெரிய ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

# ஸ்ரீ பார்த்தஸாரதிஸ்வாமி தேவஸ்தானத்தில் அநுஸந்திக்கப்படும் கட்டியங்கள்

## 1. ஸம்வத்ஸர உத்ஸவத்தில் மணவாளமாமுனிகள் மங்களாசாஸனத்தின் போது—எச்சரிக்கை.

1. **உடையவர் ஸந்நிதியில்:—** ஸ்ரீமத்யதீந்த்ர ப்ரவணபிதாந-எச்சரிக்கை
உபநிஷத்கிரி குஹோபகூட யதிவரதத்வவிதக்ரேஸர-எச்சரிக்கை,

2. **தாயார் ஸந்நிதியில்:—** ஸ்ரீமத் ப்ருகுமுநிதப: பலாவதார வேதவல்லீ கடாக்ஷ பாத்ரபூத-எச்சரிக்கை
வேதார்த்தமறுதியிடும் நூலாதிப்ரகரணத்தால் வேதவல்லி புகழனைத்தும் ஒதி உணர்ந்துரைத்த தேவ-எச்சரிக்கை,

3. **தேவப்பெருமாள் ஸந்நிதியில்:—** ஸ்ரீதேவராஜப்ரவர்த்தித ஸ்ரீவசநபூஷண திவ்யசாஸ்த்ர வ்ருத்திகார-எச்சரிக்கை
ஆனையின்துயரம் தீரப்புள்ளூர்ந்து சென்று நின்று ஆழிதொட்டானை அடைந் துய்ந்த தேவ-எச்சரிக்கை

4. **திருமழிசைப்பிரான் ஸந்நிதியில்:—** ஸ்ரீபக்திஸார பாதயுகல பக்திஸார-எச்சரிக்கை
இடங்கொண்டகீர்த்தி மழிசைக்கிறைவன் இணையடி அடைந்துயந்ததேவ-எச்சரிக்கை

5. **அழகியசிங்கர் ஸந்நிதியில்:—** ப்ரஹ்லாத ஆஹ்லாதந ஹிரண்ய பயங்கர வரேண்ய ந்ருஸிம்ஹ சரண்ய-எச்சரிக்கை
பள்ளியிலோதி வந்த வொள்ளிய சிறுவன் ஆதித் தெள்ளிய சிங்கத்தின் பள்ளியரவான தேவ-எச்சரிக்கை

6. **ஆண்டாள் ஸந்நிதியில் :—** ஸ்ரீமத் கோதாக்ரஜாவதார-எச்சரிக்கை
திருப்பாவை முப்பதையும் விருப்பாலுரைத்த சுரும்பாற் குழற்கோதை திருப்பாதம் பணிந்த தேவ-எச்சரிக்கை

7. **ஆளவந்தார் ஸந்நிதியில் :—** யாமுனார்யமந: காமநா கல்பதரோ-எச்சரிக்கை
எதிகட்கிறைவன் யமுனைத்துறைவன் இணையடியாம் கதி பெற்றவர்க்கன்பு பூண்ட தேவ-எச்சரிக்கை

8. **பார்த்தஸாரதிஸ்வாமி ஸந்நிதியில் :—** ஸ்ரீவசந பூஷண வ்யாக்யா வ்யக்தீக்ருத பாண்டவதூதவைபவ-எச்சரிக்கை
போர்ப்பாகு தான் செய்த தேர்ப்பாகனார்க்கே தீர்ப்பாரையாமினியை ஓர்ப்பாலுரைத்ததேவ-எச்சரிக்கை

9. **நம்மாழ்வார் ஸந்நிதியில் :—** இப்புவியிலரங்கேசர்க்கீடளித்த தேவ-எச்சரிக்கை
க்ருஷ்ணத்ருஷ்ணாதத்வாவதாராயித சடமதன சரணாம்புஜ யதிவரசரணப்ரவண-எச்சரிக்கை

## 2. ராத்ரி ஏகாந்த ஸேவையில் அநுஸந்திக்குமவை,

முன்னிலும் பின்னழகிய தேவ —எச்சரிக்கை
அஞ்சுகுடிக்கொரு ஸந்ததியாம் ஆண்டாள் தமக்குமண்ண ரர்னவர்க்கன்பு பூண்ட தேவ—எச்சரிக்கை
ஸ்ரீபாரங்குசார்யதிவ்யஸூக்தி ஷட்த்ரிம்சத் ஸஹஸ்ர வ்யாக்யா ப்ரவர்த்தந—எச்சரிக்கை
பவபயாபிதப்தஜந பாகதேயவைபவ பாவிதாவதரண—எச்சரிக்கை
அகிலஜகத்திதாநுசாஸந ப்ரவ்ருத்த ச்ருதிசிகர நிகராந்தர்ஜ்வர பிஷக்வர—எச்சரிக்கை
ஸ்ரீபகவத் பாஷ்யகாராவதார—எச்சரிக்கை
ஸ்ரீரங்கராஜப்ரகடித நிஜபத்ய வைபவ—எச்சரிக்கை

## 3. சாத்து முறையன்று திருக்கைத்தல ஸேவையில் அநுசந்திக்குமவை

நாய்ச்சிமார் எழுந்தருளும்போது—ஸ்வாமிநீ— எச்சரிக்கை
பெருமாள் எழுந்தருளும்போது—
ஸூராஸூரமுகுட சூடாரஞ்சித பாதாரவிந்தயுகல—எச்சரிக்கை
அன்றியவராணனுயிரம் தேர்ளும்துணிய அன்ருழிவிடுத்ததேவ—எச்சரிக்கை
குந்தீஸூதரதாச்வ குரரஜோதூஸரித கேசபாச—எச்சரிக்கை
பாழியால் மிக்கபார்த்தனுக்கு அறுமூன்று மளித்துகந்ததேவ—எச்சரிக்கை
கம்பீராம்பஸ்ஸமுத்பூத ஸூம்ருஷ்டநாள ரவிகர விகஸித புண்டரீக தலாமலாயதேக்ஷண—எச்சரிக்கை

## 4. திருமஞ்சன கட்டியம்.

### ஸ்நபந காலத்தில் அநுஸந்திப்பது.

நாயன்தே—நாயன்தே

ஸ்ரீமத்ரங்கம் ஜயதுபரமம் தாமதேஜா நிதானம்
பூமா தஸ்மின் பவது குசலீ கோபி பூமாஸஹாய:।
திவ்யம் தஸ்மை திசது விபவம் தேசிகோ தேசிகானும்
காலே காலே வரவரமுனி: கல்பயந் மங்களாநி ॥
இப்புவியிலரங்கேசரக்கீடளித்த பெருமாள்
எழில்திருவாய்மொழிப்பிள்ளை இணையடியாம் பெருமாள்
ஐப்பிசியில் திருமூலத்தவதரித்த பெருமாள்
அரவரசப் பெருஞ்சோதி அநந்தனென்னும் பெருமாள்
எப்புவியும் ஸ்ரீசைலமேற்ற வந்த பெருமாள்
ஏராரு மெதிராசன் எனவுதித்த பெருமாள்
முப்புரிநூல் மணிவடமும் முக்கோல் தரித்தபெருமாள்
மூதரிய மணவாளமாமுநியாம் பெருமாள்
நம் தேசிகசிகாமணிப் பெருமாள்—

*1.* தேவரீர் திருவடித்தாமரைகளில் தாஸ்யார்ஹ ஸாரஸ்யதானுர்த்தமாக ஆஸநாரவிந்தத்தில் அழுத்தியிட்ட இடது கழலும்

*2.* இடத்துடையின் மேல் வளர்த்திக் கண்ணுரக்கண்டு கழிவதோர் காதலுற்ருர்க்குக் காட்டியிட்ட வலது கழலும்

*3.* ஸாக்ஷாங்மன்மத மன்மதாயமான மதுமதந விஜயதூணீரயுகளம் போலிணைத்து வைத்த கணைக்கால்களும்

*4.* கீழ்நோக்கு மொளி வெள்ளம் மரியுண்டு சுழித்தாற் போலிரண்டருகும் திரண்டுருண்டு மடியுண்ட முழந்தாள்களும்

*5.* கந்தலித கதலீகாண்ட கரிகர கலபங்கள் போலே பருப்பருத்த திருத்துடைகளும்

*6.* திருவரையில் பாங்காக ஆஜங்கந்தழைத்துடுத்த அந்திபோல் நிறத்தாடையும்

*7.* நிலைநின்ற மின்னல்கொடி போல் அதினிடையில் நிகுநிகென்று பொன்னரை நாண் பூண்டவழகும்

*8.* ஸௌந்தர்ய துக்த ஸிந்து நடுக்குழித்திட்ட சுழிமோல் ஸுந்திரமாமுந்தி மலரும்

*9.* லாவண்ய தரங்கிணியில் அலையொழுங்கு விழுந்தாற்போல் திகழ்கின்ற திருவலிகளும்

*10.* அலர்கின்ற தாமரைபோல் அஞ்சலித்த தடக்கைகளும்

*11.* தங்கவளை மேல் தங்கித்தொங்குகின்ற சங்கலிகளோடிணைக்கமுற்ற கணைக்கைகளும்

*12.* முறுக்கு முன்கையோடு உள்விம்மிப் புறங்குவித்து மடியுண்ட முழங்கைகளும்

13. கநகமய குலதங்களைக் கடைந்தெடுத்து மடுத்தாப்போல் இரண்டருகும் திரண்டு நீண்ட பாஹுதண்டங்களும்

14. ப்ரஹ்மபுர கோபநார்த்தமிட்ட ஹாடகமய கவாடம்போல் பளபளவென்றகன்று காட வ்யூடமாய் திகழ்கின்ற திருமார்பினழகும்

15. அம்மார்பினழகில் அழுந்துவார்க்கோர் அவலம்பஸூத்ரம்போல் இரங்குகின்ற முந்நூலழகும்

16. ஸேச்வர விபூதித்வயமும் இளைப்பாறும் நிழல்தடமாய் வளர்ந்துயர்ந்த திண்டோள்களும்

17. கண்ட வ்யஸ்த தாராக்ஷரங்கள் புறம்பொசிந்து காட்டினாற்போல் ரேகாத்ரய விபக்தாங்கமாய் வலம்புரியின் சுழியொழுங்கை பழித்தெழுந்த திருக்கழுத்தினழகும்

18. மறுக்கழித்தின சந்திரமண்டலத்தையும் அப்போதலர்ந்த செந்தாமரைப் பூவையும் அத: கரித்துக் கிட்டினாரை மையலேற்றி மயக்கும் மாயமந்திரமாய் விளங்குகின்ற ஸ்மயமான முகாரவிந்தமும்

19. இசைந்து கனிந்த த்ராக்ஷாத்வயம்போல் வகுப்புண்ட சுபுக விகாஸமும்

20. ஸாகூதவார்த்தோத்யுக்தமாய் துடிப்பது போல் விளங்குகின்ற அவ்யக்த மதுர மந்தஹாஸ விலாஸமும்

21. ஸ்படிகமய முகுர மண்டலங்கள்போல் தளதளென்ற திவ்ய கபோலங்களும்

22. கநககமகர குண்டலத்வயத்தால் தழைந்து வடிவிட்டுச் சுருண்டு நீண்டு தோளளவும் தொங்குகின்ற கர்ணபாசங்களும்

23. மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோவென்று நித்யஸந்தேஹ ஜநகமான கோலநீண்கொடி மூக்கினழகும்

24. மிதோபத்தஸ்பர்த்தஸ்புரித சபரத்வந்த்வ லலிதங்களால் புடைப்பரந்து மிளிர்ந்து நீண்ட தண்டாமரைக்கண்களும்

25. குஞ்சத்கர்ஷ குண்டலிதமான திருச்சார்ங்கம்போல் வளைந்த திருப்புருவ வட்டங்களும்

26. அஷ்டமீ சந்த்ரன் அம்ருதப்ரவாஹங்கள் கற்பகக்கொடியடியில் பெருகி வந்து தேங்கினாற்போல் திருநுதல்மேல் இலங்குகின்ற நாஸிகாமூலத்ருத ஸ்ரீராமாநுஜ தீவ்யத் திவ்யோர்த்வபுண்ட்ரவிசேஷமும்.

27. அதனிடையில் உபயவிபூதி பட்டாபிஷேக ஸாம்ராஜ்ய லக்ஷ்மீவிஹரதநிக்ஷிப்த பதகமலலாக்ஷாபங்கம்போல் சிவந்து படிந்து விளங்குகின்ற ஸ்ரீசூர்ண ரேகையும்

28. உயர்ந்து மலர்ந்த திருமுடியும்,

29. வளர்ந்து மடிந்து வ்யக்தாவ்யக்தமாய் விளங்குகின்ற திருக்குழலொழுங்கும்

30. சுற்றிச்சுழற்றிக் குழைத்திட்டு முடித்துத்தொங்கவிட்ட சிகாபந்தமும்

31. பின்னெடுத்த பிடரியழகும்

32. திருவநந்தாழ்வான் பின்படம்போல் நடுப்பதிந்து விசாலமாய் நெரித்திட்ட திருமுதுகும்

33. வலவருகில் முன்னேட்டித் தாங்கியிட்ட த்ரிதண்டாக்ரமும்

34. சீரியதோர் நிதிபோலே திருமுன்பே நோக்கிக்கொண்டிட்டு வைத்த திருவடி நிலைகளுமாய்

இப்போது தேவரீர் திருமஞ்சனம் கண்டருள எழுந்தருளி யிருக்குமழகிது,

ஏதேனும் சிந்தை மருளோ?
ஜகன்மோகன மந்த்ரப்ரபாவமோ?
ஸகலரஸகுளிகா விலாஸமோ?
ஸர்வ போக சிந்தாமணி ப்ரகாசமோ?
ஸகலஜநஸுக்ருதவி பாகமோ
நிகிலபலகல்பலதா ப்ரஸரமோ?
அகில ஜக்ஜ்ஜீவந மூலமோ?
அதுலாநந்தகந்தாவதாரமோ?
ஸமஸ்த ஸம்பத் ஸாம்ராஜ்ய வேஷமோ?
ஸர்வமங்கள ஸந்தான ப்ரஸவமோ?
ஸகலகலாரஹஸ்யஸர்வஸ்வமோ?
ஈதெல்லாம் திரண்டெழுந்து கொண்டதோர் வடிவோ?
இதுவுமன்றியில் அப்ரமேய தேஜஸ்ஸோ?

நாங்கள் ஏதென்றறியா இவ்வழகுடன் தேவரீர் ஊழிதோறுமூழிதோறும் வாழ்ந்திடுக வாழ்ந்தி வாழ்ந்திடுகவே யதி ஸார்வபௌமனே! திருமஞ்சனம் கண்டருள்வதே! ஜயவிஜயீபவ!

ஸஹஸ்ரதாரை திருமஞ்சனத்தின் போது.

நாயன்தே — நாயன்தே —

ஸத்யம் ஸத்யம் புநரிதிபுரா ஸாரவித்பிர்யதுக்தம்
ப்ருமச்ச்ரோத்ராத் ச்ருணுத ஸுதியோ மத்ஸரம் வர்ஜயித்வா।
தத்வம் விஷ்ணு: பரமநுபமம் தத்பதம் ப்ராப்யமேவம்
தத்ஸம்ப்ராப்தௌ வரவரமுநி: தேசிகோ தீர்க்கதர்சீ॥

பூத்வாபூயோ வரவரமுநி: போகிநாம் ஸார்வபௌம:
ரக்ஷத்யஸ்மாந் ரகுகுலபதேராச்ரிதோ பத்ரபீடம்।
தம் தம் கத்வா வ்ரஜ சரணமித்யாதிசத் ராகவோயம்
ஸ்வப்நே ஸோயம் வரவரமுநி: ஸம்ச்ரயோமாத்ருசாநாம்॥

பராக் பராக் நம் தரசனஸ்தாநாசரார்ய பராக்
செந்தழ் வேதியர் சிந்தைமகிழ்நிதட ஈடுரைத்த வசைவோ
சீருலகாரியன் நற்கலையுண்மை விரித்துரைத்த வசைவோ
மங்கமதிப்புவி மானிடரு ய்ந்திட வந்தளித்த அசைவோ
மாசறு ஞானியர் சேரெதிராசரை மன்னி வாழ்த்துமசைவோ
கந்தமலர்க் குருகாதிபனந்தமிழ் சிந்தை செய்த வசைவோ
கார்மர் மேனியரங்கரை நாடொருங்கண்டு போற்றுமசைவோ
சாந்தொடு மஞ்சளுமெண்ணெய் புளிப்பழமஞ்சனமாமிவையாம்
மஞ்சனமாடி மகிழ்ந்தருளீர் மணவாளமாமுநியே! ஜயவிஜயீ பவ.

ஸ்ரீ:

# மணவாளமாமுனிகள் விஷயமான ஸ்தோத்திரங்கள்

மணவாளமாமுனிகள் விஷயமாக ஸ்வாமியுடைய நேர் சிஷ்யர்களும் பின்புதோன்றியவர்களும் பலபல துதிகள் இயற்றியுள்ளார்கள். எம்பெருமானுர் விஷயமாகக்கூட இவ்வளவு துதிநூல்கள் இயற்றப்படவில்லை. மாமுனிகளுடைய ஆத்மகுணங்களும் திருநாவீறுமே துதிக்கு முக்கிய விஷயங்களாக அமைந்துள்ளன. ஸ்ரீசைலேசாஷ்டமும் ஸ்ரீசைலவைபவமும் முன் தொகுதியிலேயே சேர்க்கப்பட்டன. இங்கு தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலுமாக சில ஸ்துதிகள் இடம் பெறுகின்றன. இங்கு இடம் பெருதவை பல பலவுள. எல்லாவற்றையும் சேர்க்க இயலவில்லை.

## *1.* ப்ரதிவாதிபயங்கரம் அண்ணு அருளிச்செய்த பாதாதிகேசமாலை

(மணவாளமாமுனிகள் விஷயமான அமலனுதிப்பிரான்)

[1] போதச்சிவந்து பரிமளம் வீசிப் [2] புதுக்கணித்த
[3] சீதக்கமலத்தை நீரேறவோட்டிச்சிறந்து அடியேன்
[4] ஏதத்தைமாற்று மணவாளயோகி இனிமை தரும்
பாதக்கமலங்கள் கண்டேன் எனக்குப்பயமில்லையே. 1

[5] வேழக்குருத்தின் அழகைப் பழித்து [6] விரைமருவு
வாழைப்பருவத்தின் ஆகாரங்கொண்டு வளம்புனைந்த
ஏழைக்கிரங்கும் மணவாளயோகி இரு[7] குறங்கைக்
[8] கேழற்ற நெஞ்சில் வைப்பேற்கு ஒருகோலமும் கேடில்லையே. 2

[9] தேனமர்மாலை மணவாளயோகி [10] திருமருங்கு
வீனமிலாத இளமையின் எழில்[11] சகனம்
வானிலையுய்த்த [12] துவராடை இன்று என் மனத்தை விட்டுத்
தான் அகலாமல் என்னை ஊழிகாலமும் தாங்கியவே. 3

வந்திக்க வாழ்வித்து அருள்மணவாளமுனி வடிவைச்
சிந்திக்கவும் அரிதாம் ; அழகாற்றில் திகழ் சுழிபோல்
[13] உந்திச்சுழி எனது உள்ளமும் [14] சூறை கொண்டாயதென்றும்
சந்தித்தவர் கண்ணும் நெஞ்சும் கொள்ளா நிற்கும் தாமிருந்தே. 4

ஆரும் வணங்கு மணவாளமாமுனி [15] அம்புயமும்
[16] காரும் [17] சுரபியும் போலே வழங்கும் கைத்தாமரையில்
சேரும் [18] திருத்தண்டும் சேவித்த மானிடர் தீவினையால்
[19] ஈரும்படிப் பிறவார் திருநாட்டு இன்ப மெய்துவரே. 5

---

1. தாமரைப்பூவைப்போல செவ்வியுடையதாய் 2. அலங்கரித்த 3. குளிர்ந்த தாமரை 4. துன்பம், பாபம் 5. மூங்கில் 6. வாஸனை 7. தொடை 8. ஒப்பில்லாத 9. தேன் பொழியும் மலர்களாலான மாலைதரித்துள்ள 10. இடை 11. தொடையினுட் பக்கம் 12. காஷாயம் 13. கொப்பூழ் (நாபி) 14. கொள்ளை 15. புஜம்—திருத்தோள் 16. மேகம் 17. அமுதசுரபி—காமதேனு 18. த்ரிதண்டம்; கையுமேந்திய முக்கோலும் வாழியே என்கிறபடி. 19. அறும்படி.

[1] தடங்கொண்ட [2] கோயில் மணவாளமாமுனி [3] தாமரைத்தார்
[4] வடங்கொண்ட மார்பினில் [5] வண்புரிநூலும் எனது நெஞ்சில்
இடங்கொண்டு அடங்க எழுதிவைத்தேன் இனி வல்வினைகாள்
திடங்கொண்டு நீசர் தம் தேயத்தில் ஏகிடும் தீதறவே. 6

மங்காது உலகை அருள் மணவாளமுனி [6] மருவார்
சிங்கார மாலைத் திருத்தோள்களும் அவற்றேதிகழும்
[7] சங்காழியும் தொழுதேத்தினேனல் [8] தமியேனுடைய
பங்காளும் வல்வினை எங்கோ கணத்தினில் [9] பாறியவே.

பொழியும் [10] தமிழ்புனையும் மணவாளமுனி[11] கருணை 7
பொழியுந் திருவிழியும் திருமூக்கும் பொலிமறைகள்
செழியன்பு கொண்டு உரைக்கும் திருநாவும் திருமுகமும்
வழியன்பு கொண்டு [12] வழுத்தினேன் பேரின்பமற்றில்லையே. 8

[13] பொருநல் துறையில் அருளாலிருந்த [14] நம்புங்கவர்கோன்
அருள்நல் தமிழுரை மாமணவாளவரு முனிவன்
திருநெற்றியும் திருநாமமும் [15] நாலும் திருச்சிகையும்
[16] வருணத்தெழிலும் மனத்தினுள்ளே நின்று வாழ்விக்குமே. 9

வாழிசெந்தாமரைத்தாள் துவராடை மருங்கு கொப்பூழ்
வாழி முந்நூலுறை மார்பு முக்கோலங்கை வாழி திண்தோள்
வாழி செவ்வாய் விழி வாழி பொன் நாம மருவு நுதல்
வாழி பொற்கோயில் மணவாளமாமுனி வாழ் முடியே. 10

ப்ர. அண்ணா அருளிச்செய்த

சாத்துமுறை வாழிதிருநாமப்பாட்டும் இங்கு அநுஸந்தேயம்

செய்யதாமரைத் தாளிணை வாழியே
சேலைவாழி திருநாபி வாழியே
துய்யமார்பும் புரிநூலும் வாழியே
சுந்தரத்திருத்தோளிணை வாழியே
கையுமேந்திய முக்கோலும் வாழியே
கருணை பொங்கிய கண்ணிணை வாழியே
பொய்யிலாத மணவாளமாமுனி
புந்திவாழி புகழ் வாழி வாழியே.

---

1. விசாலமான 2. ஸ்ரீரங்கம் 3. தாமரை மணி மாலை 4. மணி வடம் 5. ய்ஜ்ஞோபவீதம்—முப்புரிநூல் மணிவடமும் முக்கோல் தரித்தான் வாழியே—காண்க 6. வாஸனை பொருந்திய 7. திருவாழி திருச்சங்கு—திருவிலச்சினை ; வைஷ்ணவ அடையாளங்கள் 8. வேறு கதியில்லாதவன் 9. ஓடிவிட்டனவே 10. தமிழில் இனிமையான பாக்கள் இயற்றும் 11. கருணை பொங்கிய கண்ணினை வாழியே—காண்க 12. துதித்தேன் 13. தாமிரபரணி 14. உத்தம ஆசாரியன் 15. தாழ்ந்தமுடி 16. நிறம்.

ஸ்ரீ:

2. கோயில்கந்தாடை அண்ணன் அருளிச்செய்த

# மணவாளமாமுனிகள் கண்ணிநுண்சிறுத்தாம்பு

தனியன்

எக்குணத்தோர் எக்குலத்தோர் எவ்வியல்போர் ஆயிடினும்
அக்கணத்தே நம் இறைவராவாரே — மிக்க புகழ்க்
காரார் பொழில் கோயில் கந்தாடை அண்ணனென்னும்
பேராளனை அடைந்தபேர்.

---

சீருற்ற செஞ்சொல் திருவாய்மொழிப்பிள்ளை செம்முகமும்
[2] தாருற்ற மார்பும் [3]தளிரேய் பதங்களும் தன்மனத்துப்
[4]பூரித்து வாழும் மணவாளமாமுனி பொன்னடிகள்
பாரில் [5] தனித்த அடியேன் சரணென்று பற்றினனே. 1

பற்றினன் செம்மைத்திருவாய் மொழிப்பிள்ளை பாதங்களே
[6] உற்றனன் செம்மறை யுள்ளதெல்லாம் இவைஉண்மையென்றே
கற்றனன் கோயில் மணவாளமாமுனிக் [7] கார்முகிலைப்
பெற்றனன் இங்கு அடியேன் இனிமேல் பிறவாமலுக்கே. 2

பிறவாமல் வாழ்விக்கும் [8] பேரருளாளர் பெருமையென்றும்
துறவாத சிந்தை எதிராசன் [9] துய்யபதங்கள் நெஞ்சில்
மறவாத சீலன் மணவாளமாமுனி மாமலர்த்தாள்
[10] பறையாத வாசகர் யாரவர் [11] பஞ்சம பாதகரே. 3

[12] பாதகமுள்ளவை தாமே ஒழித்துப் பரிந்தவர்க்குச்
சாதகமானதும் ஈதென்று கொண்டு சரண்கொடுக்கும்
[13] மாதகவோன் மணவாளமாமுனிப்பரன் மாமலர்த்தாள்
பாதுகையைச் சரணாய் முடிமேல் கொண்டு பற்றினர்க்கே. 4

நற்கேசவன் [14] தமர் நற்றவத்தோர் நயனங்களுக்குப்
[15] பொற்கோல மேனியன் பூதலத்தோர் செய்த புண்ணியமாம்
முக்கோல் தரித்த மணவாளமாமுனி மூர்த்திதனை
எக்கோடி காலமும் சிந்தை செய்வார் தமக்கீடில்லையே. 5

இல்லை என்றே எண்ணி என்[16]பவக்காட்டை எரியிலிட்டு
நல்லருள்மாரிபெய்து என்னைத் தளிர்ப்பித்து நன்கு தன்பால்
[17]தொல்லருள் ஞானம் விளைத்து [18] ஆழ்ந்த போகத்தைத் [19] துய்ப்பிக்கவே
வல்லவன் கோயில் மணவாளயோகியை வாழ்த்துவேனே. 6

---

1. பெருமையுடையவன் 2. மாலையணிந்த 3. தளிரைப் பழிக்கக்கூடிய திருவடிகள் 4. நிரப்பிக்கொண்டு 5. வேறுகதியில்லாத 6. அடைந்தேன் 7. மணவாளமாமுனியாகிய மேகம்; பிறர் வாழும்படி மழைபெய்து தன்னை அழித்துக்கொள்வது மேகம்; அப்படிக் கைமாறு கருதாது அருள்புரிபவர்; காரேய் கருணை இராமாநுசா—(இரா. நூற்-25) காண்க 8. அத்திகிரி அருளாளர் வரதராஜர் 9. பவித்திரமான—பரிசுத்தமான; எதிராசரிணையடி என்றும் மறவாதவர் மாமுனிகள் 10. சொல்லாத 11. கொடும் பாவங்களைச் செய்தவர்கள் 12. தடையாய் நிற்பவை 13. மிகவும் கருணை உள்ளவர்; பொன்னடியாம் செங்கமலம் என்னப்படும் ஸ்வாமியின் பாதுகையைச் சரணாய்ப் பற்றியவர்க்கு அதுவே பாதகங்களை ஒழித்து அநுகூலங்களைச் செய்யும்; உப. ரத். மாலை கடைசி பாசுரம் காண்க 14. அடியார் 15. மிகவும் அழகிய திருமேனி 16. ஸம்ஸாரமாகிய காடு—பாபங்களின் திரள் 17. அநாதியான; இயற்கையான அருள்; நிர்ஹேதுகமானது. 18. எல்லையில்லாத பேரின்பம் 19. அநுபவிக்கும்படி செய்ய

வாழ்த்துவேன் எந்தை மணவாளமாமுனி மாமலர்த்தாள்
தாழ்த்துவேன் யானவன் தாளிணைக்கீழ்ச் சிரந்தாரணியில்
[1] காழ்த்திடும் செல்வமுதல் [2] முக்குறும்பும் கரிசறவே
[4] பாழ்த்திடும் என்றனன் அதிகோர பாவங்கள் பற்றறவே. 7

பாவங்கள் பற்றறும் பாசங்கள் பற்றறும் பற்றிவைகும்
கோவங்கள் பற்றறும் குற்றங்கள் பற்றறும் கோடிசன்மத்
தாவங்கள் பற்றறும் தண்ணரங்கன் புகழ் [5] சாந்த குண
தீவன் கருணை மணவாளயோகியைச் சிந்திக்கவே 8

சிந்தித்து அரங்கரைச் சிந்தை பயங்கெடச் சென்னிதன்னால்
வந்தித்து நிச்சலும் வாயார வாழ்த்துமெய்ம் மாமறையோர்
[6] புந்திக்குள் மேவும் வரயோகி தம்மைப் [7] புகைந்துசிலர்
சிந்திக்கினுமே விடார் இது காண் அவர் [8] நீர்மை நெஞ்சே. 9

[9] நெஞ்சே அணைய அடியார் [10] நிறங்கொண்ட நிச்சயமாம்
[11] மஞ்சேறு சோலை அரங்கப்பதி தனில் வாதியர்க்கு
நஞ்சேயனைய மணவாளயோகி இந்நாளளிக்கும்
தம்சேவை தன்னை இகழ்வார்க்கல்லால் அவர்தாமிட்டரே. 10

இட்டர்கள்வாழ எதிராசர் வாழ இருநிலத்தே
[12] சிட்டர்கள் வாழ நம்[13] தேசிகர் வாழச் செகத்திலுள்ள
துட்டர்கள் மாள மணவாளமாமுனி தோன்றினனே
[14] எட்டு மிரண்டும் அறியாரிங்கு [15] ஏசினும் யாவருமே. 11

யாவருமுய்ய மணவாளயோகி தயாளுவென்னப்
பூமகள் மண்மகள் புண்ணியமாய் இந்தப் பூதலத்தே
தாம் [16] அவதாரம் செயாதிருந்தால் சடகோபர் திரு
வாய்மொழியோடு கடலோசையோடு என்னவாசியுண்டே ? 12

வாசியறிந்த [17] வதரியில் நாரணனுர் மனங்கொள்
[18] தேசுடை எந்தை மணவாளமாமுனி சீர் தழைப்பச்
சீசயிலேச தயாபாத்திரமெனும் சீர்மந்திரம்
[19] தேசிகனுய்க் கண்டு உரைத்தார் இவ்வையகம் சீருறவே. 13

---

1. வைரம் பாயும்—எளிதில் அழிக்க முடியாதது 2. செல்வம், கல்வி, ஜாதி இதுபற்றி வரும் செருக்கு 3. தோஷம் போகும்படி 4. பாழாகும்படி செய்யும் 5 ஸத்வகுணத்தால் விளங்குமவன் 6. புத்தி 7 மாமுனிகளிடம் அஸூயை கொண்டு 8. பெருந்தன்மை ; 9. திருவுள்ளத்துக்கு இசைந்த அடியவர் ; அந்தரங்க சிஷ்யர்கள் ; 10. நிறம்—மார்பு ; உள்ளத்தில் கொண்ட நிச்சயம் 11. மேகம்படிந்த 12. சிஷ்டர்கள் - நல்லொழுக்கம் படைத்த பெரியோர் 13. ஆசாரியர்கள் 14. திருவெட்டெழுத்தான திருமந்திரம் ; இரண்டு வாக்யம் கொண்ட த்வயம் 15. இகழ்ந்தால் என்னவாகும் ? 16 மணவாளமாமுனிகள் அவதாரம் செய்திலனேல் திருவாய்மொழி கடலோசைபோல் பயனற்றிருக்கும் ; "மணவாளமாமுனி வந்திலனேல் ஆற்றிற்கரைத்த புளியல்லவோ தமிழாரணமே ?" (ஸம்பிரதாய சந்திரிகை—காண்க) 17 பத்ரிகாச்ரமம் 18. ஒளி 19. ஆசாரியனுய் ஸ்ரீசைலேச தயாபத்ர மென்னும் மந்திரத்தை பத்ரீநாராயணன் ப்ரகாசிப்பித்தான்

### 3. அப்பிள்ளார் அருளிச்செய்த

# சம்பிரதாய சந்திரிகை

(மணவாளமாமுனிகள் வைபவம்)

ஆதியிலே [1] அரவரசை அழைத்து அரங்கர்
அவனியிலே இருநூருண்டு இரும் நீரென்னப்
பாதியிலே உடையவராய் வந்து தோன்றிப்
பரமபதம் நாடி அவர் போவேனென்ன
நீதியாய் முன் போல நிற்க நாடி
[2] நிலுவைதனை நிறைவேற்றி வாரும் என்னச்
[3] சாதாரணமெனும் மா வருடம் தன்னில்
தனித்துலா மூலநாள் தான் வந்தாரே. 1

[4] நற்குரோதன வருட மகரமாத
நலமாகக் கன்னிகையை மணம் புணர்ந்து
[5] விக்கிரம வற்சரத்தில் வீட்டிருந்து
வேதாந்த மறைப்பொருளைச் சிந்தைசெய்து
புக்ககத்தில் பெண்பிள்ளை போலே சென்று
புவனியுள்ள தலங்களெல்லாம் வணங்கி வந்து
துக்கமற வைணவர்கள் தொண்டு செய்யத்
[6] துரியநிலை பெற்று உலகைஉய்க்கொண்டாரே. 2

செயநாமமான திருவாண்டு தன்னில்
சீரங்ராசருடைத் திருநாள் தன்னில்
செயமாகத் திருவீதி வாராநிற்கத்
தென்னுட்டு வைணவரென்ஒருவர் வந்து
தயையுடைய மணவாளப் பெருமானைர்
தன்முன்பே ஓரருத்தம் இயம்பச்சொல்லிச்
சயனம் செய்து எழுந்திருந்து சிந்தித்தாங்கே
சந்தித்துக் கோயில் காத்து அருளினரே. 3

வதரியாச் சிரமத்தில் இருமெய்த் தொண்டர்
வகையாக நாரணனை அடிவணங்கிக்
கதியாக ஓர்பொருளை அளிக்க வேண்டும்
கண்ணனே! அடியேங்கள் தேற வென்ன
[7] சதிராகச் சீர்சைல மந்திரத்தின்
[8] சயமான பாதியை ஆங்கு அருளிச்செய்து
பதியான கோயிலுக்குச் சென்மின் நீவிர்
பாதியையும் சொல்லுதும்யாம் தேற வென்றூர். 4

---

1. ஆதிசேஷன் - திருவநந்தாழ்வான், 2. பாக்கி, 3. ஸாதாரணவருஷம் ஐப்பசி மாஸம் திருமூல நல்நாளில் அவதாரம், 4. குரோதன வருஷம் தை மாதம் விவாஹம், 5. விக்கிரம வருஷம் ஸந்யாச ஆச்ரமம் பெற்றூர், 6. ஸந்யாசம், 7. அழகாக, 8. ஸ்ரீசைலேச தயாபாத்ரம் என்ற தனியனின் முன்பாதியை பத்ரீநாராயணனும் பின்பாதியை ஸ்ரீரங்கநாதனும் அருளிச்செய்தனர்.

சென்றவர்கள் இருவருமே சேர வந்து
திருவரங்கன் [1] தினசரியை கேளா நிற்பச்
சன்னிதிமுன் கருடாழ்வார் மண்டபத்தில்
தாம் ஈடு சாற்றுகின்ற சமயம் தன்னில்
பொன்னிதனில் நீராடிப் புகழ்ந்து வந்து
புகழரங்கர் சன்னிதிமுன் வணங்கி நிற்பச்
சன்னிதியினின்று அரங்கர் தாமே அந்தத்
[2] தனியனுரை செய்து தலைக் கட்டினரே. 5

நல்லதோர் பரிதாபி வருடந்தன்னில்
நலமான ஆவணியின் முப்பத்தொன்றில்
சொல்லரிய சோதியுடன் விளங்கு வெள்ளித்
தொல்கிழமை வளர்பக்க நாலாநாளில்
செல்வமிகு பெரியதிரு மண்டபத்தில்
செழுந்திருவாய் மொழிப்பொருளைச் செப்புமென்றே
[3] வல்லியுரை மணவாளர் அரங்கர் நங்கண்
மணவாள மாமுனிக்கு வழங்கினரே. 6

ஆனந்தவருடத்தில் கீழ்மை ஆண்டில்
அழகான ஆனிதனில் மூல நாளில்
பானு வாரங்கொண்ட பகலில் செய்ய
பௌரணையில் நாளிட்டுப் பொருந்தி வைத்தே
அனந்தமயமான மண்டபத்தில்
அழகாக மணவாளர் ஈடு[4] சாற்ற
வானவரும் நீரிட்ட வழக்கே யென்ன
மணவாள மாமுனிகள் களித்திட்டாரே. 7

தேவியர்கள் இருவருடன் சீரரங்கேசர்
திகழ்திருமா மணிமண்டபத்தில் வந்து
[5] தாவிதமா இந்த உலகோர்கள் வாழத்
தமிழ்மறையை வரமுனிவன் உரைக்கக்கேட்டே
ஆவணிமா சந்தொடங்கி நடக்கும் நாளில்
அத்தியயனத்திருநாள் அரங்க நாதர்
[6] தாவமற வீற்றிருந்து தருவாய் என்று
தாம் நோக்கி [7] சீயர் தமக் கருளினரே. 8

---

1. நாள்குறிப்பு 2. 'ஸ்ரீசைலேச' தனியனுக்குப் பெரியபெருமாள் வியாக்யானம் அருளிச்செய்தார் 3. பரிதாபி வருஷம் ஆவணி 31உ வெள்ளிக்கிழமை சுக்லசதுர்த்தியன்று திருவாய்மொழிப்பொருளைச் சொல்லும்படி ஸ்ரீரங்கநாதன் திவ்யாஜ்ஞை பிறந்தது. 4. ஆனந்த வருஷம் ஆனி மாதம் மூலநன்னாளில் பௌர்ணமியன்று ஈடுசாற்றப் பெற்றது. 5. தாவு-பற்றுக் கோடு 6. தாபம் போகும்படி 7. சீயர்-மணவாளமாமுனிகள்.

அருளினதே முதலாக அரங்க ருக்கும்
அன்று முதல் அருந்தமிழை அமைத்துக்கொண்டு
தெருளுடைய வியாக்கியை [1]ஐந்துடனே கூட்டித்
திகழ்திருமா மணிமண்டபத்தில் வந்து
பொருளுரைக்கும் போதெல்லாம் பெருமாளுக்குப்
புன்சிரிப்பும் பாவனையும் மகிழ்வும் கொள்ள
அருளுடைய சடசோபர் உரைத்த வேத
மதுகேட்டுச் சாற்றியது [2]இத்தனியன் தானே. 9

நாமார் மெருஞ்சீர்கொள் மண்டபத்து நம்பெருமாள்
தாமாக வந்து தனித்தழைத்து—நீ மாறன்
செந்தமிழ் வேதத்தின் செழும்பொருளை நாள்தோறும்
வந்துரையாய் என்னுரையால் வாய்ந்து. 10

சேற்றுக்கமல வயல் சூழரங்கர் தம் சீர் தழைப்பப்
போற்றித் தொழும் நல்ல அந்தணர் வாழவிப் பூதலத்தே
[3]மாற்றற்ற செம்பொன் மணவாளமாமுனி வந்திலனேல்
ஆற்றில் கரைத்த புளியல்லவோ [4]தமிழாரணமே.

ஜீயர் திருவடிகளே சரணம்.

4. ஸமீபகாலத்தவரான அபிநவகாளமேகம் தென்திருப்பேரை ஸ்ரீமதுபயவே அநந்த க்ருஷ்ணய்யங்கார் ஸ்வாமி இயற்றிய

## ஸ்ரீமணவாளமாமுனி ஊசல் திருநாமம்

என்னும் ப்ரபந்ததிலிருந்து சில பாடல்கள் :

### மங்களாசாஸனம்

திருவாழப் பூமகளாம் கோதை வாழத் தெய்வநாயகன் வாழப் பதின்மர் வாழக்
குருவான நாதமுனி முதலோர் வாழக் கோட்டிநகரோனுதி ஐவர் வாழத்
திருவாய்ந்த பெரும்பூதூர்ச் சிங்கம் வாழச் சீரீவரமங்கைப் பதி வாழ் எதியும் வாழ
மருவாரும் வண்டுளவோனடியார் வாழ மணவாளமாமுனிவ ராடி ரூசல் !

---

1. ஆறுயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்திநாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி என்ற ஐந்து வியாக்யானங்கள், 2. இவைகேட்டு மகிழ்ச்சிகொண்டு அரங்கன் அருளியது ஸ்ரீசைலேச தயாபாத்ரத் தனியன், 3. மிகவும் சிறந்த, 4. தமிழ் மறைகள் — மணவாளமாமுனிகள் அவதரிக்க வில்லையாகில் திருவாய்மொழியின் பொருள்கள் ஆற்றில் கரைத்த புளிபோல் வீணாகி இருக்கும்.

## அஷ்டதிக்கஜங்கள் கைங்கர்யம்

வரமங்கை மாமுனியோர் வடங்தொட்டாட்ட வடதிருவேங்கட முனியோர் வடங்தொட்டாட்டப்
பரவஸ்து பட்டர்பிரான் எறும்பியப்பா பணிவுடன் பின் இருமருங்கு வடங்தொட்டாட்டத்
தரமிகுமிரண்டண்ணர் கவரி வீசத்தக்கதிருவாலவட்டம் தெருள் அப்புள்ளார்
வரகுண அப்பிள்ளையிரு மருங்கிலோச்ச மணவாளமாமுனிவராடி ரூசல்!

## திருமேனிவர்ணனை

சிரமதனிற் சிகையசைய ஆடிரூசல்! திருமணூறு முகமசைய ஆடிரூசல்!
சரமதனை வென்ற ஜயக்கொடிபோற்காண் முத்தண்டிலகு கரமசைய ஆடிரூசல்!
உரமதில் முந்நூலசைய ஆடிரூசல்! உயர்துளவ வடமசைய ஆடிரூசல்!
வரவனச வடமசைய ஆடிரூசல்! மணவாளமாமுனிவராடி ரூசல்!

## திருவாய்மொழி நூற்றந்தாதியின் சீர்மை

சாதுரியமாமொழிந்த குருகை மாறன் தமிழ்த்திருவாய் மொழியாம் [1] பாற்புணரிதன்னைக்
காதலுடன் ஞானமெனும் மத்தை நாட்டிக் கடைந்ததிலே சாரமதாத்திரண்டு வந்த
மாதுரியநன் நூற்றந்தாதியான வண் [2] சுதையைத் திருமாலினன் பர்க்கீந்து
[3] மாதுறவோர் [4] மாதுறவோர் தொழவே வந்த மணவாளமாமுனிவராடி ரூச்ல்!

## உபதேச ரத்தினமாலையின் சீர்மை

பன்னிருவ ரெதிராசர் ருதித்த மாதம் பகர் திருநட்சத்திரத்தோ டவர்களூர்கள்
நன்னயமாந் தமிழ்மறைக்கிங்குரைகள் கூறும் நாவலராமாரியர்கள் மகிமையோடும்
உன்னுமுல காரியனுர் நூலின் சீர்மை உணர்ந்தபடி யுபதேச ரத்நமாலை
மன்னுலகில் மாலடியார்க் கமுதமீந்த மணவாளமாமுனிவராடி ரூசல்!

## ஸ்ரீசைலேசதயாபாத்ரத் தனியன் பெருமை

சோலைதிகழ ரரங்ககக ரப்பனந்நாள் தூயதமிழ் மறைக்கு வரயோகியாம் நீர்
சிலமுட னீடுசே விக்கும்போது சீர்ச்சீசை லேசதயா பாத்ர மென்றோர்
பாலகனுவந்து நலத்தனியன் தன்னைப் பகரந்தேகவே அதனைத் ததியர் யாரும்
மாலினது மொழியென்றே வழுத்தும் கீர்த்தி மணவாளமாமுனிவராடி ரூசல்!

## வாழித்திருநாமம்

வீற்றிருக்குஞ் சீர்த் தெய்வநாதன் வாழி! மின்னுமணி வரமங்கை கோதை வாழி!
நாற்றமுறு மகிழ்மாலை மாறன் வாழி! ஞானியராம் மற்றுமாழ் வார்கள் வாழி!
மாற்றலரை வென்ற வெதிராசன் வாழி! மணவாளமாமுனியுங் குருவும் வாழி!
தோற்றுபுகழ் வரமங்கை யோகி வாழி! தூயமனத் ததியர்களும் வாழி வாழி!

---

1. திருப்பாற்கடல், 2. அம்ருதம், 3. பெருமைவாய்ந்த துறவிகள், 4. க்ருஹஸ்தர்கள் (மாது உறவோர்).

ஸ்ரீ:

## மணவாளமாமுனிகள் விஷயமான ஸம்ஸ்க்ருத ஸ்துதிகள்

श्री वादिभीकरगुरुभिरनुगृहीतं

## ॥ श्री वरवरमुनिसुप्रभातम् ॥

1. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணா அருளிச்செய்த

# ஸ்ரீ வரவரமுனி ஸுப்ரபாதம்



பிரதிவாதிபயங்கரம் அண்ணா
(ஸ்ரீபெரும்பூதூர்)

### தனியன்

वेदान्तदेशिककटाक्षविवृद्धबोधं कान्तोपयन्तृयमिनः करुणैकपात्रम् ।
वत्सान्ववायमनवद्यगुणैरुपेतं भक्त्या भजामि परवादिभयङ्करार्यम् ॥

வேதாந்ததேசிககடாக்ஷ விவ்ருத்திபோதம் காந்தோபயந்த்ருயமிந: கருணைகபாத்ரம்: ।
வத்ஸாந்வவாயமநவத்யகுணைருபேதம் பக்த்யா பஜாமி பரவாதிபயங்கரார்யம் ॥

रविरुदितस्त्वथापि न विनश्यति मे तिमिरं विकसति पङ्कजं हृदयपङ्कजमेव न मे ।
वरवरमुनियोगिवर्य ! वरणीय ! दयैकनिधे ! जयजय देव जागृहि जनेषु निधेहि धियम् ॥ 1 ॥

ரவிருதிதஸ்த்வதாபி ந விநச்யதி மே திமிரம்
விகஸதி பங்கஜம் ஹ்ருதயபங்கஜமேவ ந மே ।
வரவரமுநிவர்ய ! வரணீய ! தயைகநிதே !
ஜயஜய தேவ ஜாக்ருஹி ஜநேஷு நிதேஹி தியம் ॥

स्वप्नमिदं तव स्वमहिमानुभवैकरसं तदपि तथाविधं तदिति जातु न वेत्ति जनः ।
वरवरयोगिवर्य ! तदिदं विजहातु भवान् अपरिमितं हितं त्रिजगतामनुचिन्तयितुम् ॥ 2 ॥

ஸ்வப்நமிதம் தவ ஸ்வமஹிமாநுபவைகரஸம்
தததபி ததாவிதம் ததிதி ஜாது ந வேத்தி ஜந:।
வரவரயோகிவர்ய ! ததிதம் விஜஹாது பவாந்
அபரிமிதம் ஹிதம் த்ரிஜகதாமநுசிந்தயிதும்॥

अवतरणं तदेव जगतामविवेकभृतां विविधहितावबोधनकृते हि कृतं भवता ।
तत इत एहि योगशयनान्मम नाथ ! जनान् अमृतमयैरपाङ्गवलयैरभिषेचयितुम् ॥ 3 ॥

அவதரணம் தேதவ ஜகதாமவிவேகப்ருதாம்
விவித ஹிதாவபோதநக்ருதே ஹி க்ருதம் பவதா ।
தத இத ஏஹி யோக சயநாம்மம நாத ! ஜநாந்
அம்ருதமயைரபாங்கவலயைரபிஷேசயிதும்॥

शरदरविन्दबृन्दसुषमापरिपोषजुषा तव नयनेन केचन परे चरणेन तथा ।
मधुरगभीरधीरचतुरैरुदितैरितरे वरद ! धुरं धरन्ति भवसिन्धुममुं तरितुम् ॥ 4 ॥

சரதரவிந்தப்ருந்தஸுஷமாபரிபோஷஜுஷா
தவ நயநேந கேசந பரே சரணேந ததா।
மதுரகபீரதீரசதுரைருதிதைரிதரே வரத !
துரம் தரந்தி பவஸிந்துமமும் தரிதும்॥

परमनभोनिवास ! फणिपुङ्गव ! रङ्गपतेः भवनमिदं हिताय जगतो भवताऽधिगतम् ।
तदपि सदैव देव ! नृगनिं प्रकटीकुरुषे तदिह महत् तवैव कुरु वैवभमुद्धिदुरम् ॥ 5 ॥

பரமநபோநிவாஸ! பணிபுங்கவ! ரங்கபதே: பவநமிதம்
ஹிதாய ஜகதோ பவதாதிகதம்।
ததபி ஸதைவ தேவ! ந்ருகநிம் ப்ரகடீகுருஷே
ததிஹ மஹத் தவைவ குரு வைபவமுத்பிதுரம்॥

त्वदभिमतप्रियस्त्वदनुवर्तनधन्यतमात् अलमतिरिक्त इत्यखिललोकसुबोधमिदम् ।
अवनितलं त्वदीप्सितमिदं च हि तत्र वसन् अयमखिलस्तदैव निरुपायमुपैति पदम् ॥ 6 ॥

த்வதபிமதப்ரியஸ்த்வதநுவர்த்தநதந்யதமாத்
அலமதிரிக்த இத்யகிலலோகஸுபோதமிதம்
அவநிதலம் த்வதீப்ஸிதமிதம் ச ஹி தத்ர வஸந்
அயமகிலஸ்ததைவ நிருபாயமுபைதி பதம்॥

ஜீயர் திருவடிகளே சரணம்.

श्रीः

श्रीमदाचार्यपौत्रेण अभिरामवरार्येण अनुगृहीता

॥ सौम्योपयन्तृमुनिप्रपत्तिः ॥

2. ஆசார்யபௌத்ரரான அபிராமவராசார்யர் அருளிச்செய்த

# ஸௌம்யோபயந்த்ருமுனி ப்ரபத்தி

## தனியன்கள்

श्री सौम्यजामातृमुनेस्सुपौत्रं श्रीभाष्यकाराङ्घ्रि सरोजभक्तम् ।
तन्मङ्गलं स्तोत्रमुदाहरद्यः तं सौम्यजामातृगुरुं प्रपद्ये ॥
सौम्योपयन्तृमुनिवर्यपदारविन्दे सम्यक्प्रपत्तिमथ मङ्गलमातनोद्यः ।
तत्पौत्रमार्यमभिरामवरं प्रपद्ये सत्त्वोत्तरं सकलजीवदयाम्बुराशिम् ॥

ஸ்ரீ ஸௌம்யஜாமாத்ருமுநேஸ்ஸுபௌத்ரம் ஸ்ரீ பாஷ்ய காராங்க்ரிஸரோஜபக்தம் ।
தந்மங்களம் ஸ்தோத்ரமுதாஹரத்ய: தம் ஸௌம்யஜாமாத்ருகுரும் ப்ரபத்யே ॥
ஸௌம்யோபயந்த்ரு முநிவர்யபதாரவிந்தே ஸம்யக்ப்ரபத்திமத மங்களமாதநோத்ய: ।
தத்பௌத்ரமார்ய மபிராமவரம் ப்ரபத்யே ஸத்வோத்ரம் ஸகலஜீவதயாம்புராசிம் ॥

---

श्रीमन् यतीन्द्रचरणप्रवणामलात्मन् ! धीभक्तिशान्तिकरुणादिगुणामृताब्धे ! ।
सौम्योपयन्तृमुनिवर्य ! सतां जनानां प्राप्यौ त्वदीयचरणौ शरणं प्रपद्ये ॥ 1 ॥

ஸ்ரீமந்யதீந்த்ரசரணப்ரவணாமலாத்மந் ! தீபக்திசாந்திகருணாதி குணாம்ருதாப்தே ! ।
ஸௌம்யோபயந்த்ருமுநிவர்ய ! ஸதாம் ஜநாநாம் ப்ராப்யௌ த்வதீய சரணௌ
சரணம் ப்ரபத்யே ॥

पद्मालयारमणदिव्यपदाब्जयुग्मप्रेमामृताब्धिपरिवाहनिमग्नचेतः ।
सौम्योपयन्तृमुनिवर्य ! सदाश्रितानां सेव्यौ त्वदीयचरणौ शरणं प्रपद्ये ॥ 2 ॥

பத்மாலயாரமணதிவ்யபதாப்ஜயுக்ம ப்ரேமாப்திபரிவாஹநிமக்நசேத :
ஸௌம்யோபயந்த்ருமுநிவர்ய ! ஸதாச்ரிதாநாம் ஸேவ்யௌ த்வதீய ।
சரணௌ சரணம் ப்ரபத்யே ॥

श्रीमन्पराङ्कुशवचोऽमृतपूरपान सम्बुद्धशौरिचरणानुभवप्रवाह ! ।
सौम्योपयन्तृमुनिवर्य ! जगद्धितार्य भव्यौ त्वदीयचरणौ शरणं प्रपद्ये ॥ 3 ॥

ஸ்ரீமந் பராங்குச வசோம்ருத பூரபாந ஸம்புத்தசௌரிசரணாநுபவப்ரவாஹ ! ।
ஸௌம்யோபயந்த்ருமுநிவர்ய ! ஜகத்திதார்ய பவ்யௌ த்வதீய சரணௌ
சரணம் ப்ரபத்யே ॥

---

இந்தஸ்துதி Government Oriental Manuscripts Library, R. No. 4800 (P) ஓலை ஸ்ரீகோசத்திலிருந்து அதிகாரிகள் அநுமதியுடன் ஸம்ஸ்கருத பண்டிதர் ஸ்ரீ உ.வே. T. A. K. வெங்கடாசாரியர் ஸ்வாமியால் உதவப்பட்டது. இந்த ஸ்வாமிக்கு எங்கள் நன்றி உரித்தாகும். ஸ்ரீகோசத்தில் இந்த ஸ்துதியை அருளிச்செய்தவர் பெயர் ஸ்பஷ்டமாகச் சொல்லப்படவில்லை தனியன்களாக அமைந்துள்ள ச்லோகங்களிருந்து ஆசார்யபௌத்ரர் பணித்தது என்று அறியலாகிறது.

मुक्तिप्रदौ मुररिपोरिव पादपद्मे भक्त्याद्युपायरहितस्य परं मुमुक्षोः ।
सौम्योपयन्तृमुनिवर्य ! समस्तलोकसेव्यौ त्वदीयचरणौ शरणं प्रपद्ये ॥ 4 ॥

முக்திப்ரதௌ முரரிபோரிவ பாதபத்மே பக்த்யாதுபாயாரஹிதஸ்ய பரம் முமுக்ஷோ:।
ஸௌம்யோபயந்த்ருமுநிவர்ய ! ஸமஸ்தலோகஸேவ்யௌ த்வதீயசரணௌ
சரணம் ப்ரபத்யே ॥

रामानुजार्यवरदर्शन धूर्वहेन्द्र ! कामादिदोषगुणदूरग देशिकेन्द्र ! ।
सौम्योपयन्तृमुनिवर्य ! समस्तजीवबन्धो ! त्वदीयचरणौ शरणं प्रपद्ये ॥ 5 ॥

ராமாநுஜார்யவரதர்சன தூர்வஹேந்த்ர ! காமாதிதோஷகுணதூரக தேசிகேந்த்ர ! ।
ஸௌம்யோபயந்த்ருமுநிவர்ய ! ஸமஸ்தஜீவபந்தோ ! த்வதீயசரணௌ சரணம் பரபத்யே ॥

वानाद्रियोगिवरमानस राजहम्स ! वाधूलनाथवरदार्यवराभिवन्द्यौ ।
सौम्योपयन्तृमुनिवर्य ! सरोजशङ्खचिह्नौ त्वदीयचरणौ शरणं प्रपद्ये ॥ 6 ॥

வாநாத்ரியோகிவரமாநஸ ராஜஹம்ஸ ! வாதூலநாதவரதார்யவராபிவந்தயௌ ।
ஸௌம்யோபயந்த்ருமுநிவர்ய ! ஸரோஜசங்கசிஹ்நௌ த்வதீய சரணௌ சரணம்
ப்ரபத்யே ॥

श्रीभट्टनाथमुनिवर्यवरेष्टदेवौ श्रीदेवराजगुरुपुङ्गवपारिजातौ ।
सौम्योपयन्तृमुनिवर्य ! सदान्तरङ्गशिष्य त्वदीयचरणौ शरणं प्रपद्ये ॥ 7 ॥

ஸ்ரீபட்டநாதமுநிவர்யவரேஷ்டதேவௌ ஸ்ரீதேவராஜகுருபுங்கவ பாரிஜாதௌ ।
ஸௌம்யோபயந்த்ருமுநிவர்ய ! ஸதாந்தரங்கசிஷ்ய த்வதீயசரணௌ சரணம் ப்ரபத்யே ॥

रामानुजार्यवरवेङ्कटयोगिवर्यश्रीमन्नतार्तिहरसूरिभिराडयमानौ ।
सौम्योपयन्तृमुनिवर्य ! सदास्मदीयभाग्ये त्वदीयचरणौ शरणं प्रपद्ये ॥ 8 ॥

ராமாநுஜார்ய வரவேங்கடயோகிவர்ய ஸ்ரீமந்நதார்த்திஹரஸூரிபிராட்யமாநௌ ।
ஸௌம்யோபயந்த்ருமுநிவர்ய ! ஸதாஸ்மதீயபாக்யே த்வதீயசரணௌ சரணம்
ப்ரபத்யே ॥

आम्लानकोमलसुगन्धि सरोजरम्यावार्यैरनन्य शरणैरनुभाव्यमानौ ।
सौम्योपयन्तृमुनिवर्य ! सदाशरण्यनाथौ त्वदीयचरणौ शरणं प्रपद्ये ॥ 9 ॥

ஆம்லாநகோமலஸுகந்தி ஸரோஜரம்யவார்யைரநந்ய சரணைரநு பாவ்யமாநௌ ।
ஸௌம்யோபயந்த்ருமுநிவர்ய ! ஸதாசரண்யநாதௌ த்வதீயசரணௌ சரணம் ப்ரபத்யே ॥

मञ्जुप्रवालमृदुलौ ममपापिनोऽपि संसारसागर समुत्तरणप्रवीण ! ।
सौम्योपयन्तृमुनिवर्य ! सुशीलभोग्य स्वमिन् ! त्वदीयचरणौ शरणं प्रपद्ये ॥ 10 ॥

மஞ்சுப்ரவாளம்ருதுலௌ மமபாபிநோபி ஸம்ஸாரஸாகர ஸமுத்தரணப்ரவீண ।
ஸௌம்யோபயந்த்ருமுநிவர்ய ! ஸுசீலபோக்யஸ்வாமிந் ! த்வதீயசரணௌ சரணம் ப்ரபத்யே ॥

अस्मत्कुलाधिपगुरूत्तमयोगिवर्य ! वादीन्द्रभीकरगुरोर्महितार्यवर्य ! ।
सौम्योपयन्तृमुनिवर्य ! भवत्कृपायाः पात्रंकुरुष्व भगवन् ! शरणं गतं माम् ॥ 11 ॥

அஸ்மத்குலாதிபகுருத்தமயோகிவர்ய ! வாதீந்த்ரபீகரகுரோர் மஹிதார்ய வர்ய ।
ஸௌம்யோபயந்த்ருமுநிவர்ய ! பவத்க்ருபாயா: பாத்ரம்குருஷ்வ பகவன் ! சரணம்கதம் மாம் ॥

ஜீயர் திருவடிகளே சரணம்

श्रीदेवराजगुरुभिरनुगृहीता

॥ पूर्वदिनचर्या ॥

3. எறும்பி அப்பா அருளிச்செய்த

# பூர்வதினசர்யா

*தனியன்*

सौम्यजामातृयोगीन्द्रचरणाम्बुजषट्पदम् । देवराजगुरुं वन्दे दिव्यज्ञानप्रदं शुभम् ॥

ஸௌம்யஜாமாத்ரு யோகீந்த்ரசரணாம்புஜஷட்பதம் ।
தேவராஜகுரும்வந்தே திவ்யஜ்ஞாநப்ரதம் சுபம் ॥

---

अङ्के कवेरकन्यायास्तुङ्गे भुवनमङ्गले । रङ्गधाम्नि सुखासीनं वन्दे वरवरं मुनिम् ॥ 1 ॥

அங்கே கவேரகந்யாயா: துங்கே புவநமங்கலே ।
ரங்கே தாம்நி ஸுகாஸீநம் வந்தே வரவரம் முநிம் ॥

இந்த ச்லோகம் மங்களாசாஸனரூபமானது. திருக்காவிரியின் கரையில் சிறந்ததாயும் ஸகலலோகங்களுக்கும்மங்களகரமாயும் அமைந்துள்ள ஸ்ரீரங்கத்தில் இனிதுவாழ்கின்ற வரவரமுனியை யடி பணிகிறேன்.

मयि प्रविशति श्रीमन्मन्दिरं रङ्गशायिनः । पत्युः पदाम्बुजं द्रष्टुमायान्तमविदूरतः ॥ 2 ॥

மயி ப்ரவிசதி ஸ்ரீமந்மந்திரம் ரங்கசாயிந:
பத்யு: பதாம்புஜம் த்ரஷ்டுமாயாந்தமவிதூரத:

அடியேன் தேவரீரைத் திருவடி தொழ வருகையில் தேவரீரே ஸ்ரீரங்கநாதனைத் தொழப் புறப்பட்டெழுந்தருளுவதாக, அடியேனை விஷயீகரிக்கவே எழுந்தருளா நின்றது.

सुधानिधिमिव स्वैरस्वीकृतोदग्रविग्रहम् । प्रसन्नार्कप्रतीकाशप्रकाशपरिवेष्टितम् ॥ 3 ॥

ஸுதாநிதிமிவ ஸ்வைரஸ்வீக்ருதோதக்ர விக்ரஹம்।
ப்ரஸந்நார்க்க ப்ரதீகாச ப்ரகாச பரிவேஷ்டிதம்॥

पार्श्वत: पाणिपद्माभ्यां परिगृह्य भवत्प्रियो । विन्यस्यन्तं शनैरङ्घ्री मृदुलौ मेदिनीतले ॥ 4 ॥

பார்ச்வத: பாணிபத்மாப்யாம் பரிக்ருஹ்ய பவத்ப்ரியௌ।
விந்யஸ்யந்தம் சனைரங்க்ரீ ம்ருதுலௌ மேதிநீதலே॥

आम्लानकोमलाकारमाताम्रविमलाम्बरम् । आपीनविपुलोरस्कमाजानुभुजभूषणम् ॥ 5 ॥

ஆம்லாந கோமலாகாரமாதாம்ர விமலாம்பரம்।
ஆபீநவிபுலோரஸ்கம் ஆஜாநுபுஜபூஷணம்॥

मृणालतन्तुसन्तानसंस्थानधवलत्विषा । शोभितं यज्ञसूत्रेण नाभिबिम्बसनाभिना ॥ 6 ॥

ம்ருணாலதந்து ஸந்தான ஸம்ஸ்தாந தவலத்விஷா।
சோபிதம் யஜ்ஞஸூத்ரேண நாபி பிம்ப ஸநாபிநா

अम्भोजबीजमालाभिरभिजात भुजान्तरं । ऊर्ध्वपुण्ड्रैरुपश्लिष्टमुचितस्थानलक्षणै: ॥ 7 ॥

அம்போஜபீஜமாலாபி ரபிஜாத புஜாந்தரம்।
ஊர்த்வபுண்ட்ரை ருபச்லிஷ்டம் உசிதஸ்தாநலக்ஷணை:॥

काश्मीरकेसरस्तोमकडारस्निग्धरोचिषा । कौशेयेन समिन्धानं स्कन्धमूलावलम्बिना ॥ 8 ॥

காச்மீர கேஸரஸ்தோம கடார ஸ்நிக்த ரோசிஷா।
கௌசேயேந ஸமிந்தாநம் ஸ்கந்தமூலாவலம்பிநா॥

मन्त्ररत्नानुसन्धानसन्ततस्फुरिताधरम् । तदर्थतत्वनिध्यानसन्नद्ध पुलकोद्गमम् ॥ 9 ॥

மந்த்ரரத்நாநுஸந்தாந ஸந்ததஸ்புரிதாதரம்।
ததர்த்ததத்வநித்யாந ஸந்நத்த புலகோத்கமம்॥

स्मयमानमुखाम्बोजं दयमानदृगञ्चलम् । मयि प्रसादप्रवणं मधुरोदारभाषणम् ॥ 10 ॥

ஸ்மயமாநமுகாம்போஜம் தயமாநத்ருகஞ்சலம்।
மயி ப்ரஸாதப்ரவணம் மதுரோதாரபாஷணம்॥

आत्मलाभात्परं किञ्चिदन्यन्नास्तीति निश्चयात् । अङ्गीकर्तुमिव प्राप्तमकिञ्चनमिमं जनम् ॥ 11 ॥

ஆத்மலாபாத்பரம் கிஞ்சித் அந்யந்நாஸ்தீதி நிச்சயாத்।
அங்கீகர்த்துமிவ ப்ராப்தம் அகிஞ்சநமிமம் ஜநம்॥

भवन्तमेव नीरन्ध्रं पश्यन्वश्येन चेतसा । मुने ! वरवर ! स्वामिन्मुहुस्त्वामेव कीर्तयन् ॥ 12 ॥

பவந்தமேவ் நீரந்த்ரம் பசயந்வச்யேந சேதஸா।
முநே ! வரவர ! ஸ்வாமிந்முஹுஸ்த்வாமேவ கீர்த்தயந்॥

त्वदनन्यविषयस्पर्शविमुखैरखिलेन्द्रियैः । भवेय भवदुःखानामसह्यानामनास्पदम् ॥ 13 ॥

த்வதந்யவிஷயஸ்பர்ச விமுகை ரகிலேந்த்ரியை ஃ
பவேயம் பவதுஃகாநாமஸஹ்யாநாமநாஸ்பதம் ||

இரண்டாவது ச்லோகம் முதல் இந்த பதிமூன்ருவது வரை ஒரே வாக்யமாகும். ஸ்வாமியின் பெருமைகளை முன்னிலையில் வைத்துப் பேசுகிருர் இங்கு. அடியேன் தேவரீருடைய திருவிருப்பைக் குறித்து வரும்போது தேவரீர் நம்பெருமாளைத் திருவடி தொழ உள்ளிருந்து புறப்பட்டருளுகிறது (அடியேனை விஷயீகரிக்க எழுருந்தருளுவதுபோல் தோன்றுகிறது) *(2)*. தேவரீருடைய ஸ்வேச்சையால் ஸ்வீகரிக்கப்பட்ட அழகான தேவரீருடைய விக்ரஹம் அமுதக்கடல் போல், கண்கூசாத குளிர்ச்சி உடையனுஅல் ஸூர்யனுடைய ஒளிபோல் காந்தியுடன் சேவை சாதிக்கிறது. (ஸூர்யனுடைய ப்ரகாசமும் சந்த்ரனுடையகுளிர்ச்சியும் சேர்ந்ததுபோல என்றவாறு) *(3)*. இருபக்கங்களிலும் அந்தரங்க சிஷ்யர் இருவரை தாமரையையொத்த திருககைகளால் பற்றிக்கொண்டு ஸுகுமாரமான திருவடிகளையிட்டு மெல்லென நடந்து எழுந்தருளுகிறது *(4)*. மிகவழகாக உயர்ந்தும் விசாலமாயுமுள்ள திருமார்பையுடைத்தும், முழந்தாளளவும் தொங்குகிற திருக்கைகளால் அழகு செய்யப்பட்டதும், சிறிது தளர்ந்தும் மிகவழகியதுமான திருமேனியையுடையீர் *(5)*. தாமரைக் கொடியின் உள்ளேயுள்ளவை போன்ற நூற்தொகுதியாலானதும், வெளுத்த ஒளியுடையதும், கொப்பூழளவும் தொங்குகிற யஜ்ஞாபவீதத்தால் அழகுபடுத்தப் படாநின்றீர் *(6)*. துளஸீ நளிநாக்ஷமாலைகள், திருமணித்தாவடங்களால் விளங்கும் திருமார்பையுடையீர்; திருமேனியில் அந்தந்த விடங்களில் இயற்கையான சோபையுடன் விளங்கும் பன்னிரு திருநாமமணிந்த எழிலுடன் ப்ரகாசியாநின்றீர் *(7)*. குங்குமப்பூக்களைப் போல் சிவந்ததும் ப்ரகாசிப்பதுமான காஷாய உத்தரீயம் திருத்தோள்களில் தொங்க, பராபாக சோபையுடன் விளஙகுகிறீர் *(8)*. மந்த்ரரத்னமான த்வயத்தைத் தொடர்ந்து அநுசந்திப்பதனுல் துடிப்பதுபோல் அசையும் திருப்பவளத்தையுடையீர்; அதனுடைய ஆழ்பொருளைச் சிந்திப்பதினுல் மகிழ்ச்சி பொங்கும் திருமேனியுடையீர் *(9)*. புன்முறுவலுடன் விளங்கும் தாமரையொத்த திருமுகத்தையும், திருவுள்ளத்தில் பொங்கும் க்ருபையைக்கோள் சொல்லிக்காட்டும் கடாக்ஷத்தையும், உடையீராய், புல்லியனுன அடியேன் பாலும் ஆதரத்துடன், அருளும் இனிமையும் கலந்த வார்த்தைகளை சாதித்தருளுகிறது *(10)*. ஒரு ஆத்மாவைத் திருத்திப்பணிகொள்வதைக் காட்டிலும் பேறு வேறில்லை என்ற நிச்சயத்துடன் பேற்றுக் குறுப்பான நன்மை எதுவுமில்லாத அடியேனைத் திருவுள்ளம் பற்றுகைக்காக எழுந்தருளா நின்றது *(11)*. இப்படிப்பட்ட பெருமைகள் வாய்ந்த தேவரீரை இடைவீடின்றி கண்டுகளித்தும், தேவரீரையே சங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டும், தேவரீரைத்தவிர்த்து மற்ற விஷயங்களில் செல்லாத இந்த்ரியங்களையுடையேனுய், சஹிகக முடியாத சம்சாரத்தடிக்கொதிப்புக்கு ஆளாகாதவனுய் ஆநந்தமநுபவிப்பனுகக்கடவேன் *(12, 13)*.

परेद्युः पश्चिमे यामे यामिन्यास्समुपस्थिते । प्रबुध्य शरणं गत्वा परां गुरुपरंपराम् ॥ 14 ॥

பரேத்யு; பச்சிமே யாமே யாமிந்யாஸ்ஸமுபஸ்திதே।
ப்ரபுத்ய சரணம் கத்வா பராம் குருபரம்பராம் ||

ध्यात्वा रहस्यत्रितयं तत्वयाथात्म्यदर्पणम् । परव्यूहादिकान् पत्युः प्रकारान् प्रणिधाय च ॥ 15 ॥

த்யாத்வா ரஹஸ்யத்ரிதயம் தத்வயாதாத்ம்ய தர்ப்பணம்
பரவ்யூஹாதிகாந் பத்யுः ப்ரகாரான் ப்ரணிதாயச ॥

ततः प्रत्युषसि स्नात्वा कृत्वा पौर्वाह्णिकीः क्रियाः । यतीन्द्रचरणद्वन्द्वप्रवणेनैव चेतसा ॥ 16 ॥

ததः ப்ரத்யுஷஸி ஸ்நாத்வா க்ருதவா பௌர்வாஹ்நிகீ: க்ரியா: ।
யதீந்த்ர சரணத்வந்த்வப்ரவணேநைவ சேதஸா ॥

अथ रङ्गनिधिं सम्यगभिगम्य निजं प्रभुम् । श्रीनिधानं शनैस्तस्य शोधयित्वा पदद्वयम् ॥ 17 ॥

அதரங்கநிதிம் சம்யகபிகம்ய நிஜம் ப்ரபும் ।
ஶ்ரீநிதாநம் சநைஸ்தஸ்ய சோதயித்வா பதத்வயம் ॥

ततस्तत्सन्निधिस्तम्भमूलभूतलभूषणम् । प्राङ्मुखं सुखमासीनं प्रसादमधुरस्मितम् ॥ 18 ॥

ததஸ்தத்சந்நிதிஸ்தம்பமுல பூதல பூஷணம் ।
ப்ராங்முகம் ஸுகமாஸீநம் ப்ரஸாத மதுரஸ்மிதம் ॥

भृत्यैः प्रियहितैकाग्रैः प्रेमपूर्वमुपासितम् । तत्प्रार्थनानुसारेण संस्कारान् संविधाय मे ॥ 19 ॥

ப்ருத்யைः ப்ரியஹிதைகாக்ரைः ப்ரேமபூர்வமுபாஸிதம் ।
தத்ப்ரார்த்தநாநுஸாரேண ஸம்ஸ்காரான் ஸம்விதாயமே ॥

अनुकम्पापरीवाहैरभिषेचनपूर्वकम् । दिव्यं पदद्वयं दत्वा दीर्घं प्रणमतो मम ॥ 20 ॥

அநுகம்பாபரீவாஹை ரபிஷேசந பூர்வகம் ।
திவ்யம் பதத்வயம் தத்வா தீர்க்கம் ப்ரணமதோ மம ॥

साक्षात्फलैकलक्ष्यत्वप्रतिपत्तिपवित्रितम् । मन्त्ररत्नं प्रयच्छन्तं वन्दे वरवरंमुनिम् ॥ 21 ॥

சாக்ஷாத் பலைகலக்ஷ்யத்வப்ரதிபத்தி பவித்ரிதம் ।
மந்த்ரரத்நம் ப்ரயச்சந்தம் வந்தே வரவரம் முநிம் ॥

பதிநான்காவது ச்லோகம் முதல் மாமுனிகளின் நித்யாநுஷ்டானங்களைத்தாம் கண்டபடி அருளிச்செய்கிறார். இரவின் பின்யாமம் அணித்தானவாறே, கண்விழித்துப் பெரியபெருமாள் தொடங்கி தம்மாசார்யர் வரையிலுமான குருபரம்பரையைத் தஞ்சமாகப் பற்றி, அநுஸந்தித்து; (14). பிறகு ஆத்மஸ்வரூபாதிகளான தத்வங்களை உள்ளபடி அறிவிக்கும் திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம் இவைகளான ரஹஸ்யத்ரயத்தை (நடாதூரம்மாள் அருளிச்செய்த பரத்வாதிபஞ்சகம் என்ற ஸ்துதி) சிந்தனை செய்து; (15) பிறகு காலைக்காரியங்களை முடித்துக்கொண்டு, அருணோதயகாலத்தில் நீராடியருளி, காலையில் செய்யவேண்டிய ஆஹ்நிகங்களையெல்லாம் பண்ணி; (16) மடத்திற்கெழுந்தருளித் தம் திருவாரதனமான அரங்கநகரப்பனைத் திருவடி விளக்கி திருவாராதனம் ஸமர்ப்பித்து; (17) பெருமாள் ஸன்னிதியில் ஒரு தூணின் அடிக்கலங்காரமாக கிழக்கு நோக்கி ப்ரஸன்னமான திருவுள்ளத்தைக் காட்டும் புன்முறுவலையுடையராய் வீற்றிருந்து; (18) தமக்கு ப்ரியர்களும் தம் நிலைக்குச்சேர நல்லொழுக்கங்களில் ஊன்றியிருக்கும் வானமாமலை ஜீயர் போன்ற சிஷ்யர்களால் அன்புடன் சூழப்பட்டவராய், அவர்களுடைய ப்ரார்த்

தணைக்கிணங்கி அடியேனுக்கு க்ருபையுடன் பஞ்சஸம்ஸ்காரங்கள் சாதித்து ; (19). அருள் வெள்ளமிடும் நெடுநோக்கால் அடியேனை கடாக்ஷித்து, ஸாஷ்டாங்கமாக தண்டன் ஸமர்ப்பித்த அடியேனுடைய சென்னிக்கணியாகத் தம் பாதார விந்தங்களை ஈந்தருளி ; (20). மங்களா சாஸனத்திலேயே ஊன்றியிருக்கும்படியாக அநுக்ரஹத்தைச் செய்தருளி மந்த்ரரத்னமான த்வயத்தை அடியேனுக்கு உபதேசித் தருளினவருமான மணவாளமாமுனிகளைத் தொழு கின்றேன்.

ततस्सार्धं विनिर्गत्य भृत्यैर्नित्यानपायिभिः । श्रीरङ्गमङ्गलं द्रष्टुं पुरुषं भुजगेशयम् ॥ 22 ॥

ததஸ் ஸார்த்தம் விநிர்கத்ய ப்ருத்யைர் நித்யாநபாயிபி:।
ஸ்ரீரங்கமங்களம் த்ரஷ்டும் புருஷம் புஜகேசயம்॥

महति श्रीमति द्वारे गोपुरं चतुराननम् । प्रणिपत्य शनैरन्तः प्रविशन्तं भजामि तम् ॥ 23 ॥

மஹதி ஸ்ரீமதி த்வாரே கோபுரம் சதுராநநம்।
ப்ரணிபத்ய சனைரந்த: ப்ரவிசந்தம் பஜாமி தம்॥

பிறகு எப்பொழுதும் பிரியாமலிருக்கும் சிஷ்யர்களுடனே, அரவணைமேல் பள்ளிகொண்டருளும் ஸ்ரீரங்கநாதனை மங்களாசாஸனம் பண்ணுவதற்காகப் புறப்பட்டருளி ; (22). பெரிய திருவாசலிலே நான்முகன் கோட்டைவாயில் என்று ப்ரஸித்தமான கோபுரத்தின் முன் தெண்டன் ஸமர்ப்பித்துப் பிறகு உள்ளே எழுந்தருளும் மாமுனிகளை வணங்குகின்றேன்.

देवीगोदा यतिपति शठद्वेषिणौ रङ्गशृङ्गं सेनानाथो विहगवृषभः श्रीनिधिस्सिन्धुकन्या ।
भूमानीलागुरुजनवृतः पूरुषश्चेत्यमीषां अग्रे नित्यं वरवरमुनेरंघ्रियुग्मं प्रपद्ये ॥ 24 ॥

தேவீ கோதா யதிபதி சடத்வேஷிணௌ ரங்கச்ருங்கம்
ஸேநாநாதோ விஹகவ்ருஷப: ஸ்ரீநிதிஸ்ஸிந்துகந்யா।
பூமாநீளா குருஜ்நவ்ருத: பூருஷச்சேத்யமீஷாம்
அக்ரே நித்யம் வரவரமுநேரங்க்ரியுக்மம் ப்ரபத்யே॥

கோவிலில் மங்களாசாஸனக்ரமத்தைக் கூறுவது: ஆண்டாள், எம்பெருமானார், நம்மாழ்வார், ப்ரணவாகார விமானம், ஸேனைமுதலியார், பெரியதிருவடி (பக்ஷிராஜன்), ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீரங்கநாய்ச்சியார், ஸ்ரீ, பூமி, நீளாதேவிகளால் சூழப்பட்ட பரமபதநாதன் என்னுமவர்கள் திருமுன்பே (இவர்களை மங்களாசாஸனம் பண்ணியருளாநின்ற) மாமுனிகளின் திருவடிகளை அநுதினமும் தொழுகின்றேன்.

मङ्गलाशसनं कृत्वा तत्रतत्र यथोचितम् । धाम्नस्तस्माद्विनिष्क्रम्य प्रविश्य स्वं निकेतनम् ॥ 25 ॥

மங்களாசாஸநம் க்ருத்வா தத்ரதத்ர யதோசிதம்।
தாம்நஸ் தஸ்மாத் விநிஷ்க்ரம்ய் ப்ரவிச்ய ஸ்வம் நிகேதநம்॥

अथ श्रीशैलनाथार्यनाम्नि श्रीमति मण्डपे । तदंघ्रिपङ्कजद्वंद्वच्छायामध्यनिवासिनम् ॥ 26 ॥

அத ஸ்ரீசைலநாதார்யநாம்நி ஸ்ரீமதி மண்டபே।
ததங்கரி சரணத்வந்த்வச்சாயா மத்யநிவாஸிநம்॥

तत्वं दिव्यप्रबन्धानां सारं संसारवैरिणाम् । सरसं सरहस्यानां व्याचक्षाणं नमामि तम् ॥ 27 ॥

தத்வம் திவ்யப்ரபந்தாநாம் ஸாரம் ஸம்ஸாரவைரிணும்।
ஸரஸம் ஸரஹஸ்யாநாம் வ்யாசக்ஷாணம் நமாமி தம்॥

முன் ச்லோகத்தில் சொன்னக்ரமத்தில் ஆங்காங்கு தமது ஈடுபாட்டிற்கேற மங்களாசாசனம் பண்ணி, கோவிலிலிருந்து மீண்டும் தமது மடத்திற்கு எழுந்தருளி; (25). ஸ்ரீசைலேச மஹாமண்டபம் என்ற திருமலையாழ்வார் திருமண்டபத்திலே (காலக்ஷேப கூடத்தில்) ஸ்வாசார்யரான திருவாய்மொழிப்பிள்ளையின் திருவடி நிழலில் எழுந்தருளியிருந்து; (26). சம்சார பந்தத்தை அறுத்துத் திருநாடு சேர்ப்பிக்கவல்ல ஆழ்வார்களின் அருளிச்செயல்களிலுள்ள சாரமான பொருள்களை ரஹஸ்யார்த்தங்களுடன் கூட்டி இனிமையாக வ்யாக்யானம் சாதித்தருளும் மாமுனிகளை வணங்குகின்றேன்.

ततः स्वचरणाम्भोजस्पर्शसंपन्नसौरभैः । पावनैरर्थिनस्तीर्थैर्भावयन्तं भजामि तम् ॥ 28 ॥

ததः ஸ்வசரணாம்போஜஸ்பர்ச ஸம்பந்நஸௌரபை: ।
பாவனைரர்த்தி நஸ்தீர்த்தைர் பாவயந்தம் பஜாமிதம் ;

ரஹஸ்யார்த்த காலக்ஷேபம் சாதித்தபிறகு தம்முடைய திருவடித்தாமரைகளின் சம்பந்தத்திஞல் பரிமளம் மிகுந்த ஸ்ரீபாததீர்த்தம் ப்ரசாதித்தருளி (சிஷ்யர்களை) ஸத்தை பெறுவித்தருளும் மாமுனிகளைத் தொழுகின்றேன்

आराध्य श्रीनिधिं पश्चादनुयागं विधायच । प्रसादपात्रं मां कृत्वा पश्यन्तं भावयामि तम् ॥ 29 ॥

ஆராத்ய ஸ்ரீநிதிம் பச்சாதநுயாகம் விதாயச ।
ப்ரஸாதபாத்ரம் மாம் க்ருத்வா பச்யந்தம் பாவயாமி தம் ॥

பிறகுத்தம் திருவாரதன எம்பெருமாஞன அரங்கநகரப்பனுக்குத் திருவாராதனம் கண்டருளப்பண்ணி பகவத்ப்ரஸாதஸ்வீகாரம் செய்தருளி, போனகம் செய்த சேடமான ப்ரசாதத்தை ப்ரசாதித்தருளி அடியேனை கடாக்ஷித்தருளும் மாமுனிகளைத் தொழுகின்றேன்.

ततश्चेतस्समाधाय पुरुषे पुष्करेक्षणे । उत्तंसितकरद्वंद्वमुपविष्टमुपह्वरे ॥ 30 ॥

ததச்சேதஸ்ஸமாதாய புருஷே புஷ்கரேக்ஷணே ।
உத்தம்ஸிதகரத்வந்த்வம் உபவிஷ்டமுபஹ்வரே ॥

अब्जासनस्थमवदातसुजातमूर्तिं आमीलिताक्षमनुसंहितमन्त्ररत्नम् ।
आनम्रमौलिभिरुपासितमन्तरङ्गैः नित्यं मुनिं वरवरं निभृतो भजामि ॥ 31 ॥

அப்ஜாஸநஸ்த மவதாத ஸுஜாதமூர்த்திம்
ஆமீலிதாக்ஷ மநுஸம்ஹித மந்த்ரரத்நம் ।
ஆநம்ர மௌலிபிருபாஸித மந்தரங்கை:
நித்யம் முநிம் வரவரம் நிப்ருதோ பஜாமி ॥

(அமுது செய்தான பிறகு), திருக்கைகளை உயர்த்தி அஞ்சலிபண்ணிக்கொண்டு ஏகாந்தமாக எழுந்தருளியிருந்து புண்டரீகாக்ஷனை பரமபுருஷனை மனனம் செய்தருளு பவராய்; (30) இந்த மனனத்திற்காக பத்மாசனத்தில் எழுந்தருளியிருப்பவராய், அழகானதும் பவித்ரமானதுமான திவ்யமங்களவிக்ரஹத்தையுடையராய், பகவத்விஷயத்யானத்திஞல் சிறிது மூடிய திருக்கண்களையுடையராய், த்வயததை சதா அநுசந்தித்துக் கொண்டிருப்பவராய் விநயமே உருவான தம் அந்தரங்க சிஷ்யர்களால் அத்தாணிச் சேவகம் செய்யப்பட்டவராயுமுள்ள மாமுனிகளை சதா ஏகசிந்தையஞய் பஜனம் பண்ணுகிறேன் (31).

ततः शुभाश्रये तस्मिन्निमग्नम् निभृतं मनः । यतीन्द्रप्रवणं कर्तुं यतमानं नमामितम् ॥ 32 ॥

தத : சுபாச்ரயே தஸ்மிந்நிமக்நம் நிப்ருதம் மந :।
யதீந்த்ரப்ரவணம் கர்த்தும் யதமானம் நமாமி தம்॥

யோகாப்யாசமான மனனம் செய்தருளி சுபாச்ரயமான பரமபுருஷனிடத்தில் லபித்து நிச்சலமாயுள்ள திருவுள்ளத்தை மீட்டு (எப்பொழுதும் போல்) எம்பெருமானாரிடத்தில் ஊன்ற வைக்க யத்னம் பண்ணும் மாமுனிகளைத் தொழுகிறேன்.

ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

श्री देवराजगुरुभिरनुगृहीता

## ॥ उत्तरदिनचर्या ॥

*4. எறும்பி அப்பா அருளிச்செய்த*

## உத்தரதிநசர்யா

इति यतिकुलधुर्यमेधमानैः श्रुतिमधुरैरुदितैः प्रहर्षयन्तम् ।
वरवरमुनिमेव चिन्तयन्ती मतिरियमेति निरत्ययं प्रसादम् ॥

இதி யதிகுலதுர்ய மேதமாநை: ச்ருதிமதுரை ருதிதை: ப்ரஹர்ஷயந்தம் ।
வரவரமுநிமேவ சிந்தயந்தீ மதிரியமேதி நிரத்யயம் ப்ரஸாதம் ॥

பூர்வதிநசர்யைக்கும் உத்தரதிநசர்யைக்கும் இடையில் மணவாள மாமுனிகள் அருளிச்செய்த யதிராஜவிம்சதியை அநுஸந்திப்பது பெரியோர் வகுத்துள்ள வழக்கம். இந்த ச்லோகத்தினால் யதிராஜ விம்சதியின் அநுஸந்தானம் காட்டப்பட்டது. செவிக்கினிய செஞ்சொற்களாலான ஸ்தோத்ரத்தினால் எம்பெருமானாரைத் துதித்து மகிழ்ந்த திருவுள்ளமுடையரான மாமுனிகளையே சிந்தனை செய்யும் என் மனதானது ஒப்பில்லாத தெளிவு பெற்று விளங்குகிறது. இனி ஸ்வாமியின் திநசர்யாக்ரமத்தைத் தொடர்ந்து பேசி அநுபவிக்கிறார்.

अथ गोष्ठीं गरिष्ठानामधिष्ठाय सुमेधसाम् । वाक्यालङ्कृति वाक्यानि व्याख्यातारं नमामितम् ॥ 1 ॥

அதகோஷ்டீம் கரிஷ்டாநாம் அதிஷ்டாய ஸுமேதஸாம் ।
வாக்யாலங்க்ருதி வாக்யாநி வ்யாக்யாதாரம் நமாமிதம் ॥

(பூர்வ திநசர்யையில் அருளிய கார்யக்ரமங்களுக்குப் பின்) வெளியே எழுந்தருளி மஹா மேதாவிகள் நிறைந்த திருவோலக்கத்தில் எழுந்தருளியிருந்து ஸ்ரீ வசநபூஷண திவ்ய ஸூக்திகளை விளக்கியருளும் (காலக்ஷேபம் ப்ரஸாதிக்கும்) மாமுனிகளைத் தொழுகிறேன்.

सायन्तनं ततः कृत्वा सम्यगाराधनं हरेः । स्वैरालापैः शुभैः श्रोतॄन्नन्दयन्तं नमामि तम् ॥ 2 ॥

ஸாயந்தநம் தத: க்ருத்வா ஸம்யகாராதநம் ஹரே: ।
ஸ்வைராலாபை: சுபை: ச்ரோத்ரூன் நந்தயந்தம் நமாமி தம் ॥

ஸாயம் ஸந்த்யாநுஷ்டானங்களைச் செய்தருளி பெருமாள் திருவாராதனத்தையும் பண்ணி யான பின்பு தம்முடைய விலக்ஷணமான வார்த்தைகளால் கேட்பவரை மகிழ்விக்கும் மாமுனிகளைத் தொழுகிறேன்.

ततः कनकपर्यङ्के तरुणद्युमणिद्युतौ । विशालविमलश्लक्ष्णतुङ्गतूलासनोज्ज्वले ॥ 3 ॥

தத: கநகபர்யங்கே தருணத்யுமணித்யுதௌ ।
விசாலவிமலச்லக்ஷ்ணதுங்கதூலாஸ நோஜ்ஜ்வலே ॥

समग्रसौरभोद्गारनिरन्तरदिगन्तरे । सोपधाने सुखासीनं सुकुमारे वरासने ॥ 4 ॥

ஸமக்ரஸௌரபோத்கார நிரந்தர திகந்தரே ।
ஸோபதாநே ஸுகாஸீநம் ஸுகுமாரே வராஸநே ॥

उन्मीलत्पद्मगर्भद्युतितलमुपरिक्षीरसङ्घातगौरं
राकाचन्द्रप्रकाशप्रचुरनखमणिद्योतविद्योतमानम् ।
अङ्गुल्यग्रेषु किञ्चिन्नतमति मृदुलं रम्यजामातृ योगी
दिव्यं तत्पादपद्मं दिशतु शिरसिमे देशिकेन्द्रो दयालुः ॥ 5 ॥

உந்மீலத்பத்மகர்ப்பத்யுதிதலமுபரி க்ஷீரஸங்காதகௌரம்
ராகாசந்த்ர ப்ரகாசப்ரசுர நகமணித்யோத வித்யோதமாநம் ।
அங்குள்யக்ரேஷு கிஞ்சிந்நதமதி ம்ருதுளம் ரம்யஜாமாத்ரு யோகீ
திவ்யம் தத்பாதபத்மம் திசது சிரஸிமே தேசிகேந்த்ரோ தயாளுः ॥

त्वं मे बन्धुस्त्वमसि जनकस्त्वं सखा देशिकस्त्वं विद्या वृत्तं सुकृतमतुलं वित्तमप्युत्तमं त्वम् ।
आत्मा शेषी भवसि भगवन्नान्तरः शासिता त्वं यद्वा सर्वं वरवरमुने यद्यदात्मानुरूपम् ॥ 6 ॥

த்வம் மே பந்துஸ்த்வமஸி ஜநகஸ்த்வம் ஸகா தேசிகஸ்த்வம்
வித்யா வ்ருத்தம் ஸுக்ருதமதுலம் வித்தமப்யுத்தமம் த்வம் ।
ஆத்மா சேஷீ பவஸி பகவந்நாந்தரः சாஸிதாத்வம்
யத்வா ஸர்வம் வரவரமுநே யத்யதாத்மாநுரூபம் ॥

अग्रे पश्चादुपरि परितो भूतलं पार्श्वतोमे मौलौ वक्त्रे वपुषि सकले मानसाम्भोरुहेच ।
दर्शंदर्शं वरवरमुने दिव्यमङ्घ्रिद्वयंते नित्यं मज्जन्नमृतजलधौ निस्तरेयं भवाब्धिम् ॥ 7 ॥

அக்ரே பச்சாதுபரி பரிதோ பூதலம் பார்ச்வதோமே
மௌலௌ வக்த்ரே வபுஷி ஸகலே மாநஸாம் போருஹேச ।
தர்சம்தர்சம் வரவரமுநே திவ்யமங்க்ரித்வயம்தே
நித்யம் மஜ்ஜந் அம்ருதஜலதௌ நிஸ்தரேயம் பவாப்திம் ॥

कर्माधीने वपुषि कुमतिः कल्पयन्नात्मभावं दुःखे मग्नः किमिति सुचिरं दूयते जन्तुरेषः ।
सर्वं त्यक्त्वा वरवरमुने संप्रति त्वत्प्रसादात् दिव्यं प्राप्तुं तवपदयुगं देहि मे सुप्रभातम् ॥ 8 ॥

கர்மாதீநே வபுஷிகுமதிः கல்பயந்நாத்மபாவம்
துःகே மக்நः கிமிதி ஸுசிரம் தூயதே ஜந்துரேஷः ।
ஸர்வம் த்யக்த்வா வரவரமுநேः ஸம்ப்ரதித்வத் ப்ரஸாதாத்
திவ்யம் ப்ராப்தும் தவபதயுகம் தேஹிமே ஸுப்ரபாதம் ॥

या या वृत्तिर्मनसि मम सा जायतां संस्मृतिस्ते योयो जल्पस्स भवतु विभो नामसङ्कीर्तनं ते ।
या या चेष्टा वपुषि भगवन् सा भवेद्वन्दनं ते सर्वं भूयाद्वरवरमुने सम्यगाराधनं ते ॥ 9 ॥

யாயா வ்ருத்திர்மநஸி மம ஸா ஜாயதாம் ஸம்ஸ்ம்ருதிஸ்தே
யோயோ ஜல்பஸ்ஸ பவது விபோ நாமஸங்கீர்த்தனம் தே ।
யாயா சேஷ்டா வபுஷி பகவந்! ஸா பவேத் வந்தநம் தே
ஸர்வம் பூயாத் வரவரமுநே ஸம்யகாராதநம் தே ॥

अपगतमतमानैरन्तिमोपायनिष्ठैः अतिगतपरमार्थैरर्थकामानपेक्षैः ।
निखिलजनसुहृद्भिर्निर्जितक्रोधलोभैः वरवरमुनिभृत्यैरस्तुमे नित्ययोगः ॥ 10 ॥

அபகதமதமாநை ரந்திமோபாயநிஷ்டை:
அதிகதபரமார்த்தை ரர்த்தகாமநபேக்ஷை:।
நிகிலஜநஸுஹ்ருத்பிர் நிர்ஜிதக்ரோதலோபை:
வரவரமுநிப்ருத்யை ரஸ்து மே நித்யயோக:॥

इति स्तुतिनिबन्धेन सूचितस्वमनीषितान् । भृत्यान् प्रेमार्द्रया दृष्ट्या सिञ्चन्तं चिन्तयामि तम् ॥ 11 ॥

இதி ஸ்துதிநிபந்தேந ஸூசிதஸ்வமநீஷிதாந் ।
ப்ருத்யாந் ப்ரேமார்த்ரயா த்ருஷ்ட்யா ஸிஞ்சந்தம் சிந்தயாமி தம் ॥

முன்ருவது, நான்காவது ச்லோகங்களால் ஸ்வாமி வீற்றிருக்கும் உத்தமமான ஆஸனத்தை விவரணம் பண்ணி, இப்படி எழுந்தருளியுள்ள மாமுனிகளை சிஷ்யர்கள் ஸ்தோத்ரம் செய்யும் படியை ஐந்தாவது ச்லோகம் முதல் அருளிச் செய்கிருர். 3,4

அப்போதலர்ந்த தாமரையின் உட்புறமுள்ள செவ்விபோல் சிவந்த உட்புறத்தை யுடைத்தும், பால்போல் வெளுத்த வெளிப்புறமுடைத்தும், முழு நிலவின் ஒளியையும் விஞ்சும் ஒளியுடைத்தான நகங்களையுடைத்தும், விரல்களின் நுனி சிறிது வணங்கியுள்ளதும் ஸுகுமாரமானதுமான பாதாரவிந்தயுகளங்களை அடியோனுடைய சென்னிக்கணியாக பரம தயாளுவான ஆசார்யர் ப்ரஸாதிப்பாராக (இது ஒரு ப்ரார்த்தனை) (5).

ஸ்வாமிந்! அடியேனுக்கு தேவரீரே [எல்லா] உறவினராவீர்; தந்தை, நண்பன், ஆசார்யன், வித்யை, ஒழுக்கம், மிக்க புண்ணியம், சிறந்த செல்வம் எல்லாம் தேவரீரே; அடியேன் உடலுக்குள் உயிரும் தேவரீரே; வகுத்த ஸ்வாமியும், அடியேனுள்ளே இருந்து நியமிப்பவரும், தேவரீரே; மணவாளமாமுனிஸ்வாமியே! அடியேனுடைய ஆத்மஸ்வ ரூபத்துக்கு அநுரூபமானது எல்லாம் தேவரீரே. (இப்படி சிலர் விண்ணப்பம் செய்வர்) (6). வரவரமுநிஸ்வாமிந்! மிகலக்ஷணமான தேவரீருடைய திருவடித்தாமரைகளை அடியேனுடைய முன்பும், பின்பும், மேலும், நிலத்தில் எல்லா பக்கங்களிலும், தலையிலும், முகத்திலும்,

நெஞ்சிலும், எல்லா விடங்களிலுமாக ஸாதித்திருப்பதாக சிந்தனம் செய்து ஆனந்தக்கடலில் ஆழ்ந்து, ஸம்ஸாரக்கடலைக் கடப்பேனாக (தேவரீர் அநுக்ரஹிக்க வேணும்). 7

மணவாளமாமுனிகளே! உள்ளதை உள்ளபடி அறியாமல் வேறுவிதமாக அறிந்து தேஹமே ஆத்மா என்றெண்ணி, ஸம்ஸார தாபத்தில் மூழ்கியவனாகி அடியேன் ஏன் நெடுங்காலமாக துக்கப்பட வேண்டும்? இப்போதே தேவரீருடைய திருவருளால் அடியேனைப் பற்றற்றவனாக ஆக்கி, தேவரீருடைய சரணகமலங்களை அடையும்படி ஒரு நல்விடிவை ப்ரசாதிக்கவேணும். [இப்படி சிலர் விண்ணப்பம்] 8

ஸ்வாமிந்! அடியேனுடைய மனது எப்போதும் தேவரீரையே மனனம் பண்ணுமாக! அடியேனுடைய வாக்கு எதைச் சொல்லுமோ அதெல்லாம் தேவரீருடைய நாம சங்கீர்த்தனமாக அமையவேணும்; அடியேன் உடலால் செய்யும் கார்யமெல்லாம் தேவரீரை அடி பணிவதாக அமையவேணும்; அடியேனுடைய எல்லா செயல்களும் தேவரீரை பூஜிப்பதாக அமையவேணும்—இப்படி சிலர் ப்ரார்த்தனை. 9

சகல ஸ்ரீவைஷணவ லக்ஷணம் பொருந்திய தேவரீருடைய அடியார்களுடனேயே அடியேன் சதா போதைப்போக்குவேனாக அநுக்ரஹிக்க வேணும். ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம் என்ற தனிவ்யாஸம் காண்க. 10

இப்படி தம்தம் அபேக்ஷிதங்களை விண்ணப்பம் செய்யும் அடியார்களை அன்புடன் கடாக்ஷிக்கும் மாமுனிகளைத் தொழுகிறேன். 11

अथ भृत्याननुज्ञाप्य कृत्वा चेतः शुभाश्रये । शयनीयं परिष्कृत्य शयानं संस्मरामि तम् ॥ 12 ॥

அத ப்ருத்யாநநுஜ்ஞாப்ய க்ருத்வா சேத: சுபாச்ரயே।
சயநீயம் பரிஷ்க்ருத்ய சயாநம் ஸம்ஸ்மராமி தம்॥

இப்படி சிஷ்யர்களை அநுக்கரஹித்து விடைதந்து அனுப்பித், தம் திருவுள்ளத்தை சிந்தனைக்கினிய தம்திருவாராதன தேவதையிடம் ஊன்றவைத்து திருப்பள்ளி [படுக்கை] சோதித்துத் திருக்கண்வளரும் [நித்ரை கொள்ளும்] மாமுனிகளை மனனம் செய்கிறேன்.

दिनचर्यामिमां दिव्यां रम्यजामातृयोगिनः । भक्त्या नित्यमनुध्यायन् प्राप्नोति परमं पदम् ॥ 13 ॥

திநசர்யாமிமாம் திவ்யாம் ரம்யஜாமாத்ருயோகிந:।
பக்த்யா நித்யமநுத்யாயந் ப்ராப்நோதி பரமம்பதம்॥

மணவாளமாமுனிகளின் விஷயமான இந்த தினசர்யாஸ்துதியை பக்தியுடன் தினமும் அநுசந்திப்பவர் நற்கதியை அடைவர்--இது பலச்ருதியான ச்லோகம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

श्रीदेवराजगुरुभिरनुगृहीतं

## ॥ श्रीवरवरमुनिशतकम् ॥

5. எறும்பி அப்பா அருளிச்செய்த

# ஸ்ரீ வரவரமுநி சதகம்

(ஸன்னிதிகளை மங்களாசாஸனம் பண்ண எழுந்தருளும் போது இந்த தேவஸ்தாநத்தில் கோஷ்டியாய் அநுஸந்திககப்படும் ஸ்துதிகளில் இதுவும் ஒன்று. இடவசதிக் குறைவினுல் பூராவாகவும் அச்சிடப்படவில்லை. காஞ்சீபுரம் க்ரந்தமாலா 1969 பதிப்பு ஸ்தோத்ரமாலையில் பூர்த்தியாக ஸேவிககலாகும்)

### தனியன்

सौम्यजामातृयोगीन्द्र चरणाम्बुजषट्पदम् । देवराजगुरुं वन्दे दिव्यज्ञानप्रदं शुभम् ॥

ஸௌம்யஜாமாத்ருயோகீந்த்ர சரணும்புஜ ஷட்பதம்।
தேவராஜகுரும் வந்தே திவ்யஜ்ஞானப்ரதம் சுபம்॥

---

वरवरमुनिवर्य पादुरत्नं वरदगुरुं गुरुमाश्रये गुरूणाम् ।
उपनिषदुपगीतमर्थतत्वं तदिह यदीयवशंवदं समिन्धे ॥

வரவரமுநிவர்ய பாதுரத்நம் வரதகுரும் குருமாச்ரயே குருணும்।
உபநிஷதுபகீதமர்த்த தத்வம் ததிஹயதீய வசம் வதம் ஸமிந்தே॥ 1

गुणमणिनिधये ! नमो नमस्ते गुरुकुलधुर्य ! नमो नमो नमस्ते ।
वरवरमुनये नमो नमस्ते यतिवरतत्वविदे नमो नमस्ते ॥

குணமணிநிதயே நமோ நமஸ்தே குருகுலதுர்ய நமோ நமோ நமஸ்தே।
வரவரமுநயே நமோ நமஸ்தே யதிவரதத்வவிதே நமோ நமஸ்தே॥ 2

कुरु मयि विमलं दृगञ्चलं ते कुशलनिदान ! दयानिधे ! नमस्ते ।
निशिचरपरिपन्थि नित्ययुक्ते निमिकुलमङ्गलदीपिके नमस्ते ॥

குருமயிவிமலம் த்ருகஞ்சலந்தே குசலநிதான தயாநிதே நமஸ்தே
நிசிசரபரிபந்தி நித்யயுக்தே நிமிகுலமங்கலதீபிகே நமஸ்தே 3

रवीसुतसुकृते नमो नमस्ते रघुकुलरत्न ! नमो नमो नमस्ते ।
दशमुखमकुटच्छिदे नमस्ते दशरथनन्दन ! सन्ततं नमस्ते ॥

ரவிஸுத ஸுக்ருதே நமோ நமஸ்தே ரகுகுலரத்ந நமோ நமோ நமஸ்தே।
தசமுகமகுடச்சிதே நமஸ்தே தசரதநந்தந ஸந்ததம் நமஸ்தே॥ 4

यदिपुनरभिधेयमद्वितीयं कृतिमिरतः परमीक्ष्यतेनकिञ्चित् ।
विजहति नहिजातु शुक्तिमुक्तं विशदशशिद्युति मौक्तिकं विदग्धाः ॥

யதிபுனரபிதேயமத்விதீயம் க்ருதிபிரத: பரமீக்ஷ்யதேநகிஞ்சித் ।
விஜஹதி நஹிஜாது சுக்திமுக்தம் விசதசசித்யதி மௌக்திகம் விதக்தா: ॥ 5

देव प्रसीद मयि दिव्यगुणैकसिन्धो ! दृष्ट्या दयामृतदुहा सकृदीक्षितुं माम् ।
नैतेन कृत्यमसतेति नचिन्तयित्वा नारायणं गुरुवरं वरदं विदन्मे ॥

தேவப்ரஸீதமயிதிவ்ய குணைகஸிந்தோ த்ருஷ்ட்யாதயாம்ருத துஹாஸக்ருதீக்ஷிதும்மாம் ।
நைதேநக்ருத்ய மஸதேதி நசிந்தயித்வா நாராயணம் குருவரம் வரதம் விதந்மே ॥ 6

श्रीमद्रङ्गं जयतु परमं धाम तेजोनिधानं भूमा तस्मिन्भवतु कुशली कोपिभूमासहायः ।
दिव्यं तस्मै दिशतु विभवं देशिकोदेशिकानां कालेकाले वरवरमुनिः कल्पयन्मङ्गलानि ॥

ஸ்ரீமத்ரங்கம் ஜயது பரமம் தாமதேஜோ நிதாநம்
பூமாதஸ்மிந் பவதுகுசலீ கோபிபூமாசஹாய: ।
திவ்யம்தஸ்மை திசது விபவம் தேசிகோ தேசிகாநாம்
காலே காலே வரவரமுநி: கல்பயந் மங்களாநி ॥ 7

तस्यै नित्यं प्रदिशतिदिशे दक्षिणस्यै नमस्यां यस्यामाविर्भवति जगतां जीवनीसह्यकन्या ।
पुण्यैर्यस्याः क्षितितलजुषं पूरुषं रङ्गभूषां पश्यन्धन्यो वरवरमुनिः पालयन्वर्ततेनः ॥

தஸ்யை நித்யம் ப்ரதிசததிசே தக்ஷிணஸ்யை நமஸ்யாம்
யஸ்யாமாவிர்பவதி ஜகதாம் ஜீவநீஸஹ்யகந்யா ।
புண்யைர்யஸ்யா: க்ஷிதிதலஜுஷம் பூருஷம் ரங்கபூஷாம்
பச்யந் தந்யோ வரவரமுநி: பாலயந் வர்த்ததே ந: ॥ 8

आशापाशैरवधिविधुरैः स्वैरमाकृष्यमाणं दूराद्दूरं पुनरपिनमे दूयतामेवचेतः ।
अन्तः कृत्वा वरवरमुने नित्यमङ्घ्रिद्वयं ते धाराकारस्मरणसुभगं निश्चलीभूय तत्र ॥

ஆசாபாசைரவதி விதுரை: ஸ்வைரமாக்ருஷ்யமாணம்
தூராத்தூரம் புநரபிநமே தூயதாமேவசேத: ।
அந்த: க்ருத்வா வரவரமுநே நித்யமங்க்ரித்வயம் தே
தாரகாரஸ்மரணஸுபகம் நிச்சலீபூயதத்ர ॥ 9

त्वं मे बन्धुस्त्वमसि जनकस्त्वं सखा देशिकस्त्वं विद्या वृत्तं सुकृतमतुलं वित्तमप्युत्तमं त्वम् ।
आत्माशेषी भवसि भगवन्नान्तरश्शासितात्वं यद्वासर्वं वरवरमुनेयद्यदात्मानुरूपम् ॥

த்வம்மே பந்துஸ்த்வமஸிஜநகஸ்த்வம் ஸகா தேசிகஸ்த்வம்
வித்யா வ்ருத்தம் ஸுக்ருதமதுலம் வித்தமப்யுத்தம் த்வம் ।
ஆத்மாசேஷீ பவஸிபகவந்நாந்தரச்சாஸிதாத்வம்
யத்வாஸர்வம் வரவரமுநே யத்யதாத்மாநு ரூபம் ॥ 10

आम्नायेषु स्मृतिभिरमितैस्सेतिहासैः पुराणैः दृश्यं यत्नैर्यदिह विदुषां देशिकानां प्रसादात् ।
स्वैरालापैस्सुलभयसि तत्पञ्चमोपायतत्वं दर्शन्दर्शं वरवरमुने दैन्यमस्मद्विधानाम् ॥

ஆம்நாயேஷு ஸ்ம்ருதிபிரபிமதைஸ்ஸேதிஹாஸை : புராணை :
த்ருச்யம் யத்நையதிஹவிதுஷாம் தேசிகாநம் ப்ரஸாதாத் ।
ஸ்வைராலாபைஸ்ஸுலபயஸி தத்பஞ்சமோபாயதத்வம்
தர்சந்தர்சம் வரவரமுநே தைநயமஸ்மத்விதாநாம் ॥ 11

सत्संबन्धो भवति हितमित्यात्मनैवोपदिष्टं शिष्टाचारं दृढयितुमिह श्रीसखो रङ्गदुर्यः ।
द्वारं प्राप्य प्रथितविभवो देवदेवस्त्वदीयं दृष्ट्वैव त्वां वरवरमुने दृश्यते पूर्णकामः ॥

ஸத்ஸம்பந்தோ பவதிஹ்தமித்யாத்ம நைவோபதிஷ்டம்
சிஷ்டாசாரம் த்ருடயிதுமிஹ ஸ்ரீஸகோரங்கதுர்ய : ।
த்வாரம் ப்ராப்ய ப்ரதிதவிபவோ தேவதேவஸ்த்வதீயம் த்ருஷ்ட்வைவ த்வாம்
வரவரமுநே த்ருசயதே பூர்ணகாம : ॥ 12

सोयं भूयस्स्वयमुपगतो देशिकैस्संसदं ते श्रुत्वागूढं शठरिपु गिरामर्थतत्वं त्वदुक्तम् ।
आगोपालं प्रथयतितरामद्वितीयं त्वदीयं वाचां दूरं वरवरमुने वैभवं शेषशायी ॥

ஸோயம் பூயஸ்ஸ்வயமுபகதோ தேசிகைஸ்ஸம்ஸதம் தே
ச்ருத்வா கூடம் சடரிபுகிராமர்த்ததத்வம் த்வதுக்தம் ।
ஆகோபாலம் ப்ரதயதிதராமத்விதீயம் தவதயம்
வாசாம் தூரம் வரவரமுனே வைபவம் சேஷசாயீ ॥ 13

सिद्धोपायस्त्वमिहसुलभो लंभयन्पूरुषार्थानज्ञातांश्चप्रथयसिपुनर्यत्ततोदेशिकस्त्वम् ।
देवी लक्ष्मीर्भवसि दयया वत्सलत्वेन च त्वं कोऽसौ यस्त्वां वरवरमुने मन्यते नात्मनीनम् ॥

ஸித்தோபாயஸ்த்வமிஹ ஸுலபோ லம்பயன் பூருஷார்த்தாந்
அஜ்ஞாதாம்ச்ச ப்ரதயஸி புனர்யத்ததோ தேசிகஸ்த்வம் ।
தேவீ லக்ஷ்மீர்பவஸி தயயா வத்ஸலத்வேந ச த்வம்
கோஸௌ யஸத்வம் வரவரமுநே மந்யதேநாத்மநீநம் ॥ 14

नित्यं पत्युः परिचरणतो वर्णतो निर्मलत्वात् वृत्या वाचां विबुधसरितश्चातुरीमुद्गिरन्त्या ।
शेषःश्रीमानिति रघुपतेरन्तरेणापि वाणीं को नाम त्वां वरवरमुने कोविदो नावगन्तुम् ॥

நித்யம்பத்யு : பரிசரணதோ வர்ணதோ நிர்மலத்வாத்
வ்ருதயவாசாம் விபுதஸரிதச்சாதுரீ முத்கிரந்த்யா ।
சேஷ: ஸ்ரீமாநிதி ரகுபதேரந்தரேணபி வாணீம்
கோநாமத்வாம் வரவரமுநேகோவிதோ நாவகந்தும் ॥ 15

सत्यं सत्यं पुनरिति पुरा सारविद्भिर्यदुक्तं ब्रूमश्श्रोत्रैश्शृणुत सुधियो मत्सरं वर्जयित्वा ।
तत्वं विष्णुः परमनुपमं तत्पदं प्राप्यमेवं तत्संप्राप्तौ वरवरमुनिर्देशिको दीर्गदर्शी ॥

ஸத்யம் ஸத்யம் புநரிதி புரா ஸாரவித்பிர்யதுக்தம்
ப்ரூமச்ரோத்ரைச் ச்ருணுத ஸுதியோ மத்ஸரம் வர்ஜயித்வா ।
தத்வம் விஷ்ணு: பரமநுபமம் தத்பதம் ப்ராப்யமேவம்
தத்ஸம்ப்ராப்தௌ வரவரமுநிர்தேசிகோ தீர்க்கதர்சீ ॥ 16

अपगतमतमानैरन्तिमोपायनिष्टै: अतिगतपरमार्थैरर्थकामानपेक्षै: ।
निखिलजनसुहृद्भिर्निर्जितक्रोध लोभैर्वरवरमुनिभृत्यैरस्तुमेनित्ययोग: ॥

அபகதமதமானைரந்திமோபாய நிஷ்டைரதிகதபரமார்த்தைரர்த்த காமானபேக்ஷை: ।
நிகிலஜனஸுஹ்ருத்பிர் நிர்ஜிதக்ரோதலோபை: வரவரமுனிப்ருத்யைரஸ்து
மேநித்யயோக: ॥ 97

यन्मूलमाश्वयुजमास्यवतारमूलं कान्तोपयन्तृयमिन: करुणैकसिन्धो: ।
आसीदसत्सुगणितस्य ममापिसत्तामूलं तदेवजगदभ्युदयैकमूलम् ॥

யன்மூலமாச்வயுஜமாஸ்யவதாரமூலம் காந்தோபயந்த்ருயமிந; கருணைகஸிந்தோ: ।
ஆஸீதஸத்ஸுகணிதஸ்ய மமாபிஸத்தாமூலம் ததேவஜகதப்யுதைகமூலம் ॥ 101

मूलं शठारिमुखसूक्तिविवेचनाया: कूलं कवेरदुहितुस्समुपागतस्य ।
आलंबनस्य मम सौम्यवरस्य जन्ममूलं विभाति सतुलं वितुलञ्च चित्रम् ॥

மூலம் சடாரிமுகஸூக்தி விவேசநாயா: கூலம்கவேரதுஹிதுஸ் ஸமுபாகதஸ்ய ।
ஆலம்பனஸ்ய மமஸௌம்யவரஸ்ய ஜன்மமூலம் விபாதி ஸதுலம் விதுலஞ்சசித்ரம் 103

जयतु यशसा तुङ्गं रङ्गं जगत्रयमङ्गलं जयतु सुचिरं तस्मिन्भूमा रमामाणिभूषणम् ।
वरदगुरुणासार्धं तस्मैशुभान्यभिवर्धयन् वरवरमुनि: श्रीमान् रामानुजो जयतुक्षितौ ॥

ஜயது யசஸாதுங்கம் ரங்கம் ஜகத்ரயமங்களம்
ஜயது ஸுசிரம் தஸ்மின்பூமா ரமாமணி பூஷணம் ।
வரதகுருணாஸார்த்தம் தஸ்மை சுபாங்யபிவர்த்தயந்
வரவரமுநி: ஸ்ரீமான் ராமாநுஜோ ஜயதுக்ஷிதௌ ॥ 105

पठति शतकमेतत्प्रत्यहं यस्सुजन्मा सहिभवति निदानं संपतामीप्सितानाम् ।
प्रशमयति विपाकं पातकानां गुरूणां प्रथयतिचनिदानं पारमाप्तुं भवाब्धे: ॥

படதி சதகமேதத் ப்ரத்யஹம் யஸ்ஸுஜந்மா
ஸஹிபவதி நிதாநம் ஸம்பதா மீப்ஸிதாநாம்: ।
ப்ரசமயதி விபாகம் பாதகாநாம் குருணாம்
ப்ரத்யதிச நிதாநம் பார மார்த்தும் பவாப்தே: ॥ 106

---

முக்தக ச்லோகங்கள்

न चेद्रामानुजेत्येषा चतुरा चतुरक्षरी । कामवस्थां प्रपद्यन्ते जन्तवो हन्तमादृशः ॥
ந சேத்ராமாநுஜேத்யேஷா சதுரா சதுரக்ஷரீ ।
காமவஸ்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருச: ॥

एष्याम्भोजविकासाय पापध्वान्तक्षयायच । श्रीमानाविरभूद्भूमौ रामानुजदिवाकरः ॥
புண்யாம்போஜவிதாஸாய பாபத்வாந்த க்ஷயாயச ।
ஸ்ரீமாநாவிரபூத்பூமௌ ராமாநுஜதிவாகர: ॥

तृणीकृतविरिञ्चादि निरङ्कुशविभूतयः । रामानुजपदाम्भोज समाश्रयणशालिनः ॥
த்ருணீக்ருதவிரிஞ்சாதி நிரங்குசவிபூதய: ।
ராமாஜபதாம்போஜ ஸமாச்ரயயண சாலிந: ॥

ஜீயர் திருவடிகளே சரணம்

श्रीवरदनारायणगुरुभिरनुगृहीतं

॥ श्रीवरवरमुन्यष्टकम् ॥

*6. கந்தாடை அண்ணன் அருளிச்செய்த*

# வரவரமுநி அஷ்டகம்

## தனியன்

सकलवेदान्त सारार्थपूर्णाशयं विपुलवाधूलगोत्रोद्भवानां वरम् ।
रुचिरजामातृयोगीन्द्रपादाश्रयं वरदनारायणं मद्गुरुं संश्रये ॥
ஸகலவேதாந்தஸாரார்த்தபூர்ணாசயம் விபுலவாதூலகோத்ரோத்பவாநாம்வரம் ।
ருசிரஜாமாத்ருயோகீந்த்ர பாதாச்ரயம் வரதநாராயணம் மத்குரும் ஸம்ச்ரயே ॥

---

पर्यङ्केऽपि परं तत्वं रङ्गशायिनमेव यः । उत्तिष्ठत्यनुभूयाहं तं वन्दे वरयोगिनम् ॥
பர்யங்கேபி பரம் தத்வம் ரங்கசாயிநமேவ ய: ।
உத்திஷ்டத்யநுபூயாஹம் தம் வந்தே வரயோகிநம் ॥ 1

उषस्युत्थाय लोकाचार्यप्रमुखाचार्यसूक्तिभिः । उच्चैः स्तुत्वाऽथ गोविन्दं तद्दिव्यस्थलाञ्चितम् ॥
உஷஸ்யுத்தாய லோகாசார்யப்ரமுகாசார்ய ஸூக்திபி: ।
உச்சை: ஸ்துத்வாத கோவிந்தம் தத்திவ்யஸ்தலாஞ்சிதம் ॥ 2

कावेर्या: कमलोद्भासि संस्पृश्य सलिलं शुभम् । गोविन्दगुणशीलादि ध्यात्वाऽश्रुकलिलाननः ॥

காவேர்யா: கமலோத்பாஸி ஸம்ஸ்ப்ருச்ய ஸலிலம் சுபம்।
கோவிந்த குணசீலாதி த்யாத்வாச்ருகலிலாநந:॥ 3

रोमाञ्चितचलद्गात्रः भक्त्या परमयैव यः । पुनाति तीर्थं संगाह्य तं वन्दे वरयोगिनम् ॥

ரோமாஞ்சிதசலாத்காத்ர: பக்த்யா பரமைவ ய:।
பூநாதி தீர்த்தம் ஸங்காஹ்ய தம் வந்தே வரயோகிநம்॥ 4

भगवच्छास्त्रनिर्दिष्ट विधिनैव निमज्ज्य यः दिव्यकाषायशुद्धोर्ध्वपुण्डमालादिभूषितः ॥

பகவச்சாஸ்த்ர நிர்த்திஷ்ட விதிநைவ நிமஜ்ய ய:।
திவ்யகாஷாயசுத்தோர்த்வபுண்ட்ர மாலாதிபூஷித:॥ 5

महामन्त्रादि संजप्य विशिष्टैः परिवारितः । श्रीरङ्गधाम संसेव्य तत्तत्त्वानुपबृंह्य च ॥

மஹாமந்த்ராதி ஸம்ஜப்ய விசிஷ்டை: பரிவாரித:।
ஸ்ரீரங்கதாம ஸம்ஸேவ்ய தத்தத்வாநுபப்ரும்ஹ்யச॥ 6

आराध्य रङ्गराजादीन् अनुयागं विधाय च । अपुनादमृतैरार्यान् तं वन्दे वरयोगिनम् ॥

ஆராத்ய ரங்கராஜாதீந் அநுயாகம் விதாய ச।
அபுநாதம்ருதைரார்யான் தம் வந்தே வரயோகிநம்॥ 7

वन्दे सौम्यवराग्र्ययोगिनमहं ध्यानामृतास्वादिनं श्रीरङ्गाधिपपादपङ्कजपरिचार्यगुणैकान्तिनम् ।
आज्ञाशास्त्रविधेरविच्युतमलं संसारिगन्धासहं कालेषु त्रिषु चैव कामितफलप्राप्त्यै गुरूणां गुरुम् ॥

வந்தே ஸௌம்ய வராக்ர்யயோகிநமஹம் த்யாநாம்ருதாஸ்வாதிநம்
ஸ்ரீரங்காதிபபாதபங்கஜபரிசார்ய குணைகாந்திநம்।
ஆஜ்ஞாசாஸ்த்ரவிதேரவிச்யுதமலம் ஸம்ஸாரிகந்தாஸஹம்
காலேஷுத்ரிஷு சைவ காமிதபலப்ராப்த்யை குரூணாம் குரும்॥ 8

ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

# அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில் திருமூலம்

ஸ்ரீமதுபயவே. பெருமாள்கோயில் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

இத்திருநன்னுள் மிகச்சிறந்த மஹோத்ஸவமாக ஸகல திவ்ய தேசங்களிலும் சகல மடங்களிலும் சகல பவனங்களிலும் கொண்டாடப்படுகின்றது. இத்திருநன்னுளின் சிறப்பைத் திருநாள் பாட்டின் சீரிய பொருளைத் தெரிவிப்பதன் மூலம் அநுபவித்து ஆனந்திப்போம்.

1. **செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடுநாள்:** ''ப்ரபந்நஜந கூடஸ்தர் பராங்குச பரகால யதிவராதிகள்'' என்ற ஆசார்ய ஹ்ருதய ஸூக்தியின்படி ப்ரபந்நஜந கூடஸ்தராய் விளங்கும் நம் ஆழ்வாராசார்யர்களின் ஸ்ரீ ஸூக்திகளில் ப்ராவண்யமுடைய ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாவரும் செந்தமிழ் வேதியர்கள். உபய வேதங்களும் இவர்களுக்கு நிரூபகமாயிருந்தாலும் செந்தமிழ் வேதியரென்றே சிறப்பிக்கப்படுவர்கள். இவர்கள் மணவாள மாமுனிகள் திருவவதரித்த வன்றே சிந்தைதெளிந்து சிறந்து மகிழ்ந்திட்டார்கள். மாமுனிகளுக்குமுன் அவதரித்த ஆழ்வார் ஆசார்யர்களருளிய பலபல திவ்யஸூக்திகளினுல் சாஸ்த்ரப்ரமேய நிஷ்கர்ஷம் தெளியாமையாலே, தெளிவின்றிக்கேயிருந்த மானிடர்கள் இனி தெளிவு பெறுவோம் என்று துணிந்து மகிழ்ந்தனர். இதனுல் மாமுனிகள் திருவவதரித்துத் தாமருளிச் செய்த திவ்யக்ரந்தங்களினுல் செந்தமிழ் வேதியர் மகிழத் தெளிவு பெறுத்தினர் என்றதாயிற்று.

2. **சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடுநாள்**—எம்பெருமானுருக்கு முன்புள்ள ஆசார்யர்கள் உபயவேதாந்த சாரப்பொருள்களை ரஹஸ்யமாகக் கொண்டு ஏகாந்தமாகவே உபதேசித்து வந்தார்கள். எம்பெருமானுர் தமது விசாலமான திருவுள்ளத்தில் சகலசம்சாரிகளிடமும் கருணை கரைபுரண்டு ''பாருலகில் ஆசையுடையோர்க் கெல்லாம் ஆரியர்காள் கூறு மென்று பேசி வரம்பறுத்தார்'' என்ற உபதேசரத்தினமாலைப் பாசுரப்படி வரம்பு கடந்து உபதேசித்தும், தம் சிஷ்யர்களைக் கொண்டு உபதேசித்தும் போந்தார். ஆயினும், இந்த சாரப்பொருள்களைத் தம் பாஷ்யக்ரந்தங்களில் ஆங்காங்கு பொறித்து வைத்தாரே யல்லது எளிய நடையில் தெளிய வைத்திலர். அக்குறை தீரப் பின்பு தோன்றிய பிள்ளைலோகாசாரியர் சீரிய சம்ப்ரதாயப் பொருள்களை அஷ்டதச ரஹஸ்யங்களாக வெளியிட்டார். இவற்றில் முமுக்ஷுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீ வசன பூஷணம் என்றவை சகலார்த்த புஷ்கலங்கள். ஆயினும் ஸூத்ரவடிவில் அமைந்த இந்த மஹாக்ரந்தங்களின் பொருளை வ்யாக்யானமில்லாமல் மாஞானியர்க்குமறிய அரிது. மாமுனிகள் தம் விசத வாக்சிகாமணித்வம் வீறு பெறும்படி அவற்றுக்கு வ்யாக்யான மருளிச் செய்கையாலே சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்ததாயிற்று. இல்லையேல் அவைகளால் பயனென்றுமின்றி அவை தேசுகுன்றியே இருக்கும். மஹாதேஜஸ்வியான மாமுனிகள் இந்த நற்கலைகளின் தேஜஸ்ஸை அதிசயிப்பித்தார்.

3. **மந்தமதிப்புவி மானிடர் தங்களை வானிலுயர்த்திடுநாள்:** இருள் தருமா ஞாலமாகிற இப்புவியில் தோன்றும் மானிடர்கள் தத்வ ஹிதபுருஷார்த்தங்களில் ஒன்றையும் அறிப்பெறுதே, சரீரத்தையே பேணிக்கொண்டு அதனுல் வருமின்பங்களையே பெரிதாக மதித்து வானேறும் வழியைச் சிறிதுமறியாதிருந்தனர். மாமுனிகளவதரித்து அவர்களின்

துர்க்கதியைப்போக்கி அறியாதவர்த்தங்களை அடைய அறிவித்து அவர்களை வாழ்வித்தருளினர். வானில்—நித்யஸூரிகளிற் காட்டிலும் என்றுமாம்.

**4. மாசறு ஞானியர் சேரெதிராசர் தம் வாழ்வு முளைத்திடுநாள்:** பண்டே ஜகதாசார்யரான எம்பெருமானுர் திருவவதரித்தருளி ப்ரமாணப்ரமேயப்ரமாதாக்கள் விஷயத்தில் தம் அநுஷ்டானத்தாலும் உபதேசத்தாலும் செய்தருளினவற்றை மாமுனிகள் அவதரித்து ஸுப்ரதிஷ்டிதமாக்கியருளினர். தென்னரங்கர் செல்வம் முற்றும் எம்பெருமானுர்க்குப்போலவே மாமுனிகளுக்கும் அதீனமாயிருக்கும். அவர் திருவுள்ளத்தில் இருந்த குறையெல்லாம் மாமுனிகளால் நிறைவேறப் பெற்றமையால் எதிராசர் தம் வாழ்வு இன்றே முளைத்திட்டதாகக்கூறினது மிகவும் பொருந்தும்.

**5. கந்தமலர்ப்பொழில் சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடுநாள்:** குதிகாதிபா கலைகள் என்று நம்மாழ்வார் ஸ்ரீஸூக்திகளை மட்டுமன்று; "நாதனுக்கு நாலாயிர முரைத்தான் வாழியே" என்றபடி நாலாயிர திவ்யப்ரபந்தம் முழுவதும் ஆழ்வார் திருவாக்கிலிருந்தே வெளிவந்தவையாதலால், இவையெல்லாமே இங்கு விவக்ஷிதம். அவற்றுக்கு பூர்வர்கள் வ்யாக்னங்கருளிச்செய்திருந்தாலும்,

*சேற்றுக்கமலவயல் சூழரங்கர் தம்சீர் தழைப்பப்*
*போற்றித்தொழு நல்லந்தணர் வாழவிப்பூதலத்தே*
*மாற்றற்ற செம்பொன் மணவாளமாமுனி வந்திலனேல்*
*ஆற்றில் கரைத்த புளியல்லவோ தமிழாரணமே?*

என்று அக்காலத்து அடியார்கள் வியந்து பேசும் படியும் "வாழி-திருவாய்மொழிப் பொருளை மாநிலத்தோர் தேறும்படி யுரைக்கும் சீர்" என்று உலகெல்லாம் வாழ்த்தும்படியும் மாமுனிகள் திவ்யப்ரபந்த நிர்வாஹம் செய்தருளினபடி அஸாதாரணம். ஸ்வாமி அவதாரத்தினுல்தான் அவை ஒப்புயர்வற்ற விளக்கம் பெற்றன.

**6. கார்மர்மேனி மேனி அரங்கநகர்க்கிறை கண்கள் களித்திடுநாள்:** அரங்கநாதன் இராமபிரானுகவும் கண்ணபிரானுகவும் திருவவதாரங்கள் செய்திருந்த காலத்தில், விச்வாமித்ரமுனிவன், ஸுக்ரீவ மஹாராஜர், ஸமுத்ரராஜன், சாந்தீபிநிமுநி என்றிப்படிப் பட்ட பலர் முன்பும் பணிந்தான். இவர்கள் எல்லாரிடமும் குறைகள் காணப்படவே* நெஞ்சத்தில் அப்ரீதி கொண்டிருந்தான். விபவாவதாரங்களில் தலைமடுத்த விடமெல்லாம் தடுமாறிப்போகவே பெருங்குறைவாளனுய் அர்ச்சாவதாரத்திலாவது குறை தீர ஒரு ஸதாசார்யரைப்பணிந்து வாழ்வோமென விரும்பி, அழகிய மணவளனை திருக்கோலத்தில் எல்லாவிதத்திலும் ஆசார்யத்வ பூர்த்தியுள்ள மணவாள மாமுனிகள் பக்கலிலே சிஷ்யனு யிருந்து அவர் விஷயமாக தனியன் பணித்து க்ருதார்த்தனுப் அப்பரமாசார்யநுடைய திருமேனியைக்கண்ணுரக்கண்டு களித்தனன். ஆகையால் இந்த நன்னுள் காரமாமேனியரங்கநகர்கிறை கண்கள் களித்திடுநாளாயிற்று.

இப்படிப்பட்ட பெருமைகள் வாய்ந்து பொலிந்ததே—அந்தமில்சீர் மணவளா முனிப்பரன் அவதாரம் செய்திடும் ஐப்பிசியில் திருமூலமதெனும் நன்னுள்.

---

* ஸ்வாமியின் 'ஸ்ரீசைலேச' தனியன் விளக்கத்தில் இதன் விரிவு காண்க. (பக்கம் 45.)

## "ஏராருமெதிராசரான வுதித்தான் வழியே"

ஸ்ரீமதுபயவே. பெருமாள்கோயில் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

மணவாள மாமுனிகளுக்கு யதிபுநாவதாரபூதரென்னும் ப்ரஸித்தி தொன்று தொட்டு விளங்கி வருகிறது. எம்பெருமானரே மீண்டும் மணவாளமாமுனிகளாகத் திருவவதரித் தருளினபடி. "ஏராருமெதிராச ரெனவுதித்தான் வாழியே" என்று உலகம் வாழ்த்துகின்றது. இதற்குரிய உபபத்திகளை அடைவே விளக்குகின்றேன்.

1. பெரும்பாலும் வ்யாக்யானங்கள் அருளிச்செய்வதிலேயே ஊக்கம் எம்பெரு மானருக்கும் மாமுனிகளுக்கும் ஒக்கும்; உடையவர் சாதித்த ஸ்ரீபாஷ்யம் வேதாந்த தீபஸாரங்கள், கீதாபாஷ்யம் என்னுமிவை வ்யாக்யான க்ரந்தங்களே யன்றோ. மாமுனிகளின் ரஹஸ்யவ்யாக்யானக்ரந்தங்களும் ப்ரஸித்தங்கள். வேதார்த்த ஸங்க்ரஹம், கத்யத்ரயம்— என்று சில மூலக்ரந்தங்களும் ஸ்வாமி சாதித்தது போலே மாமுனிகளும் யதிராஜவிம்சதி, உபதேச ரத்தினமாலை முதலிய மூலக்ரந்தங்களும் அருளிச் செய்தது ப்ரஸித்தம்.

2. அஸ்தானே நிந்தாபரிஹாஸங்களை நிரப்பி நூல்கள் எழுதுவாருமுளரே; அங்ஙனம் நிந்தையையோ பரிஹாஸத்தையோ அணுவளவும் புகவிடாமல் பரம பவித்திர ஸ்ரீஸூக்திகளை யருளுந் தன்மை இருவருக்குமேயொக்கும்.

3. தொட்ட தொட்ட விட மெங்கும் பலபல சாஸ்த்ரார்த்தத் திரள்களே மலிந்த ஸ்ரீஸூக்திகளினாலே பண்டிதர்களின் உள்ளத்தை உகப்பிக்குந்தன்மை இருவருக்கு மேயொக்கும்.

4. எம் பெருமானர் ஸ்ரீ பாஷ்யம் தொடங்கும் போதே "பகவத் போதாயந க்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்மஸூத்ர வ்ருத்திம் பூர்வாசார்யாஸ் சஞ்சிக்ஷிபு:, தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்யாஸ்யந்தே" என்றருளிச் செய்து பூர்வாசார்ய ஸூக்திகளில் தமக்குள்ள அபிநிவேசாதிசயத்தை விளங்கக் காட்டியருளினர். மாமுனிகளும், "முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு", "முன்னவராம் நம்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம்" இத்யாதியாலே தமக்குள்ள பூர்வாசார்ய ஸூக்தி பஹுமானத்தைக் காட்டியருளினதோடு நில்லாமல் தம்முடைய வ்யாக்யான க்ரந்தங்களை பூர்வாசார்ய ஸூக்தி மயமாகவே அவதரிப் பித்தருளினர்.

5. ஸ்வாமியின் வாழி திருநாமத்திலே "மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த் தோன் வாழியே" என்று ஓதா நின்றோம். "ஆய்ந்தபெருஞ் சீரார் சடகோபன் செந்தமிழ் வேதந்தரிக்கும் போராத வுள்ளம் பெற—ஏய்ந்தபெருங்கீர்த்தி இராமாநுசமுனிதன் வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்" என்று அக்காலத்து சிஷ்யவர்க்கங்கள் பணிக்கக் காணா நின்றோம். இதுபற்றி மாமுனிகள் திறத்திலே சொல்ல வேணுமோ? "சேற்றுக்கமலவயல்..." என்றவொரு பாசுரம் (பக்கம்-86) போதுமே.

6. ஸ்வாமி எழுபத்திநாலு ஸிம்ஹாஸ நாதிபதிகளை ஸ்தாபித்தருளி அவர்கள் வழியாக தர்சந நிர்வாஹம் செய்தருள்வது ஸுப்ரஸித்தம். மாமுனிகளும் "திரமாக திக்கஜங்களிட்டருளும் பெருமாள்" என்கிறபடியே அஷ்ட திக்கஜாசாரியர்களை ஸ்தாபித் தருளி அவர்கள் வழியாக தர்சந நிர்வாஹம் செய்தருள்வது நாடு நகரமும் நன்கறிந்தது.

7. " மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடு நாள் " என்றும் " ஸ்ரீரங்கம் கரிசைல மஞ்ஜநகிரிம்...ஸாளக்ராம கிரிஞ்ச நிஷேவ்ய ரமதே ராமநுஜோயம் முனி:" என்றும் சொல்லுகிறபடியே ஸ்வாமி ஸகல திவ்யதேசங்களிலும் அபிமானங்காட்டியருளினவர். மாமுனிகளும் "அடைவுடனே திருப்பதிகள் நடந்த வேர்வையாறவோ" என்கிறபடியே திவ்யதேச யாத்திரைகள் செய்தருளி அவற்றில் அபிமானம் காட்டியருளினபடி ஸுப்ரஸித்தம். திவ்யதேசச்ரேணியில் சேராதிருந்த ஸ்தலத்தை திவ்யதேசமாக அபிமானித்தலிலுமாம். எதிராசர் திருநாராயணபுரத்திற்கு " ஒரு நாயகமாய் " என்கிற திருவாய்மொழியை சமர்ப்பித்து அத்தலத்தை திவ்யதேசமாக அபிமானித்தருளினதும், மாமுனிகள் ராஜமன்னுர் ஸன்னிதிக்கு " தீர்ப்பாரையாமினி " என்கிற திருவாய்மொழியை ஸமர்ப்பித்ததும் அநுசந்தேயம.

8. ஸ்வாமி சேஷாவதாரம் என்பது ஸுப்ரஸித்தம். கருடவாஹன பண்டிதர் பணித்த திவ்யஸூரிசரிதத்திலும் வடுகநம்பி பணித்த யதிராஜ வைபவத்திலும் மற்றும் பல பிரபந்தங்களிலும் இது விசதம். மாமுனிகள் விஷயமாக வரவரமுநிசதகத்திலே " ரூபம் யஸ்ய ஸ்புடயதி தராம்யம் பணீந்த்ராவதாரம் " என்றருளிச்செய்துள்ளபடியும் மற்றும் சரித்ரப்ரஸித்தியின்படியும் திருவனந்தாழ்வான் திருவவதாரபூதரென்பது ஸுவ்யக்தம்.

9. ஸ்வாமி " தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே " என்று எண்டிசையும் வாழ்த்தப்படும்படியும் கோயிலொழுகு முதலான இதிஹாஸங்கள்படியும் ஸ்ரீரங்கஸ்ரீயை வளர்த்தருளினவரென்பது விச்வ விதிதம். மணவாளமாமுனிகள் திறத்தும் இங்ஙனமே " அரங்கர் வாழ இன்னுமொரு நூற்றாண்டிரும் " என்றன்றோ நிச்சலும் உலகம் வாழ்த்துகின்றது?

10. சமீப காலத்தில் (சென்ற நூற்றாண்டில்) திருநாராயணபுரத்தில் ஸுப்ரஸித்த்ராய் வாழ்ந்து வேதாந்தவாதாவளி என்று மஹாக்ரந்தங்களை யருளிச்செய்த மைஸூர் அநந்தாழ்வான் என்ற மஹாவித்வான் தாம் ஸ்வப்னத்தில் ஸாக்ஷாத்கரித்த உண்மையை தம் ந்யாய பாஸ்கரம் என்கிற க்ரந்தத்தில் விந்யாசம் செய்தருளியுள்ள ச்லோகம் :

> சேஷ! ஸ்ரீமாந் நிகமமகுடயுக்மரக்ஷாப்ரவ்ருத்த :
> ஸ்ரீமத்ராமா வரஜமுநிதாம் ஸௌம்யஜாமாத்ருதாஞ்ச|
> விந்தந் த்ருப்யத்விமத படலீபாடநோத்தாம ஸூக்தி:
> பூயாத் பவ்யப்ரதித மஹிமா ச்ரேயஸே பூயஸேந: ||

என்பது. இதன் கருத்து :

உபய வேதாந்தங்களையும் காத்தருள வேணுமென்று திருவுள்ளம் கொண்ட திருவனந்தாழ்வான் எம்பெருமானாராகத் திருவவதரித்து ஸம்ஸ்க்ருத வேதாந்த குத்ருஷ்டிகளை நிரஸித்தும் மணவாளமாமுனிகளாகத் திருவவதரித்து த்ராவிட வேத குத்ருஷ்டிகளை நிரஸித்தும் இப்படி உபய வேதாந்தப்ரதிஷ்டாபனம் செய்து பெருமை பெற்றனன். அத்திருவனந்தாழ்வான் நமக்கு சகலவித நன்மைகளும் அளித்தருளவேணும்.

# மணவாளமாமுனிகளின் திருநாவீறு

ஸ்ரீமதுபயவே. பெருமாள்கோவில் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

மணவாமாமுனிகளின் வியாக்யானங்களில் சொல்லமைப்பென்பது ஆச்சர்யமாயும் அற்புதமாயுமிருக்கும். மாமுனிகளின் தத்வத்ராய வியாக்யானமொன்றை ஸேவிக்குங்கால் "ஸகல சாஸ்த்ரங்களிலும் ஸ்ரீபாஷ்ய ஸூதாநிதியிலும் ஆழஅவகாஹித்த மஹாஜ்ஞானநிதி இவரல்லது வேறு எவருமில்லை" என்று சபதமிட்டுரைக்கலாம். ஞானம் என்பது வேறு; வ்யுத்புத்தி என்பது வேறு. அந்த வ்யுத்திபுத்தியானது சகலதந்த்ரங்களிலும் மணவாளமா முனிகளுக்கு மிகவும் அதிசயிக்கத்தக்கது. இதைநிரூபிகக அவருடைய திவ்வியஸூக்தி களில் பலபலவிடங்களிலிருந்தாலும் ஓரிடந்தனையே இங்குக்குறிப்பிடுகிறேன். தத்வத்ரயத் தில் ஈச்வரப்ரகரணத்தில் (22) "**இதுக்குப்ரயோஜனம் கேவலலீலை**" என்றொருசூர்ணை. எம்பெருமானது ஜகத்ஸ்ருஷ்டியாகிற வியாபாரத்துக்கு வெறும் லீலையே ப்ரயோஜனம் என்கிறபடி. ஸ்ரீபாஷ்யத்திலும் (ஸூ. 171) **லோகவத்து லீலா கைவல்யம்** என்று ஸ்ரீஸூக்தி காண்கிறது. இதில் எந்த வித்வானுக்கும் எவ்விதமான விசிகித்ஸையும் எளிதாகத்தோன்றமாட்டாது. ஆனல் இங்கு மணவாளமாமுனிகளின் ப்ராஜ்ஞாவிசேஷம் ஆராய்ச்சி செய்யப்புகுந்தவிதம் ஊன்றிநோக்கத்தக்கது.

ஒருகாரியம் செய்யுமிடத்து அப்போதுண்டாகும் ஒரு மனேவினேதமொழிய பின் வருவதொரு பலனைக்கணிசியாமல் பண்ணும் வியாபாரத்துக்கு லீலையென்று பெயர். சிறுவன் லீலை செய்கிருன் என்ருல் விளையாடல் என்கிற வியாபாரத்தைச் செய்கிருன் என்று பொருள். ஆக லீலையென்பது ஒரு வியாபாரமென்று முடிந்தது. ஸ்ருஷ்டிக்கு லீலை ப்ரயோஜனம் என்ருல் ஸ்ருஷ்டியாகிற வியாபாரத்திற்கு லீலையாகிற வியாபாரம் ப்ரயோஜன மென்றதாகத் தேறுகின்றது. ஸ்ருஷ்டிதான் லீலை என்று ஸமாநாதிகரணமாகச் சொல்ல வேணுமேயொழிய ஸ்ருஷ்டிக்கு லீலை ப்ரயோஜனம் என்று வ்யதிகரணமாகச்சொல்லுவதில் ஸமந்வயம் இல்லைபோல் காண்கிறதல்லவா? ஸ்ரீபாஷ்யகாரரும் லோகாசார்யரும் வ்யதிகரண மாக வாக்விந்யாசம் செய்திருப்பதைக் கீழே காட்டினேம். இது எப்படி பொருந்தும்? என்ற சங்கை தோன்றுவதே சாமான்ய ஞானிகளுக்கு அரிது. தத்வத்ரயவியாக்யானத்தில் மணவாளமாமுனிகள் இந்த சங்கையைத் தோன்றுவித்து ஸமாதானமருளிச் செய்திருக்கு மழகு ஆழ்ந்தஞானம் படைத்தவர்களுக்கே ரஸிக்கவியலும். அவ்விடத்து ஸ்ரீஸூக்திகள் காண்மின்.

> "லீலையாவது தாதாத்விகாஸமொழிய காலாந்தரத்தில் வருவதொரு பலத்தைக்கணிசியாமல் பண்ணும் வ்யாபாரமே யாகிலும், "இதுக்கு ப்ரயோஜனம்" என்று ஸ்ருஷ்டிரூபவ்யாபாரத்துக்கு ப்ரயோஜனமாகச் சொல்லுகையாலே தாதாத்விகாஸ மாத்ரத்தைச் சொல்லிற்றுகக்கடவது."

இதில் "லீலையாவது............பண்ணும் வியாபாரமேயாகிலும் என்ற வாக்யம் வெகு கம்பீரமானது. "பண்ணும் வ்யாபாரமாகையாலே", "இதுக்குப்ரயோஜனம் கேவலலீலை என்கிற மூலஸ்ரீஸூக்தி ஸமந்விதமாக மாட்டாதாகிலும்" என்பது இங்கு விவக்ஷிதம். மூலஸ்ரீஸூக்தி அஸமஞ்சஸமாயிருக்கிறது என்பதைத் தம் திருவாக்கினால் வெளியிடக்கூசி வாக்யமருளிச் செய்யுமழகு அத்புதம். "அகில புவந ஜந்மஸ்தேம பங்காதி லீலே":—ஜகதுத்பத்திஸ்திதி ஸம்ஹார அந்தঃப்ரவேச நியமனாதி லீலம் என்று ஸமாநாதி கரணமாகவே அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யகாரரும்கூட "ஜகத் ஸ்ருஷ்டௌ லீலைவ ப்ரயோஜனம்" என்று அருளிச்செய்ததை அடியொற்றி லோகாசார்யரும் "இதுக்கு ப்ரயோஜனம் கேவலலீலை" என்று அருளிச்செயதிருந்தாலும், "இதுக்கொரு ப்ரயோஜன மில்லை; கேவலலீலையே" என்று வாக்யங்கள் இருக்கவேணும் என்று திருவுள்ளம் பற்றிய மாமுனிகள் அதைப் பூப்பறித்தாப்போல் காட்டியிருக்கிறவிதம் சாஸ்த்ர வ்யுத்புத்தியில் ஆழ்ந்திருக்குமவர்களுக்கே நிலமாகக்கூடியது. "தற்காலத்தில் ரஸத்துக்கு ஹேதுவான வ்யாபாரத்திற்குத் தான் லீலை என்று பெயர்; ஆனால் இங்கு தற்காலத்தில் தோன்றும் ரஸத்துக்குக்கு ஹேதுவான வ்யாபாரம் என்கிறவரையில் போகாமல் தற்காலத்தில் தோன்றும் ரஸம் என்ற மட்டில் குறைத்து லீலாபதத்தினர்த்தமாகக் கொண்டால் மூலம் ஸமந்விதமாகிவிடும்" என்று நிரூபித்தருளினாராயிற்று. "தாதாத் விகாஸமாத்ரத்தைச் சொல்லிற்றாகக்கடவது" என்று மிகவழகிய ஒரு சிறு வாக்யத்தில் இந்த விஷயத்தை முடித்தருளினது மாமுனிகளொருவருக்கே அஸாதாரணமான பாண்டித்ய ப்ரகர்ஷத்திற்குக் குன்றிலிட்ட விளக்காகும். வேறொரு வித்வானாலும் இயலா தென்று சத்தியமாகச் சொல்லுவேனடியேன். இதை இங்கு எடுத்துக் காட்டியது— மாமுனிகள் இப்படி ஆழ்ந்து காண்பவர் என்பதற்காக மட்டுமல்ல; இப்படி நலிந்து நிர்வஹிக்கக்கூடிய ஸ்ரீஸூக்திகளையருளச் செய்யுமியல்பு மாமுனிகளிடம் சிறிதும் காணக் கிடைக்காது என்பதற்காகவுமாம். விசதவாக் சிகாமணி பட்டம் இவரொருவருக்கே தகும்.

ஆராய்ச்சியில் தலைசிறந்த இப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகள் மஹாசாஸ்த்ரஜ்ஞர்கள் உள் குழையத்தக்கவை மாமுனிகளின் ரஹஸ்ய வியாக்யான க்ரந்தங்களிலே நிதியாக அமைந் திருப்பதை உற்றுநோக்குங்கால் "நீறு பூத்த நெருப்பு" என்றொரு பழமொழியுண்டே, அது மாமுனிகளைத்தான் சேருமென்பர் பெரியோர். ஸ்ரீஸூக்தியோ தமிழ்; ஆத்தங்களோ கஹந சாஸ்த்ரார்த்தங்கள். அருளிச்செய்த மஹாசார்யரோ டம்பமென்பது சிறிதுமில்லாதவர். அவருடைய ஞான பூர்த்தியும் ஆத்மகுணபூர்த்தியுமன்றோ அழகிய மணவாளனை அடிபணியச்செய்தன? இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த பேராசிரியரை வழிபடும் மரபில் தோன்றினோமென்கிற பாக்யவிசேஷத்தை நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சு இடிந்து குமடியேனுக்கு.

---

ஸ்ரீ

# மாமுனிகள் உகந்த மங்கையர்கோன்

ஸ்ரீ. உ. வே., வே. ரா. வரதநாராயணய்யங்கார் ஸ்வாமி

வீறுடைய கார்த்திகையில் கார்த்திகைநாள் இன்று, என்று காதலிப்பார் வாய்த்த மலர்த்தாள்கள் வாழ்த்தும் ஸ்ரீ மணவாள மாமுனிகள், ஒரு சமயம் தம் அஷ்டதிக்கஜங்களுடன் திருவாலி திருநகரிக்கு திக் விஜயமாக எழுந்தருளி, அர்ச்சாவதாரத்தில் எழுந்தருளியிருக்கும் ஆழ்வாரை சேவித்து, அவ்வடிவழகிலே தோற்று அணைத்த வேலும் என்று தொடங்கும் சூர்ணிகையை, (பக்கம் 19, 20 காண்க) அனுசந்தித்து, 'தென்னாலி நாடன் திருவழகைப்போல் என் ஆணை ஒப்பாரில்லையே' என்றும் 'என் கண்ணைவிட்டு அகன்றிடாது கலியன் ஆணை ஆணையே' என்றும் ஆணைகளிட்டு ஒருவாறு தாம் தரித்து நின்ற விஷயம் ஸ்ரீ வைஷ்ணவர்கள் அறிந்ததே.

மேலும், திவ்ய தேச மங்களாசாஸனத்தில் இழிந்த வாறே, மண்ணியாற்றங்கரையில் நின்று, தம் ஆனந்தத்திற்குப் போக்குவீடாய் 'மங்கை நகர் வாழி' தொடங்கி, 'பொங்கு புனல் மண்ணித்துறை வாழி, வாழி பரகாலன் எண்ணில் தமிழ்ப்பா இசை' என்றும், திருவஷ்டாக்ஷரத்திற்கு விளைநிலமான திருமணங்கொல்லையையும் (தற்போது வேதராஜபுரம் என்று வழங்குகிறது), 108 எம்பெருமான்களும் சேவைசாதித்த விடமான, பெருமாளுடைய ஸ்ரீபாத தீர்த்தம் என்று வழங்குகிற திருவரசாற்றின்கரையையும் 'இதுவோ திருவாலி' என்று தொடங்கி, 'எட்டெழுத்தும் பரித்த விட' மென்று கொண்டாடினர்.

எட்டெழுத்தும் அறிந்த இடம் என்று சாதிக்காமல் வாள் வலியால் மந்திரம் கொண்டமை குறித்து எட்டெழுத்தும் பறித்தவிடம் என்று அனுசந்திக்கிறார் தம் விசத வாக்கலே. மேலும், அஷ்டாக்ஷரம் விளைந்த அவ்விடத்திலேயே, ஒரு ஸம்வத்ஸரம், தம்பரிவாரங்களுடன் எழுந்தருளியிருந்து மாறன் பணித்த தமிழ் மறையின் ஆறங்கங்களாகிற ஆறு பிரபந்தங்களுக்கும் வ்யாக்யான காலக்ஷேபங்கள் சாதித்து உகந்தார் என்று விலக்ஷணர் வழங்குவர். இப்படி மாமுனிகள், மங்கையர்கோனை உகந்த விஷயம் பின்புள்ளாருக்கும் சேவிக்கும்படி, பிரதி வருஷமும், தை அமாவாஸைக்கு மறுதினம், ஆழ்வார் பஞ்ச நிருஸிம்ஹ க்ஷேத்ரங்களையும் திருநாங்கைப் பதினோரு திவ்யதேசங்களையும் சேவித்து, பின்பு நாங்கை எம்பெருமான்கள் ஆழ்வாரை விட்டுப்பிரிய மனமில்லாமல் மணிமாடக்கோயிலில் எழுந்தருள, மறுபடியும் ஆழ்வாருடைய பாசுரங்களைக்கேட்டருளி உகந்து, அவருக்குத் திருப்பரியட்டம் திருமாலை, ஸ்ரீ சடகோபன் சாதித்தருள, இவ்வைபவத்தை சேவிக்க அங்கு எழுந்தருளின ஸ்ரீ மணவாளமாமுனிகள் மிகவும் உகந்து, தாம் அருளிய வடிவழகு சூர்ணிகைகளாலும் "நந்தாதீப" என்கிற சுலோகத்தாலும் எம்பெருமான்களையும் ஆழ்வாரையும் சேர்த்து, மங்களாசாஸன வைபவத்திற்கு கண்ணெச்சில் வாராமைக்குத் தாம் பல்லாண்டு பாடுகிறார்.

இவ்வைபவம் பக்தர்களுக்குக் கண்கொள்ளாக்காட்சி யாகும். ஆழ்வார்களில் கடைக்குட்டியும் ஆசாரியர்களில் கடைக்குட்டியும் ஒருங்கே சேருமிடம் அன்றோ !

॥ श्रीः ॥

श्रीवरवरमुनिभिरनुगृहीता

## ॥ यतिराजविंशतिः ॥

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

# யதிராஜ விம்சதி

### தனியன்

य: स्तुतिं यतिपतिप्रसादनीं व्याजहार यतिराजविंशतिम् ।
तं प्रपन्नजनचातकाम्बुदं नौमि सौम्यवरयोगिपुङ्गवम् ॥

யஃஸ்துதிம் யதிபதிப்ரஸாதிநீம் வ்யாஜஹார யதிராஜவிம்சதிம் ।
தம் ப்ரபந்நஜநசாதகாம்புதம் நௌமி ஸௌம்யவரயோகி புங்கவம் ॥

யதிராஜரான எம்பெருமானார் திருவுள்ளத்தையுகப்பிக்கும்படி யதிராஜவிம்சதி என்னும் ஸ்தோத்ரத்தை அருளிச்செய்தவரும் ப்ரபந்நர்களுக்கு வேறிடம் தேடிப்போகவேண்டாமல் ஸகலார்த்தங்களையும் அருளுபவருமான மணவாளமாமுனிகளைத் துதிக்கிறேன்.

---

श्रीमाधवाङ्घ्रिजलजद्वयनित्यसेवाप्रेमाविलाशयपराङ्कुशपादभक्तम् ।
कामादिदोषहरमात्मपदाश्रितानां रामानुजं यतिपतिं प्रणमामि मूर्ध्ना ॥

ஸ்ரீமாதவாங்க்ரி ஜலஜத்வய நித்யஸேவாப்ரேமா விலாசய பராங்குச பாதபக்தம் ।
காமாதிதோஷ ஹரமாத்மபதாச்ரிதானாம் ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமிமூர்த்நா ॥

பூமன்னுமாது பொருந்தியமார்பனை ஸ்ரீயஃபதியின் திருவடிகளில் எப்போதும் தொழுதெழும் மனத்தனாய், அத்திருவடிகளில் கனத்த ப்ரேமையுடையவரான மாறனடி பணிந்துய்ந்த வரும், தமது திருவடிகளைப் பணிபவருக்கு ஸகலதோஷங்களையும் போக்கித்தருபவரும், யதிகளுக்குத் தலைவருமான எம்பெருமானாரைத் தலையால் வணங்குகிறேன். 1

श्रीरङ्गराजचरणाम्बुजराजहंसं श्रीमत्पराङ्कुशपदाम्बुज भृङ्गराजम् ।
श्रीभट्टनाथपरकालमुखाब्जमित्रं श्रीवत्सचिह्नचरणं यतिराजमीडे ॥

ஸ்ரீரங்கராஜ சரணாம்புஜராஜஹம்ஸம் ஸ்ரீமத் பராங்குச பதாம்புஜ ப்ருங்கராஜம் ।
ஸ்ரீபட்டநாத பரகால முகாப்ஜமித்ரம் ஸ்ரீவத்ஸசிஹ்நசரணம் யதிராஜமீடே ॥

ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித்தாமரைகளில் பொருந்தின ராஜஹம்ஸம் போன்றுள்ளவரும், நம்மாழ்வாருடைய திருவடித்தாமரைகளில் படர்ந்தவண்டு போலிருப்பவரும், பட்டர்பிரான், பரகாலன் முதலான ஆழ்வார்களாகிற தாமரைப்பூக்களை (அவர்களை அடியொற்றி நடப்பதால் களிப்பூட்டி) மலரச்செய்யும் ஸூர்யன்போன்றவரும், ஸ்ரீவத்ஸசிஹ்நர் எனப்படும்

கூரத்தாழ்வான் (முதலான முதலிகளுக்கு) தஞ்சமாயிருப்பவருமான எம்பெருமானாரைத் துதிக்கிறேன். 2

वाचा यतीन्द्र ! मनसा वपुषा च युष्मत्पादारविन्दयुगलं भजतां गुरूणाम् ।
कूराधिनाथकुरुकेशमुखाद्यपुंसां पादानुचिन्तनपरस्सततं भवेयम् ॥

வாசா யதீந்த்ர ! மநஸா வபுஷாச யுஷ்மத்பாதாரவிந்தயுகளம் பஜதாம் குரூணாம் ।
கூராதிநாத குருகேசமுகாத்யபும்ஸாம் பாதாநுசிந்தநபாரஸ்ஸததம் பவேயம் ॥

யதீந்த்ரரே ! சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினுலும் தேவரீருடைய திருவடித்தாமரைகளேயே தொழுபவர்களும், மஹாசார்யர்களுமான கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலான முதலிகளுடைய திருவடிகளேயே எப்போதும் சிந்திப்பவனுக இருக்கும்படி தேவரீர் க்ருபைபண்ணவேண்டும். 3

नित्यं यतीन्द्र ! तव दिव्यवपुस्मृतौ मे सक्तं मनोभवतु वाग्गुणकीर्तनेऽसौ ।
कृत्यं च दास्यकरणं तु करद्वयस्य वृत्यन्तरेऽस्तु विमुखं करणत्रयं च ॥

நித்யம் யதீந்த்ர ! தவ திவ்யவபுஸ்ம்ருதௌ மே
ஸக்தம் மநோபவதுவாக் குணகீர்த்தநேஸௌ ।
க்ருத்யம் ச தாஸ்யகரணம் து கரத்வயஸ்ய
வ்ருத்யந்தரேஸ்து விமுகம் கரணத்ரயஞ்ச ॥

எம்பெருமானரே ! அடியேனுடைய நெஞ்சு எப்போதும் தேவரீருடைய திவ்யமங்கள விக்ரஹத்தை த்யானிப்பதிலேயே ஊன்றியிருக்கவேண்டும் ; என் வாக்கு தேவரீருடைய கல்யாண குணங்களேப் புகழ்வதிலேயே ஊன்றவேணும் ; என் கைகளிரண்டும் தேவரீர் கைங்கர்யத்திலேயே ஊன்றியிருக்கவேணும். இப்படி அடியேன் மநோவாக்காயங்களாகிற முக்கரணங்களாலும் இதர வியாபாரங்களே சிறிதும் கவனியாதவனுக இருக்கும்படி அருளவேண்டும். 4

अष्टाक्षराख्य मनुराजपदत्रयार्थनिष्ठां ममात्र वितराद्य यतीन्द्र नाथ ! ।
शिष्टाग्रगण्यजनसेव्य भवत्पदाब्जे हृष्टास्तु नित्यमनुभूय ममास्य बुद्धिः ॥

அஷ்டாக்ஷராக்ய மநுராஜ பதத்ரயார்த்த நிஷ்டாம்
மமாத்ர விதராரத்ய யதீந்த்ரநாத ।
சிஷ்டாக்ரஹண்யஜநஸேவ்யபவத்பதாப்ஜே
ஹ்ருஷ்டாஸ்து நித்யமநுபூய மமாஸ்யபுத்திः ॥

எமது குலநாதனை எமபெருமானரே ! மந்த்ர ராஜனெனக்குலாவப்படும் திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தின் மூன்று பதங்களான ப்ரணவம், நமஸ்ஸு, நாராயணய இவைகளில் தேறின அர்த்தங்களான அநந்யார்ஹசேஷத்வம் [1], அநந்யபோக்யத்வம் [2], அநந்யசரணத்வம் [3] இவைகளில் திடமானவுறுதியை அடியேனுக்கு இந்தவுலகிலேயே, (ருசிவிளேவித்த) இப்

1. பரமபுருஷனேத்தவிற இதரர்களுக்கு ஸொத்தாக இல்லாதிருக்கை,

2. பரமபுருஷனேத்தவிற இதரர்களுக்கு மகிழ்ச்சிக்குறுப்பான வஸ்துவாக இல்லாதிருக்கை

3. பரமபுருஷனேத்தவிற இதரரிடத்தில் பணியாமை

பகவானுக்குச் சேஷமாயிருக்கை, அவனடியார்களுக்குச் சேஷமா யிருக்கையையும் உட்கொண்டது. எம்பெருமானரைத்தவிற தேவுமற்றறியேன் என்ற நிலேயை இங்கு வேண்டுகிருர்.

போதே அருளவேண்டும். மஹான்களில் தலைவர்களான ஆழ்வான் ஆண்டான் போல்வார் தொழும்படியான தேவரீருடைய திருவடித் தாமரைகளை இடைவிடாமல் நித்யாநுபவம் பண்ணி, அவைகள் திறத்தில் நித்யகைங்கர்யம் பண்ணி மகிழும்படி அருள்பாலிக்க வேண்டும். 5

अल्पाऽपि मे न भवदीयपदाब्जभक्तिश्शब्दादिभोगरुचिरन्वहमेधते हा ।
मत्पापमेव हि निदानममुष्य नान्यत्तद्वारयार्य यतिराज ! दयैकसिन्धो ! ॥

அல்பாபி மே ந பவதீயபதாப்ஜ பக்தி: சப்தாதிபோகருசிரந்வஹ மேததே ஹா ।
மத்பாபமேவ ஹி நிதாநமமுஷ்ய நாந்யத் தத்வாரயார்ய யதிராஜ ! தயைகஸிந்தோ ! ॥

கருணையேகடலாம் ஆசார்யரான எதிராஜரே ! அடியேனுக்குத் தேவரீருடைய திருவடித் தாமரைகளில் சிறிதும் அன்பில்லை. மேலும், மற்ற விஷய போகங்களில் ஊற்றம் தினமும் அதிகமாகிக்கொண்டே போகிறது. இதற்கு மூலகாரணம் என்னுடைய பாபமே. அதைத் தொலைத்தருள வேணும். 6

இந்த 6வது முதல் 15வது ச்லோகம் வரை தாம் மஹாபாபி என்று பலபடியாலும் நைச்யாநுஸந்தானம் பண்ணுகிறார்.

वृत्या पशुर्नरवपुस्त्वहमीदृशोऽपि श्रुत्यादिसिद्धनिखिलात्मगुणाश्रयोऽयम् ।
इत्यादरेण कृतिनोऽपि मिथः प्रवक्तुमद्यापि वञ्चनपरोऽत्र यतीन्द्र ! वर्ते ॥

வ்ருதயா பசுர் நரவபுஸ் த்வஹமீத்ருசோபி ச்ருத்யாதி ஸித்தநிகிலாத்மகுணச்ரயோயம் !
இத்யாதரேண க்ருதிநோபி மித: ப்ரவக்தும் அத்யாபி வஞ்ந பரோத்ர யதீந்தர ! வர்த்தே ॥

எம்பெருமானரே ! மனித சரீரமுடையேனாயிருந்தாலும் நடைத்தையில் பசுவை (ம்ருகங்களை) யொத்தவன். ஆனாலும், ‘இவன் சாஸத்ரங்களில் தேறின ஸகல ஆத்ம குணங்களும் நிறைந்தவன்’ என்று அறிவாளிகளும் என்னைப்பற்றி பரஸ்பரம் ஆதரவோடு பேசும்படி வஞ்சகனாக இருக்கின்றேன். 7

दुःखावहोऽहमनिशं तव दुष्टचेष्टश्शब्दादिभोग निरतश्शरणागताख्यः ।
त्वत्पादभक्त इव शिष्टजनौघमध्ये मिथ्याचरामि यतिराज ततोऽस्मि मूर्खः ॥

து:க்காவஹோஹமநிசம் தவதுஷ்டசேஷ்டச்சப்தாதிபோகநிரதச் சரணாகதாக்ய: ।
த்வத்பாத பக்த இவ சிஷ்ட ஜநௌகமத்யே மித்த்யா சராமி யதிராஜ !
ததோஸ்மி மூர்க்க : ॥

யதிராஜரே ! மிகவும் கெட்ட நடத்தைகளையுடைய நான், சப்தாதி விஷயங்களில் ஊற்ற முடையவனாய், ப்ரபந்நன் என்ற பெயரை வைத்துக்கொண்டு, எப்போழுதும் தேவரீருடைய திருவுள்ளத்தைப் புண்படுத்திக்கொண்டு நல்லோர்கள் நடுவில் திரிகிறேன். இப்படி மூர்க்கனாயிருக்கிறேன். 8

नित्यं त्वहं परिभवामि गुरुं च मन्त्रं तद्देवतामपि न किञ्चिदहो बिभेमि ।
इत्थं शठोऽप्यशठवद्भवदीयसङ्घे धृष्टश्चरामि यतिराज ! ततोऽस्मि मूर्खः ॥

நித்யம் த்வஹம் பரிபவாமி குருஞ்ச மந்த்ரம் தத்தேவதாமபி நகிஞ்சிதஹோ பிபேமி ।
இத்தம் சடோப்யசடவத் பவதீயஸங்கே த்ருஷ்டச்சராமி யதிராஜ ! ததோஸ்மி மூர்க்க : ॥

எம்பெருமானுரே ! நித்யமும் நான் ஆசார்யரையும், அவருபதேசித்த தேசித்தமந்த்ரத்தையும், மந்த்ரத்துக்குள்ளீடான தேவதையையும் பரிபவப்படுத்துகிறேன். இப்படிப்பட்ட பாபியானு லும், அப்படியல்லாதவன் போல் தேவரீரடியார்திரளில் துணிவுடன் ஸஞ்சரிக்கிறேன். ஆத லால் மூர்க்கனுயிருக்கிறேன். (நான்காம் பாதத்தில் த்ருஷ்ட: என்று இங்கு கொண்டுள்ள பாடத்துக்கு ஹ்ருஷ்ட : என்று வேறு பாடமுண்டு. வஞ்சித்து விட்டோமென்று மகிழ்ச்சி யுடன் திரிகிறேன் என்று பொருளாகுமிதனுல்.) 9

हा हन्त हन्त मनसा क्रियया च वाचा योऽहं चरामि सततं त्रिविधापचारान् ।
सोऽहं तवाप्रियकरः प्रियकृद्वदेवं कालं नयामि यतिराज ! ततोऽस्मि मूर्खः ॥

ஹா ஹந்த ஹந்த ! மநஸா க்ரியயா ச வாசா யோஹம் சராமி ஸததம் த்ரிவிதாபசாரான் ।
ஸோஹம் தவாப்ரியகர : ப்ரியக்ருத்வதேவம் காலம் நயாமி யதிராஜ ! ததோஸ்மி மூர்க்க :

எம்பெருமானுரே ! மனம், மெய், சொல் இப்படிப்பட்ட முக்காரணங்களாலும் எப்போதும் பகவதபசாரம், பாகவதாபசாரம், அஸஹ்யாபசாரம் எனப்பட்ட மூன்றுவகை அபசாரங் களிலும் ஈடுபட்ட நான் தேவரீருக்கு ப்ரியமல்லாததையே செய்துகொண்டு, ப்ரியத்தைச் செய்பவன்போல இப்படியே காலத்தைக் கழிக்கிறேன். ஆதலால் நான் மூர்க்கன். என்ன கொடுமையிது ! 10

पापे कृते यदि भवन्ति भयानुतापलज्जाः पुनः करणमस्य कथं घटेत ।
मोहेन मे न भवतीह भयादिलेशस्तस्मात्पुनः पुनरघं यतिराज ! कुर्वे ॥

பாபே க்ருதே யதி பவந்தி பயாநுதாபஜ்ஜா : புந : கரணமஸ்ய கதம் கடேத ।
மோஹேந மே ந பவதீஹ பயாதிலேசஸ்தஸ்மாத்புந:புநரகம் யதிராஜ ! குர்வே ॥

ஸவாமி எம்பெருமானுரே ! பாபம் செய்து, அதனுல் அச்சம், அநுதாபம், வெட்கம் இவை உண்டாகுமேயானுல் எப்படி மறுபடியும் பாபம் செய்ய நேரிடும் ? எனக்கோ, இங்குபாபம் செய்வதில் அஜ்ஞானத்தினடியால் அச்சம், அநுதாபம், வெட்கம் இவை ஏற்படுவதில்லை. ஆகையால் மேலும் மேலும் பாபம் செய்துகொண்டே இருக்கிறேன். 11

अन्तर्बहिस्सकलवस्तुषु सन्तमीशमन्धः पुरस्थितमिवाहमवीक्षमाणः ।
कन्दर्पवश्यहृदयस्सततं भवामि हन्त त्वदग्रगमनस्य यतीन्द्र ! नार्हः ॥

அந்தர்பஹிஸ் ஸகலவஸ்துஷு ஸந்தமீசம்
அந்த : புரஸ்திதமிவாஹமவீக்ஷமாண : ।
கந்தர்ப்பவச்யஹ்ருதயஸ்ஸததம் பவாமி
ஹந்த த்வதக்ரகமநஸ்ய யதீந்த்ர ! நார்ஹ : ॥

எம்பெருமானுரே ! எல்லாப்பொருள்களிலும் உள்ளும் புறமும் ஒக்க வியாபித்துள்ள எம்பெரு மானைப் பிறவிக்குருடன் தன் முன்புள்ள பொருளைக் காண இயலாததுபோல காணமாட்டாதவ னுய், எப்போதும் காமத்துக்கு வசப்பட்ட மனத்தனுய் உள்ளேன். அந்தோ ! தேவரீர் திருமுன்பே வரவும் அடியேன் யோக்யதை யற்றவன். 12

तापत्रयीजनितदुःखनिपातिनोऽपि देहस्थितौ ममरुचिस्तु न तन्निवृत्तौ ।
एतस्य कारणमहो मम पापमेव नाथ ! त्वमेव हर तद्यतिराज ! शीघ्रम् ॥

தாபத்ரயீ ஜநிததுக்க நிபாதிநோபி
தேஹஸ்திதௌ மமருசிஸ்து நதந்நிவ்ருத்தௌ ।
ஏதஸ்யகாரணமஹோ மம பாபமேவ
நாத! த்வமேவ ஹர தத் யதிராஜ! சீக்ரம் ॥

ஆத்யாத்மிகம் (சரீரத்தில் வ்யாதி, மனதில் காமக்ரோதங்கள் இவைகளால் உண்டாவன) ஆதி பௌதிகம் (பிசாசம், உரகம், ராக்ஷசர் இத்யாதிகளால் உண்டாவன) ஆதிதைவிகம் (சீதம், உஷ்ணம், வர்ஷம் இத்யாதிகளால் உண்டாவன) எனப்படும் மூன்று தாபங்களாலும் உண்டாக்கப்பட்ட துன்பங்களில் உழல்பவனேயாயினும், என் ஆசையெல்லாம் இவ்வுடலைப் பேணுவதியேயாம். இந்த தோஷத்தைப் போக்கிக் கொள்வதில் ருசியுண்டாவதில்லை. இந்த நிலைக்குக் காரணம் என்பாபமேயாகும். ஸ்வாமிந்! அந்த பாபத்தை தேவரீரே சீக்கிரமாக மாய்த்தருள வேணும். 13

वाचामगोचरमहागुणदेशिकाग्र्य कूराधिनाथकथिताखिलनैच्यपात्रम् ।
एषोऽहमेव न पुनर्जगतीदृशस्तद्रामानुजार्य करुणैवतु मद्गतिस्ते ॥

வாசாமகோசர மஹாகுணதேசிகாக்ர்ய
கூராதிநாதகதிதாகில நைச்யபாத்ரம் ।
ஏஷோஹமேவ ந புநர் ஜகதீத்ருசஸ் தத்
ராமாநுஜார்ய! கருணைவது மத்கதிஸ்தே ॥

மொழியைக்கடக்கும் பெரும்புகழாளரும், ஆசார்யர்களில் தலைசிறந்தவருமான கூரத்தாழ்வான் (தம்முடைய ஸ்துதிகளில் தமக்குள்ளதாக) சொல்லிக் கொண்ட சம்ஸ்தநைச்யங்களுக்கும் (தோஷங்களுக்கும்) உண்மையில் பாத்திரமாயிருப்பவன் இந்த ஜகத்தில் அடியேன் ஒருவனேயாகும் இப்படி தோஷமுடையவன் வேறு எவனுமில்லை. ஆகையால் தேவரீருடைய (திருவருளுக்கு ச்சரியான கொள்கலம்) திருவருள் என்னையே பற்றியுள்ளது. [பாபியான எனக்கு அருள் செய்யாமல் விட்டாயாகில் என்போல் உனக்கருள் செய்யத்தகுந்தவன் கிடைக்கமாட்டான்—ஸ்தோத்ரரத்னம்—50] 14

शुद्धात्मयामुनगुरूत्तमकूरनाथ भट्टाख्यदेशिकवरोक्तसमस्तनैच्यम् ।
अद्यास्त्यसङ्कुचितमेव मयीह लोके तस्माद्यतीन्द्र ! करुणैव तु मद्गतिस्ते ॥

சுத்தாத்மயாமுந குருத்தமகூரநாத
பட்டாக்யதேசிகவரோக்த ஸமஸ்த நைச்யம் ।
அத்யாஸ்த்யஸங்குசிதமேவ மயீஹலோகே
தஸ்மாத் யதீந்த்ர! கருணைவ து மத்கதிஸ்தே ॥

எம்பெருமானாரே! மஹாபரிசுத்தர்களான ஆளவந்தார், கூரத்தாழ்வான், பட்டர் முதலான ஆசார்யச்ரேஷ்டர்கள் தங்கள் ஸ்ரீஸூக்திகளில் தங்கள்பால் சொல்லிக்கொண்ட ஸமஸ்த தோஷங்களும் இந்த லோகத்தில் இப்பொழுது என்னொருவனிடத்திலேயே குறைவின்றி

நிரம்பியுள்ளன; ஆதலால் தேவரீருடைய திருவருளே அடியேனுக்குப்புகல் (அருட்கும்ஃதே புகல் என்னவுமாம்.) 15

शब्दादिभोगविषया रुचिरस्मदीया नष्टा भवत्विह भवद्दयया यतीन्द्र ! ।
त्वद्दासदासगणना चरमावधौ यस्तद्दासतैकरसताऽविरता ममास्तु ॥

சப்தாதிபோகவிஷயா ருசிரஸ்மதீயா
நஷ்டா பவத்விஹபவத்தயயா யதீந்த்ர।
த்வத்தாஸதாஸகணநாசரமாவதௌ ய:
தத்தாஸதைகரஸதா அவிரதா மமாஸ்து॥

எம்பெருமானுரே! சப்தாதி விஷயங்களையநுபவிக்க வேண்டுமென்கிற அடியேனுடைய ஆசை தேவரீருடைய திருவருளாலே தொலையவேணும்; தேவரீருடைய அடியாரடியார்களை எண்ணிக்கொண்டு போகையில் கடைசியிலுள்ள அடியவர்க்கு அடியேன் அடிமைப் பட்டிருப்பதிலே ஊற்றமானது அடியேனுக்குத் தொடர்ந்து நடக்கவேணும். [நீக்கமில்லா அடியார் தம்மடியார் அடியார் அடியார் எங்கோக்கள்—திருவாய்மொழி, 8-10-10] 16

श्रुत्यग्रवेद्य निजदिव्य गुणस्वरूप: प्रत्यक्षतामुपगतस्त्विह रङ्गराज: ।
वश्यस्सदा भवति ते यतिराज ! तस्माच्छक्तस्वकीयजनपापविमोचनेत्वम् ॥

ச்ருத்யக்ரவேத்யநிஜதிவ்ய குணஸ்வரூப:
ப்ரத்யக்ஷதாபமுகதஸ்த்விஹ ரங்கராஜ:।
வச்யஸ்ஸதா பவதி தே யதிராஜ தஸ்மாத்
சக்தஸ்வகீயஜந பாபவிமோசநே த்வம்॥

எம்பெருமானுரே! வேதாந்தங்களில் கேட்டறிய வேண்டும்படியுள்ள தன்குணங்கள், ஸ்வரூபம் இவைகளையுடையவனு(யினும்) இந்த லோகத்தில் (தன் பெருமை அறிந்து ஈடு படுவாரில்லாத ஸம்ஸாரமண்டலத்தில்) எல்லாருக்கும் ப்ரத்யக்ஷமாய்க் காணும்படியுள்ள ஸ்ரீரங்கநாதன் எப்போதும் தேவரீருக்கு வச்யனுக (ஏவிக்கார்யம் கொள்ளும்படி) உள்ளான். ஆதலால் தம்மடியார்களின் பாபத்தைப் போக்கியருள்வதில் தேவரீர் சக்தியுள்ளவர். (அடியேனுக்கு க்ருபை பண்ணவேணும்). 17

कालत्रयेपि करणत्रयनिर्मितातिपापक्रियस्य शरणं भगवत्क्षमैव ।
सा च त्वयैव कमलारमणेऽर्थिता यत्क्षेमस्य एव हि यतीन्द्र ! भवच्छ्रितानाम् ॥

காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி
பாபக்ரியஸ்ய சரணம் பகவத்க்ஷமைவ।
ஸா ச த்வயைவ கமலாரமணேர்த்திதா யத்
க்ஷேமஸ்ஸ ஏவ ஹி யதீந்த்ர! பவத்ச்ரிதாநாம்॥

எம்பெருமானுரே! முக்காலங்களிலும் (சென்றது, நிகழ்வது, வருவது) முக்கரணங்களாலும் (மனம், மெய், மொழி) அதிகமான பாபங்களைச் செய்தவனுக்கு எம்பெருமானது பொறுமை யொன்றே புகலாகும்; அந்த பொறுப்பது (க்ஷமை) தானும் தேவரீராலேயே நம்பெருமாளிடம் வேண்டப்பட்டது யாதொன்று உண்டோ, அதுவே தேவரீரை அடிபணிந்தவர்களுககு க்ஷேம மளிககவேண்டும். (சரணுகதி கதயத்தில் பண்ணிய ப்ரார்த்தனையடியாக, "உமக்கும் உம் முடைய ஸம்பந்த ஸம்பந்திகளுககும் ஒரு குறையுமிருக்காது" என்று நம் பெருமாளருளிச் செய்த வார்த்தையை இங்கு நினைவில் கொள்ளவேணும்.) 18

श्रीमन्यतीन्द्र ! तव दिव्यपदाब्जसेवां श्रीशैलनाथकरुणा परिणामदत्ताम् ।
तामन्वहं मम विवर्धय नाथ ! तस्याः कामं विरुद्धमखिलं च निवर्तयत्वम् ॥

ஸ்ரீமங்யதீந்த்ர தவதிவ்ய பதாப்ஜஸேவாம்
ஸ்ரீசைலநாத கருணாபரிணாமதத்தாம்।
தாமங்வஹம் மம விவர்த்தய நாத! தஸ்யா:।
காமம் விருத்த மகிலஞ்ச நிவர்த்தயத்வம்॥

எமக்குத் தலைவரான எம்பெருமானாரே! (அடியேனுடைய ஆசார்யரான) திருமலையாழ்வாருடைய திருவருள் மிகுதியினால் அடியேனுக்கு அளிக்கப்பட்ட தேவரீருடைய திருவடிகளில் கைங்கர்யத்தை தினமும் வளரச் செய்தருளவேணும்; அதற்கு விரோதிகளான எல்லா விருப்பங்களையும் தேவரீரே தவிர்த்தருளவேணும். (உடையவர் திருவடிகளை ப்ராப்யமாகக் காட்டிக்கொடுத்தது அஸ்மதாசார்யரான திருவாய்மொழிப்பிள்ளை. இந்த ப்ராப்யவிஷயத்தில் கைங்கர்யருசியை பெருகும்படி அருளவேண்டும். இதற்கு விரோதமாகவுள்ள இதர விஷயங்களில் காமத்தை (பகவத்காமத்தையும் கூட) போக்கியருள வேண்டும். மற்றை நம் காமங்கள் மாற்று.) 19

विज्ञापनं यदिदमद्य तु मामकीनमङ्गीकुरुष्व यतिराज दयाम्बुराशे।
अज्ञोऽयमात्मगुणलेशविवर्जितश्च तस्मादनन्यशरणो भवतीति मत्वा ॥

விஜ்ஞாபநம் யதிதமத்யது மாமகீநம்
அங்கீகுருஷ்வ யதிராஜ! தயாம்புராசே!।
அஜ்ஞோயமாத்மகுணலேசவிவர்ஜிதச்ச
தஸ்மாதநங்ய சரணோ பவதீதிமத்வா॥

கருணைக்கடலான எம்பெருமானாரே! (காரேய் கருணையிராமநுசா! என்று அமுதனார் வாக்கு) தேவா திருவடிகளில் ப்ரார்த்திக்கும் இவன் (அடியேன்) தத்வஹித புருஷார்த்தங்கள் பற்றிய ஞானமில்லாதவன்; ஆத்மகுணங்கள் சிறிதுமில்லாதவன்; ஆகையால் "இவன் நம்மைத்தவிர்த்து வேறு புகலில்லாதவன்" என்று திருவுள்ளம் பற்றி இப்போது அடியேன் விண்ணப்பம் செய்தவைகளை (ச்லோகம் 16, 17, 18, 19) தலைக்கட்டியருள்வதாக அங்கீகரித்தருளவேணும்.

தயைகஸிந்துவான தேவரீருடைய இன்னருளையே பற்றுசாகக்கொண்டு அடியேன் செய்த பரார்த்தனையை அங்கீகரித்துத் தலைக்கட்டி யருளவேணும். "வேறு புகலில்லாதவன்; நம் க்ருபைக்குத் தகுந்த பாத்திரம்" என்று திருவுள்ளம் பற்றவேணும் என்று ப்ரார்த்தித்துத் தலைக்கட்டுகிறார். இந்தச்லோகம் மந்த்ரபுஷ்பத்தில் கடைசியில் அநுஸந்தேயம். 20

इति यतिकुलधुर्यमेधमानैः श्रुतिमधुरैरुदितैः प्रहर्षयन्तम् ।
वरवरमुनिमेव चिन्तयन्ती मतिरियमेति निरत्ययं प्रसादम् ॥

இதி யதிகுலதுர்யமேதமாநை: ச்ருதிமதுரைருதிதை: ப்ரஹர்ஷயந்தம்।
வரவரமுநிமேவ சிந்தயந்தீ மதிரியமேதி நிரத்யயம் ப்ரஸாதம்॥

எம்பெருமானார் திருவடிகளே சரணம்

ஜீயர் திருவடிகளே சரணம்

॥ श्रीः ॥

श्रीवरवरमुनिभिरनुगृहीतं

## ॥ देवराजमङ्गलम् ॥

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

# தேவராஜ மங்களம்



தேவாதிராஜன்

### தனியன்

यश्चक्रे देवराजाय मङ्गलाशासनं मुदा । तं वन्दे रम्यजामातृमुनिं विशदवाग्वरम् ॥

யச்சக்ரே தேவராஜாய மங்களாசாஸனம் முதா
தம் வந்தே ரம்யஜாமாத்ருமுநிம் விசதவாக்வரம்

ஸ்ரீதேவராஜமங்களாசாஸநஸ்துதியை உகந்து அருளிச்செய்த விசதவாக் சிகாமணிகளென்று ப்ரஸித்தரான மணவாளமாமுனிகளை வணங்குகிறேன்.

---

मंगलं वेधसो वेदिमेदिनीगृहमेधिने । वरदाय दयाधाम्ने धीरोदाराय मङ्गलम् ॥

மங்களம் வேதஸோ வேதிமேதிநீக்ருஹமேதிநே ।
வரதாய தயாதாம்நே தீரோதாராய மங்களம்॥ 1

பிரமனுடைய (யாகத்தில்) உத்தரவேதிஸ்தலத்தை இருப்பிடமாகவுடையவரும், பேருளாளனும், மஹா தீரனும் உதாரனுமான வாதராஜப் பிரானுக்குப் பல்லாண்டு.

वाजिमेधे वपाहोमे धारुरुत्तरवेदित: । उदिताय हुतादग्नेरुदाराङ्गाय मङ्गलम् ॥

வாஜிமேதே வபாஹோமே தாருருத்தாவேதித :
உதிதாய ஹுதாதக்நேருதாராங்காய மங்களம் 2

பிரமனுடைய அச்வமேதயாகத்தில் வபையையெடுத்து ஹோமம் செய்தவுடனே உத்தர வேதியில் ஹோமாக்நியிலிருந்து உதித்தருளினவரும், அழகிய வரதனுமான பெருமானுக்குப் பல்லாண்டு.

यजमानं विधिं वीक्ष्य स्मयमानमुखश्रिये । दयमानदृशे तस्मै देवराजाय मङ्गलम् ॥

யஜமாநம் விதிம் வீக்ஷ்ய ஸ்மயமாந முகச்ரியே
தயமாநத்ருசே தஸ்மை தேவராஜாய மங்களம். 3

தம்மை ஸாக்ஷாத்தரிக்கும் பொருட்டு வேள்விவளர்த்த பிரமனை நோக்கிப் புந்நகை செய்து கொணடு அருள் நோக்கம் தந்தருளின தேவப்பெருமாளுககுப் பல்லாண்டு.

वारिदश्यामवपुषे विराजत्पीतवाससे । वारणाचलवासाय वारिजाक्षाय मङ्गलम् ॥

வாரிதச்யாமவபுஷே விராஜத்பீதவாஸஸே।
வாரணசலவாஸாய வாரிஜாக்ஷாய மங்களம்॥ 4

கருமுகில்போல்வதோர் மேனியுடையவரும், பீதகவாடை திகழும் திருவரையுடையவரும், திருவத்திமா மலையைத் தன்னிருப்பிடமாகக் கொண்டவரும் செந்தாமரைக் கண்ணருமான தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு.

अद्यापिसर्वभूतानामभीष्टफलदायिने । प्रणतार्तिहरायास्तु प्रभवे मम मङ्गलम् ॥

அத்யாபி ஸர்வபூதாநாம் அபீஷ்டபலதாயிநே।
ப்ரணதார்த்திஹாராயாஸ்து ப்ரபவே மம மங்களம்॥ 5

பிரமனுக்கு அருள் செய்தது போலவே இன்றும் ஸகல ஜீவராசிகளுக்கும் வேண்டிய பலன் களெல்லாவற்றையும் அருளுபவரும், ஆச்ரிதர்களின் இன்னல்களைக்களைந்தருளுபவரும், அடியேனுடைய ப்ரபுவுமான தேவப் பெருமாளுக்குப்பல்லாண்டு.

दिव्यावयसौन्दर्य दिव्याभरणहेतये । दन्तावलगिरीशाय देवराजाय मङ्गलम् ॥

திவ்யாவய ஸௌந்தர்ய திவ்யாபரண ஹேதயே।
தந்தாவளகிரீசாய தேவராஜய மங்களம்॥ 6

திவ்யமான அவயவ ஸௌந்தர்யமுடையவரும், திவ்யமான ஆயுத, ஆபரணங்களைப்பூண்ட வரும் ஸ்ரீ ஹஸ்திகிரி நாதருமான தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு.

पुरुषाय पुराणाय पुण्यकोटि निवासिने । पुष्पितोदारकल्पद्रुकमनीयाय मङ्गलम् ॥

புருஷாய புராணய புண்யகோடி நிவாஸிநே!
புஷ்பிதோதார கல்பத்ருகமநீயாய மங்களம்॥ 7

புண்யகோடி விமானத்தில் எழுந்தருளியிருப்பவரும், அநாதி ஸித்த புருஷரும், பூத்து அழகிய கல்பகவ்ருக்ஷம் போல் விரும்பத்தக்கவருமான தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு.

काञ्चनाचलशृङ्गाग्रकालमेघानुसारिणे । सुपर्णांसावतंसाय सुरराजाय मङ्गलम् ॥

காஞ்சநாசலச்ருங்காக்ர காளமேகாநு ஸாரிணே ।
ஸுபர்ணாம்ஸாவதம்ஸாய ஸுரராஜாய மங்களம் ॥ 8

பொன்மயமானதொரு மலையுச்சியின்மேல் காளமேகம் திகழ்வதுபோல் பெரிய திருவடியின் திருத்தோள்கலங்காரமாகின்ற தேவப் பெருமாளுக்கு மங்களம்.

भोगापवर्गयोरेकं वाञ्छद्भ्यो ददते द्वयम् । श्रीमद्वरदराजाय महोदाराय मङ्गलम् ॥

போகாபவர்க்கயோ ரேகம் வாஞ்சத்ப்யோ தததே த்வயம் ।
ஸ்ரீமத்வரதராஜாய மஹோதாராய மங்களம் ॥ 9

இஹலோகத்தில் போகங்களையோ பரலோகத்தில் போகங்களையோ ஏதொன்றையே விரும்பிக் கேட்டாலும் இரண்டையுமே தந்தருளும் பேரருளாளனை வரதராஜப் பெருமாளுக்குப் பல்லாண்டு.

मतङ्गजाद्रितुङ्गाग्रशृङ्गशृङ्गारवर्ष्मणे । महाकृपाय मद्रक्षादीक्षितायास्तु मङ्गलम् ॥

மதங்கஜாத்ரிதுங்காக்ரச்ருங்க ச்ருங்கார வர்ஷ்மணே ।
மஹாக்ருபாய மத்ரக்ஷா தீக்ஷிதாயாஸ்து மங்களம் ॥ 10

ஸ்ரீ ஹஸ்திகிரியின் மிக வுயர்ந்த உச்சிக்கு அலங்காரமாயிருக்கும் திருமேனியையுடையவரும், அடியேன்போல்வாரை ரக்ஷித்தருள்வதில் தீக்ஷை கொண்டவருமான பேரருளாளப் பிரானுக்குப் பல்லாண்டு.

श्रीकाञ्चीपूर्णमिश्रेण प्रीत्या सर्वाभिभाषिणे । अतीतार्चाव्यवस्थाय हस्त्यद्रीशाय मङ्गलम् ॥

ஸ்ரீமத்காஞ்சீ பூர்ணமிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபிபாஷிணே ।
அதீதார்ச்சாவ்யவஸ்தாய ஹஸ்த்யத்ரீசாய மங்களம். 11

அர்ச்சாவதாரஸமாதியைக்கடந்து திருக்கச்சி நம்பிகளுடன் மிகவும் ப்ரீதியுடன் எப்போதும் வார்த்தையாடியருளின ஹஸ்திகிரீசனை பெருமாளுக்குப் பல்லாண்டு.

अस्तु श्रीस्तनकस्तूरीवासनावासितोरसे । श्रीहस्तिगिरिनाथाय देवराजायमङ्गलम् ॥

அஸ்து ஸ்ரீஸ்தந கஸ்தூரீ வாஸநாவாஸி தோரஸே ।
ஸ்ரீஹஸ்திகிரி நாதாய தேவராஜாய மங்களம் ॥ 12

பெரிய பிராட்டியார் எப்போதும் திருமார்புடன் அணைந்திருக்கையால் அவள் மார்பில் சாத்தின கஸ்தூரிக்காப்பின் நறுமணம் கமழும் திருமார்பையுடைய தேவப் பெருமாளுக்குப் பல்லாண்டு.

मङ्गलाशासनपरैः मदाचार्यपुरोगमैः । सर्वैश्च पूर्वैराचार्यैः सत्कृतायास्तु मङ्गलम् ॥

மங்களாசாஸனபரை: மதாசார்ய புரோகமை: ॥
ஸர்வைச்ச பூர்வைராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம் ॥ 13

எப்போதும் பல்லாண்டு பாடிக்கொண்டிருக்கும் அடியேனுடைய ஆசார்யர் முதலான எல்லா பூர்வாசார்யர்களாலும் போற்றப்பெற்ற பெருமானுக்குப் பல்லாண்டு.

ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

# உபதேசரத்தினமாலை

முன்னுரை

## உபதேசரத்தினமாலை யநுபவம்

ஸ்ரீமதுபயவே. வேளுக்குடி வரதாசாரியர் ஸ்வாமி

திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளையாச்ரயித்து அவருபதேசத்தாலே திருவாய் மொழி தொடக்கமான அசேஷதிவ்ய ப்ரபந்தங்களுடையவும், அதின் தாத்பர்யமான அசேஷரஹஸ்யங்களுடையவும் அர்த்தங்களையும் அதிகரித்து க்ருதார்த்தராயிருப்பாராய், அந்தப்பிள்ளை தாமே, குருபரம்பரையாகிற ஹாரத்துக்கு நடுநாயகரத்நம் என்னும்படி ஔஜ்ஜ்வல்யத்தை உண்டாக்கும்படியான உடையவர் திருவடிகளையே 'உமக்கொருதுணையாகப் பற்றியிரும்' என்று உகப்பின் மிகுதியாலே காட்டிக்கொடுக்க, அத்தாலே உடையவர் திருவடிகளிலே அதிமாத்ர ப்ராவண்யத்தையுடையராய் அதுவே நிரூபகமாக "யதீந்த்ர ப்ரவணர்" என்று பெரிய பெருமாளாலே போற்றப்பட்ட ஆசார்யஸார்வ பௌமராகிறார் நம் மணவாளமாமுநிகள். திருவரங்கம் திருப்பதியையிருப்பாகக் கொண்டவராகையாலே "கோயில் மணவாள மாமுநிகள்" என்று நிருபகமாம்படியிருப்பார் ஒருவரிறே. "மணவாள மாமுநியை இனி யொப்பார்களில்லை உலகேழிலும் உம்பரூரிலும்" என்னும்படி உபய விபூதியிலும் தம்முடைய சேஷத்வாதி குணங்களுக்கு உபமாநமின்றிக்கே யிருப்பாரொருவரிறே. இப்படிப்பட்ட வைபவத்தையுடைய மாமுநிகள் அருளிச்செய்த ப்ரபந்தங்கள், வியாக்யாநப்ரபந்தங்கள் ஸ்வதந்த்ரப்ரபந்தங்கள் என இருவகையாயிருக்கும். தத்வத்ரய வ்யாக்யாநம், ஸ்ரீவசநபூஷணவ்யாக்யாநம், முமுக்ஷுப்படி வ்யாக்யாநம், ஆசார்யஹ்ருதய வ்யாக்யானம் முதலியவை வ்யாக்யாநப்ரபந்தங்கள். உபதேசரத்திநமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்திப்ரபந்தம், யதிராஜ விம்சதி, முதலியவை ஸ்வதந்த்ரப்ரபந்தங்கள். இவற்றில் இவர் அருளிச்செய்த உபதேசரத்திநமாலையைச் சற்றேயநுபவித்து க்ருதார்த்தர்கள் ஆவோம்.

ஆழ்வார்களுடையவும் ஆசார்யர்களுடையவும் அவதாரவைபவமும், அவர்கள் திருவாக்கும், அவர்கள் அநுட்டானங்களும் ஒருவர்க்கும் தெரியாதபடி ஸங்குசிதமாக வருகிற படியையும், ஸம்சாரிகளுடைய ஜ்ஞாநமாந்த்யத்தையும் கண்டு மாமுநிகள், தம்முடைய கரை புரண்ட கருணையாலே, ஆழ்வார்களுடைய அவதாரரஹஸ்யாதிகள், ஆழ்வார்கள் அருளிச் செயல்கள், இவையிரண்டையும் அறிந்துள்ள ஆசார்யர்களுடைய உக்தயநுட்டாநங்கள் இவை தொடக்கமான வர்த்தங்களை லோகத்தார் அறிந்து உஜ்ஜீவிக்கும்படி "உபதேச ரத்திநமாலை" யாகிற இப்ரபந்தமுகேந வெளியிட்டருளுகிறார். உபதேசபரம்பரா ப்ராப்தங்களான அர்த்தங்களை இப்ப்ரபந்தம் ப்ரதிபாதிக்கிறதாகையால் உபதேசரத்திநமாலை என்றே இதற்குத்திருநாமம் அமைந்தது. பிள்ளையைப்பெற்ற தகப்பன் தன் பிள்ளைக்குத் தானே நாமகரணம் செய்யுமாபோலே மாமுநிகளும் தாமருளிச் செய்த இந்த ப்ரபந்தத்துக்குத் தாமே திருநாமமும் இட்டருளினர்.

"ஸர்வம் அஷ்டாக்ஷராந்தஸ்த்தம்" என்கிறபடியே ஸகல வேதஸாரமான திருமந்த்ரத்தில் சொல்லப்பட்ட அர்த்தங்கள் ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களும் அவற்றின் உள்ளபடி நிலையும் ஆகும். பகவதநந்யார்ஹ சேஷத்வம் நமஸ்வரூபம். பாகவத சேஷத்வம் ஸ்வரூபயாதாத்ம்யம். இந்த உண்மையான ஸ்வரூபத்தை நம்மாழ்வார், "பயிலும்

சுடரொளி'', ''நெடுமாற் கடிமை'' என்கிற திருவாய் மொழிகளிலே விவரித்தருளிச் செய்துள்ளார். அத்தையடி யொற்றியதே கண்ணிநுண் சிறுத்தாம்பு. அதின்படி இராமாநுச நூற்றந்தாதி. ஆழ்வார்கள் வைபவத்தையும் எம்பெருமானுர் வைபவத்தையும் இந்த ப்ரபந்தம் ப்ரதிபாதிக்கிற தாகையால், அவையிரண்டையும் அடி யொற்றியது என்னலாம்.

ஸ்ரீ கீதையும் அபயப்ரதாநமும் அருளிச்செய்த ப்ரதமாசார்யனுன ஸர்வேச்வரன் அவதரித்த ரோஹிணீ புநர்வஸு தொடக்கமான நக்ஷத்திரங்களும், ஆவணி சித்திரை முதலான மாதங்களும், யமுனா ஸரயூ முதலிய நதி தீரங்களான மதுரை அயோத்யை தொடக்கமான திவ்ய தேசங்களும் இதிஹாஸ புராண ப்ரஸித்தங்களாகத் திகழ்கின்றன. அவற்றை யாதரித்து நாம் உபலாலநம் செய்கிருேம். இது நம் ஸ்வரூபா நுரூபமான தொன்று. ஆழ்வார்கள் அவதரித்த மாதங்கள் திருநக்ஷத்திரங்கள் திவ்யதேசங்கள் இவை தொடக்கமானவற்றை நாம் அறிந்து உபலாலநம் செய்வது நம் ஸ்வரூபத்தின் உள்ளபடி நிலயாகும். ஆகவே நம் மாமுநிகள், இவற்றை நாம் அறிந்து உபலாலநம் செய்து ஸ்வரூபயாதாத்ம்யப்ரகாசம் அடையுமாறு இந்த உபதேசரத்திநமாலையை யருளிச் செய்தார்.

பொய்கையார் தொடக்கமாக திருமங்கையாழ்வார் ஈருகவுள்ள ஆழ்வார்கள் ப்ரதமபர்வ நிஷ்டர்கள். இவர்கள் வைபவத்தை முதல் முன்னமே அருளிச் செய்து பிறகு ஆசார்ய நிஷ்டை படைத்த ஆண்டாள் மதுரகவிகள் எம்பெருமானுர் இம்மூவர் வைபவத்தைப் பேசியபநுவிக்கிருர்.

ப்ரதம பர்வநிஷ்டருடைய வைபவத்தையும், சரமபர்வநிஷ்டர் வைபவத்தையும் தத்திவ்யஸூக்தி வைபவத்தையும், பூர்வாசார்ய வசநப்ரசுரமான ஸ்ரீவசநபூஷணத்தின் வைபவத்தையும், ஸங்கரஹேண ததர்த்தங்களையும் இப்ரபந்தத்தில் அருளிச்செய்கிருர் நம் மாமுநிகள். ஏதத்ப்ரபந்தஸம்பந்தமுடையார் எதிராஜ ரின்னருளால் சதிராக வாழ்ந்திடுவர் என்று பலம் சொல்லித் தலைக்கட்டுகிருர். ''எந்தை திருவாய் மொழிப்பிள்ளை யின்னருள்'', என்று தொடங்கி, ''எந்தை எதிராசர் இன்னருள்'' என்று முடிக்கையாலே ''எந்தை திருவாய் மொழிப்பிள்ளையின்னருளால், உந்தன் உறவை உணர்த்தியபின், இந்த உயிர்க்கு எல்லாவுறவும் நீ யென்றே எதிராசா! நிலே நில்லாததுண்டோ என்னெஞ்சு'' ''ஸ்ரீமந் யதீந்த்ர தவ திவ்பபதாப்ஜஸேவாம் ஸ்ரீசைலநாத கருணு பரிணும தத்தாம்'' என்ற நிஷ்கர்ஷம் தெளிவாயிற்று. **எம்பெருமானுர் ஒருவரே உத்தாரகர். மற்றையோர் உபகாரகர் என்றபடி.** ''அஸ்மத் குருதயாயா: யதீந்த்ராங்க்ரியாங்வய:'' என்றிறே தத்வதீப உபக்ரமத்தில் வாதிகேஸரி அழகிய மணவாள ஜீயரும் அருளிச்செய்தது.

அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த வாழ்வார்கள் அவதரித்த மாதங்களை ஐப்பசி தொடங்கி அடைவேயருளிச் செய்கிருர். மற்றுள்ள வாழ்வார்களுக்கு முன்னே வந்து தித்து அதுவேஹேதுவாக முதலாழ்வார்கள் என்று வ்யவஹரிக்கப்படும் பொய்கையார் பூதத்தார் பேயார் அவதரித்த ஐப்பசியை முதலிலே அருளிச்செய்தார். திருப்பாணுழ்வாரும் கலியனும் கடைசியிலே அவதரித்தவர்களாயினும் ஐப்பசி கார்த்திகை என்று மாஸங்களை இந்த அடைவிலே சொல்லும் ஸௌகர்யத்தையுட் கொண்டு முதலாழ்வார் வைபவத்திற்குப் பிறகு திருப்பாணுழ்வார் திருமங்கையாழ்வார்கள் இவர்கள் வைபவத்தை யநுபவிப்பதாகக் கார்த்திகையை யருளிச்செய்கிருர்.

ஆழ்வார்கள் திருநக்ஷத்திரங்களில் சில முப்புரியூட்டின திருநக்ஷத்ரங்கள். பகவத் பாகவதாசார்ய ஸம்பந்தமுடையன என்றபடி. இவை திருவோணமும் ரோஹிணியும் புநர்வஸுவும் ஸ்வாதியுமாகும். திருவோணத்தில் வாமந பகவானும் பொய்கையாரும் பிள்ளைலோகாசார்யரும் அவதரித்துள்ளார்கள். ரோஹிணியில் ஸ்ரீக்ருஷ்ணனும் திருப்பாணாழ்வாரும் திருக்கோட்டியூர் நம்பியும் எங்களாழ்வானும் பெரியவாச்சான் பிள்ளையும் அவதரித்துள்ளார்கள். புநர்வஸுவில் ஸ்ரீராமனும் குலசேகரரும் முதலி யாண்டானும் எம்பாரும் அவதரித்துள்ளார்கள். ஸ்வாதியில் சிங்கப்பிரானும் பெரியாழ் வாரும் பெரியதிருமலை நம்பியும் வடக்குத்திருவீதிப்பிள்ளையும் அவதரித்துள்ளார்கள்.

முதலாழ்வார்கள் மூவரும் ப்ரணவம்போலே ப்ரதாநராயிருப்பர்கள். த்வாபராந்தத்துக் கும் கலியுக ஆதிக்கும் நடுவுண்டான ஸந்த்யையில் இவர்கள் அவதரித்தார்கள். திருமழிசைப்பிரானும் அவர்கட்குத்தோள் தீண்டியான காலத்திலே யவதரித்தார். மற்றையோர் கலியுக ஆதியிலே அவதரித்தார்கள்.

ப்ரணவ ப்ரதிபாத்யமான வஸ்துவை ப்ரணவாகார விமாந மத்யததில் அநுபவித்த ஆழ்வார் திருப்பாணாழ்வார். ஆகவிறே அக்ஷரத்ரயாத்மகமான ப்ரணவத்தை அகார உகார மகாரங்களாலே முதலிட்டு மூன்று பாட்டினுடைய அடியிலே யருளிச்செய்தபடி.

பெரிய பெருமாள் தொண்டரடிப்பொடிகளை உணர்த்தினர் திருமாலையில். உணர்ந்த ஆழ்வார் பெரிய பெருமாளை உணர்த்தினர் திருப்பள்ளியெழுச்சியில். ஆகவிறே உஷ: காலமான மார்கழியில் அவதரித்தார் இவர். பெரிய கோயிலையும் பெரிய பெருமாளையும் பேணிப்போருமவராய் எம்பெருமானாருக்கும் ஸாக்ஷாதாசார்யரான பெரிய நம்பி அவதாரத் தாலே வந்த ஏற்றமும் உண்டிறே கேட்டைக்கு.

தேவதாந்தர பரத்வஜ்ஞானமாகிற மநோமாலிந்யம் இன்றிக்கே, துய்யமதி பெற்ற மழிசைப்பிரான் பிறந்தநாள் தையில்மகம். இவரே உறுவினவாள் உறையிலிடாதே ஆதிமத் யாந்தம் தேவாந்தராவரத்வக ப்ரதிபாதநபூர்வமாக பகவத் பரத்வத்தை உபபாதிக்குமதுவே ஹேதுவாக "உறையிலிடாதவர்" என்று ஆசார்யஹ்ருதயத்தில் கொண்டாடப்படுமவர் ஆவார்.

மாசிப் புநர்பூசத்தில் அவதரித்தவர் குலசேகரப் பெருமாள். இவர் பிறப்பு என்றால் உடல் பிறவியன்றிக்கே உயிர்ப் பிறவியாயிறே யிருப்பது.

பங்குனியில் ஆழ்வார் அவதாரம் இல்லை.

சித்திரையில் அவதரித்த மதுரகவிகள் வைபவத்தை ஆண்டாள் எம்பெருமானார் வைபவத்தோடு சேர்த்தநுபவிக்கப் போவதாகத் திருவுள்ளம் பற்றி மாசிக்குப் பிறகு வைகாசியை நிர்தேசிக்கிறார்.

வைகாசி விசாகத்தில் அவதரித்தவர் குருகைநாதன். ஆதிப்பிரானான ஆதிநாதன் உண்டாயிருக்க, உபயப்ரதானமானப்ரணம் போன்ற உறை கோயிலிலே ஆழ்வாருடைய நாதத்வம் நடந்து செல்கிறது. அத்தைப் பற்ற "குருகைநாதன்" என்றருளிச் செய்கிறார். ஸ்ரீ க்ருஷ்ணவதாரத்தில் அக்ரூராதிகளான நால்வரிறே வாழ்ந்தது. ஆழ்வார் அவதார காலத்தில் "ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல் அவன் பேரும் தார்களுமே பிதற்ற" என்னும்படி நாடு நாடாக வாழ்ந்தது. "அரக்கர், அசுரர் பிறந்தீர் உள்ளீரேல்" என்று

ப்ரஹ்லாத விபீஷணர் சொற் கேளாத அஸுர ராக்ஷஸர்களைத் தேடும்படியாகவன்றே வமைந்தது. கடல் வண்ணன் பூதங்கள் மண் மேல் மலியப் புகுந்து இசை பாடியாடிய படியைக் கண்டு "பொலிக பொலிக" என்று பல்லாண்டு பாடி உகந்தாரிறே ஆழ்வார்.

பெரியாழ்வார் அவதரித்த நன்னாள் ஆனிதன்னில் ஸ்வாதி. இதுவே சோதி நன்னாள். பொங்கும் பரிவாலே வில்லிபுத்தூர் பட்டர்பிரான் பெற்றான் பெரியாழ்வார் என்றும் பெயர். அவதார காலத்தில் வில்லிபுத்தூர் விட்டு சித்தன், விஷ்ணுபரத்வஸ்தாபந காலத்தில் பட்டர்பிரான் பொங்கும் பரிவாலே திருமாலுக்குப் பல்லாண்டு பாடி, அதனாலே பெருமை பெற்றார். பெரியாழ்வார் ஆனார் என்றபடி. மற்றையோரது பரிவு. இவரது பொங்கும் பரிவு. மாலுக்கு நேரான மாலிறே இவரது.

வைகுந்தவான்போகந் தன்னையிகழ்ந்து, அஞ்சு குடிக்கொரு ஸந்ததியாய் ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய்ப் பிஞ்சாய்ப் பழுத்தாளான ஆண்டாள் அவதரித்தநாள் திருவாடிப் பூரத்தில். கூபத்தில் வீழும் குழவியுடன் குதித்து அவ்வாபத்தை நீக்குமன்னையாகவன்றோ ஆண்டாள் நிலை. பெற்றவர்களும் பிறந்தவனும் "மேஸுதா" "மேபிதா" என்னுமாபோலே, "ஒரு மகள் தன்னையுடையேன்" என்று பெரியாழ்வாரும், "பட்டர்பிரான் கோதை" என்று ஆண்டாளும் அது ஸந்திக்கும்படியாக வன்றோ இவர்கள் பரஸ்பர ஸம்பந்தம். பாண்டவர்களுக்கு ஒருவன் ஸந்தானபீஜம் பரிக்ஷித்து. அவ்வோபாதி இவள் ப்ரபந்நர்களான ஆழ்வார்கள் யாவருக்கும் ஒரு ஸந்ததி. "அஞ்சு பிராயத்திலே பெண் பிள்ளை ஜல்பித்ததுக்கொரு பொருள் உண்டோ?" என்று பெரியோர் வித்தராம்படி, ஐந்து வயதிலே திருப்பாவை பாடிய செல்வி.

சித்திரையில் சித்திரையில் மதுரகவிகள் அவதரித்தார். உண்டபோது ஒரு வார்த்தையும் உண்ணாதபோது ஒரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப்பேர் உண்டிறே. அவர்களைச் சிரித்திருப்பார் ஒருவர் உண்டிறே. அவரே இவர்.

யதுகுலநாதனுடைய அவதாரத்தைக் காட்டிலும் யதிகுல துர்யரான எம்பெருமானாருடைய அவதாரம் அதிசயித மாயிறே யிருப்பது. அவன் பார்த்தன் செல்வத் தேரிலே ஒருவனுக்குத் தெளிவு பிறக்கும்படி நெறியெல்லாம் எடுத்துரைத்தான். எம்பெருமானார் பாரிலே கீதையின் செம்மைப் பொருள் ஸர்வ ஸுக்ரஹமாக வருளிச் செய்தார். இவருப தேசத்தாலேயிறே எல்லோரும் வாழ்ந்தது அனைத்துலகும் வாழப் பிறந்த எதிராஜ மா முனி வரிறே இவர். "குளப்படியிலே நீர் தேங்கினால் குருவிகுடிக்கும். வீராணத்தேரியிலே நீர் தேங்கினால் நாடு விளையும்" என்றிறே, உடையவரின் ஸகல ஜகதுஜ்ஜீவந ஹேதுத்வத்தை ஸ்ரீமந் நாதமுநிகள் அருளிச்செய்தார். இவர் அவதரித்த நன்னாள் "சாருவாக மத நீறு செய்து சமணச்செடிக் கனல் கொளுத்தியே சாக்கியக் கடலை வற்றுவித்து மிகுசாங்கியக் கிரி முறிந் திடமாறு செய்திடு காணாதவாதியர்கள் வாய் தகர்த்து, அறமிகுத்து மேல்வந்த பாசுபதர் சிந்தியோடும் வகை வாதுசெய்த எதிராசனார் கூறு மாகுரு மதத்தொடோங்கிய குமரிலன் மதமவற்றின் மேல் கொடியதர்க்கசரம் விட்டபின், குறுகிமாய வாதியாரை வென்றிட, மீறி வாதில் வருபாற்கரன் மதவிலக்கடிக் கொடியெறிந்து போய் மிக்கயாதவ மதத்தை மாய்த்த பெரு வீரர் நாளும் மிக வாழியே" என்று மாமுனிகள் தாமே கொண்டாடும்படியான சித்திரை யில் செய்ய திருவாதிரை. நவரத்ந ஸ்தானீயங்களாய் அப்பொழுதைக் கப்பொழுது நவம் நவமான நவப்ரபந்தங்களை யருளிச் செய்து உலகத்தை வாழ்வித்த உத்தமர். திருவாதிரையும் சிவந்தது. இவரும் சிவந்த வடிவுடையவர்.

இவருக்குப் பின்னே, பிள்ளான், நஞ்ஜீயர், பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திரு வீதிப் பிள்ளை, அழகிய மணவாளச்சீயர் என்றிவர்கள் திருவாய் மொழியைக் காத்த குணவாளர் ஆவார்.

வடக்குத்திருவீதிப்பிள்ளைக்கு நம்பிள்ளை யின்னருளால் அவதரித்த திருக்குமாரர் பிள்ளை லோகாசார்யர். துன்னு புகழ்க்கந்தாடை தோழப்பர் தம்முகப்பால் நம்பிள்ளைக்குச் சாத்திய "உலகாரியன்" என்ற திருநாமத்தை வடக்குத்திருவீதிப்பிள்ளை மன்னு புகழ் மைந்தர்க்குச் சாத்தினர். இவரே பிள்ளை லோகாசார்யர். இவர் அருளிச் செய்த ரஹஸ்யப் ப்ரபந்தங்கள் பதினெட்டில் திகழ்வசந பூஷணத்தின் சீர்மை மற்றொன்றுக்கில்லை. புகழல்ல விவ்வாரத்தை மெய்யிப்போது. ஸ்ரீவசந பூஷணத்தின் வைபவத்தை ஏழு பாட்டுக்களாலேயும், ததர்த்தங்களை பதினேரு பாட்டுக்களாலேயும் மாமுநிகள் அருளிச் செய்கிறர். இதில் நிஷ்டை பெற்றவர்கள் எந்தை எதிராசர் இன்னருளுக் கிலக்காகி, சதிராக வாழ்ந்திடுவர் என்று பலம் சொல்லித் தலைக்கட்டுகிறர்.

---

மணவாளமாமுநிகள் அருளிச்செய்த

# உபதேசரத்தின மாலை

உபதேசரத்தினமாலைப்பாசுரங்களுக்குச்சரியாக ஆசார்யபௌத்ரரான ஜீயர் நாயனர் என்று கொண்டாடப்படும் அபிராமவரார்யரருளிச்செய்த ஸம்ஸ்க்ருதச்லோகங்களுடன்.

श्रीमदाचार्यपौत्रेण अभिरामवरार्येण अनुगृहीता संस्कृतमयी

## ॥ उपदेशरत्नमाला ॥

### தனியன்

(கோயில் கந்தாடையண்ணன் அருளிச்செய்தது)

முன்னந்திருவாய்மொழிப்பிள்ளை தாமுபதேசித்த நேர்
தன்னின்படியைத் தணவாதசொல் மணவாளமுநி
தன்னன்புடன்செய் உபதேசரத்தினமாலைதன்னைத்
தன்னெஞ்சுதன்னில் தரிப்பவர்தாள்கள் சரண்நமக்கே.

( द्राविडभाषायां वाधूल-वरदनारायण-गुरुविरचितोऽयं मुक्तकश्लोकः )

प्राक् श्रीगिरीन्द्रगुरुराड्डुपदिष्टमार्गं कात्स्न्येन सन्निगदता रुचिरोपयन्त्राः ।
स्वप्रेमतस्सुकलितामुपदेशरत्नमालां वहन्ति हृदये मम ते शरण्याः ॥

---

( संस्कृतग्रन्थकर्तृविषयको मुक्तकश्लोकः )

असासु वत्सलतया कृपया च भूयः स्वेच्छावतीर्णमिव सौम्यवरं मुनीन्द्रम् ।
आचार्यपौत्रमभिरामवराभिधानमसद्गुरुं परमकारुणिकं भजामि ॥

---

### ஆசார்யக்ருபையால் கிடைத்த உபதேசத்தைப் பேசுவதாகக்கூறல்

எந்தைதிருவாய்மொழிப்பிள்ளை இன்னருளால்
வந்தவுபதேசமார்க்கத்தைச்—சிந்தைசெய்து
பின்னவரும்கற்க உபதேசமாய்ப்பேசுகின்றேன்
மன்னியசீர் வெண்பாவில் வைத்து. 1

मद्देशिकद्रविडवेदगुरोः प्रसादात् लब्धं विचिन्त्य सरसादुपदेशमार्गम् ।
पश्चात्तनार्थमुपदेशमिमं ब्रवीमि वृत्ते वसन्ततिलके विनिवेश्य सौम्ये ॥ 1 ॥

### கற்றோர் உகக்கும் ப்ரபந்தம் இது

கற்றோர்கள்தாமுகப்பர் கல்விதன்னிலாசையுள்ளோர்
பெற்றோமெனஉகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத்தால் இகழில் வந்ததென்னெஞ்சே! இகழ்கை
ஆச்சரியமோதான் அவர்க்கு. 2

नन्दन्ति ये श्रुतिधनाः सुकृतीप्सवोपि यत्नोऽयमस्मदुपकार इति प्रहृष्टाः ।
अन्ये तु मत्सरवशादवधीरयेरन् किं तेन तैरवमतिः किमु विस्मयाय ॥ 2 ॥

### ஆழ்வாராசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கு வாழ்த்து

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல்வாழி
தாழ்வாதுமில்குரவர்தாம்வாழி—ஏழ்பாரும்
உய்ய அவர்களுரைத்தவைகள்தாம்வாழி
செய்யமறைதன்னுடனே சேர்ந்து. 3

भद्रं शठारिमुखभक्तजनस्य तत्तद्दिव्यप्रबन्धनिवहस्य च दोषलेशात् ।
मुक्तस्य देशिकजनस्य तदुक्तिराशेः उज्जीवनस्य जगतां सहितस्य वेदैः ॥ 3 ॥

### ஆழ்வார்கள் அவதார அடைவு

பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
ஐயன் அருள்மாறன் சேரலர்கோன்—துய்யபட்ட
நாதன் அன்பர்தாள்தூளி நற்பாணன் நன்கலியன்
ஈதிவர்தோற்றத்தடைவாமிங்கு. 4

कासार-भूत - महदाह्वय - भक्तिसार - श्रीमच्छठारि - कुलशेखर - भट्टनाथाः ।
भक्तांघ्रिरेणु - मुनियान - कलिद्रुहोऽपि भूमौ वितेनुरनु तत्क्रमतोऽवतारम् ॥ 4 ॥

### ஆழ்வார்கள் திருநக்ஷத்திரங்களைக் கூறுவோம் எனல்

அந்தமிழால்நற்கலைகள் ஆய்ந்துரைத்தஆழ்வார்கள்
இந்தஉலகிலிருள்நீங்க—வந்துதித்த
மாதங்கள்நாள்கள்தன்னை மண்ணுலகோர்தாமறிய
ஈதென்றுசொல்லுவோம் யாம். 5

अविद्यमन्धतमसं परिहर्तुमस्मिन् लोकेऽवतीर्य सरसैर्द्रविडप्रबन्धैः ।
वेदान्विवर्तितवतामवतारमासताराः क्रमादभिदधे शठजिन्मुखानाम् ॥ 5 ॥

### முதலாழ்வார்கள் திருநக்ஷத்திரங்கள்

ஐப்பசியில்ஓணம் அவிட்டம்சதயமிவை
ஒப்பிலவாநாள்கள் உலகத்தீர்! —எப்புவியும்
பேசுபுகழ்ப் பொய்கையார்பூதத்தார்பேயாழ்வார்
தேசுடனே தோன்றுசிறப்பால். 6

सवत्र गीतयशसस्सरआह्वयस्य भूताभिधानमहदाह्वययोश्च गुर्वोः ।
दिव्यावतारदिवसानि तुलाख्यमासि तिस्रः क्रमादभिदधे श्रवणादिताराः ॥ 6 ॥

### முதலாழ்வார்களென்ற பெயருக்குக் காரணம்

மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னேவந்துதித்து
நல்தமிழால் நூல்செய்துநாட்டையுய்த்த—பெற்றிமையோர்
என்று முதலாழ்வார்களென்னும்பேர் இவர்க்கு
நின்றதுஉலகத்தே நிகழ்ந்து. 7

भक्तेष्वमीषु दशसु प्रथमं परेभ्य एते त्रयस्समुदिता द्रविडागमः स्वैः ।
तस्माज्जगन्ति सकलान्युपजीवयन्तो भक्तास्ततः प्रथम इत्यभिधानमेषाम् ॥ 7 ॥

### திருமங்கையாழ்வாருடைய திருநக்ஷத்திரம்

பேதைநெஞ்சே! இன்றைப்பெருமை அறிந்திலேயோ ?
ஏதுபெருமை இன்றைக்கென்னென்னில்?—ஓதுகின்றேன்
வாய்த்தபுகழ்மங்கையர்கோன் மாநிலத்தில்வந்துதித்த
கார்த்திகையில் கார்த்திகைநாள் காண். 8

नावैषि वैभवममुष्य दिनस्य मुग्ध चेतः किमेतदिति प्रच्छसि चेद्ब्रवीमि ।
पश्य त्वमद्य परकालकवेः प्रदीप्ता दिव्योदयो न ननु कार्त्तिककृत्तिकास्ताः ॥ 8 ॥

### கார்த்திகையில் கார்த்திகையின் பெருமை

மாறன்பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன்
ஆறங்கம்கூற அவதரித்த—வீறுடைய
கார்த்திகையில் கார்த்திகை நாள் இன்றென்று காதலிப்பார்
வாய்த்தமலர்த்தாள்கள் நெஞ்சே! வாழ்த்து. 9

अङ्गानि षड्द्रविडवेचतुष्टयस्य कर्तुं शठारिकलितस्य कलिप्रशास्ता ।
यत्राविरास भुवि कार्त्तिककृत्तिकासु तद्वैभवज्ञपदपद्ममुपैहि चेतः ॥ 9 ॥

### திருப்பாணாழ்வார் திருநக்ஷத்திரம்

கார்த்திகையில்ரோகிணிநாள் காணமின்இன்றுகாசினியீர்!
வாய்த்தபுகழ்ப்பாணர்வந்துதிப்பால்—ஆத்தியர்கள்
அன்புடனேதான் அமலனாதிபிரான் கற்றதற்பின்
நன்குடனேகொண்டாடும் நாள். 10

अद्योर्जमासि ननु रोहिणितारका सा यस्यामवातरदसौ मुनिवाहनार्यः ।
एतत्कृतामलनादिपिरान्प्रबन्धे रज्यद्भिरास्तिकजनैर्दिनमद्य लाल्यम् ॥ 10 ॥

### தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருநக்ஷத்திரம்

மன்னியசீர்மார்கழியில் கேட்டைஇன்றுமாநிலத்தீர் !
என்னிதனுக்கேற்றமெனில் உரைக்கேன்—துன்னுபுகழ்
மாமறையோன் தொண்டரடிப் பொடியாழ்வார் பிறப்பால்
நான்மறையோர் கொண்டாடும்நாள். 11

ज्येष्टाऽद्य मासि धनुषि प्रथिमा कुतोऽस्याः प्रच्छयेत चेदिति जनाः कथयांयहं वः ।
विप्रेन्द्रभक्तपदरेण्ववतारयोगात् त्रैविद्यवृद्धबहुमानपदं शुभाहः ॥ 11 ॥

### திருமழிசையாழ்வார் திருநக்ஷத்திரம்

தையில்மகம்இன்று தாரணியீர் ! ஏற்றம் இந்தத்
தையில்மகத்துக்குச் சாற்றுகின்றேன்—துய்யமதி
பெற்ற மழிசைப்பிரான்பிறந்தநாளென்று
நல்தவர்கள் கொண்டாடும் நாள். 12

तारा जनाः श्रृणुत तैषमघा किलाद्य तस्या ब्रुवेऽहमतिशायिमहानुभावम् ।
लब्धप्रपन्नमतिवैभवभक्तिसार दिव्यावतार दिवसोऽयमभिज्ञलाल्यः ॥ 12 ॥

### குலசேகர ஆழ்வார் திருநக்ஷத்திரம்

மாசிப்புனர்ப்பூசம் காண்மின்இன்றுமண்ணுலகீர்
தேசித்திவசத்துக் கேதென்னில்—பேசுகின்றேன்
கொல்லிநகர்க்கோன் குலசேகரன்பிறப்பால்
நல்லவர்கள்கொண்டாடும்நாள். 13

कुंभे पुनर्वसुभमद्य विलोकयध्वं तेजः किमह्न इति चेदहमस्य वक्ष्ये ।
कोल्लिपुरीश कुलशेखरजन्मयोगात् श्लाघापदं भवति तारमिदं बुधानाम् ॥ 13 ॥

### நம்மாழ்வார் திருநக்ஷத்திரம்

ஏரார்வைகாசி விசாகத்தினேற்றத்தைப்
பாரோரறியப்பகர்கின்றேன்—சீராரும்
வேதம்தமிழ்செய்தமெய்யன் எழில்குருகை
நாதன் அவதரித்தநாள். 14

आख्यामि चारुतरमाधवमासि राधातारानुभवमवनीजनबोधनाय ।
द्रष्टुस्त्रयीं द्रविडतः कुरुकेश्वरस्य दिव्यावतारदिवसोऽद्य हि सत्यवाचः ॥ 14 ॥

*ஆழ்வார் திருநக்ஷத்திரமும் திருவாய் மொழியும் ஒப்பற்றவை*

உண்டோவைகாசி விசாகத்துக்கு ஒப்பு ஒருநாள்?
உண்டோ சடகோபர்க்கு ஒப்பொருவர்?—உண்டோ
திருவாய்மொழிக்கொப்பு? தென்குருகைக்கு உண்டோ
ஒருபார்தனிலொக்குமூர்? 15

तारं किमस्ति बत माधवमासि राधातुल्यं किमस्ति शठकोपसमान एकः ।
किंवाऽस्ति तद्द्रविडवेदसमः प्रबन्धः किं पत्तनं कुरुकया सममस्ति लोके ॥ 15 ॥

*பெரியாழ்வார் திருநக்ஷத்திரம்*

இன்றைப்பெருமை அறிந்திலையோ ஏழைநெஞ்சே?
இன்றைக்கென்னேற்றமெனில் உரைக்கேன்—நன்றிபுனே
பல்லாண்டுபாடிய நம்பட்டர்பிரான் வந்துதித்த
நல்லானியில் சோதிநாள். 16

अद्य प्रभावमपि मानस किं न वेत्सि कोस्य प्रभाव इति चेत्प्रतिपादयामि ।
पल्लाण्डुगानपरभट्टपतेः प्रसूतिः स्वाती किलाद्य मिहिरे मिथुनं प्रपन्ने ॥ 16 ॥

*ஆனிதன்னில் சோதிநாளின் பெருமை*

மாநிலத்தின்முன் நம்பெரியாழ்வார் வந்துதித்த
ஆனிதன்னில்சோதியென்றால் ஆதரிக்கும்—ஞானியர்க்கு
ஒப்போரில்லை இவ்வுலகுதனில் என்றுநெஞ்சே!
எப்போதும் சிந்தித்திரு. 17

भट्टाधिपोदय इहेत्यथिशुक्रमासं स्वातीं य आर्द्रहृदया मुहुराद्रियन्ते ।
तेषां न सन्ति सदृशा जगतीति चेचः चिन्तामिमामनुकलं परिबृंहयेथाः ॥ 17 ॥

*பெரியாழ்வார் என்று பெயர் வரக் காரணம்*

மங்களாசாசனத்தின் மற்றுள்ள ஆழ்வார்கள்
தங்களார்வத்தளவு தானன்றி—பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர் பட்டர்பிரான் பெற்றான்
பெரியாழ்வாரென்னும் பெயர். 18

भक्तेष्वमीषु मधुशासनमङ्गलानामाशासनेऽनवधिका प्रियता यदस्य ।
भट्टेश्वरस्य पेरियोपपदंप्रतीमाल्वारिति प्रववृते तत एव नाम ॥ 18 ॥

*திருப்பல்லாண்டு முதல் திவ்யப்ரபந்தம்*

கோதிலவாம்ஆழ்வார்கள் கூறுகலைக்கெல்லாம்
ஆதிதிருப்பல்லாண்டானதுவும்—வேதத்துக்கு
ஓமென்றுமதுபோல் உள்ளதுக்கெல்லாம்சுருக்காய்
தான் மங்கலமாதலால். 19

अन्यस्य भक्तनिवहस्य निबन्धनानामेतत्कृतादिमनिबन्धनमादिरासीत् ।
तत्सारसङ्ग्रहतयाऽपि च मङ्गलानामापादनं प्रणववन्निखिलागमानाम् ॥ 19 ॥

ஆழ்வாருக்கும் திருப்பல்லாண்டுக்கும் ஒப்பில்லை

உண்டோதிருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர்கலைதான்?
உண்டோ பெரியாழ்வாருக்கொப்பொருவர்?—தண்தமிழ்நூல்
செய்தருளும்ஆழ்வார்கள்தம்மில் அவர்செய்கலையில்
பைதல்நெஞ்சே! நீ உணர்ந்துபார். 20

श्रीभट्टनाथ-तदुपज्ञनिबन्धनाभ्यां कौ वा प्रबन्ध पुरुषौ सदृशौ भवेताम् ।
दृष्टेष्वमीषु निखिलद्रविडागमानां तेष्वागमेषु च विचिन्तय चेत एतत् ॥ 20 ॥

ஆண்டாள், மதுரகவிகள், எதிராசர் இவர்கள் திருநக்ஷத்திரம் கூறுவோமெனல்

ஆழ்வார்திருமகளார் ஆண்டாள் மதுரகவி
யாழ்வார் எதிராசராமிவர்கள்—வாழ்வாக
வந்துதித்தமாதங்கள்நாள்கள்தம்மின் வாசியையும்
இந்தவுலகோர்க்கு உரைப்போம்யாம். 21

श्रीविष्णुचित्तदुहितुर्जगतां जनन्याः प्रख्यावतो मधुरपूर्वकवेश्च नाम्ना ।
रामानुजस्य करुणामृतवारिराशेः मासेन साकमवतारदिनं ब्रवीमि ॥ 21 ॥

ஆண்டாள் திருநக்ஷத்திரம்

இன்றோ திருவாடிப்பூரம்? எமக்காக
வன்றோ இங்கு ஆண்டாள் அவதரித்தாள்?—குன்றாத
வாழ்வான வைகுந்த வான்போகந்தன்னை இகழ்ந்து
ஆழ்வார் திருமகளாராய். 22

मासे शुचौ प्रथमफल्गुनिका हि सषा गोदाऽत्र खल्ववतार सुरक्षितुं नः ।
भोगाम्श्च पारमपदानवमत्य नित्यान् भट्टेश्वरस्य महिता दुहिता भवन्ती ॥ 22 ॥

ஆண்டாளுக்கும் ஆடிப்பூரத்துக்கும் ஒப்பில்லை

பெரியாழ்வார் பெண்பிள்ளையாய் ஆண்டாள் பிறந்த
திருவாடிப்பூரத்தின் சீர்மை—ஒருநாளைக்கு
உண்டோ மனமே! உணர்ந்துபார் ஆண்டாளுக்கு
உண்டாகில் ஒப்புஇதற்கும் உண்டு. 23

श्रीविष्णुचित्तदुहितृत्ववरेण्यगोदादिव्योदयेन महिता शुचिफल्गुनीयम् ।
तत्तुल्यमस्ति किमु चिन्तय चित्त तारं गोदोपमा यदि भवेत्तदिदं तदा स्यात् ॥ 23 ॥

ஆண்டாள் பெருமை

அஞ்சுகுடிக்கு ஒரு சந்ததியாய் ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்—பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப் பத்தியுடன்நாளும்
வழுத்தாய் மனமே! மகிழ்ந்து. 24

बंहीयसः प्रणयतो भगवत्यजस्रमस्थानरक्षणभयाकुलवंशजाताम् ।
भक्तानमून् निजगुणैरतिवर्तमानां बाल्योऽपि पक्कचरितं भज चित्त गोदाम् ॥ 24 ॥

### மதுரகவியாழ்வார் திருநக்ஷத்திரம்

ஏரார்மதுரகவி இவ்வுலகில் வந்துதித்த
சீராரும் சித்திரையில் சித்திரைநாள்—பாருலகில்
மற்றுள்ள ஆழ்வார்கள் வந்துதித்தநாள்களிலும்
உற்றதெமக்கென்று நெஞ்சே! ஓர். 25

यत्रोदभून्मधुरपूर्वकविर्महीयान् तामद्वितीयविभवां मधुमासि चित्राम् ।
उक्तान्यभक्तनिवहोदयवासरान्नः क्षेमङ्करीमनुदिनं हृदयावधेहि ॥ 25 ॥

### மதுரகவிகளின் ப்ரபந்தத்தின் சீர்மை

வாய்த்ததிருமந்திரத்தின் மத்திமமாம்பதம்போல்
சீர்த்தமதுரகவி செய்கலையை—ஆர்த்தபுகழ்
ஆரியர்கள்தாங்கள் அருளிச்செயல்நடுவே
சேர்வித்தார் தாற்பரியம்தேர்ந்து. 26

मन्त्राधिपे महति मध्यपदं यथाऽसीदेवं हि पूर्वगुरवो द्रविडागमानाम् ।
आकूतमन्यजनदुर्ग्रहमत्र मत्वा मध्ये न्यधुर्मधुरपूर्वकवेः प्रबन्धम् ॥ 26 ॥

### உடையவர் திருநக்ஷத்திரம்

இன்றுலகீர்! சித்திரையில் ஏய்ந்த திருவாதிரைநாள்
என்றையினும் இன்றிதனுக்கு ஏற்றமென்தான்?—என்றவர்க்குச்
சாற்றுகின்றேன்கேண்மின் எதிராசர்தம்பிறப்பால்
நால்திசையும் கொண்டாடும் நாள். 27

आर्द्राभमद्य खलु मासि मधौ मनोज्ञे को वान्यतोऽस्य गरिमेत्यनुयोगभाजाम् ।
वक्ष्ये यतीश्वरसमुद्भववैभवेन तारं तदेतदखिलैः परिलालनीयम् ॥ 27 ॥

### சித்திரைத் திருவாதிரையின் பெருமை

ஆழ்வார்கள் தாங்கள் அவதரித்த நாள்களிலும்
வாழ்வானநாள்நமக்கு மண்ணுலகீர்!—ஏழ்பாரும்
உய்ய எதிராசருதித்தருளும் சித்திரையில்
செய்ய திருவாதிரை 28

दिव्योदयर्क्षनिवहाच्छठजिन्मुखानां नक्षत्रमेतदधिकं कुशलावहं नः ।
आर्द्राह्वयेन विदिते मधुमासभाजि यत्राविरास भगवान् यतिसार्वभौमः ॥ 28 ॥

### இதுவுமது

எந்தையெதிராசர் இவ்வுலகில் எந்தமக்கா
வந்துதித்த நாளென்னும் வாசியினால்—இந்தத்
திருவாதிரைதன்னின் சீர்மைதனை நெஞ்சே!
ஒருவாமல் எப்பொழுதும் ஓர். 29

अस्मद्गुरोर्यतिपतेः करुणांबुराशेस्त्राणाय नो भुवि लसद्भवतारकेति ।
आर्द्राभवैभवमनन्यसमानमेतद्वेलासु चित्त निखिलास्वनुसन्दधीथाः ॥ 29 ॥

*ஆழ்வார்களின் திருவவதார ஸ்தலங்கள்*

எண்ணருஞ்சீர்பொய்கைமுன்னோர் இவ்வுலகில் தோன்றியஊர்
வண்மைமிகுகச்சி மல்லைமாமயிலை—மண்ணியில்நீர்
தேங்கும்குறையலூர் சீர்க்கலியன்தோன்றியஊர்
ஓங்கும்உறையூர்பாணனூர். 30

एतास्सरः प्रमुखजन्मभुवो हि काञ्ची मल्ला मयूरनगरी कलिवैरिणस्तु ।
जन्मस्थली कुरैयलूरिति विश्रुता भूरुत्पत्तिभूमिरुरयूर्मुनिवाहनस्य ॥ 30 ॥

*இதுவுமது*

தொண்டரடிப்பொடியார் தோன்றியஊர் தொல்புகழ்சேர்
மண்டங்குடியென்பர் மண்ணுலகில்—எண்திசையும்
ஏத்தும் குலசேகரனூரெனஉரைப்பர்
வாழ்த்த திருவஞ்சிக்களம். 31

पृथ्व्यां हि भक्तपदरेण्ववतारभूमिर्मण्डङ्गुडीति नगरी महिता प्रतीता ।
विख्यातकीर्तिकुलशेखरजन्मदेशः प्रख्यावती निचुलनामपुरी जगत्याम् ॥ 31 ॥

*இதுவுமது*

மன்னுதிருமழிசை மாடத்திருக்குருகூர்
மின்னுபுகழ்வில்லிபுத்தூர் மேதினியில்—நன்னெறியோர்
ஏய்ந்தபத்திசாரர் எழில்மாறன் பட்டர்பிரான்
வாய்ந்துதித்த ஊர்கள்வகை. 32

मान्या महीरसपुरीत्यभिधानरम्या पृथ्वीजनस्य कुरुकाऽपि च विल्लिपुत्तूर् ।
श्रीभक्तिसार-शठशातन-विष्णुचित्त-जन्मस्थलानि भुवनप्रथितान्यमूनि ॥ 32 ॥

*இதுவுமது*

சீராரும்வில்லிபுத்தூர் செல்வத்திருக்கோளூர்
ஏரார்பெரும்பூதூர் என்னுமிவை—பாரில்
மதியாரும் ஆண்டாள் மதுரகவியாழ்வார்
எதிராசர் தோன்றியஊர் இங்கு. 33

गोदासमुद्भवपुरं भुवि विल्लिपुत्तूरकोलूरुपूर्मधुरपूर्वकवेः प्रसूतिः ।
रामानुजस्य करुणावरुणालयस्य मान्ये महोपपदभूतपुरेऽवतारः ॥ 33 ॥

*அருளிச்செயல் வியாக்யானங்களைப் பற்றி*

ஆழ்வார்களேற்றம் அருளிச்செயலேற்றம்
தாழ்வாதுமின்றி அவைதான்வளர்த்தோர்—ஏழ்பாரும்
உய்யஅவர்கள்செய்த வியாக்கியைக ளுள்ளதெல்லாம்
வையமறியப் பகர்வோம் வாய்ந்து. 34

भक्तान्पराङ्कुशमुखानापि तत्प्रबन्धान् तद्वैभवार्हमुपलालयतां गुरूणाम् ।
उज्जीवनाय जगतामुदिताः प्रतीता दिव्यप्रबन्धविषयाः कथयामि टीकाः ॥ 34 ॥

### ஆழ்வார்களும் அருளிச்செயல்களும் பெருமதிப்புக்குறியவை

ஆழ்வார்களேயும் அருளிச்செயல்களேயும்
தாழ்வா நினைப்பவர்கள்தாம் நரகில்—வீழ்வார்க
ளென்று நினைத்து நெஞ்சே! எப்பொழுதும் நீஅவர்பால்
சென்றணுகக் கூசித்திரி. 35

भक्तेषु तेषु वकुलाभरणादिमेषु तत्तत्प्रबन्धनिवहे कृतभक्तिमान्द्यात् ।
घोरे पतन्ति नरके तत एव तांस्त्वं चेतो जहीहि न कदाचन संस्तुवीथाः ॥ 35 ॥

### ஆசாரியர்கள் பெருமை

தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மையறிவாரார்?
அருளிச்செயலை அறிவாரார்?—அருள்பெற்ற
நாதமுனி முதலான நம்தேசிகரையல்லால்
பேதைமனமே! உண்டோ? பேசு 36

प्राज्ञावदग्रसर केसरभूषणादि भक्तप्रभावमपि दिव्यनिबन्धनानि ।
नाथादयो यदि परं न भवेयुरार्याः के वा विदन्ति हृदय त्वामिदं ब्रवीथाः ॥ 36 ॥

### எம்பெருமானாரின் இன்னருள்

ஓராண்வழியாய் உபதேசித்தார் முன்னோர்
ஏராரெதிராசரின்னருளால்—பாருலகில்
ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறுமென்று
பேசிவரம்பறுத்தார் பின். 37

एकैकपूरुषसुरक्षितवंशरीत्या गुप्ता प्रपत्तिपदवी गुरुभिः पुराणैः ।
रामानुजस्तु परया दयया दयालुः सीमामिमामतिययौ जगतां हिताय ॥ 37 ॥

### எம்பெருமானார் தரிசனம்

எம்பெருமானார் தரிசனமென்றே இதற்கு
நம்பெருமாள் பேரிட்டுநாட்டிவைத்தார்—அம்புவியோர்
இந்தத்தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த
அந்தச் செயலறிகைக்கா. 38

अस्योचितां परमवैदिकदर्शनस्य रामानुजार्यरचितोपकृतिं कृतज्ञः ।
रङ्गेश्वरः प्रथयितुं रचयाञ्चकार रामनुजस्य मतमित्यभिधानमस्य ॥ 38 ॥

### திருவாய்மொழியைக் காத்த குணவாளர்கள்

பிள்ளான்நஞ்சீயர் பெரியவாச்சான்பிள்ளை
தெள்ளார்வடக்குத் திருவீதிப்—பிள்ளை
மணவாளயோகி திருவாய்மொழியைக்காத்த
குணவாளரென்று நெஞ்சே! கூறு, 39

चन्द्रो यतीन्द्रजलधेः कुरुकाधिपार्यः श्रीमाधवो मुनिरुभावपि कृष्णसूरी ।
योगीन्द्रसुन्दरवरो हि सहस्रगाथाव्याख्या व्यधुर्हृदय ! ताननिशं भजेथाः ॥ 39 ॥

### வியாக்கியானமருளியவர்களுக்கு நன்றி

முந்துறவேபிள்ளான் முதலானோர் செய்தருளும்
அந்தவியாக்கியைகளன்றாகில்—அந்தோ!
திருவாய்மொழிப்பொருளைத் தேர்ந்துரைக்கவல்ல
குருவார்? இக்காலம் நெஞ்சே! கூறு. 40

एताश्शठारिकृतगीतिसहस्रटीकाः क्लृप्ता न चेद्गुरुवरैः कुरुकेमुख्यैः ।
तस्य प्रबन्धतिलकस्य हि हन्त भावं जानन्ति कोऽद्य हृदय त्वमुदीरयेथाः ॥ 40 ॥

### ஆறாயிரப்படி

தெள்ளாரும் ஞானத்திருக்குருகைப்பிரான்
பிள்ளான் எதிராசர்பேரருளால்—உள்ளாரும்
அன்புடனே மாறன்மறைப்பொருளை அன்றுரைத்தது
இன்பமிகும் ஆறாயிரம். 41

निस्सीमनिर्मलधिया कुरुकाधिपेन लब्ध्वा प्रसादलहरीं यतिपुङ्गवस्य ।
गाथासहस्रविषया विहिता हि टीका सङ्कलती सकलमात्मनि षट्सहस्री ॥ 41 ॥

### ஒன்பதினாயிரப்படி

தஞ்சீரைஞானியர்கள் தாம்புகழும் வேதாந்தி
நஞ்சீயர்தாம் பட்டர்நல்லருளால்—எஞ்சாத
ஆர்வமுடன் மாறன்மறைப்பொருளை ஆய்ந்துரைத்தது
ஏரொன்பதினாயிரம். 42

प्रज्ञावतां निरवधिप्रथिमान्तभूमा भट्टारकस्य दयया निगमान्तयोगी ।
यामाततान शठजिन्निगमस्य टीकां सा ग्रन्थतो नवसहस्रमिता समिन्धे ॥ 42 ॥

### இருபத்துநாலாயிரப்படி

நம்பிள்ளைதம்முடைய நல்லாருளால்ஏவியிட
பின்பெரியவாச்சான்பிள்ளையதனால்—இன்பா
வருபத்தி மாறன்மறைப்பொருளைச்சொன்னது
இருபத்துநாலாயிரம். 43

लब्ध्वा कृपासमुदितं कलिवैरिदाससूरेर्निदेशमभयप्रदराजनामा ।
यत् क्लृप्तवान् विवरणं द्रविडागमस्य तद्ग्रन्थतस्त्रिगुणिताष्टसहस्रसङ्ख्यम् ॥ 43 ॥

### ஈடு முப்பத்தாறாயிரப்படி

தெள்ளியதாநம்பிள்ளை செப்புநெறிதன்னை
வள்ளல் வடக்குத்திருவீதிப்பிள்ளை—இந்த
நாடறிய மாறன்மறைப்பொருளை நன்குறைத்தது
ஈடுமுப்பத்தாறாயிரம். 44

सूक्तीस्सुधाकरसखीः कलिवैरिदासनाम्नो गुरोस्समवलम्ब्य हि कृष्णपादः ।
यां द्राविडोपनिषदो विवृतं चकार षट्त्रिंशता दशशतैः प्रमिताऽमिता सा ॥ 44 ॥

பன்னீராயிரப்படி

அன்போடு அழகியமணவாளச்சீயர்
பினபோரும்கற்றறிந்து பேசுகைக்கா—தம்பெரிய
போதமுடன் மாறன்மறையின் பொருளுரைததது
ஏதமிலபன்னீராயிரம். 45

पश्चात्तनानपि जनाननुगृह्णता या रम्योपयन्तृमुनिना स्फुटवैभवेन ।
वृत्तिव्यधायि शठजिन्निगमस्य सेयं ग्रन्थैर्द्विषड्दशशतैर्मुदमातनोति ॥ 45 ॥

பெரியவாச்சான் பிள்ளையின் உபகாரம்

பெரியவாச்சான்பிள்ளை பின்புள்ளவைக்கும்
தெரிய வியாக்கியைகள் செய்வால்—அரிய
அருளிச்செயற்பொருளை ஆரியர்கட்குஇப்போது
அருளிச்செயலாய்த் தறிந்து. 46

प्रायेण सम्यगपरद्रविडागमानां टीका: कृता यदभयप्रदराजनाम्ना ।
[1] तेनैव तेषु गाहनेषु गतिर्गुरूणां लोकोपदेशसमयेष्वधुनाऽपि रम्या: ॥ 46 ॥

மற்ற வியாக்யானங்கள் பற்றி

நஞ்சீயர்செய்தவியாக்கியைகள் நாலிரண்டுக்கு
எஞ்சாமையாவைக்கும் இல்லையே—தம்சீரால்
வையகுருவின்தம்பி மன்னுமணவாளமுனி
செய்யுமவைதாமும் சில. 47

केषांचिदेव विवृतिंद्रविडागमानां वेदान्तिभिर्विरचिता न पुनस्समेषाम् ।
प्रज्ञापरादवरजेन जगद्गुरोस्ता: सौम्योपयन्तृमुनिना कलिताश्च काश्चित् ॥ 47 ॥

ஈட்டின் ஒராண்வழி பரவர்த்தகர்கள்

சீரார் வடக்குத்திருவீதிப்பிள்ளை எழு
தேரார் தமிழ்வேதத்துஈடுதனை—தாருமென
வாங்கிமுன்நம்பிள்ளை ஈயுண்ணிமாதவர்க்குத்
தாம்கொடுத்தார் பின்னதனைத்தான். 48

तां कृष्णपादलिखितां शठवैरिवेदव्याख्यां ददस्व महतीमिति कृष्णपादात् ।
आदाय देशिकवर: कलिवैरिदास: प्रदत्त माधवगुरोर्दयमानचेता: ॥ 48 ॥

இதுவுமது

ஆங்கவர்பால்பெற்ற சிறியாழ்வானப்பிள்ளை
தாம்கொடுத்தார் தம்மகனார்தம்கையில்—பாங்குடனே
நாலூர்ப்பிள்ளைக்கு அவர்தாம் நல்லமகனார்க்கு அவர்தாம்
மேலோர்க்குஈந்தார் அவரேமிக்கு. 49

तां माधव: पुनरुपाकुरुतात्मसूनो: सोन्यद्वितीयकरुणाख्यवराहसूरे: ।
सोऽपि स्वकीयतनयस्य स चाप्युदार: पश्चात्तनाननुजिघृक्षुरतीव तेभ्य: ॥ 49 ॥

---

1. 46-ல் இரண்டாம் பாதியும் 47-ம் மூலத்தை ஸரியாக அநுசரிக்கவில்லையென்று திருத்தம் செய்யப்பட்டவை. வேறு பாடமுண்டாகில் கண்டு கொள்வது.

*அன்புடையோர் சாற்றும் திருநாமங்கள் பெருமையுற்றவை*

நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
என்பர் அவரவர்தம்ஏற்றத்தால்—அன்புடையோர்
சாற்றுதிருநாமங்கள் தானென்று நன்னெஞ்சே!
ஏத்துஅதனைச்சொல்லிநீ யின்று. 50

आख्ये मनःकलय नम्बेरुमालथो नम्माळ्वारिति व्यवहृते प्रणयेन भक्तैः ।
नञ्जीयरित्यपि च नाम तथा प्रवृत्तं नम्बिळ्ळैइत्यपि तथा विहितां च संज्ञाम् ॥ 50 ॥

*நம்பிள்ளை லோகாசார்யரென்று திருநாமம் பெற்றது*

துன்னுபுகழ்க்கந்தாடைத்தோழப்பர் தம்முகப்பால்
என்னஉலகாரியனோ என்றுஉரைக்க—பின்னை
உலகாரியனென்னும்பேர் நம்பிள்ளைக்குஓங்கி
விலகாமல் நின்றதுஎன்றும்மேல். 51

वाधूलवंशतिलकोऽसितवारणार्यः प्रीत्या कदापि कलिसूदनदाससूरेः ।
आख्यां जगद्गुरुरिति प्रथितामकार्षीत्तस्मात्तदाप्रभृति सा नियता च तस्मिन् ॥ 51 ॥

*வடக்குத்திருவீதிப்பிள்ளை அந்தத் திருநாமத்தை ஆதரித்தது*

பின்னை வடக்குத்திருவீதிப்பிள்ளை அன்பால்
அன்ன திருநாமத்தை ஆதரித்து—மன்னுபுகழ்
மைந்தர்க்குச்சாற்றுகையால் வந்துபரந்தது எங்கும்
இந்தத்திருநாமம் இங்கு. 52

तां कृष्णपाद उपलालयति स्म संज्ञां कृत्वा तदर्हचरितस्य निजस्य सूनोः ।
तेनैव सा जनहिताय भुवि प्रवृत्ता संज्ञा जगद्गुरुरिति प्रथिता समन्तात् ॥ 52 ॥

*ஸ்ரீவசனபூஷணத்தின் சீர்மை*

அன்னபுகழ்முடும்பை அண்ணல் உலகாசிரியன்
இன்னருளால்செய்தகலை யாவையிலும்—உன்னில்
திகழ்வசனபூடணத்தின்சீர்மை ஒன்றுக்கில்லை
புகழல்லஇவ்வார்த்தை மெய்இப்போது, 53

को वा प्रबन्ध इहलोकगुरोः प्रबन्धैः सादृश्यमेति सकलेष्वपि वाङ्मयेषु ।
तत्रापि किं वचनभूषणतुल्यमन्यत्? सत्यं ब्रवीमि तदिदं वचनं न मिथ्या ॥ 53 ॥

*ஸ்ரீ வசனபூஷணம் என்ற பெயருக்கு விளக்கம்*

முன்னம்குரவோர் மொழிந்தவசனங்கள்
தன்னை மிகக்கண்டு கற்றோர்தம்முயிர்க்கும்—இன்னணியாச்
சேரச்சமைத்தவரே சீர்வசனபூடணமென்னும்
பேர் இக்கலைக்கு இட்டார்பின். 54

प्राचां प्रपत्तिपदवीमयतां गुरूणां रोचिष्णुना वचनरत्नकदम्बकेन ।
एतां कृतिं ग्रथयतैव बुधात्मभूषां दत्तं वरं वचनभूषणनामधेयम् ॥ 54 ॥

*ஸ்ரீ வசனபூஷணத்தின்படி நடப்பது அரிது*

ஆர்வசனபூடணத்தின் ஆழ்பொருளெல்லாம்அறிவார் ?
ஆரதுசொன்னேரில் அநுட்டிப்பார் ?—ஒரொருவர்
உண்டாகில் அத்தனைகாண்உள்ளமே ! எல்லார்க்கும்
அண்டாததன்றோ அது. 55

जानन्ति के वचनभूषणवारिराशेर्थं सदा हृदि सतामभिधेयरत्नम् ।
के तत्प्रदर्शितपथेन च सञ्चरन्ति यः कोऽपि संभवति चेद्विरलो हि तज्ज्ञः ॥ 55 ॥

*ஸ்ரீ வசனபூஷணத்தின் பொருளறிந்து அநுஷ்டிக்கவிருப்பம் அவச்யம்*

உய்யநினைவுடையீர் ! உங்களுக்குச் சொல்லுகின்றேன்
வையகுருமுன்னம் வாய்மொழிந்த—செய்யகலை
யாம் வசனபூடணத்தினுழ்பொருளை கற்றதனுக்
காம் நிலையில் நில்லும்அறிந்து. 56

उग्राद्भवाब्धिकुहराद्द्रुतमुत्तितीर्षा जायेत वो यदि जनास्तदुपाय एषः ।
आलोच्यतां वचनभूषणमात्मनीदं निष्ठीयतां च नियमेन तदुक्तमार्गे ॥ 56 ॥

*இதைக் கல்லாதவர்கள்பால் வருத்தம்*

தேசிகர்பால்கேட்ட செழும்பொருளை சிந்தைதன்னில்
மாசறவேயூன்ற மனனஞ் செய்து—ஆசரிக்க
வல்லார்கள்தாம் வசனபூடணத்தின்வான்பொருளை
கல்லாதது என்னோ ! கவர்ந்து. 57

ते देशिकादधिगतान्युपदेशवर्त्मान्यासज्य चेतसि तथाऽऽचरितुं च शक्ताः ।
ते यत्नतो वचनभूषणगूढमर्थं नैवाचरन्ति परिशील्य कुतो न विद्मः ॥ 57 ॥

*இதை வியாக்கியானத்துடன் கற்பது நலம்*

சச்சம்பிரதாயம் தாமுடையோர்கேட்டக்கால்
மெச்சும் வியாக்கியைதானுண்டாகில்—நச்சி
அதிகரியும்நீர் வசனபூடணத்துக்கற்ற
மதியுடையீர் மத்தியத்தராய். 58

सत्संप्रदायसुदिया सततोपलाल्या लभ्येत चेद्वचनभूषणवाक्यटीका ।
सा व्यञ्जती सकलमस्य पदार्थजातं मध्यस्थयैव दशया ननु भावनीया ॥ 58 ॥

*ஸ்ரீ வசனபூஷணம் இனிதானது*

சீர்வசனபூடணத்தின் செம்பொருளை சிந்தைதன்னல்
தேரிலுமாம் வாய்கொண்டு செப்பிலுமாம்—ஆரியர்காள் !
என்தனக்குநாளும் இனிதாகநின்றதுஐயோ !
உந்தமக்குஎவ்வின்பம் உளதாம்? 59

सार्थाः स्मरामि यदि वाचनभूषणीया वाचो वदामि यदि वा मधुरा ममापि ।
आर्याः ! कथं नु भवतां मनसि प्रथेरन् भूम्ना धियो हि विषयातिशयावगाहाः ॥ 59 ॥

தன்குருவின் தாளிணைகள்தன்னில் அன்பொன்றில்லாதார்
அன்புதன்பால்செய்தாலும் அம்புயைகோன்—இன்பமிகு
விண்ணாடு தானளிக்கவேண்டியிரான் ஆதலால்
நண்ணார் அவர்கள் திருநாடு. 60

भक्तिं विहाय पदयोर्निजदेशिकस्य भक्तिप्रकर्षमपि ये भगवत्ययन्ते ।
तेभ्यो रमासहचरः परमं पदं तद्दातुं न हीच्छति न तेऽपि च तल्लभन्ते ॥ 60 ॥

இதுவுமது

ஞானம் அநுட்டானம் இவை நன்றாகவேயுடைய
னானகுருவை அடைந்தக்கால்—மாநிலத்தீர் !
தேனார்கமலத் திருமாமகள் கொழுநன்
தானே வைகுந்தம்தரும். 61

ज्ञानं परं तदुचिताचरणं च यस्य तस्मिन् गुरौ परमभक्तिजुषे जनाय ।
भौमाः स्वयं मधुरसाविलपद्मजायाः कान्तश्श्रियः करुणय निजधाम दत्ते ॥ 61 ॥

இதுவுமது

உய்யநினைவுண்டாகில் உங்குருக்கள்தம்பதத்தே
வையும் அன்புதன்னை இந்தமாநிலத்தீர் !—மெய்யுரைக்கேன்
பையரவில்மாயன் பரமபதம் உங்களுக்காம்
கையிலங்கு நெல்லிக்கனி. 62

उज्जीवनाय यदि मानसमुत्सुकं वो निष्ठीयतां निजगुरोश्चरणारविन्दे ।
सत्यं ब्रवीमि मनुजाः पणिशायिनस्तद्दिव्यं पदं करतामलकं भवेद्वः ॥ 62 ॥

இதுவுமது

ஆசாரியன்செய்த உபகாரமானவது
தூய்தாக நெஞ்சுதன்னில் தோன்றுமேல்—தேசாந்
தரத்திலிருக்க மனந்தான்பொருந்தமாட்டாது
இருத்தலினி ஏதறியோம்யாம். 63

उज्जीवनाय विहिता गुरुणापकारश्चित्ते लगन्ति विमला यदि चेतनानाम् ।
देशान्तरे निवसनं न मनोऽपिमृष्येद्वासः कथं नु भवितेति वयं न विद्मः ॥ 63 ॥

இதுவுமது

தன்னாரியனுக்குத்தான் அடிமைசெய்வது அவன்
இந்நாடுதன்னில் இருக்கும்நாள்—அந்நோர்
அறிந்தும் அதிலாசையின்றி ஆசாரியனைப்
பிரிந்திருப்பாரார் ? மனமே ! பேசு. 64

अत्रैव केवलमनन्यपरा लभेरन् शुश्रूषणां निजगुरोरुपसेदिवांसः ।
एनां प्रमेयसरणीं प्रतिपद्यमानाः के वा त्यजन्ति निजदेशिकपादमूलम् ॥ 64 ॥

அசார்யன், சிஷ்யன் இவர்கள் கடமைகள்

ஆசாரியன் சிச்சனுருயிரைப்பேணுமவன்
தேசாரும்சிச்ச னவன்சீர்வடிவை—ஆசையுடன்
நோக்குமவனென்னும் நுண்ணறிவைக்கேட்டுவைத்தும்
ஆர்க்கும் அங்நோர்நிற்கைஅரிதாம். 65

अन्तेसतो गुरुरनारतमात्मरक्षां शिष्यः प्रहृष्यः कुरुतां गुरुदेहरक्षाम् ।
अर्थे सुसूक्ष्ममिममाकलयन्ति चित्ते स्याद्दुर्लभा तदपि वर्त्मनि तत्र निष्ठा ॥ 65 ॥

பின்பழகிய பெருமாள் ஜீயர் நிஷ்டை

பின்பழகராம் பெருமாள்சீயர் பெருந்திவத்தில்
அன்பதுவுமற்று மிக்கஆசையினுல்—நம்பிள்ளைக்கு
ஆனஅடிமைகள்செய் அந்நிலையைநன்னெஞ்சே!
ஊனமற எப்பொழுதும் ஓர். 66

अत्यादरान्निजगुरुं कलिवैरिदास नित्यं विभूतिमवमत्य निरन्तरं यः ।
शुश्रूषते स गुरु मानस तस्य निष्ठां पश्चान्मनोहरपतेर्मुनिपुङ्गवस्य ॥ 66 ॥

பூர்வர்கள் நிஷ்டையே உயர்ந்தது

ஆசாரியர்க ளனைவரும் முன்னுசரித்த
ஆசாரந்தன்னை அறியாதார்—பேசுகின்ற
வார்த்தைகளைக்கேட்டு மருளாதே பூருவர்கள்
சீர்த்த நிலைதன்னை நெஞ்சே! சேர். 67

सर्वेऽपि पूर्वगुरवस्समयेन येन चेरुस्तमाकलयतामयथावदेव ।
वाचो निशम्य वर मानस मा भ्रमीस्त्वं वर्तस्व पूर्वतरदेशिकवर्तनेन ॥ 67 ॥

நன்னெறியுள்ள ஆஸ்திகர்கள் ஆதரணீயர்கள்

நாத்திகரும் நற்கலையின் நன்னெறிசேர் ஆத்திகரும்
ஆத்திகநாத்திகருமாமிவரை—ஓர்த்து நெஞ்சே!
முன்னவரும் பின்னவரும் மூர்க்கரெனவிட்டு நடுச்
சொன்னவரை நாளும்தொடர். 68

ये नास्तिका हृदय तान् विजहीहि मूर्खांस्तानप्यपाकुरु य आस्तिकनास्तिकाश्च ।
ये त्वास्तिका नयपथान्न परिच्यवन्ते तानन्वहं परिचिनुष्व तमोपहन्तॄन् ॥ 68 ॥

ஸத்ஸங்கம் பெருமையுடைத்து

நல்லமணமுள்ளதொன்றை நண்ணியிருப்பதற்கு
நல்லமணமுண்டாம் நயமதுபோல்—நல்ல
குணமுடையோர் தங்களுடன் கூடியிருப்பார்க்கு
குணமதுவேயாம் சேர்த்திகொண்டு. 69

आमोदवत्कुसुमसंवलनेन यद्वदामोदवान् भवति केशभरोऽप्यगन्धः ।
तद्वद्भवति गुणवज्जनसङ्गमेन वीता गुणैरपि जना गुणवन्त एव ॥ 69 ॥

### தீயவர் ஸஹவாஸம் விலக்க வேண்டுவது

தீயகந்தமுள்ளதொன்றைச் சேர்ந்திருப்பதொன்றுக்கு
தீயகந்தமேறும் திறமதுபோல்—தீய
குணமுடையோர்தங்களுடன் கூடியிருப்பார்க்கு
குணமதுவேயாம் செறிவுகொண்டு. 70

यत्पूतिगन्धमिलनं समुपैति वस्तु तत्पूतिगन्धमचिरादुपजायते हि ।
एतत्क्रमेण रमणीयगुणोऽपि लोके निन्द्यान् गुणान् भजति निन्द्यगुणाश्रयेण ॥ 70 ॥

### ஸ்ரீவசனபூஷணத்தைப் பழிப்பவர் மூர்க்கர்

முன்னோர்மொழிந்த முறைதப்பாமல்கேட்டு
பின்னோர்ந்துதாம்அதனைப் பேசாதே—தந்நெஞ்சில்
தோற்றினதேசொல்லி இதுசுத்தவுபதேசவர
வாற்றதென்பர்—மூர்க்கராவர். 71

प्राचां वचांसि सकलानि निशम्य सम्यक् चित्तेन तान्यवहितेन निजेन मत्वा ।
नैवोपदिश्य कथयन्ति यथावभासं शुद्धान्वयोऽयमिति ये वत ते हि मूर्खाः ॥ 71 ॥

### வாழ்ச்சிக்குவழி

பூருவாசாரியர்கள் போதம்அனுட்டானங்கள்
கூறுவார்வார்த்தைகளைக்கொண்டு நீர்—தேறி
இருள்தருமாஞாலத்தே இன்பமுற்றுவாழும்
தெருள்தருமாதேசிகனைச் சேர்ந்து. 72

प्राचां प्रबोधचरणे विमले गुरूणां ये व्याहरन्ति तदुदाहृतया पदव्या ।
प्रज्ञानिधिं गुरुवरं प्रतिपद्य लोका मोहास्पदे जगति संप्रति मोदिषीध्वम् ॥ 72 ॥

### இப்ரபந்தம் கற்றவர் எதிராசரின்னருளுக்கு இலக்காவர்

இந்த உபதேசரத்தினமாலைதன்னை
சிந்தைதன்னில் நாளும்சிந்திப்பார்—எந்தை
எதிராசரின்னருளுக்கு என்றும் இலக்காகி
சதிராக வாழ்ந்திடுவர் தாம். 73

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

बद्धां गुणैरनुगुणैरुपदेशरत्नमालामिमां दधति ये हृदयेन नित्यम् ।
अस्मद्गुरोर्यतिपतेः करुणप्रवाहपात्रीकृताः परमसंपदमाश्रयन्ते ॥ 73 ॥

श्रीमते रम्यजामातृमहामुनये नमः

எறும்பியப்பா அருளிச்செய்தது

மன்னுயிர்காள்! இங்கே மணவாளமாமுனிவன்
பொன்னடியாம்செங்கமலப்போதுகளை—உன்னிச்
சிரத்தாலேதீண்டில் அமானவனும்நம்மை
கரத்தாலேதீண்டல் கடன். 74

( द्राविडभाषायां देवराजगुरु विरचितोयं मुक्तकश्लोकः )

अङ्गानुषङ्गिपुरुषा रुचिरोपयन्तुरत्राभिलष्यपदरक्तसरोजसूने ।
सश्रद्धमात्मशिरसा यदि संस्पृशेम प्राप्तस्य नो ध्रुवममानवपाणिसङ्गः ॥ 74 ॥



பொன்னடியாம் செங்கமலம்

ஸ்வாமி திருவடிகளையலங்கரித்த பாதுகைகள்
கவசமிடப்பட்டு ஸ்ரீரங்கம் ஸன்னிதியில் ஸேவை ஸாதிக்கும்படி.

பெரிய ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

# திருவாய்மொழி நூற்றந்தாதி

முன்னுரை

## திருவாய்மொழி நூற்றந்திதாயின் பெருமை

ஸ்ரீமதுபயவே. பெருமாள்கோவில் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

"திருவாய்மொழிநூற்றந்தாதி மணவாளமாமுனிகளுருளிச் செய்தது'' என்றுலே போதும் இதன் பெருமையையுணர. உலகில் தோன்றியுள்ள அந்தாதி வெண்பா நூல் களில் நிகற்றநூல் இது ஒன்றேயாம். மாமுனிக ளருளிச் செய்த எந்த நூலும் "இது நிகறற்றது, ஒப்பற்றது'' என்று சொல்லும்படியாயிருக்கும். அப்படிச் சொல்வதன்று இது; இதன் சிறப்பை யாவருமிசையும்படி நன்கு நிரூபிக்கிறேன் கேண்மின். திருவாய்மொழியாயிரமும் அந்தாதியே. இயற்பாவில் எட்டுதிவ்வியப்ரபந் தங்கள் அந்தாதியே. கண்ணிநுண் சிறுத்தாம்பு அந்தாதியே; பெரியாழ்வாரும் திருமங்கை யாழ்வாரும் தம்தம் திருமொழிகளிலே ஒவ்வொரு பதிகம் அந்தாதி பாடி யுள்ளார்கள். அவை எல்லாவற்றிலும் செய்யுளைத் தொடங்கும் முறையும் முடிக்கும் முறையும் நூலாசிரி யர்கள் தம்தம் இஷ்டத்தைப் பொறுத்தது. தங்களிஷ்டப்படி முடித்த சீரையோ சொல்லையோ எழுத்தையோ தொட்டுக்கொண்டு மேற்பாட்டு ஆரம்பம் செய்வதென்ப தொன்றே அந்தாதி பாடுகிறவர்களனைவரும் கொண்ட நியதியாகும். உதாரணமாக பொய்கையாழ்வார் 'வையம் தகளியா' என்று தொடங்கி 'இடராழி நீங்குகவே இன்று' என்று தம்மிஷ்டப்படி முடித்தார். 'இடராழி நீங்குகவே இங்கு' என்றாலும் கேள்வியில்லை. அந்தாதி பாடுவார் வெண்பா விலோ கட்டளைக்கலித்துறையிலோ முடிக்கும் சொல்லை தங்களிஷ்டப்படி பாடியுள்ளார்கள்.

இனி மணவாளமாமுனிகளின் திருவாய்மொழி நூற்றந்தாதியின் அமைப்பைப்பற்றி கேண்மின். நம்மாழ்வார் "உயர்வற" என்று திருவாய்மொழி தொடங்கிய படியால் அதற்குக்கட்டுப்பட்டு "உயர்வே பரன்படியை'' என்று தம்முடைய அந்தாதியைத் தொடங் கினர். அடுத்த திருவாய்மொழிப் பதிகம் "வீடு மின் முற்றவும்'' என்று தொடங்குவதால் (மாமுனிகள் தம் அந்தாதி) அத்தோடும் சேரும்படி "வேராகவே விளையும் வீடு'' என்று வீடு என்பதையே கடைச் சீராக வைத்துப் பாசுரத்தை முடித்தார். அதற்கு மேற் பாட்டை அந்தாதியடைவு குலையாதபடி 'வீடு செய்து' என்று தொடங்கினர். நூறு பாட்டு இந்த நிபந்தனைக்குக் கட்டுப்பட்டே அவதரித்துள்ளன. செய்யுளுக்குறிய மோனையின்பமும் எது கையின்பமும் கூட தம்மிஷ்டத்தைப் பொறுத்ததல்ல வென்பதை உற்றுநாக்கவேணும்.

வீடு என்றதற்கு மோனை சேரும்படி வேராகவே என்ன வேண்டிற்று. இதற்கு எதுகை சேரும்படி முன்னடியில் வாராமல் என்ன வேண்டிற்று. இவ்வளவோடும் கூட ஒவ்வொரு பதிகத்தின் ஸாரத்தையும் ஒவ்வொரு வெண்பாவில் அடைக்க வேண்டிற்று பாட்டுதோறும் நம்மாழ்வார் திருநாமமும் தவராது வர வேண்டியதாயிற்று. இத்தனை நிர்ப்பந்தங்களையும் கொண்டு பாடின அந்தாதி நூல் இஃதொன்றே தவிர மாநிலத்தில் வேறொன்றும் கிடையாது. உண்டெனில் காட்டலாம். "மாமுனிகள் திருவாய்மொழிக்கு இங்ஙனே நூற்றந்தாதி அமைத்தார்; நாமும் பெரிய திருமொழிக்கு இங்ஙனே ஒரு பிரபந்த மிடுவோம்'' என்று ஸங்கற்பித்து ஒரு மஹாகவி முயன்றால் அப்போதுதான் இதன் அருமை பெருமை தெரியும்.

# திருவாய்மொழி நூற்றந்தாதி

## தனியன்கள்

அல்லும்பகலும் அனுபவிப்பார் தங்களுக்கு
சொல்லும் பொருளும் தொகுத்துரைத்தான்—நல்ல
மணவாளமாமுனிவன் மாறன் மறைக்கு
தணவா நூற்றந்ததாதிதான்.

மன்னுபுகழ்சேர் மணவாளமாமுனிவன்
தன்னருளால் உட்பொருள்கள் தம்முடனே—சொன்ன
திருவாய்மொழி நூற்றந்தாதியாம்தேனை
ஒருவாதருந்து நெஞ்சே! உற்று.

உயர்வேபரன்படியை உள்ளதெல்லாம் தான்கண்டு
உயர்வேதம்நேர் கொண்டுரைத்து—மயர்வேதும்
வாராமல் மானிடரைவாழ்விக்கும்மாறன் சொல்
வேராகவேவிளையும் வீடு. 1

வீடுசெய்துமற்றெவையும் மிக்கபுகழ்நாரணன்தாள்
நாடுநலத் தாலடையநன்குரைக்கும்—நீடுபுகழ்
வண்குருகூர்மாறன் இந்தமாநிலத்தோர் தாம்வாழ
பண்புடனேபாடியருள் பத்து. 2

பத்துடையோர்க்குஎன்றும் பரனெளியனும் பிறப்பால்
முத்தித்தரும் மாநிலத்தீர்! மூண்டு அவன்பால்—பத்திசெய்யும்
என்றுரைத்த மாறன்தனின் சொல்லால்போம்நெடுகச்
சென்றபிறப்பாமஞ்சிறை. 3

அஞ்சிறையபுட்கள்தமை ஆழியானுக்கு நீர்
என்செயலைச்சொல்லுமென இரந்து—விஞ்ச
நலங்கியதும்மாறன்இங்கே நாயகனைத்தேடி
மலங்கியதும் பத்திவளம் 4

வளம்மிக்கமால்பெருமை மன்னுயிரின்தண்மை
உளமுற்று அங்கூடுருவ வோர்ந்து—தளர்வுற்று
நீங்கநினைமாறனைமால் நீடிலகுசீலத்தால்
பாங்குடனேசேர்த்தான் பரிந்து. 5

பரிவதிலீசன்படியைப் பண்புடனேபேசி
அரியனலன் ஆராதனைக்கென்று—உரிமையுடன்
ஓதியருள்மாறன் ஒழிவித்தான் இவ்வுலகில்
பேதையர்கள்தங்கள் பிறப்பு. 6

பிறவியற்று நீள்விசும்பின் பேரின்பமுய்க்கும்
திறம் அளிக்கும் சீலத்திருமால்—அறவினியன்
பற்றுமவர்க்குஎன்று பகர்மாறன்பாதமே
உற்றதுணையென்று உள்ளமே ! ஓடு. 7

ஓடுமனம்செய்கை உரையொன்றினில்லாதாருடனே
கூடிநெடுமால் அடிமைகொள்ளும்நிலை—நாடறிய
ஓர்ந்தவன்தன்செம்மை உரைசெய்தமாறனென
ஏய்ந்துநிற்கும் வாழ்வாமிவை. 8

இவையறிந்தோர்தம்மளவில் ஈசனுவந்தாற்ற
அவயவங்கள்தோறு மணையும்—சுவையதனைப்
பெற்று ஆர்வத்தால் மாறன்பேசினசொல்பேச மால்
பொன்தாள் நம்சென்னிபொரும். 9

பொருமாழிசங்குடையோன் பூதலத்தேவந்து
தருமாறேரேதுவறத்தன்னை—திரமாகப்
பார்த்துஉரைசெய்மாறன் பதம்பணிகளென்சென்னி
வாழ்த்திடுக என்னுடையவாய். 10

வாயும்திருமால் மறையநிற்க ஆற்றுமை
போய்விஞ்சி மிக்கபுலம்புதலாய்—ஆய
அறியாதவற்றேடு அணைந்தழுதமாறன்
செறிவாரைநோக்கும் திணிந்து. 11

திண்ணிதாமாறன் திருமால்பரத்துவத்தை
நண்ணி அவதாரத்தே நன்குரைத்த—வண்ணமறிந்து
அற்றார்கள்யாவர் அவரடிக்கேஆங்கவர்பால்
உற்றாரைமேலிடாதூன். 12

ஊனமறவேவந்து உள்கலந்தமாலினிமை
யானது அனுபவித்தற்காம் துணையா—வானில்
அடியார்குழாம்கூட ஆசையுற்றமாறன்
அடியாருடன் நெஞ்சே ! ஆடு. 13

ஆடிமகிழ்வானில் அடியார்குழாங்களுடன்
கூடி இன்பமெய்தாக்குறையதனுல்—வாடிமிக
அன்புற்றார்தம்நிலைமை ஆய்ந்துரைக்கமோகித்து
துன்புற்றான் மாறன்அந்தோ ! 14

அந்தாமத்தன்பால் அடியார்களோடுஇறைவன்
வந்தாரத் தான்கலந்த வண்மையினுல்—சந்தாபம்
தீர்ந்தசடகோபன் திருவடிக்கே நெஞ்சமே !
வாய்ந்தஅன்பை நாள்தோறும்வை. 15

வைகுந்தன் வந்து கலந்ததற்பின் வாழ்மாறன்
செய்கின்றநைச்சியத்தைச் சிந்தித்து—நைகின்ற
தன்மைதனைக்கண்டு உன்னைத்தான்விடேனென்றுரைக்க
வண்மையடைந்தான் கேசவன். 16

கேசவனல்எந்தமர்கள் கீழ்மேலெழுபிறப்பும்
தேசடைந்தாரென்று சிறந்துரைத்த—வீசுபுகழ்
மாறன்மலரடியே மன்னுயிர்க்கெல்லாம் உய்கைக்கு
ஆறென்று நெஞ்சே! அணை 17

அணைந்தவர்கள்தம்முடனே ஆயனருட்காளாம்
குணந்தனையேகொண்டு உலகைக்கூட்ட—இணங்கிமிக
மாசிலுபதேசம்செய் மாறன்மலரடியே
வீசுபுகழ் எம்மாவீடு. 18

எம்மா வீடும்வேண்டா என்தனக்குஉன்தாளிணையே
அம்மாஅமையுமென் ஆய்ந்துரைத்த—நம்முடைய
வாழ்முதலாம்மாறன் மலர்த்தாளிணைசூடி
கீழ்மையற்று நெஞ்சே! கிளர். 19

கிளரொளிசேர் கீழுரைத்த பேறுகிடைக்க
வளரொளிமால் சோலைமலைக்கே—தளர்வறவே
நெஞ்சைவைத்துச்சேருமெனும் நீடுபுகழ்மாறன்தாள்
முன்செலுத்துவோம் எம்முடி. 20

முடியார்திருமலையில் மூண்டுநின்றமாறன்
அடிவாரந்தன்னில் அழகர்—வடிவழகைப்
பற்றி முடியும்அடியும் படிகலனும்
முற்றும் அனுபவித்தான்முன். 21

முன்னமழகரெழில்மூழ்கும் குருகையர்கோன்
இன்னவளவென்ன எனக்கரிதாய்த்—தென்ன
கரணக்குறையின் கலக்கத்தை கண்ணன்
ஒருமைப்படுத்தான் ஒழித்து. 22

ஒழிவிலாக்காலம் உடனுகிமன்னி
வழுவிலா ஆட்செய்யமாலுக்கு—எழுசிகர
வேங்கடத்துப்பாரித்த மிககலம்சேர்மாறன்
பூங்கழலை நெஞ்சே! புகழ். 23

புகழொன்றுமால் எப்பொருள்களும்தானுய்
நிகழ்கின்ற நேர்காட்டிநிற்க—மகிழ்மாறன்
எங்கும்அடிமைசெய்ய இச்சித்து வாசிகமாய்
அங்கடிமைசெய்தான் மொய்ம்பால். 24

மொய்ம்பாரும்மாலுக்கு முன்னடிமைசெய்துஉவப்பால்
அன்பால் ஆட்செய்பவரை யாதரித்தும்—அன்பிலா
மூடரைநிந்தித்தும் மொழிந்தருளும்மாறன்பால்
தேடரியபத்திநெஞ்சே! செய். 25

செய்யபரத்துவமாய்ச் சீரார்வியூகமாய்
துய்யவிபவமாய்த் தோன்றிவற்றுள்—எய்துமவர்க்கு
இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிதென்றான்
பன்னுதமிழ்மாறன் பயின்று. 26

பயிலும்திருமால் பதந்தன்னில் நெஞ்சம்
தயலுண்டுநிற்கும் ததியற்கு—இயல்வுடனே
ஆளானார்க்கு ஆளாகும் மாறனடியதனில்
ஆளாகார் சன்மம்முடியா. 27

முடியாதஆசைமிக முற்றுகரணங்கள்
அடியார்தம்மைவிட்டு அவன்பால்—படியா ஒன்
றொன்றின்செயல்விரும்ப உள்ளதெல்லாம் தாம்விரும்ப
துன்னியதே மாறன்தன்சொல். 28

சொன்னாவில்வாழ்புலவீர்! சோறுகூறைக்காக
மன்னாதமானிடரை வாழ்த்துதலால்—என்னாகும்?
என்னுடனேமாதவனை எத்துமெனும்குருகூர்
மன்னருளால் மாறும்சன்மம். 29

சன்மம்பலசெய்து தான்இவ்வுலகளிக்கும்
நன்மையுடைய மால்குணத்தை நாள்தோறும்—இம்மையிலே
ஏத்துமின்பம்பெற்றேனெனும் மாறனை உலகீர்!
நாத்தழும்ப ஏத்தும்ஒருநாள். 30

ஒருநாயகமாய் உலகுக்கு வானோர்
இருநாட்டி லேறியுய்க்கும் இன்பம்—திரமாகா
மன்னுயிர்ப்போகம்தீது மாலடிமையே இனிதாம்
பனனியிவை மாறனுரைப்பால். 31

பாலரைப்போல்சீழ்கிப் பரனளவில்வேட்கையால்
காலத்தால்தேசத்தால் கைகழிந்த—சால
அரிதானபோகத்தில் ஆசையுற்றுநைத்தான்
குருகூரில்வந்துதித்தகோ. 32

கோவானஈசன் குறையெல்லாம்தீரவே
ஓவாதகாலத்துஉவாதிதனை—மேவிக்
கழித்தடையக்காட்டிக் கலந்தகுணமாறன்
வழுத்துதலால் வாழ்ந்தது இந்தமண். 33

மண்ணுலகில்முன்கலந்து மால்பிரிகையால் மாறன்
பெண்ணிலைமையாய்க் காதல்பித்தேறி—எண்ணிடில்முன்
போலிமுதலான பொருளை அவனுய்நினைந்து
மேல்விழுந்தான் மையல்தனின்வீறு. 34

வீற்றிருக்கும்மால்விண்ணில் மிக்கமயல்தன்னை
ஆற்றுதற்காத் தன்பெருமையானதெல்லாம்—தோற்றவந்து
நன்றுகலக்கப்போற்றி நன்குஉகந்து வீறுஉரைத்தான்
சென்றதுயர்மாறன் தீர்ந்து. 35

தீர்ப்பாரிலாதமயல் தீரக்கலந்தமால்
ஓர்ப்பாதுமின்றி உடன்பிரிய—நேர்க்க
அறிவழிந்து உற்றும்அறக்கலங்க பேர்கேட்டு
அறிவுபெற்றுன் மாறன்சீலம். 36

சீலமிகுகண்ணன் திருநாமத்தால்உணர்ந்து
மேலவன்தன் மேனிகண்டு மேவுதற்கு—சால
வருந்திஇரவும்பகலும் மாறுமல்கூப்பிட்டு
இருந்தனனே தென்குருகூரேறு. 37

ஏறுதிருவுடைய ஈசனுகப்புக்கு
வேறுபடில் என்னுடைமை மிக்கவுயிர்—தேறுங்கால்
என்தனக்கும் வேண்டாவெனும் மாறன்தாளைநெஞ்சே!
நந்தமக்குப்பேறுக நண்ணு. 38

நண்ணுதுலமாலடியை நானிலத்தே வல்வினையால்
எண்ணுராத்துன்பமுறும் இவ்வுயிர்கள்—தண்ணிமையைக்
கண்டிருக்கமாட்டாமல் கண்கலங்கும்மாறனருள்
உண்டுநமக்கு உற்றதுணையொன்று. 39

ஒன்றுமிலைத்தேவு இவ்வுலகம் படைத்தமால்
அன்றியென ஆருமறியவே—நன்றுக
மூதலித்துப்பேசியருள் மொய்ம்மகிழோன்தாள் தொழவே
காதலிக்கும் என்னுடையகை. 40

கையாரும்சக்கரத்தோன் காதலின்றிக்கேயிருக்க
பொய்யாகப்பேசும் புறனுரைக்கு—மெய்யான
பேற்றைஉபகரித்த பேரருளின்தன்மைதனை
போற்றினேனே மாறன் பொலிந்து. 41

பொலிகபொலிகவென்று பூமகள்கேண்தொண்டர்
மலிவுதனைக் கண்டுகந்துவாழ்த்தி—உலகில்
திருந்தாதார்தம்மைத்திருத்திய மாறன்சொல்
மருந்தாகப்போகும் மனமாசு. 42

மாசறுசோதி கண்ணன்வந்துகலவாமையால்
ஆசைமிகுந்து பழிக்குஅஞ்சாமல்—ஏசறவே
மண்ணில்மடலூர மாறன்ஒருமித்தான்
உள்நடுங்கத் தான்பிறந்தஊர். 43

ஊரநினைந்தமடல் ஊரவும் ஒண்ணுதபடி
கூரிருள்சேர்கங்குலுடன் கூடிநின்று—பேராமல்
தீதுசெய்யமாறன் திருவுள்ளத்துச்சென்றதுயர்
ஓதுவது இங்குஎங்ஙனேயோ ? 44

எங்ஙனேநீர்முனிவது என்னையினி ? நம்பியழகு
இங்ஙனேதோன்றுகின்றது என்முன்னே—அங்ஙன்
உருவெளிப்பாடா வுரைத்ததமிழ்மாறன்
கருதுமவர்க்கு இன்பக்கடல். 45

கடல்ஞாலத்தீசனை முன்காணுமல்நொந்தே
உடனு அனுகரிக்கலுற்று—திடமாக
வாய்ந்தவனுய்த்தான்பேசும் மாரறனுரையதனை
ஆய்ந்துரைப்பார் ஆட்செய்யநோற்றுர் 46

நோற்றநோன்பாதியிலேன் நுன்தனைவிட்டாற்றகில்லேன்
பேற்றுக்குஉபாயம் உன்தன்பேரருளே—சாற்றுகின்றேன்
இங்கென்னிலையென்னும் எழில்மாறன்சொல்வல்லார்
அங்குஅமரர்க்கு ஆராவமுது. 47

ஆராவமுதாழ்வார் ஆதரித்தபேறுகளை
தாராமையாலே தளர்ந்துமிக—தீராத
ஆசையுடன் ஆற்றுமைபேசி யலமந்தான்
மாசறுசீர் மாறனெம்மான். 48

மாநலத்தால்மாறன் திருவல்லவாழ்புகப்போய்
தானிளைத்துவீழ்ந்து அவ்வூர்தன்னருகில்—மேல்நலங்கித்
துன்பமுற்றுச்சொன்ன சொலவுகற்பபர்தங்களுக்கு
பின்பிறக்க வேண்டாபிற. 49

பிறந்துஉலகம்காத்தளிக்கும் பேரருட்கண்ணு ! உன்
சிறந்தகுணத்தாலுருகும் சீலத்—திறம்தவிர்ந்து
சேர்ந்தனுபவிக்கும்நிலை செய்யென்றசீர்மாறன்
வாய்ந்தபதத்தே மனமே ! வைகு. 50

வைகல்திருவண்வண்டூர் வைகும்இராமனுக்கு என்
செய்கைதனைப் புள்ளினங்காள் ! செப்புமென—கைகழிந்த
காதலுடன்தூதுவிடும் காரிமாறன்கழலே
மேதியினீர் ! நீர்வணங்குமின். 51

மின்னிடையார்சேர்கண்ணன் மெத்தெனவந்தானென்று
தன்னிலைபோய்ப்பெண்ணிலையாய்த் தான்தள்ளி—உன்னுடனே
கூடேனென்றூடும் குருகையர்கோன்தாள்தோழவே
நாள்தோறும் நெஞ்சமே! நல்கு. 52

நல்லவலத்தால்நம்மைச் சேர்த்தோன்முன்நண்ணுரை
வெல்லும் விருத்தவிபூதியனென்று—எல்லையறத்
தானிருந்துவாழ்த்தும் தமிழ்மாறன்சொல்வல்லார்
வானவர்க்கு வாய்த்தகுரவர். 53

குரவைமுதலாம்கண்ணன் கோலச்செயல்கள்
இரவுபகலென்னுமல் என்றும்—பரவுமனம்
பெற்றேனென்றேகளித்துப் பேசும்பராங்குசன்தன்
சொல்தேனில் நெஞ்சே! துவள். 54

துவளறு சீர்மால்திறத்துத் தொன்னலத்தால் நாளும்
துவளறுதன் சீலமெல்லாம்சொன்னான்—துவளறவே
முன்னமனுபவத்தில் மூழ்கிநின்றமாறனதில்
மன்னுமுவப்பால் வந்தமால். 55

மாலுடனேதான்கலந்து வாழப்பெருமையால்
சாலநைந்துதன்னுடைமை தானடையக்—கோலியே
தானிகழவேண்டாமல் தன்னைவிடல்சொல்மாறன்
ஊனமறுசீர்நெஞ்சே! உண். 56

உண்ணும்சோறுதி ஒருமூன்றும் எம்பெருமான்
கண்ணனென்றேநீர்மல்கிக் கண்ணிணைகள்—மண்ணுலகில்
மன்னுதிருக்கோளூரில் மாயன்பால்போம்மாறன்
பொன்னடியே நந்தமக்குப்பொன். 57

பொன்னுலகுபூமியெல்லாம் புள்ளினங்கட்கேவழங்கி
என்னிடரைமாலுக் கியம்புமென—மன்னுதிரு
நாடுமுதல்தூதுநல்கிவிடும் மாறனையே
நீடுலகீர்! போய்வணங்கும் நீர். 58

நீராகிக்கேட்டவர்கள் நெஞ்சழிய மாலுக்கும்
ஏரார்விசும்பில் இருப்பரிதா—ஆராத
காதலுடன்கூப்பிட்ட காரிமாறன்சொல்லை
ஓதிடவேஉய்யும் உலகு. 59

உலகுய்யமால்நின்ற உயர்வேங்கடத்தே
அலர்மகளைமுன்னிட்டு அவன்தன்—மலரடியே
வன்சரணாய்ச்சேர்ந்த மகிழ்மாறன்தாளிணையே
உன்சரணாய் நெஞ்சமே! உள். 60

உண்ணிலாவைவருடனிருத்தி இவ்வுலகில்
எண்ணிலாமாயன் எனைநலிய—எண்ணுகின்றான்
என்றுநினைந்தோலமிட்ட இன்புகழ்சேர்மாறனென
குன்றிவிடுமே பவக்கங்குல். 61

கங்குல்பகலரதி கைவிஞ்சிமோகமுற
அங்கதனைக்கண்டோ ரரங்கரைப்பார்த்து—இங்கிவள்பால்
என்செய்யநீரெண்ணுகின்றதென்னும் நிலைசேர்மாறன்
அஞ்சொலுற நெஞ்சுவெள்ளையாம். 62

வெள்ளியநாமம்கேட்டு விட்டகன்றபின்மோகம்
தெள்ளியமால் தென்திருப்பேர்சென்றுபுக—உள்ளம்அங்கே
பற்றிநின்றதன்மை பகரும்சடகோபற்கு
அற்றவர்கள்தாம் ஆழியார். 63

ஆழிவண்ணன்தன் விசயமானவை முற்றும்காட்டி
வாழிதனலென்று மகிழ்ந்துநிற்க—ஊழிலவை
தன்னைஇன்றுபோல்கண்டு தானுரைத்தமாறன்சொல்
பன்னுவரே நல்லது கற்பார். 64

கற்றோர்கருதும் விசயங்களுக்கெல்லாம்
பற்றும்விபவகுணப் பண்புகளை—உற்றுணர்ந்து
மண்ணிலுள்ளோர் தம்மிழவை வாய்ந்துரைத்தமாறன்சொல்
பண்ணில் இனிதான தமிழ்ப்பா. 65

பாமருவுவேதம் பகர்மால்குணங்களுடன்
ஆமழகுவேண்டற்பாடாம் அவற்றை—தூமனத்தால்
நண்ணி அவனைக்காண நன்குருகிக்கூப்பிட்ட
அண்ணலைநண்ணார் எழையர். 66

ஏழையர்கள்நெஞ்சை இளகுவிக்கும் மாலழகு
சூழவந்துதோன்றித் துயர்விளைக்க—ஆழுமனந்
தன்னுடனே அவ்வழகைத் தானுரைத்தமாறன்பால்
மன்னுமவர் தீவினைபோம்மாய்ந்து. 67

மாயாமல் தன்னைவைத்த வைசித்திரியாலே
தீயாவிசித்திரமாச் சேர்பொருளோடு—ஓயாமல்
வாய்ந்து நிற்கும்மாயன் வளமுரைத்தமாறனைநாம்
ஏய்ந்துரைத்து வாழுநாள் என்று? 68

என்தனைநீஇங்குவைத்தது ஏதுக்கென மாலும்
என்தனக்கும்என்தமர்க்கும் இன்பமதா—நன்றுகவி
பாடவெனக் கைம்மாறிலாமை பகர்மாறன்
பாடணைவார்க்கு உண்டாம்இன்பம். 69

இன்பக்கவிபாடுவித்தோனை இந்திரையோடு
அன்புற்றுவாழ் திருவாறன்விளையில்—துன்பமறக்
கண்டடிமைசெய்யக் கருதியமாறன்கழலே
திண்திறலோர்யாவர்க்கும் தேவு. 70

தேவனுறைபதியில் சேரப்பெருமையால்
மேவுமடியார்வசனும் மெய்நிலையும்—யாவையும்தா
னும்நிலையும்சங்கித்து அவைதெளிந்தமாறன்பால்
மாநிலத்தீர் ! நங்கள்மனம். 71

நங்கருத்தைநன்ருக நாடிநிற்கும்மாலறிய
இங்கிவற்றிலாசை எமக்குளதென் ?—சங்கையினுல்
தன்னுயிரல்மற்றில்நசை தாஞெழிந்த மாறன்தான்
அந்நிலையை ஆயந்துரைத்தான் அங்கு. 72

அங்கமரர்பேண அவர்நடுவேவாழ்திருமாற்கு
இங்கோர்பரிவரிலையென்றஞ்ச—எங்கும்
பரிவருளரென்னப்பயம்தீர்ந்த மாறன்
வரிகழல்தாளேசர்ந்தவர் வாழ்வார். 73

வாராமல்அச்சம் இனிமால்தன்வலியினையும்
சீரார்பரிவருடன் சேர்த்தியையும் பாருமெனத்
தானுகந்தமாறன்தாள் சார்நெஞ்சே ! சாராயேல்
மானிடவரைச் சார்ந்துமாய். 74

மாயன்வடிவழகைக் காணுதவல்விடா
யாய் அதறவிஞ்சி அழுதலற்றும்—தூயபுகழ்
உற்ற சடகோபனை நாம்ஒன்றிநிற்கும்போதுபகல்
அற்றபொழுதானது எல்லியாம். 75

எல்லிபகல்நடந்த இந்தவிடாய்தீருகைக்கு
மெல்லவந்து தான் கலககவேணுமென—நல்லவர்கள்
மன்னுகடித்தானத்தே மாலிருக்கமாறன்கண்டு
இந்நிலையைச் சொன்னுன் இருந்து. 76

இருந்தவன்தான்வந்து இங்கிரெண்ணமெல்லாம்
திருத்திஇவர்தந்திறத்தேசெய்து—பொருந்தக்
கலந்துஇனியனுயிருக்கக் கண்ட சடகோபர்
கலந்தநெறி கட்டுரைத்தார்கண்டு. 77

கண்ணிறையவந்து கலந்தமால்இக்கலவி
திண்ணிலையாவேணுமெனச் சிந்தித்து—தண்ணிதெனும்
ஆருயிரினேற்ற மதுகாட்ட ஆய்ந்துறைத்தான்
காரிமாறன் தன்கருத்து. 78

கருமால்திறத்தில் ஒருகன்னிகையாம்மாறன்
ஒருமாகலவியுரைப்பால்—திரமாக
அந்தியருக்காகாது அவன்தனக்கேயாகும்உயிர்
இந்நிலையை யோர்நெடிதா. 79

நெடுமாலழததனில்நீள்குணத்தில் ஈடு
படுமாநிலையுடைய பத்தர்—அடிமைதனில்
எல்லைநிலம்தானுக எண்ணினுன்மாறன் அது
கொல்லைநிலமான நிலைகொண்டு. 80

கொண்டபெண்டிர்தாம்முதலாக் கூறும்உற்ருர் கன்மத்தால்
அண்டினவரென்றே அவரைவிட்டு—தொண்டருடன்
சேர்க்கும்திருமாலைச் சேருமென்ருன் ஆர்க்கும்இதம்
பார்க்கும் புகழ்மாறன்பண்டு. 81

பண்டையுறவானபரனைப் புளிங்குடிக்கே
கண்டு எனக்கு எல்லாவுறவின் காரியமும்—தண்டறநீ
செய்தருளெனேறயிரந்த சீர்மாறன் தாளிணையை
உய்துணையென்று உள்ளமே! ஓர். 82

ஓராநீர் வேண்டினவை உள்ளதெல்லாம்செகிய்ன்றேன்
நாராயணனன்ரே நானென்று--பேருறவைக்
காட்ட அவன்சீலத்தில்கால்தாழ்ந்தமாறனருள்
மாட்டிவிடும் நம்மனத்துமை. 83

மையார்கண்மாமார்பில் மன்னும்திருமலை
கையாழிசங்குடனே காணஎண்ணி—மெய்யான
காதலுடன்கூப்பிட்டுக் கண்டுகந்தமாறன்பேர்
ஓதவுய்யுமே இன்னுயிர். 84

இன்னுயிர்மால்தோற்றினது இங்கென்னெஞ்சிலென்று கண்ணுல்
அன்றவனைக்காணவெண்ணி ஆண்பெண்ணுய்—பின்னை அவன்
தன்னை நினைவிப்பவற்ருல் தான்தளர்ந்தமாறனருள்
உன்னுமவர்க்கு வள்ளமுருகும். 85

உருகுமால்என்னெஞ்சம் உன்செயல்க ளெண்ணி
பெருகுமால் வேட்கையெனப்பேசி—மருவுகின்ற
இன்னுப்புடன் அவன்சீ ரேய்ந்துரைத்தமாறன்சொல்
என்னுச்சொல்லா திருப்பது எங்கு? 86

எங்காதலுக்கடி மாலேய்ந்தவடிவழகென்று
அங்காதுபற்ருசா ஆங்கவன்பால்—எங்குமுள்ள
புள்ளினத்தைத் தூதாகப்போகவிடும் மாறன்தாள்
உள்ளினர்க்குத் தீங்கையறுக்கும். 87

அறுக்குமிடரென்று அவன்பால் ஆங்குவிட்டதூதர்
மறித்துவரப் பற்ருமனத்தால்—அறப்பதறிச்
செய்யதிருநாவாயில் செல்லநினைந்தான்மாறன்
மையலினுல் செய்வறியாமல். 88

மல்லடிமைசெய்யும்நாள் மால்தன்னைக்கேட்க அவன்
சொல்லுமளவும் பற்ருத்தொன்னலத்தால்—செல்கின்ற
ஆற்ருமைபேசி அலமந்தமாறனருள்
மாற்ருகப்போகும் என்தன்மால். 89

மால்உமதுவாஞ்சைமுற்றும் மன்னுமுடம்பின்முடிவில்
சாலநண்ணிச்செய்வனெனத் தானுகந்து—மேலவனைச்
சீரார்கணபுரத்தே சேருமெனும் சீர்மாறன்
தாராளே நந்தமக்குத்தாள். 90

தாளடைந்தோர்தங்கட்குத் தானேவழித்துணையாம்
காளமேகத்தைக் கதியாக்கி—மீளுதலாம்
ஏதமிலாவிண்ணுலகில் ஏகவெண்ணும் மாறனென
கேதமுள்ளதெல்லாம் கெடும். 91

கெடுமிடர் வைகுந்தத்தைக் கிட்டினுற்போல்
தடமுடைஅனந்தபுரந்தன்னில்—படவரவில்
கண்துயில்மாற்குஆட்செய்யக் காதலித்தான்மாறன் உயர்
விண்தனிலுள்ளோர் வியப்பவே. 92

வேய்மருந்தோளிந்திரைகோன் மேவுகின்றதேசத்தை
தான்மருவாத்தன்மையினுல் தன்னைஇன்னம்—பூமியிலே
வைக்குமெனச்சங்கித்து மால்தெளிவிக்கத்தெளிந்த
தக்கபுகழ்மாறன் எங்கள்சார்வு. 93

சார்வாகவேஅடியில் தானுரைத்த பத்திதான்
சீரார்பலத்துடனே சேர்ந்ததனை—சோராமல்
கண்டுரைத்த மாறன்கழலிணையே நாள்தோறும்
கண்டுகக்கும் என்னுடையகண். 94

கண்ணடியிணையில் காதலுறுவார் செயலை
திண்ணமுறவே சுருங்கச்செப்பியே—மண்ணவர்க்குத்
தானுபதேசிக்கை தலைக்காட்டினுன்மாறன்
ஆனபுகழ்சேர் தன்னருள். 95

அருளால்அடியிலெடுத்த மாலன்பால்
இருளார்ந்ததம்முடம்பை இச்சித்து—இருவிசும்பில்
இத்துடன்கொண்டேக இவரிசைவுபார்த்திருந்த
சுத்திசொல்லும் மாறன்செஞ்சொல். 96

செஞ்சொற்பரன்தனது சீராரும்மேனிதனில்
வஞ்சித்துச்செய்கின்ற வாஞ்சைதனின்—விஞ்சுதலைக்
கண்டவனைக்காற்கட்டிக் கைவிடுத்துக்கொண்ட
திண்தறல்மாறன் நம்திரு. 97

திருமால்தம்பால் விருப்பம்செய்கின்றநோ்கண்டு
அருமாயத்தன்றகல்விப்பானென்—பெருமால்நீ
இன்றுஎன்பால்செய்வானென்னென்ன இடருற்றுநின்றான்
துன்னுபுகழ்மாறனைத்தான் சூழ்ந்து. 98

சூழ்ந்துநின்றமால்விசும்பில் தொல்லைவழிகாட்ட
ஆழ்ந்ததனைமுற்றும்அனுபவித்து—வாழ்ந்து அங்கு
அடியருடனே இருந்தவாற்றை உரைசெய்தான்
முடிமகிழ்சோ் ஞானமுனி. 99

முனிமாறன் முன்புஉரைசெய் முற்றின்பம்நீங்கி
தனியாக நின்றுதளர்ந்து—நனியாம்
பரமபத்தியால்நைந்து பங்கயத்தாள்கோனை
ஒறுமையுற்றுச்சோ்ந்தான் உயர்ந்து 100

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

# ஆர்த்திப்ரபந்தம்

## முன்னுரை

(ஸ்ரீமத் பிள்ளை லோகம் ஜீயர் அருளிச்செய்த வ்யாக்யானத்தின் அவதாரிகையைத் தழுவியது)

ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் தனக்கேயடியராயிருக்குமவர்களுக்குத் தன்னை வந்தடையவேணும் என்ற ருசியைப் பிறப்பித்துப் பிறகே தன்னை வந்தடைவதாகிற பேற்றை யளிக்கிறான். அந்த ருசிதான் பரபக்தி, பரஜ்ஞானம் பரமபக்தி இவைகளாக மலருகிறது. அப்படிப்பட்ட பக்தியை ஆழ்வாருக்குப் பிறக்கும்போதே உண்டாகும்படியருளி அவரை அங்கீகரித்தனன். அதைப்பற்றியே "மயர்வறமதி நலமருளினன்"[1] என்றும், "அவாவற்று வீடுபெற்ற"[2] என்றும் அருளிச் செய்தார். அந்த பக்திதான், ஆழ்வார் ஸம்பந்தமடியாக எல்லாருக்கும் அவனை அடைவதற்கு முன்னனமே பெறும்படியாயிருக்கும். அப்படிப் பெறுகைககாக, "பகவந் பக்திமபிப்ரயச்சமே"[3] என்றும் "பரபக்தியுக்தம் மாம்குருஷ்வ"[4] என்றும் ஆசார்யர்கள் வேண்டியருளினார்கள். அப்படி விரும்பியதை வேண்டிப் பெற்று க்ருதார்த்தராய் "கரைகணடோர்"[5] என்று முக்தராயச் சொல்லப்படுகிற பராங்குச பரகாலாதிகளோடே ஒரு கோவையாய் எழுந்தருளியிருப்பவராய், பின்பும், ருசியுடையோ ரெல்லாருக்கும் ஆச்ரயணீயராகைக்காக தம்முடைய அவதார ஸ்தலத்திலும் மற்றும் பல விடங்களிலும் அர்ச்சாரூபியாய் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானார் திருவடிகளிலே, தம்முடைய ஆசார்யரான பிள்ளை தம்மை உடையவரிடத்தில் அவரைத் தவிர வேறு யாவருக்குமாகாதபடி அவர் விஷயத்தில் ப்ராவண்யத்தை உண்டாக்கியபடியே, ஆழ்வாருக்கு "க்ருஷ்ணத்ருஷ்ணாதத்வம்" என்று சிறப்பு உண்டானாற்போல் இவருடைய யதிராஜ பக்தியையிட்டே "யதீந்த்ரப்ரவணர்" என்னும்படி, "நையும் மனம் உன் குணங்களையுன்னி"[6] என்று அவருடைய குணங்களிலே ஊன்றிய மனத்தராய் அத்தாலே வகுத்த புகல் என்னும்படியாய் [7] சரமபர்வமான எம்பெருமானார் திருவடிகளை [8] "மெய் கொள்ளக் காணவேணும்" என்று அடங்காத காதலையுடையவராய், மெய்வெளுத்து, இப்படிக் கரைபுரண்ட ஆற்றாமையையுடையராய் இருக்கிற தாம், எம்பெருமானார் அருளாலே தமக்குப் பிறந்த [9] பரமபக்தி தசையைப் பேசி அநுபவித்தருளுகிற வழியால் சரமபர்வ நிஷ்டராய் எம்பெருமானார் திருவடிகளில் அதிகமான பக்தியுடையராயிருக்கும் அதிகாரிகள் எல்லாருக்கும் அநுஸந்தித்து நல்வாழ்வு பெறும்படி இந்தப்ரபந்தம் வழியாக அவற்றை வெளியிட்டருளுகிறார்.

---

1. திருவாய்மொழி 1-1-1
2. திருவாய்மொழி 10-10-11
3. ஸ்தோத்ர ரத்னம் 54
4. சரணாகதி கத்யம்
5. திருவாய்மொழி 8-3-10
6. இராமாநுச நூற்றந்தாதி 120
7. இதற்கு மேலான உபாயம் இல்லை என்னும்படி முடிந்த நிலமான
8. திருவாய்மொழி 3-8-4
9. பக்தியின் முதிர்ந்த எல்லை நிலை. திருவாய்மொழியில் கடைசி திருவாய் மொழி காண்க.

பக்தி எல்லாம் தங்கியதென்ன [1] என்னும்படியிறே இவருக்கு எதிராசன் சேவடிமேல் தான் பரமபக்தி தலையெடுத்தது. பரமா பதமாபந்ந: [2], முடிந்தவவா [3], என்னும் பரமார்த்தியை அடைந்து, அந்த தசையைப் பேசின பரசுரமாகையாலே ஆர்த்தி என்று இதற்குப் பெயராயிற்று. ஆர்த்திதான், ஸம்ஸாரத்தில் அடிக்கொதிப்பாலும் வகுத்த விஷயத்தை அநுபவிக்கப் பெறுமையாலும் பிறக்குமதாயிறே இருப்பது. அவையிரண்டையும் முந்நீர் ஞாலத்திலும் [4], அறுக்கும் வினையிலும் [5] ஆழ்வார் அருளிச் செய்தார். அத்தைப் பற்றவே "வம்பவிழும் தாரான்", "தேன் பயிலும் தாரான்" என்கிற தனியன்களும் உண்டாயின. அப்படியே இவருக்கும் இரண்டுபடிகளும் நடவா நின்றதேயாகிலும், அதில் அநுபவம் கிட்டாமையினாலுண்டான ஆர்த்தியிறே பெருகிக்கொண்டு இந்தப்ரபந்தத்தில் நடந்து செல்லுகிறது. ப்ராப்தி தசையில் ஆர்த்தியை முன்னிடும் என்னக் கடவதிறே.

இவர் தாம், எம்பெருமானாருடைய ஸமகாலத்திற் போலே ஆழ்வான் முதலான அனைத்து முதலிகளோடும் கூடி தழுவி முழுசிப் பரிமாறி ராமாநுஜன் திருவடித்தாமரைகளின் கைங்கர்யத்திலே அந்வயித்து வாழ வேணுமென்று மநோரதித்தவர்க்கு, அது மானஸாநுபவமாய். கடந்தகாலமானகயாலே நேரே அடைகைக்கு முடியாததொன்றாகை யாலும், இனி அவர் (எம்பெருமானார்) தேச விசேஷத்திலே (பரமபதத்தில்) நித்ய கைங்கர்ய நிரதராய் இருக்கிறபடியை அநுஸந்தித்து, அவர் விஷயத்திலே தாமுமப்படி வழுவிலா அடிமை செய்து வாழவேணுமென்று, அவர் திருவடிகளிலே ப்ரார்த்தித் தருளுகிறார்.

ஆகையால்தான் "வடுகநம்பி தன்னிலையை எந்தனக்கு நீ தந்து, எதிராசா! எந்நாளும் உந்தனக்கே ஆட்கொள் உகந்து" [6] என்று அருளிச்செய்தது. "அஹம்ஸர்வம் கரிஷ்யாமி" [7] என்ற இளையபெருமாளது நிலை எம்பெருமானாரது. "சத்ருக்நோ நித்ய சத்ருக்ந:" [8] என்று பேசும்படியான நிலை இவரது.

இனி "ஆமுதல்வன்" [9] என்னும்படி அவதாரவிசேஷமாயிருந்துள்ள வ்யக்தி விசேஷங்கள், முகில்வண்ணனடியை அடைந்துய்ந்த [10] ஆழ்வாரும், மாறனடிபணிந்துய்ந்த [11] எம்பெருமானாரும், அவர் திருவடிகளிலே [12] அநந்யசரணரான ஜீயருமாயிறேயுள்ளது.

இப்படி ஆழ்வாரோடும் எதிராசரோடும் ஒரு கோவையான வைபவத்தையுடைய இவர், ஆழ்வாருடையவும், உடையவருடையவும் வைபவங்களைத் திருவாய்மொழி நூற்றந் தாதியாலும் உபதேசரத்தினமாலையாலும் யதிராஜவிம்சதியாலும் அருளிச்செய்து, அங்கும், தம் அபிநிவேசமெல்லாம்தோற்ற, "பராங்குச பாதபக்தம்" [13] என்றும், "சடகோபர் தேமலர்த் தாட்கேய்ந்தினிய பாதுகமாம் எந்தை இராமாநுசன்" [14] என்றும், முடிந்த நிலமாகச் சொல்லப் படுகிற சரமபர்வமே அடையத்தகுந்ததில் எல்லை நிலமானது என்று இச்சரமமார்க்கத்தை சரமகாலத்தே சரமப்ரபந்தரூபேண வெளியிட்டருளுகிறார். யதிராஜவிம்சதியில், "ராமா

---

1. இரா. நூற்-108, 2. விஷ்ணு தர்மம், 69-47, 3. திருவாய்மொழி 10-10-11, 4. திருவாய்மொழி 7-2, 5. திருவாய்மொழி 9-8. 6. ஆர்த்தி ப்ரபந்தம், 7. ஸ்ரீராமாயணம் - அயோ, 31, 25. 8. ஸ்ரீராமாயணம் அயோ, 1 - 1, 9. திருவாய்மொழி 7 - 9 - 3, 10. திருவாய்மொழி 7 - 2 - 11, 11. இரா. நூற்றந்தாதி - 1, 12. வேறுபுகலை அடையாத 13. யதிராஜவிம்சதி, 14. ஆர்த்தி ப்ரபந்தம் 10.

நுஜம் யதிபதிம் ப்ரணமாமிமூர்த்நா'' என்று தொடங்கி ''தஸ்மாதநந்ய சரணோபவதீதி மத்வா'' என்று தலைக்கட்டுகையாலே, அது [1]ப்ராபகபரமாய் இருக்கும், இங்கு ''வாழி எதிராசன்'' என்று தொடங்கி, ''இந்த வரங்கத்தினிதிரு நீ'' என்று தலைக்கட்டுகையாலே, இது [2]ப்ராப்யபரமாய் இருக்கும். த்வயத்தில் உத்தரவாக்யம் [3]ப்ராப்யத்வரா நுஸந்தான ரூபமாய் இருக்கும். அதிலும் தாத்பர்யமாயிருப்பது இது.

தம் ஆர்த்தியை எம்பெருமானாரிடத்தில் விண்ணப்பிக்கப் புகுந்த இவர், தண்ட காரண்யவாஸிகளான ரிஷிகள் ''ஏஹிபச்ய சரீராணி''[4] என்று ராக்ஷஸர்களாலும் ராவணனாலும் நலிவுபட்ட தேஹங்களைப் பெருமாளுக்குக் காட்டி ரக்ஷணம் பெறுவதற்கு முன்னம், அத்தலையில் ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதிகளில் ஈடுபட்டு ''மங்களாநி ப்ரயுஞ்ஜாநா:''[5] என்று மங்களாசாஸனம் பண்ணினாப்போலே, இவரும், தம்மை விஷயீகரிக்க விண்ணின்தலை நின்றும் எழுந்தளின எம்பெருமானாருடைய அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்தில் ப்ரகாசிக்கிற ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதிகளைக்கண்டு, கலங்கி, ப்ரக்ருதி தின்ற ஆத்மாவைக்காட்டி தாம்விரும்பியதை எல்லாம் அறிவிப்பதற்கு முன்னம் மங்களா சாஸனம் பண்ணுகிறார். இந்த மங்களாசாஸனமும் ''ஜயத்யதிபலோராம: லக்ஷ்மணச்ச மஹாபல:, ராஜாஜயதி ஸுக்ரீவோராகவேணாபிபாலித:[6]'' என்றதில்போல் ஸம்பந்த ஸம்பந்திகளளவும் செல்கிறது.

---

# ஆர்த்திப்ரபந்தம்

## *தனியன்கள்*

தேன்பயிலுந் தாரான்[7] எதிராசன்சேவடிமேல்
தான்பரமபத்தி தலையெடுத்து—மாந்தர்க்கு
உணவாகஆர்த்தியுடன் ஒண்தமிழ்கள்செய்தான்
மணவாளமாமுனிவன் வந்து.

வம்பவிழ்தார்[8]வண்மை மணவாளமாமுனிகள்
அம்புவியில்கால்பொருந்தா ஆர்த்தியினால்—உம்பர்தொழும்
விண்ணுலகிற்செல்ல விரைந் தெதிராசன்பதங்கள்
நண்ணி யுரைத்தார் நமக்கு.

---

1. உபாயம் (அடையும் வழி பற்றி), 2. அடையத்தகுந்த விஷயம் பற்றி, 3. அடைய வேண்டும் லக்ஷ்யத்தை அடைவதில் ஆற்றாமை விஞ்சியிருப்பதைப் பேசுதல், 4. ஸ்ரீராமாயணம் ஆர, 6-16, 5. ஸ்ரீராமாயணம் ஆர, 1-12, 6. ஸ்ரீராமாயணம் ஸுந், 42-33 7. தேன் பயிலும் புஷ்பங்களால் ஆன மாலை, 8. அப்போதலர்ந்த செவ்வியுடைய பூக்களாலானமாலை தரித்தவன்.

வாழி யெதிராசன் வாழி யெதிராசன்
வாழியெதி ராசனென[1]வாழ்த்துவார்—வாழியென
வாழ்த்துவார்வாழியென வாழ்த்துவார் தாளிணையில்[2]
தாழ்த்துவார் விண்ணோர் தலை[3]. 1

இராமாநு சாய நமவென்று சிந்தித்து
இராமாநுசரோடு[4]இறைப்போழ்து — இராமாநு
சிந்திப்பார்[5]தாளிணையில் சேர்ந்திருப்பார்தாளிணையை
வந்திப்பார் விண்ணோர்கள் வாழ்வு[6] 2

தந்தை நற் றாய்தாரம் தநயர் பெருஞ்செல்வம்
என்தனக்கு நீயே எதிராசா !—இந்த நிலைக்கு
ஏலாத இவ்வுடலை இன்றே அறுத்தருள
பாரததென்னோ ? பகர். 3

இந்தவுடற் சிறைவிட்டு எப்பொழுது யானேகி
அந்தமில் பேரின்பத்து ளாகுவேன் ?—அந்தோ !
இரங்காய் எதிராசா ! என்னை இனியுய்க்கை
பாரங்காண்[7]? உனக்கு உணர்ந்துபார். 4

தன்புதல்வன் கூடாமல் தான்புசிக்கும் போகத்தால்
இன்புறுமோ தந்தை எதிராசா !—உன்புதல்வன்
அன்றோயான்? உரையாய் ஆதலால் உன்போகம்
நன்றோ? எனைஒழிந்த நாள் ! 5

வேம்புமுற்றக் கைப்பு மிகுவதுபோல் வெவ்வினையேன்[8]
தீம்புமுற்றும் தேகமுற்றிச் செல்லுங்கால்—ஆம்பரிசால்
ஏற்கவே சிந்தித்து[9]எதிராசா ! இவ்வுடலைத்
தீர்க்கவே யான வழி செய். 6

அன்னை குடி நீ ரருந்தி[10] முலை யுண்குழவி
தன்னுடைய நோயைத்தவிராளோ—என்னே
எனக்கா எதிராசா ! எல்லாம் நீசெய்தால்
உனக்கது தாழ்வோ ? உரை. 7

---

1. வாழி எதிராசன் என மும்முறை பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு என்னு மாப்போலே. 2. இப்படி வாழ்த்துவார்களை வாழி என்று வாழ்த்துவார்களுடைய திருவடிகளில், 3. இப்படி வணங்குமவர் விண்ணோர்க்குத் தலைவர்களாவார், 4. ராமாநுஜாயநம: என்று சிந்தித்து இராத மனிதர்கள், 5. மேல்சொன்ன பாபிகளுடன் இறைப்போதும் இருத்தல் கூடாது என்றிருப்பவர், 6. நித்யஸூரிகளுக்கு நித்ய ஸம்பத்து 7. அவச்யம் செய்ய வேண்டுவது, 8. கொடிய வினையுடையேன், 9. ஸ்வரூபம் நிறம் பெறும்படிக்கு ஏற்ப முற்கோலிச் சிந்தனை செய்து. 10. குடிநீர் முதலான ஔஷதம்.

தன்குழவி வான் கிணற்றைச் சார்ந்திருக்கக் கண்டிருந்தாள்
என்பதன்றோ அன்னைபழி யேற்கின்றாள்—நன்குணரில்
என்னாலே யென்னாச மேலும்[1] எதிராசா !
உன்னாலே யாமுறவை யோர். 8

கூபத்தில் வீழும் குழவி யுடன்குதித்துஅவ்
வாபத்தை நீக்கும்அந்த வன்னைபோல்—பாபத்தால்
யான்பிறப்பேனேலும் இனியெந்தை எதிராசன்
தான்பிறக்குமென்னை யுய்ப்பதா[2]. 9

பூமகள்கோன்[3]தென்னரங்கர் பூங்கு ழற்குப்பாதுகமாய்
தாம் மகிழும் செல்வச் சடகோபர்—தேமலர்த்தாட்கு
ஏய்ந்தினிய பாதுகமாம் எந்தை இராமாநுசனை
வாய்ந்தெனது நெஞ்சமே வாழ். 10

உன்னை யொழிய ஒருதெய்வம் மற்றறியா
மன்னு புகழ்சேர் வடுகநம்பி—தன்னிலையை
என்தனக்கு நீதந்து எதிராசா ! எந்நாளும்
உன்தனக்கே யாட்கொள் உகந்து. 11

தேசந் திகழும் திருவாய் மொழிப்பிள்ளை
மாசில் திருமலையாழ்வார் என்னை—நேசத்தால்
எப்படியே எண்ணி நின்பால் சேர்த்தார் எதிராசா !
அப்படியே நீ செய் தருள். 12

எதிராசன் வாழி எதிராசன் வாழி
எதிராசன் வாழியென் றென்றேத்தி—சதிராக
வாழ்வார்கள் தாளிணைக்கீழ் வாழ்வார்கள் பெற்றிடுவர்
ஆழ்வார்கள் தங்க ளருள். 13

அதிகாரமுண்டேல்[4] அரங்கர் இரங்காரோ ?
அதிகார மில்லாதார்க் கன்றோ—எதிராசா !
நீயிரங்க வேண்டுவது நீயும் அதிகாரிகளுக்
கேயிரங்கில் என்செய்வோம் யாம் ? 14

எம்பெரு மானார் திருவடிக ளேசரணம்
என்பதுவே நாவுரைக்கும் இத்தாலென் ?—அன்பவர்பால்
இப்போதளவும் யானொன்றும் காண்கின்றிலேன்
எப்போதுண்டாவதினி ? 15

---

1. என் (பாபத்தாலேயே) என் நாசம் ஸம்பவிக்கிறது, என்னும் ; என்னுகு மேலும் என்றும் பாடம், 2. உய்விப்பதற்காக, 3. பூவிலே வாஸனை ஒரு வடிவு கொண்டாற்போலிருக்கும் பெரிய பிராட்டியாருடைய வலலபன், 4. ஞானம் அநுட்டானம் இவை பூர்த்தியாய் இருக்கப் பெருவதால் வரும் அதிகாரம்.

ஆகாததீதென்றறிந்தும் பிறர்க்குரைத்தும்
ஆகாததே செய்வதனுல்—மோகாந்த
னென்றுநினைத்து என்னை இகழேல் எதிராசா!
என்று உன்னடி சேர்வன் யான்? 16

பொல்லாங்கனைத்தும் பொதிந்துகொண்டு நன்மையிலொன்
றில்லா எனக்கும் எதிராசா!—நல்லார்கள்
நண்ணும் திருநாட்டை நான்தருவனென்று நீ
தண்ணென்றிருக்கிற[1] தென்தான்? 17

என்றுவிடிவது எனக்கு எந்தாய் எதிராசா?
ஒன்றுமறிகின்றிலேன் உரையாய்—குன்றுமல்
இப்படியே இந்தவுயிர்க்கென்றும் இருளேவிளைக்கும்
இப்பவமாம்[2] நீண்ட இரவு. 18

அல்லும்பகலும் யானுக்கை வழியுழன்று[3]
செல்லுமது உன் தேசுக்குத்[4] தீங்கன்றோ?—நல்லார்கள்
தந்தநயர் நீசர்க்காட்செய்யச் சகிப்பரோ?
எந்தையெதிராசா! இசை[5]. 19

போம் வழியைத்தருமென்னு மின்பமெல்லாம்
புசித்துவழிபோய்[6] அமுதவிரசையாற்றில்
நாம் மூழ்கி மலமற்று[7] தெளிவிசும்பை
நண்ணிநலந்திகழ் மேனிதன்னைப்பெற்று
தாம் அமரர் வந்தெதிர்கொண்டலங்கரித்துச்
சற்கரிப்ப[8] மாமணி மண்டபத்துச்சென்று
மாமலராள் கோன்[9] மடியில் வைத்துகக்கும்
வாழ்வு நமக்கெதிராசன் அருளும் வாழ்வே. 20

திருமலையாழ்வார் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால்
தருமதி[10] கொண்டுஅவர்தம்மை உத்தாரகராக[11] எண்ணி
இருமனமே அவர்க்கா எதிராசர் எமைக்கடுகப்
பரமபதம் தன்னிலேற்றுவர் என்னபயம் நமக்கே? 21

---

1. விளம்பம் செய்வது; அநந்யகதியாய் அகிஞ்சனனுயிருக்கும் அடியேனுக்கு சீக்கிரமாக பரமபதம் அருளவேண்டும் என்று இங்கு ப்ரார்த்தனை. 2. இந்த ஸம்ஸாரம் நீண்ட இரவாயிற்று—எனக்கு எப்போது ராமாநுஜதிவாகர தர்சனம் பெற்று ஸுப்ரபாதமாக விடியும்? 3. சரீரத்துக்கு அடிமையாய் உழன்று, 4. உன்வைபவத்துக்கு 5. சொல்வாயாக, 6. போகும்வழி [திருவாய்மொழி 3-9-3] என்னும் அர்ச்சிராதிகதியின் இன்பத்தை அநுபவித்து 7. ப்ராக்ருதமான அழுக்கு விலகப்பெற்று, 8. ஸத்காரம் பெற்று, 9. ஸ்ரீய:பதியான ஸ்ரீவைகுண்டநாதன் 10. உபதேசிக்கும் ஞானம், 11. ஸம்ஸாரத்தினின்றும் கரையேற்றுபவராக.

தீதற்ற ஞானத்திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால்
ஏதத்தை[1] மாற்றும் எதிராசர்தம் அபிமானமென்னும்
போதத்தை[2] ஏறிப்பவமாம்[3] புணரி[4] தனைக்கடந்து
கோதற்ற மாதவன் பாதக்கரை [5]யைக் குறுகுவனே [6] 22

அடியார்கள் குழாங்கள் அழகோலக்க மிருக்க
ஆநந்த மயமான மாமணி மண்டபத்து
படியாதுமில்[7] படுக்கையா யிருக்கும் அநந்தன்
பணமணிகள் தம்மின்ஒளி மண்டலத் தினிடையில்
வடிவாரும் மாமலராள் வலவருகும் மற்றை
மண்மகளும் ஆய்மகளும் இடவருகும் இருக்க
நடுவாக வீற்றிருக்கும் நாரணனைக் கடுக
நான் அநுபவிக்கும்வகை நல்குஎன் எதிராசா ! 23

இந்தவுடல் விட்டு இரவிமண்டலத்தூடேகி[8]
இவ்வண்டம் கழித்து[9] இடையிலாவரணமேழ்போய்
அந்தமில்பாழ்[10] கடந்து அழகார் விரசைதனில் குளித்து அங்கு
அமானவனலோ ஒளிகொண்ட சோதியும்[11]பெற்று அமரா
வந்தெதிர்கொண்டலங்கரித்து வாழ்த்தி வழிநடத்த
வைகுந்தம்புக்கு மாமணிமண்டபத்துச்சென்று
நம் திருமாலடியார்கள் குழாங்களுடன் கூடும்
நாளெனக்குக் குறுகும்வகை நல்கு என் எதிராசா ! 24

என்று நிரேதுகமாக என்னை அபிமானித்து
யானுமறிந்து உனக்கே யாயிருக்கும் வகை செய்தாய்
அன்றுமுதல் இன்றளவும் அநவரதம் பிழையே
அடுத்தடுத்துச் செய்வது அநுதவிப்பது இனிச்செய்யேன்
என்றுஉன்னைவந்திரப்பதாம் என்கொடுமை கண்டும்[12]
இகழாதே இரவுபகல் அடிமைகொண்டுபோந்தாய்
இன்று திருநாடும் எனக்கருள எண்ணுகின்றாய்
இனிக்கடுகச் செய்தருளவேண்டும் எதிராசா ! 25

தென்னரங்கர்தமக்காமோ? தேவியர்கட்காமோ ?
சேனையர்கோன் முதலான சூரியர்கட்காமோ ?
மன்னியசீர்மாறன் அருள்மாரி தனக்காமோ ?
மற்றுமுள்ள தேசிகர்கள் தங்களுக்குமாமோ ?

---

1. காமம் முதலான தோஷம், 2. விஷ்ணுபோதம் என்று சொல்லப்படும் கப்பல், 3. ஸம்ஸாரம், 4. கடல், 5. திருவடிகளாகிற கடற்கரை, 6. கிட்டுவேன், 7. ஒப்பில்லாத, 8. தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டுப்புக்கு—சிறியதிருமடல், 9. கடந்து, 10. முடிவில் பெரும்பாழ்—திருவாய்மொழி 10-10-10; மூலப்ரக்ருதி, 11. திருவாய்மொழி 2-3-10 ப்ரக்ருதிஸம்பந்தமில்லாத ஒளிமயமான தேஹம் 12. என்று நிர்ஹேதுகமாய்...செய்தாயோ அன்று முதல் பிழையே செய்வதும், அநுதபித்து இனிச்செய்யேன் என்று உன்னை வேண்டுவது என்று மறுபடிமறுபடி செய்வதுமாகிற என் கொடுமையான சரித்திரம் கண்டும்.

என்னுடைய பிழைபொறுக்க யாவருக்குமுடியும்?
எதிராசா! உனக்கன்றி யானொருவர்க்காகேன்[1]
உன்னருளால் எனக்கு ருசிதன்னையும் உண்டாக்கி
ஒளிவிசும்பில் அடியேனை யொருப்படுத்து விரைந்தே. 26

இவ்வுலகில் இனியொன்றும் எண்ணாதேநெஞ்சே!
இரவுபகல் எதிராசர் எமக்கினிமேலருளும்
அவ்வுலகை அலர்மகள்கோன் அங்கிருக்கு மிருப்பை
அடியார்கள் குழாங்கள்தமை அவர்களநுபவத்தை
இவ்வுயிரும் அதுக்கிட்டுப்பிறந்து இழந்துகிடந்த
தென்னுமத்தை என்றும் அதுக்கிடைச்சுவராய்க் கிடக்கும்
வெவ்வினையால் வந்தவுடல்விடும் பொழுதை விட்டால்
விளையுமின்பம்தன்னை முற்றும் விடாமல் இருந்தெண்ணே. 27

பண்டுபலவாரியரும் பாருலகோருய்யப்
பரிவுடனே செய்தருளும் பல்கலைகள் தம்மை
கண்டதெல்லாம்[2] எழுதியவை கற்றிருந்தும் பிறர்க்குக்
காதலுடன் கற்பித்தும் காலத்தைக் கழித்தேன்[3]
புண்டரிகை கேள்வனுறை பொன்னுலகுதன்னில்
போகநினைவொன்றுமின்றிப் பொருந்தி இங்கேயிருந்தேன்
எண்திசையுமேத்தும் எதிராசனருளாலே
எழில்விசும்பையன்றி இப்போதென் மனமெண்ணாதே. 28

சாருவாகமதம் நீறுசெய்து[4] சமணச்செடிக்கனல் கொளுத்தியே[5]
சாக்கியக்கடலை வற்றுவித்து[6] மிகுசாங்கியக்கிரி முறித்திட[5]
மாறுசெய்திடு கணாதவாதியர்கள் வாயதகாத்து[8] அறமிகுத்துமேல்
வந்தபாசுபதர்சிந்தி ஓடும்வகை[9] வாதுசெய்த எதிராசனுர்
கூறும் மாகுருமதத்தொடு[10] ஓங்கிய குமாரிலன் மதம்[11]வற்றின்மேல்
கொடியதர்க்கசரம் விட்டபின் குறுகி மாயவாதியரை வென்றிட[12]
மீறிவாதில்வரு பாற்கரன் மதவிலக்கடிக்கொடி எறிந்துபோய்[13]
மிக்கயாதவமதத்தை மாய்த்த[14]பெருவீரர் நாளும் மிகவாழியே. 29

---

1. நிகரின்றிநின்ற என் நீசதைக்கு நின்னருளின் கணன்றிப்புகல்ஒன்றுமில்லை [ரா-நூற்48] என்னும்படி தயைகவிந்துவான தேவரீராலன்றி வேறு யாராலும் என் பிழைகளைப் பொருக்கப் போகாது; தேவரீர்க்கொழிய அபராதமே வடிவெடுத்த நான் வேறு கோஷ்டிக்கு ஆளாகேன். 2. பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த பலக்ரந்தங்களை ஆதாரத்துடன் தேடிக் கண்டு, அவைகளெல்லாவற்றையும், 3. எழுதியும், ஆசார்யனடிபணிந்து கற்றும், சிஷ்யர்களுக்கு உபதேசித்தும் போது போக்கினேன்; தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும்...போக்கினேன் போது—நான்முகன் திரு-63. 4. சார்வாக மதத்தை சாம்பலாகும்படி பண்ணி, 5. ஜைன மதத்தை நெருப்பிலிட்டுக் கொளுத்தி. 6. புத்தமதமான கடலை உலர்த்தி, 7. ஸாங்க்ய மதமான பர்வதத்தைப் பொடித்து, 8. கணாத வாதியர்களை வாய் மூடுவித்து, 9. பாசுபதர்கள் சிதறி ஓடும்படி, 10. பிதற்றும் பெரிய ப்ரபாகரமதத்துடன், 11. குமரிலன் மதம்—பாட்டமதம், 12. மாயவாதிகளை சென்று ஜெயித்து, 13. பாஸ்கரமதத்தின் வேர்க்கொடிகளை வெட்டி எறிந்து, 14. யாதவ ப்ரகாச மதத்தை மாளப்பண்ணின,

சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி
திருவரையிற்சாத்திய செந்துவராடைவாழி
ஏராரும் செய்யவடி வெப்பொழுதும் வாழி
இலங்கிய முந்நூல் வாழி இணைத்தோள்கள் வாழி
சோராததுய்ய செய்யமுகச் சோதிவாழி
தூமுறுவல் வாழி துணைமலர்க்கண்கள் வாழி
ஈராறு திருநாமமணிந்த எழில்வாழி
இனிதிருப்போடெ[1]ழில் ஞானமுத்திரை வாழியே. 30

அறுசமயச் செடி[2]யதனை அடியறுத்தான் வாழியே
அடர்ந்துவரும் குதிர்ட்டிகளை[3] அறத்துறந்தான் வாழியே
செறுகலியைச் சிறிதுமறத்தீர்த்து விட்டான் வாழியே
தென்னரங்கர் செல்வம்முற்றும் திருத்திவைத்தான் வாழியே
மறையதனில் பொருளனைத்தும் வாய்மொழிந்நான் வாழியே
மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த்தோன் வாழியே
அறம்மிகு நற்பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே
அழகாரும் எதிராசர் அடியிணைகள் வாழியே. 31

சங்கர பாற்கார யாதவ பாட்ட ப்ரபாகரர் தங்கள்மதம்
சாய்வுற வாதியர்மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திடுநாள்
வெங்கலியிங்கினி வீறுநமக்கிலையென்று மிகத்தளர்நாள்
மேதினிநஞ்சுமையாறு மெனத்துயர்விட்டு விளங்கியநாள்
மங்கையராளிபராங்குச முன்னவர் வாழ்வுமுளைத்திடுநாள்
மன்னியதென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடுநாள்
செங்கயல் வாவிகள்சூழவயல்நாளும் சிறந்தபெரும்பூதூர்ச்
சீமான் இளையாழ்வார் வந்தருளியநாள் திருவாதிரைநாளே 32

இன்னம் எத்தனைகாலம் இந்தவுடம்புடன் யானிருப்பேன் ?
இன்னபொழுது உடம்புவிடும் இன்னபடியதுதான்
இன்னவிடத் தேயதுவும் என்னுமிவை எல்லாம்
எதிராசா ! நீயறிதி யானிவையொன்றறியேன்
என்னை இனி இவ்வுடம்பை விடுவித்து உன்னருளால்
ஏராரும் வைகுந்தத்தேற்ற நினைவுண்டேல்
பின்னைவிரையாமல் மறந்திருக்கிறதென் ? பேசாய்
பேதைமைதீர்த்து என்னை அடிமைகொண்ட பெருமானே ! 33

1. இனிதிருப்போடு—பத்மா ஸனஸ்தராய் எழுந்தருளி இருக்கும் இருப்புடன்கூட, 2. வைதிக மதத்துக்குப் புறம்பான சாக்யோலூக் யாக்ஷபாதக்ஷபணக் கபில பதஞ்சலிமதா: எனப்படும் ஷண்மதங்கள். "அறுசமயம் போனது"—ரா. நூற்-49; பார்த்தான் அறுசமயங்கள் பதைப்ப ரா—நூற்-52, 3. வேதத்துக்கு தவறான பொருள் சொல்லிக் குறும்பு செய்பவர்—நான்மறையும் நிற்கக் குறும்பு செய் நீசரும் மாண்டனர்—ரா. நூற்-99.

முன்னைவினை பின்னைவினை பிராரத்தமென்று
மூன்றுவகையான வினைதொகையனைத்தும் யானே
என்னையடைந்தோர் தமக்குக் கழிப்பனெனுமரங்கர்[1]
எதிராசா ! நீயிட்ட வழக்கன்றே ? சொல்லாய்
உன்னையல்ல தறியாத யான் இந்தவுடம்போடு
உழன்று வினைப்பயன் புசிக்கவேண்டுவதொன்றுண்டோ ?
என்னுடைய இருவினையை இறைப்பொழுதில் மாற்றி
ஏராரும்[2]வைகுந்தத் தேற்றிவிடாய் நீயே. 34

அருளாலே அடியேனை அபிமானித்தருளி
அனவரதம் அடிமைகொள்ள நினைத்து நீயிருக்க
மருளாலே[3]புலன் போக[4]வாஞ்சை செயும்[5]என்தன்
வல்வினையை[6]மாற்றி உன்பால் மனம் வைக்கப்பண்ணாய்
தெருளாரும் கூரத்தாழ்வானும் அவர்செல்வத்
திருமகனூர் தாமும் அருளிச்செய்த தீமைத்
திரளானதித்தனையும்[7] சேரவுள்ளவென்னைத்
திருத்தியுய்யக் கொள்ளும்வகை தேரும் எதிராசா.[8] 35

வாதனை[9]யி லூற்றமோ ? மாளாத வல்வினையோ ?
ஏதென்ற றியேன் எதிராசா !—தீதாகும்
ஐம்புலனி லாசை அடியேன் மனந்தன்னை
வன்புடனே[10] தானடரும் வந்து[11]. 36

இன்றளவு மில்லா அதிகாரம் மேலும்எனக்கு
என்று ளதாம்[12]சொல்லாய் எதிராசா ! குன்றா
வினைத்தொடரை[13] வெட்டிட்டு மேலைவை குந்தத்து
எனைக்கடுக ஏற்றாத தென் ? 37

அஞ்சில் அறியாதார் ஐம்பதிலும் தாமறியார்
என்சொல் எனக்கோ ? எதிராசா !—நெஞ்சம்
உனதா ளொழிந்தவற்றையே[14]உகக்க இன்றும்
அநுதாப மற்றிருக்கை யால். 38

---

1. ஸர்வ தர்மான்......மோக்ஷயிஷ்யாமி, மாசுச: என்று கீதையில் சரமச்லோகமாக மெய்ம்மைப் பெருவார்த்தை பணித்த செம்மையுடைய திருவரங்கர், 2. அழகு நிறைந்ததான, 3. அஜ்ஞானத்தாலே, 4. இந்திரியங்களால்வரும் ஸுகங்கள், 5. ஆசைப்படும், 6. கொடிய பாபங்கள், 7. கூரத்தாழ்வானும் பட்டரும் நைச்யத்தால் தம்மிடமுள்ளதாகச் சொல்லிக்கொண்ட தீமைகள், 8. செயல் நன்றாகத் திருத்தி (கண்ணி-10) என்றபடி திருத்தி உய்யக் கொண்டருளும் வழியைச் சிந்தித்தருளுமவரான எதிராசரே ! 9. வாஸனை, 10. வலிவுடன், 11. தானே வந்து விஷயங்களில் மூட்டுவதற்கு மேலிடும், 12. இப்போதில்லாதது எப்போது உண்டாகப் போகிறது. அதிகாரம்—14ம் பாசுரம் காண்க, 13. குறையாத பாபப்பிணைப்பை, 14. உன் தாள் தவிர மற்றவைகளை—ப்ராப்த விஷயத்திலல்லாமல் மற்ற விஷயங்களிலே.

வேம்பு கறியாக விரும்பினர் கைத்ததென்று
தாம்புகடாதே[1]புசிக்கும் தன்மைபோல்—தீம்பனி வன்
என்று நினைத்து என்னைஇகழார் எதிராசர்
அன்றறிந்தங்கீ கரிக்கையால்[2] 39

அவத்தே[3]பொழுதை அடியேன் கழித்து இப்
பவத்தே[4]இருக்குமது பண்போ ?—திவத்தே[5]யான்
சேரும் வகைஅருளாய் சீரெதிராசா !
போருமினி இவ்வுடம்மைப் போக்கு. 40

எனைப்போல் பிழை செய்வார் இவ்வுலகி லுண்டோ ?
உனைப்போல் பொறுக்கவல்லார் உண்டோ ?—அனைத்துலகும்
வாழப்பிறந்த[6]எதிராச மாமுனிவா !
ஏழைக் கிரங்கா யினி. 41

ஐம்புலன்கள் மேலிட்டரும் போழுது[7]அடியேன்
உன்பதங்கள்தம்மை நினைந்தோலபிட்டால்[8]பின்பவைதாம்
என்னை யடராமல் இரங்காய் எதிராசா !
உன்னையல்லா தார் எனக் குண்டோ ?[9] 42

இந்த வுலகிற் பொருந்தாமை ஏதுமில்லை
அந்த வுலகிற்போக ஆசையில்லை[10]இந்தநமக்கு
எப்படியே தான் தருவர் ! எந்தை எதிராசர்
ஒப்பில் திருநாடு கந்து ? 43

மாகாந்த[11]நாரணனர் வைகும்[12]வகையறிந்தோர்க்கு
ஏகாந்த மில்லை இருளில்லை[13]—மோகாந்தர்[14]
இவ்விடமேகாந்தமிருளென்று பயமற்றிருந்து
செய்வார்கள் தாம் பாவத் திறம்[15] 44

நாராயணன் திருமால் நாரம்நாம் என்னுமுறவு[16]
ஆராயில் நெஞ்சே ! அநாதி யன்றோ ?—சீராரும்
ஆசா ரியனாலே யன்றோ நா முய்ந்ததென்று
கூசாமல் எப்பொழுதும் கூறு[17]. 45

---

1. வெறுத்து ஒதுக்காமல், 2. அன்று அங்கீகரித்து விட்டமையால் எதிராசர் இன்று இகழ மாட்டார், 3. வீணாக, 4. ஸம்ஸாரத்தில், 5. பரம பதத்திலே, 6. வாழ்விக்கப் பிறந்த, 7. 36ம் பாசுரம் காண்க, 8. எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்று நெஞ்சில் எண்ணி வாயால் கூப்பிட்டால், 9. உன்னை ஒழிய வேறு ரக்ஷகரில்லாமையால் நீ இரங்க வேண்டும், 10. ஸம்ஸாரத்தில் வெறுப்பு—அடிக்கொதிப்பு இல்லை; ப்ராப்யத்தில் ருசி யில்லை; இப்படிப்பட்டவனுக்கு உயர்ந்தபலனை எதிராசர் எப்படி ஸாதிப்பர் ? 11. லக்ஷ்மீ காந்தன், 12. உடன் மிசையுயிரெனக்கரந்தெங்கும் பரந்துளன் (திருவாய்-1—1—7) என்கிறதில் சொன்ன வ்யாப்தி, 13. எங்குமே தனிமை, இருட்டு இவை இல்லை பரஞ்சோதியான பகவான் எங்குமுளனாகையாலே, 14. ஞானமின்மையால் குருடர், 15. பாவத்திரள்கள். 16. நாம் நாரம் (நித்யமாயுள்ள ஆத்மவஸ்துக்கள்); திருமால் இந்த ஜீவாத்மாக்களையுடைய (இவைகளுக்கு) ஸ்வாமியான நாராயணன்; இந்த உறவு அநாதி, 17. எண்ணுவாயாக,

திருவாய் மொழிப்பிள்ளை தீவினையோந் தம்மை
குருவாகி வந்து உய்யக் கொண்டு—பொருவில்
மதி[1]தா னளித்தருளும் வாழ்வன்றோ நெஞ்சே!
எதிராசர்க்கு ஆளானோம் யாம். 46

இராமாநுசாயநமவென்று இரவும் பகலும் சிந்தித்து
இராமாநுசர்கள்[2]இருப்பிடந்தன்னில் இறைப்பொழுதும்
இராமாநுசர்[3]அவர்க்கு எல்லாவடிமையும் செய்ய வெண்ணி
இராமாநுசரை[4] மாநுசரா[5]வென்று கொல்? எண்ணுவதே! 47

எண்ணாது என்னெஞ்சம் இசையாது என்நா இறைஞ்சாது சென்னி
கண்ணுனவை ஒன்றும் காணலுரு கலியார் நலிய
வொண்ணுதவண்ணம் உலகளித்தோன்[6]எதிராசனடி
நண்ணுதவரை அரங்கேசர் செய்த நலம் நமக்கே. 48

நந்தாநரகத்தழுந்தாமை வேண்டில் நானிலத்தீர்!
எந்தாதையான எதிராசனை நண்ணும் என்றும் அவன்
அந்தாதி தன்னையநு ஸந்தியும் அவன் தொண்டருடன்[7]
சிந்தாகுலம் கெட[8]ச் சேர்ந்திரும் முத்திபின்சித்திக்குமே[9]. 49

அவத்தேயருமந்த[10]காலத்தைப்போக்கி அறிவின்மையால் இப்
பவத்தே உழல்கின்ற பாவியர்காள்! பல காலம் நின்று
தவத்தே முயல்பவர் தங்கட்கும் எய்தவொண்ணுத அந்தத்
திவத்தே உம்மை வைக்கும் சிந்தியும் நீர் எதிராசரென்றே.[11] 50

---

1. ஒப்பில்லாத ஞானம்; இது ஆசார்யன் உபதேசிக்கும் திருமந்திரத்தால் வருவது; திருவாய்மொழிப் பிள்ளை அருளால் தாம் எதிராசர்க்கு ஆளானதாக "ஸ்ரீமந்யதீந்த்ர தவதிவ்ய பதாப்ஜஸேவாம் ஸ்ரீசைலநாதகருணா பரிணுமதத்தாம்" என்று எதிராஜவிம்சதி(19)யிலும் அருளிச்செய்துள்ளது காண்க. 2. நையும் மநம் உன் குணங்களையுன்னி; என்நா இருந்து எம்மையன் இராமாநுசன் என்றழைக்கும்" (இரா. நூற்—102) என்றபடி இராத மனிதர்கள், 3. முன்சொன்ன பாசுரப்படி நடப்பவர்கள் இருக்குமிடத்தில் இருக்க ஸஹியாதவர்கள், 4. "இராமாநுசன் திருநாமம் நம்ப வல்லார்திறத்தை மறவாதவர்கள் யவர்—அவர்க்கே எல்லாவிடத்திலும் என்றும் எப்போதிலும் எத்தொழும்பும் சொல்லாமல் மனத்தால் கருமத்தால் செய்வன் சோர்வின்றியே (இரா. நூற்-80) என்ற நிலையில் இருக்க நிச்சயித்து, அப்படி இராதவர்களை, 5. மனிதர் என்று எப்படி எண்ணுவது? இவர்கள் ஞானமில்லாத மிருகங்களுக்கு ஒப்பானவர்கள், 6. கலி நலியாவண்ணம் உலகத்தை வாழ்வித்த எதிராசர் திருவடிகளை ஆச்ரயிக்காதவரை என் நெஞ்சம் எண்ணாது; காணலுரு; இந்த நிலை அரங்கன் நமக்குச் செய்த நன்மை, 7. உன் தொண்டர்கட்கே அன்புற்றிருக்கும் (இரா. நூற்-107) என்கிறபடி அவர்களுடன், 8. மனதில் இழவெல்லாம் போகும்படி, 9. இப்படிப்பட்ட சரித்திரமுடையோர்களுக்கு மோக்ஷம் நிச்சயமாகக் கிட்டும், 10. விலை மதிக்க முடியாத உயர்த்தியையுடைய, 11. நீர் எதிராசரென்றே சிந்தியும்.... திவத்தே உம்மை வைக்கும்—நீர் செய்வது அல்பம்; அதன்பலனே மிகவுயர்ந்தது.

என்றுளன் ஈசன் உயிருமன்றேயுண்டு[1] இக்காலமெல்லாம்
அன்றளவாகப் பழுதே கழிந்தது[2] இரு வினையால்[3]
என்று இழவின்றி[4] இருக்கும் என்னெஞ்சம் இரவுபகல்
நின்று தபிக்கும் எதிராசா! நீயருள்செய்தபின்னே[5] 51

கனக கிரிமேல் கரிய முகில்போல்
வினதை சிறுவன் மேற்கொண்டு—தனுவிடும்போது[6]
ஏரா ரங்கர்[7] எதிராசர்க் காகஎன்பால்
வாரா முன்னிற்பர் மகிழ்ந்து. 52

இதத்தாலே தென்னரங்கர் செய்கின்ற தென்றறிந்தே
இருந்தாலும் தற்கால வேதனையின் கனத்தால்
பதைத்தாவோ என்னு[8]மிந்தப் பாவவுடம்புடனே
பலநோவும் அநுபவித்துஇப் பவத்திருக்கப் போமோ
மதத்தாலே வல்வினையின்வழியுழன்று திரிந்த
வல்வினையேன் தன்னைஉனக் களாக்கிக் கொண்ட
இதத்தாயும் தந்தையுமாம் எதிராசா! என்னை
இனிக்[9]கடுக விப்பவத்தி னின்றும்எடுத் தருளே 53

இன்னமெத்தனைநாள் இவ்வுடம்புடனே
இருந்து நோவுபடக் கடவேனையோ!
என்னை இதினின்றும் விடுவித்து நீர்
என்றுதான் திருநாட்டினுள் ஏற்றுவீர்?
அன்னையுமத்தனும் அல்லாத சுற்றமும்
ஆகி என்னையளித்தருள்[10] நாதனே!
என்னிதத்தை இராப்பகலின்றியே
ஏகமெண்ணும்[11] எதிராச வள்ளலே[12]! 54

தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப் பெற்றோம்
திருவரங்கம் திருப்பதியே இருப்பாகப் பெற்றோம்[13]
மன்னியசீர் மாறன் கலையுணவாகப் பெற்றோம்
மதுர கவிசொற்படியே[14] நிலையாகப் பெற்றோம்

---

1. ஈச்வரன் நித்யமாகவுள்ளவன்; அப்படியே அத்மாவும், 2. அநாதிகாலமாகப் பொழுது வீணாகக் கழிந்தது, 3. இதுஎன்னுடைய புண்ணியம் பாபம் என்னும்படியான இருவித கர்மபலன், 4 இப்படி வீணாகிவிட்டதே என்ற துக்கம் இல்லாமல்—இது முன் சரித்ரம், 5. எதிராசன் அருள் செய்தபின் என்நெஞ்சம் இதுபற்றி தபிக்கும். 6. சரீரத்தை விடும்போது 7. அழகில் நிரம்பிய அரங்கர் 8. பதைத்து, அவோ வென்னும்—துடித்து ஹோ! என்று கதறும் 9. நீ உனக்காளாக்கிக்கொண்டு, நான் ஸம்பந்தஜ்ஞானம் பெற்றபின் 10. அன்னையாயத்தனாய் என்னை யாண்டிடும் தன்மையான் (கண்ணி-4) மன்னை ரக்ஷித்தருளுகிற 11. என் இதத்தையே (நலனையே) இராப்பகலாக எண்ணும் 12. தாம் செய்வதற்குப்பதிலாக எதையும் எதிர்பார்க்காமல் நலனருளும் பெருமனதுள்ளவர். 13. யாவச் சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ என்று அவன் நியமித்தபடி (சரணாகதிகத்யம்) 14. தேவுமற்றறியேன் (கண்ணி-2) என்றநிலை-உன்னையொழிய ஒரு தெய்வமற்றறியா வடுகநம்பி தன்னிலை (ஆர்த்தி-11).

முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம்[1]
முழுதும் நமக்கிவை பொழுதுபோக்காகப் பெற்றோம்
பின்னையொன்றுதனில் நெஞ்சுபோராமல் பெற்றோம்
பிறர் மினுக்கம்பொறாமையில்லாப் பெருமையும்[2]பெற்றோமே 55

உன்தன் அபிமானமே உத்தா ரகமென்று
சிந்தை தெளிந்திருக்கச் செய்தநீ—அந்தோ
எதிராசா ! நோய்களால் என்னை நலக்காமல்
சதிராக நின்திருத்தாள்[3] தா. 56

தேசிகர்கள் போற்றும் திருவாய் மொழிப்பிள்ளை
வாசமலர்த் தாளடைந்த வத்து[4]வென்று—நேசத்தால்
என்பிழைகள் காணு எதிராசரே ! அடியேன்
புன்பகர்வைக்[5] கேளும் பொறுத்து. 57

எந்தை[6]திருவாய் மொழிப்பிள்ளை இன்னருளால்
உன்தன் உறவை உணர்த்தியபின்—இந்தவுயிர்க்
கெல்லா வுறவும் நீயென்றே எதிராசா !
நில்லாத துண்டோஎன் னெஞ்சு. 58

எந்தை திருவரங்கர் ஏரார்கருடன்மேல்
வந்து முகங்காட்டி வழிநடத்த-சிந்தைசெய்திப்
பொல்லாவுடம்புதனைப் போக்குவதென்னுள் கொலோ ?
சொல்லாய் எதிராசா ! சூழ்ந்து.[7] 59

இந்த வரங்கத் தினிதிருநீ[8] என்றரங்கர்
எந்தை எதிராசர்க்கீந்தவரம்—சிந்தை செய்யில்
நம்மதன்றோ ? நெஞ்சமே! நற்றாதை சொம்[9]புதல்வர்
தம்மதன்றோ ? தாயமுறைதான்.[8] 60

ஜீயர் திருவடிகளே சரணம்

ஆகவித்தால் உபயவிபூதி ஐச்வர்யத்தையும் பெரிய பெருமாளாலே பெற்று உடையவராய் அத்தால் ''ஸ்ரீவிஷ்ணு லோக மணிமண்டப மார்க்தாயி''யாய், ப்ரபன்னஜன கூடஸ்தராய் இருக்கிற எம்பெருமானார் திருவடிகளிலே ருசிகார்யமாக யதீந்த்ரப்ரவணரான ஜீயர் பண்ணியருளின ப்ராப்யப்ரார்த்தனை அவர் அபிமானாந்தர்ப்பூதர் எல்லாருக்குமாய், அத்தாலே எம்பெருமானார் ப்ரஸாதத்தைப்பெற்று, நித்யவிபூதியிலே நிரந்தர பகவதநுபவ கைங்கர்ய நிரதராய் வாழப்பெறுவார்கள் என்ற அர்த்தஞ்சொல்லித் தலைக்கட்டிற்றாயிற்று.

(இவை பிள்ளைலோகம் ஜீயருடைய வியாக்யானத்தில் முடிவான பங்க்திகள்)

---

1. உள்ளுதல் - விசாரித்தல்; தேசிகர்பால் கேட்ட செழும் பொருளை சிந்தை தன்னில் மாசறவே ஊன்றமனனம் செய்து–உபதேசரத்-57 ; மேலெழவன்றிக்கே ஆழ்ந்துநோக்குகை. 2. இப்படியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஏற்றம் அறிந்து உகந்திருக்கையும் (முமுக்ஷுப்படி-2) என்னும்படி அரிதாயிருப்பதான பிறர் ஏற்றம் கண்டால் பொறாமையில்லாதிருத்தல் என்பது பெருமையிலும் பெருமை. 3. உன்பதயுகமாம் ஏர்கொண்ட வீடு (ரா. நூற். 83) - பரமப்ராப்யமான உன் திருவடிகளை. 4. வஸ்து-பொருள் 5. புன்மையான பேச்சை 6. திருமந்த்ரம் மாதாவும் பிதா ஆசார்யனும் என்றருளிச்செய்வர்கள். 5. ஆராய்ந்து 7. சரணாகதிகத்யத்தில் சொன்னது 8. நிருபாதிக பிதாவின் ஸொத்து 9. தகப்பன் ஸொத்துக்கு வாரிசு பிள்ளை என்ற முறை.

श्रीः

श्रीवरवरमुनिभिरनुगृहीतं

॥ मुक्तकमङ्गलम् ॥

மணவாளமாமுநிகள் அருளிச்செய்த

# முக்தகமங்களம்

## தனியன்

श्रीशैलेशदयापात्रं धीभक्त्यादि गुणार्णवम् । यतीन्द्रप्रवणं वन्दे रम्यजामातरं मुनिम् ।

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்தயாதிகுணார்ணவம் ।
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ॥

---

## ஸ்ரீரங்கநாதர்

लक्ष्मीचरणलाक्षाङ्कसाक्षि श्रीवत्सवक्षसे । क्षेमङ्कराय सर्वेषां श्रीरङ्गेशाय मङ्गलम् ॥

லக்ஷ்மீ சரணலாக்ஷாங்க ஸாக்ஷி ஸ்ரீவக்ஷவக்ஷஸே ।
க்ஷேமங்கராய ஸர்வேஷாம் ஸ்ரீரங்கேசாய மங்களம் ॥ 1

## ஸ்ரீநிவாஸன்

श्रियःकान्ताय कल्याणनिधये निधयेऽर्थिनाम् । श्रीवेङ्कटनिवासाय श्रीनिवासाय मङ्गलम् ॥

ச்ரிய:காந்தாய கல்யாணநிதயே நிதயேர்த்திநாம் ।
ஸ்ரீவேங்கடநிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம் ॥ 2

## தேவப்பெருமாள்

अस्तु श्रीस्तनकस्तूरीवासनावासितोरसे । श्रीहस्तिगिरिनाथाय देवराजाय मङ्गलम् ॥

அஸ்து ஸ்ரீஸ்தநகஸ்தூரீவாஸநா வாஸிதோரஸே ।
ஸ்ரீஹஸ்திகிரிநாதாய தேவராஜாய மங்களம் ॥ 3

## செல்வப்பிள்ளை

कमलाकुचकस्तूरी कर्दमाङ्कितवक्षसे । यादवाद्रिनिवासाय संपत्पुत्राय मङ्गलम् ॥

கமலாகுசகஸ்தூரீ கர்த்தமாங்கிதவக்ஷஸே ।
யாதவாத்ரிநிவாஸாய ஸம்பத்புத்ராய மங்களம் ॥ 4

## நம்மாழ்வார்

श्रीनगर्यां महापुर्यां ताम्रपर्ण्युत्तरे तटे । श्रीतिन्त्रिणीमूलधाम्ने शठकोपाय मङ्गलम् ॥

ஸ்ரீநகர்யாம் மஹாபுர்யாம் தாம்ரபரண்யுத்தரே தடே ।
ஸ்ரீதிந்த்ருணீமூலதாம்நே சடகோபாய மங்களம் ॥ 5

### ஆண்டாள்

श्रीमत्यै विष्णुचित्तार्यमनोवन्दनहेतवे । नन्दनन्दन सुन्दर्यै गोदायै नित्यमङ्गलम् ॥

ஶ்ரீமத்யை விஷ்ணுசித்தார்யமநோநந்தநஹேதவே।
நந்தநந்தநஸுந்தர்யை கோதாயை நித்ய மங்களம்॥ 6

### எம்பெருமானுர்

श्रीमन्महाभूतपुरे श्रीमत्केशवयज्वनः । कान्तिमत्यां प्रसूताय यतिराजाय मङ्गलम् ॥

ஶ்ரீமந்மஹாபூதபுரே ஶ்ரீமத்கேசவ யஜ்வந:।
காந்திமத்யாம் ப்ரஸூதாய யதிராஜாய மங்களம்॥ 7

### பொதுவானது

मङ्गलाशासनपरैः मदाचार्यपुरोगमैः । सर्वैश्चपूर्वैराचार्यैः सत्कृतायास्तु मङ्गलम् ॥

மங்களாசாஸநபரை: மதாசார்யபுரோகமை:।
ஸர்வைச்சபூர்வைராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம்॥ 8

---

இவைகளும் மங்களச்லோகங்களாக அநுஸந்தேயங்கள்

---

### ஶ்ரீ பார்த்தஸாரதி

बृन्दारारण्यनिवासाय बलरामानुजायच । रुक्मिणीःप्राणनाथाय पार्थसूताय मङ्गलम् ॥

ப்ருந்தாரண்யநிவாஸாய பலராமாநுஜாயச।
ருக்மிணீ:ப்ராணநாதாய பார்தஸூதாய மங்களம்॥ 9

### சக்கரவர்த்தித்திருமகன்

मङ्गलं कोसलेन्द्राय महनीयगुणाब्धये । चक्रवर्तितनूजाय सार्वभौमाय मङ्गलम् ॥

மங்களம் கோஸலேந்த்ராய மஹநீயகுணப்தயே।
சக்ரவர்த்திதநூஜாய ஸார்வபௌமாய மங்களம்॥ 10

### மணவாளமாமுனிகள்

श्रीमतेरम्यजामातृमुनीन्द्राय महात्मने । श्रीरङ्गवासिनेभूयात् नित्यश्रीर्नित्यमङ्गलम् ॥

ஶ்ரீமதேரம்யஜாமாத்ருமுநீந்த்ராய மஹாத்மநே।
ஶ்ரீரங்கவாஸிநேபூயாத் நித்யஶ்ரீர் நித்யமங்களம்॥ 11

---

குறிப்பு: (9), (10) லக்கமிட்ட ச்லோகங்களை (4) க்கும் (5) க்கும் நடுவில் அநுஸந்திக்கவும்.

# சாத்துமுறை

### மணவாளமாமுனிகள் அருளிச்செய்தது

ஸர்வதேச தசாகாலேஷ் வவ்யாஹத பராக்ரமா—
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம் ॥

### கந்தாடையண்ணன் அருளிச்செய்தது

ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞாப்ரதிவாஸர மூஜ்வலா ।
திகந்தவ்யாபிநீ பூயாத்ஸாஹிலோக ஹிதைஷிணீ ॥

### எம்பெருமானுர் அருளிச்செய்தது

ஸ்ரீமங்ஸ்ரீரங்கச்ரியமநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய—
ஸ்ரீமங்ஸ்ரீரங்கச்ரியமநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய ॥

### மணவாளமாமுனிகள் அருளிச்செய்தது

நம: ஸ்ரீ சைலநாதா யகுந்தீநகரஜந்மநே ।
ப்ரஸாதலப்த பரமப்ராப் யகைங்கர்ய சாலிநே ॥

### நம்பெருமாள் அருளிச்செய்தது

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணர்ணவம் ।
யதீந்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம்முநிம் ॥

### மடத்துப்பிள்ளை அருளிச்செய்தது

வாழிதிருவாய்மொழிப்பிள்ளை மாதகவால்
வாழும் மணவாளமாமுனிவன்—வாழியவன்
மாறன் திருவாய்மொழிப்பொருளை மாநிலத்தோர்
தேறும்படியுரைக்கும் சீர்.

### ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் அருளிச்செய்தது

செய்யதாமரைத்தாளிணை வாழியே
சேலைவாழி திருநாபிவாழியே
துய்யமார்பும் புரிநூலும் வாழியே
சுந்தரத்திருத்தோளிணை வாழியே
கையுமேந்திய முக்கோலும் வாழியே
கருணைபொங்கிய கண்ணிணை வாழியே
பொய்யிலாத மணவாளமாமுனி
புந்திவாழி புகழ்வாழி வாழியே.

அடியார்கள்வாழ அரங்கநகர்வாழ
சடகோபன் தண்டமிழ்நூல்வாழ—கடல் சூழ்ந்த
மன்னுலகம்வாழ மணவாளமாமுனியே !
இன்னமொரு நூற்றாண்டிரும்.

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்

**மணவாளமாமுனிகள் வாழி திருநாமம் (அப்பிள்ளை அருளிச்செய்தது)**

இப்புவியி லரங்கேசர்க் கீடளித்தான் வாழியே
எழில்திருவாய்மொழிப்பிள்ளை யிணையடியோன் வாழியே
ஐப்பசியில்திருமூலத் தவதரித்தான் வாழியே
அரவரசப்பெருஞ்சோதி யநந்தனென்றும் வாழியே
எப்புவியும் ஸ்ரீசைல மேத்தவந்தோன் வாழியே
ஏராருமெதிராச ரெனவுதித்தான் வாழியே
முப்புரிநூல் மணிவடமும் முக்கோல்தரித்தான் வாழியே
மூதரிய மணவாளமாமுனிவன் வாழியே.

செந்தமிழ்வேதியர் சிந்தைதெளிந்து சிறந்துமகிழ்ந்திடுநாள்
சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசுபொலிந்திடுநாள்
மந்தமதிப்புவிமானிடர்தங்களை வானிலுயர்த்திடுநாள்
மாசறுஞானியர்சேரெதிராசர்தம் வாழ்வுமுளைத்திடுநாள்
கந்தமலர்ப்பொழில்சூழ்குருகாதிபன் கலைகள் விளங்கிடுநாள்
காரமர்மேனியரங்கநகர்க்கிறை கண்கள் களித்திடுநாள்
அந்தமில்சீர்மணவாளமுனிப்பர னவதாரம்செய்திடுநாள்
அழகுதிகழ்ந்திடு மைப்பசியில் திருமூலமதெனுநாளே.

ஸ்ரீமதேரம்யஜாமாத்ரு முநீந்த்ராய மஹாத்மநே
ஸ்ரீரங்கவாஸிநேபூயாத் நித்யஸ்ரீர்நித்யமங்களம்

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்.

---




ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி

# SRI MANAVALA MAMUNIGAL

DR. V. V. RAMANUJAM

Manavalamamunigal, Sowmya Jamathru Yogi or Varavara Muni as this Acharya is also called, is considered to be the last of the Poorvacharyas, the early religious preceptors of Srivaishnavism who occupied the Pontific seat at Srirangam after Sri Ramanuja. Varavaramuni is believed to be a reincarnation of Sri Ramanuja who was himself an incarnation of Adisesha. The Acharya flourished in this world between 1370 and 1443 A.D. He was born at Thirukkurugur, better known as Alwar Tirunagari because of association with Nammalvar (Saint Satakopa of Kurugur), as the son of Thirunaveerudayapiran Dasarannar and Sriranganachiar. The father, a great scholar and an ardent devotee, named his son Alagia Manavalan, (lit. the beautiful bridegroom) after the Lord of Srirangam. After the usual samskaras undergone by brahmin boys, Alagia Manavalan was instructed in Samskrit, Tamil, The Vedas and the Tamil Divyaprabandam (the outpourings of the Alwars on their mystic experiences with the Divine) by the father himself.

At that time the pontific seat was adorned by a great teacher Srisailesa, also called Thiruvoimozhi Pillai because of his deep devotion to Satakopa and deep understanding and facile handling of the Thiruvoimozhi - Sahasrageethi - of Satakopa. The seat was now in Alwar Tirunagari because of the disturbed conditions at Srirangam following the invasion of Srirangam by the muslims and the sacrilege committed therein by them. Srisailesa had been a disciple of Pillai Lokacharya, the celebrated author of Ashtadasa Rahasyam—the eighteen secret texts. These are in the form of terse aphorisms and among these are (1) Mumukshuppadi, the essential knowledge for any seeker of moksha, (2) Thatvatrayam, a masterly exposition of Visishtadwaitha philosophy as taught by Sri Ramanuja and (3) Srivachanabhushanam, a book of essential religious knowledge for Srivaishnavas.

Alagia Manavalan went to Srisailesa for spiritual enlightenment. So deeply was the master impressed by the depth and vastness of the young man's learning and his personal qualities of devotion and modesty that he decided to train him to succeed himself as the chief Vaishnava Acharya. The master commanded him that despite his mastery of all sastras, he should always give pride of place to the Divyaprabandams in his teachings.

Alagia Manavalaperumal Nayanar, as our young scholar came to be called, was deeply devoted to Ramanuja. Srisailesa had built a temple for Ramanuja at Thirukkurugur to commemorate the deep devotion that the latter had for Satakopa and his Sahasrageethi. The management of this temple was entrusted to Nayanar and he developed it with care and devotion. He composed a poem of twenty Samskrit verses—the Yathiraja Vimsathi—in praise of Yathiraja, the King of ascetics, wherein he gives expression to his deep devotion for Rumanuja, a devotion which gave him the name Yatheendrapravana.

Srisailesa had bidden his disciple to shift to Srirangam—peace had been restored by then and the presiding diety had also been restored to the temple—and from there direct his activities for the propagation of the teaching of the Vaishnava Alwars and Acharyas. Accordingly he shifted to Srirangam and began the task of spreading the gospel of Vaishnavism and enlightening Srivaishnavas. In the meantime he made a trip to Kancheepuram to have formal instruction in the Sri Bāshyam, Ramanuja's interpretation of the Brahmasutras, under Kidambi Nayanar and spent an year giving discourses on Sri Bashya in the Yadokthakari temple there.

On his return to Srirangam, he got ordained into the Sanyasa ashrama and was given the name Manavala Mamunigal by Lord Ranganatha who also directed that the Pallavarayan Math be given for his residence. This building now houses the shrine dedicated to the Acharya at Srirangam. Mamunigal built a spacious hall in this building where a large audience could hear his discourses and called it Srisailesa Maha Mantapam after his guru. He had the dust from Sri Lokacharya's house sprinkled on his seat because it was scented with the fragrance of the rahasya texts which grew in that soil.

Many celebrated acharyas of the day, descendents of the original seventy-four apostles appointed by Ramanuja for the propagation of Vaishnavism became disciples of Varavaramuni. One of the earliest was Vanamamalai Ramanuja Jeeyar, the founder of the Thothadri Math. Among others mention should be made of Kandadai Annan and his group, descendents of Dasarathi (Mudaliandan), a nephew of Ramanuja and Prathivathi Bhayankaram Annan, a scion of the Mudumbai family, to which Lokacharya himself belonged. Another important disciple was Erumbi Appa. Prathivadi Bhayankaram Annan and Erumbi Appa have composed a number of poems in the praise of their master and these are of high literary as well as educative value. A group of poems in praise of Lord Venkateswara—collectively known as the Suprabhatham—was composed by Prathivathi Bhayankaram Annan at the behest of his guru and these are chanted every day in the holy Hill Temple quite early in the morning. Any one who has heard these cannot but he enchanted by the sonorous verses and the devotion which reverberates therein. Two verses from these are of interest in this article.

The Lord is ever happy in being in the hearts of his devotees ; more so in that of a self-less seer as Varavaramuni.

श्रीमत्सुन्दरजामातृमुनिमानसवासिने ।

सर्वलोकनिवासाय श्रीनिवासायमङ्गलम् ॥

(Let all Mangalam (auspiciousness) be with Srinivasa the pervader of all the worlds whose chief abode is the heart of Srimat Sundara Jamathru Muni)

When we chant

सौम्योपयन्तृमुनिनाममदर्शितौते ।

श्रीवेङ्कटेशचरणौ शरणं प्रपद्ये ॥

(I take refuge in the holy feet of Sri Venkateswara revealed to me through the grace of Sowmya Jamathru Muni), we establish spiritual kinship with the Acharya and Sri Venkateswara, who is ever happy in this Acharya's heart, is bound to shower His grace on us, because of our relationship to him.

In obedience to the command of his guru, Varavaramuni put his heart and soul in propagating the Divyaprabandams along with the commentaries of the earlier acharyas. *Eadu Muppatharayirappadi*, Nampillai's commentary on the Sahasrageethi of Sri Satakopa (equivalent in length to 36000 standard sanskrit couplets) was his most favourite text. He had discoursed on the Sahasrageethi with this commentary many times over. These lectures on Bagavat Vishayam, as the theme is called, was once delivered at the command of Lord Ranganatha under His immediate presence over a whole year in the temple. Thus the Lord became the disciple of the Jeeyar and tradition has it that on the day of completion of the lectures, the Lord appeared in the audience as a small boy, recited the verse

श्रीशैलेशदयापात्रं धीभक्त्यादि गुणार्णवम् ।
यतीन्द्रप्रवणं वन्दे रम्यजामातरं मुनिम् ॥

(I salute the receptacle of the grace of Srisailesa, Ramya Jamathru Muni, the veritable ocean of (desirable qualities like) wisdom devotion and detachment, and Ramanuja-devotion incarnate) and disappeared. This verese is chanted practicaly in all Vaishnava temples and homes as a command of the Lord that Sri Varavaramuni whom He sought to serve as a disciple, be accorded the highest honour. The congregational chant of many religious texts as well as study is begun with this invocatory verse at the head. Pujas end with the supplication :

*Poyyilada Manvvalamamuni pundi vazhi pugazh aazhi vazhiye—*
*Manavalamamuniye! Innumoru nootrandirum.*

(Glory to the faultless intellect of Sri Manavalamamuni!—Oh! Sri Manavalamamuni! Let your glory shine for yet another century).

Expounding the Divyaprabandam texts in accordance with the views of the poorvacharyas was the field in which the Jeeyar excelled. He wrote commentaries on (1) the first four hundred and ten verses of Periyazhwar Tirumozhi since the earlier commentary by Periavachan Pillai had been lost (2) the Ramanuja Nootrandadi of Amudanar (3) three of the Rahasya texts of Lokacharya referred to earlier, and (4) the Acharya Hridayam. The last is the work of Alagia Manavalaperumal Nayanar, younger brother of Sri Lokacharya and sets forth the inner meaning of the teachings of Satakopa and other Alwars, soaked as they are in their mystic experiences with the Divine. But for these lucid commentaries it would be well nigh impossible to understand these most valuable texts, particularly those written in the form of terse aphorisms. Varavaramuni composed three Tamil poems—Upadesa Rathina Malai, a necklace of gems of the purest ray serene dealing with essential knowledge for Vaishnavas; Thiruvoimozhi

